
திராவிடநாடு
ரூ 1½
பொங்கல் மலர் 1956

உயிரை எடுத்துவிடு மறவன் பொறுப்பான்!
மானத்தை பழிக்காதே நாவை அறுப்பான்!
ஸ்ரீகல்பனா பிக்சர்ஸ்
நானே ராஜா
கதை, வசனம்
கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன்
இ. அப்பாராவ் : பி.வி. நாராயணன்
COLUMBIA ARTS

எல்லோருக்கும் எமது..

பொங்கல் வாழ்த்துக்கள்

C.N. அண்ணாதுரை	
கலிங்கராணி	3 0 0
ரோமாபுரி ராணிகள்	2 4 0
கம்பரசம்	1 8 0
கபோதிபுரக் காதல்	1 0 0
இலட்சிய வரலாறு	1 0 0
ஆரியமாயை	1 0 0
குமரிக் கோட்டம்	1 0 0
கற்பனைச் சித்திரம்	1 0 0
ஆறு கதைகள்	1 0 0
அறப்போர்	1 0 0
உலகப்பெரியார் காந்தி	1 0 0
தீ பரவட்டும்	1 0 0
பணத்தோட்டம்	1 0 0
சிறு கதைகள்	1 0 0
1858 – 1948	1 0 0
வர்ணாஸ்ரமம்	0 12 0
நிலையும் நினைப்பும்	0 12 0
நாம்	0 12 0
அவர்கள் சந்திப்பு	0 3 0
சி.பி. சிற்றரசு	
சாக்கிய சிம்மன்	1 0 0
கொலம்பஸ்	1 0 0
கணவனல்ல	1 0 0
ஹி. டி. நாயுடு	
நான் கண்ட உலகம்	1 0 0
தில்லை வில்லாளன்	
கிளிக் கூண்டு	1 0 0
ப. வாணன்	
ரஷ்ய இலக்கியம்	1 8 0

இரா. நெடுஞ்செழியன்	
கலித்தொகை தரும் காதற் காட்சிகள்	2 4 0
மதமும் மூட நம்பிக்கையும்	1 0 0
பண்டைக் கிரேக்கம்	1 0 0
கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்	0 12 0
மு. கருணாநிதி	
இரத்தக் கண்ணீர்	2 0 0
ஆறுமாதக் கடுங்காவல்	2 0 0
பழக்கூடை	1 0 0
நளாயினி	1 0 0
விடுதலைக் கிளர்ச்சி	1 0 0
நாடும் நாடகமும்	1 0 0
பரப்பிரம்மம்	1 0 0
முத்தாரம்	0 12 0
பூந்தோட்டம்	0 4 0
அரங்கண்ணல்	
ரோம்	1 8 0
ரஸ்புடீன்	1 8 0
உடைந்த ஆசை	1 0 0
இதய கீதம்	0 12 0
K.A. மதியழகன்	
நன்றி யாருக்கு	1 0 0
கவிழ்ந்த படகு	1 0 0
நந்தா விளக்கு	1 0 0
அறிவின் தூதர்கள்	0 12 0
இரா. செழியன்	
ராஜாதி ராஜா	0 12 0
பொது அறிவு	0 8 0

S. XAVIER. TRICHY

திராவிடப்பண்ணை

தெப்பக்குளம், திருச்சி..


தயாராகிறது!
கே.ஆர்.ராமசாமி
நடிக்கும்
தாயகம் பிக்சர்ஸ்
தயாரிப்பு
தமிழ்க்கோட்டம்
அறிஞர் அண்ணா
தீட்டியது
Anand

K. V. ரெங்காச்சாரி,
17, ... 14 ...
கும்பகோணம்.



பொதுச்செயலாளர் வாழ்த்து

திராவிடம் தன் இயற்கை எழில் நலங் காட்டிச், செயற்கைப் பொலிவு நீட்டி, இன்னகை பூத்திடும் பொங்கற் புதுநாளில், திராவிடர்களாகிய நாம் உள்ளத்திலே உவகை பொங்க, உரையிலே இன்னிசை முழங்க, உடலிலே புத்தாடை குலுங்க, இல்லந்தோறும் பாற்பொங்கலிட்டுப் பூரிப்போடு உண்போமாக!

நமது உள்ளத்திலே பொங்கி எழும் உவகை, உரிமை வேட்கைக்கான நல்ல சூழ்நிலையை உண்டாக்கட்டும்; உடலுக்கு நல்ல உரம் ஊட்டட்டும்; தாயகத்தை மீட்டிடும் விடுதலைப் போருக்கு நம்மை இட்டுச் செல்லட்டும்!

பொங்கற் புதுநாள் புதுக்கணக்குப் போடுவதற்கான பொன்னுளாகும். தாயகத்தை வடநாட்டு ஏகாதிபத்திய இருப்புப் பிடியிலிருந்து மீட்டிடவும், முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து விடுவிக்கவும், மூடநம்பிக்கை—குருட்டுப் பழக்க வழக்கங்களிலிருந்து கரையேற்றவும் நாம் இறந்த காலங்களில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் கணக்குப் பார்த்து, வெற்றியடைந்த அளவுக்கு மகிழ்ச்சிப் பெற்று, இனி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் தீட்டிக் கொள்வதற்கு ஏற்ற நாள் இப்பொங்கற் புத்தாண்டு நாளேயாகும்.

இந்த நாளில், திராவிடர்கள் என்ற முறையில் "திராவிடத்தை தனியுரிமைத் தன்னுட்சி நாடாக்குவோம்" என்று உறுதிமொழி கொள்ளுவோம்!

தமிழர்கள் என்ற முறையில், "இழக்க இருக்கும் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைப்போம்; தமிழைத் தமிழகத்தின் ஆட்சி மொழி ஆக்குவோம்" என்று உறுதிமொழி கொள்ளுவோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தவர் என்ற முறையில் "நிலையான—உறுதியான உறுப்பினர்களை ஊர்தோறும் மிகவாகச் சேர்ப்போம்" என்று உறுதிமொழி கொள்ளுவோம்!

எல்லோருக்கும் உளம் பொங்கிய பொங்கல் வாழ்த்துக்கள் உரியவாக!

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்.

துணைப் பொதுச்செயலாளர் வாழ்த்து

திராவிடர் திருநாளாம்—பொங்கற் புதுநாள், பழைமை வெறிக்கு எடுத்துக்காட்டாக இல்லாமல் மதம் சாதி, கட்சி ஆகியவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட—அறிவுடைமை கொண்ட திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. சுருக்கக் கூறவேண்டுமானால், உழைப்புக்கு வணக்கம் கூறியும், உலுத்தத்தன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் உரிமை விழாவாகும் திராவிடர் திருநாள்.

சென்ற ஆண்டு—நாம் இத்திருநாளைக் கொண்டாடினோம்; நாடெங்கும் பலவித நிகழ்ச்சிகளை நம் கழகத் தோழர்கள் இனிது நடத்தினர். ஆனால், இவ்வாண்டு தஞ்சை, இராமநாதபுரம், மதுரை, திருச்சி மாவட்டங்களிலுள்ள சில பகுதிகளில் புயல் விளைவித்த கொடுமையால் அங்குள்ள மக்கள் அவல நிலைக்கு ஆளாகியுள்ளனர். எனினும், திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களின் துயரை ஓரளவு துடைத்து, திராவிடர் திருநாளில் அவர்களும் கூடுமானவரை இன்புற்றிருக்க ஆவன செய்து வருகிறது.

மாநிலப் புது அமைப்புக் குழுவின் அறிக்கையால் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள இன்னல்களிலிருந்து இந்தியப் பேரரசு நடத்தும் ஆதிபத்திய நடவடிக்கைகள் வரை நாம் தகர்த்தெறிய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இம்மகத்தான பணியினை மேற்கொண்டு, அதனை வெற்றிகரமாக நிறைவேற்ற நமது கழகம் மேலும் வலிவும்—பொலிவும் பெறவேண்டும். ஆகவே, பொதுச் செயலாளரின் அறிக்கைக்கேற்ப—கழக உறுப்பினர் சேர்க்கும் பணியினை இத்தனை ஆண்டுகளைவிட குறிப்பிடத்தக்க வகையில் சேர்க்க வேண்டுகிறேன். கைத்தறியாளரின் குறைகளை அறவே அகற்றும் உரிமை நம் மாநிலத்துக்குக் கிடைக்கும்வரை—கைத்தறி ஆடையையே அணியும் உறுதிப்பாட்டை நிறைவேற்றச் செய்வோம். மாநில மாநாட்டில் எதிர்கால ஆக்க நடவடிக்கைகளுக்கு ஆவன செய்வோம்.

இந்த நற்பணியை இனிது நிறைவேற்ற கண்ணியம்—கட்டுப்பாடு—கடமையுணர்ச்சி ஆகியவைகளை மேலும் கடைப்பிடிப்போமாக.

அன்புள்ள,
என். வி. நடராசன்.

விழாக் கோலம்

தம்பி!

தெரிகிறது, தெரிகிறது, உன் முகத்திலே அழகு பொங்கி நிற்கும் காரணம்—புத்தாடையணிந்துள்ள உன் நடை, காட்டுப்பாதையில் செல்லும் வேழம், வேங்கையின்மீது உராய்ந்து செல்லும்போது ஏற்படுவது போன்ற ஓசையை அல்லவா எழுப்புகிறது? கிளியும் புறாவும், நாகணவாயும் சிட்டும், குயிலும் மயிலும், காட்சிக்கினிய பொருளத்தனையும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் கலந்துறவாடிடுவது போலன்றோ, இல்லம் விளங்கிட வேண்டுமென விழைகிறாய்!

என்ன அவசரம்! ஏன் அவ்வளவு அவசரம்? சென்று சென்று பார்க்கிறாயே, பால் பொங்கிற்றா என்று! அன்னை அறிவார்களே, எத்துணை நேரம்தழலிடை இருந்தால் பெரங்கிப் பதமாகும், புத்தரிசி என்பதனை! உனக்கேன் அந்தத் தொல்லை; ஓராயிரம் தடவை சென்று கேட்கிறாயே—ஓஹோ! உன்னை உற்றாரும் நண்பரும், கேட்கிறார்களா—பால் பொங்கிற்றா என்று! 'ஆம்' எனப் பதிலும் கூற வேண்டுமா—அகத்தினழகுதான் முகத்தில் தெரிகிறதே!

தம்பி! மகிழ்ச்சி பொங்கும் நிலையில் நீ இருப்பதற்கு இந்நாள் வந்தது, எனக்குப் பெருமகிழ்வு தருகின்றது. எப்போதும் உன்னை—பிரச்சினை, பணி, கடமை, என்பவைகளைத் தந்து சுவைத்திடச் சொல்லி வருகிறேனல்லவா--அவை யாவும், மெத்தச் சிரமப்பட்டு உண்டால் மட்டும் உவகை தருவன! இன்று, உனக்காக, கரும்பு காத்துக்கொண்டிருக்கிறது; பாற் பொங்கல் படைப்பார்கள்; உண்டு மகிழப் போகிறாய்—உன்னை அந்தக் கோலத்தில் காணவும் விழைகிறேன்.

அறப்போர் வீரனாக, அஞ்சா நெஞ்சனாக, அடக்குமுறையை எதிர்த்து நிற்போனாக, மடமையிலாழ்ந்துவிட்ட மக்களிடை அறிவு கொளுத்துவோனாக, ஆதிக்கவெறி பிடித்தலையும் வடவராட்சியை எதிர்த்து ஆற்றலுடன் பணிபுரிவோனாக—இவ்விதமெல்லாம் உன்னைக் கண்டு, உளம் பூரிக்கிறேன். இன்று, உன்னை விழாக்கோலத்தில் காண மகிழ்கிறேன்—இல்லத்தில் ஒளியளித்து, களிப்புடன் விருந்துண்டு உலவும் நிலையில் உன்னை இங்கிருந்து காண்கிறேன்—காட்சி கவர்ச்சி தருகிறது—பார்த்ததும்; ஒரு கணம்; பிறகோ........!

இன்று திருநாள்! இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இருபாலரும், 'பொங்கலோ பொங்க'லென்று மகிழ்ச்சியுடன் குரலெழுப்பி, தாமும், தம்மைச் சூழ இருப்பவை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, 'நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத்திடும்' என்று நம்பி, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன் மற்றையோரும், மனைதோறும் மனைதோறும் இருத்தல் கண்டு, நாடே விழாக் கோலம் பூண்டுளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழா நாள்! 'பால் பொங்கிற்றா?' — என்று, அன்பு பொங்கக்கேட்டு, அகமகிழச் செய்யும் நன்னாள்! இன்பம் பொங்கும்! எங்கும் தங்கும்! மகிழ்ச்சி பொங்கும்! மனையெலாம் வழியும்! புத்தம் புதுக்கோலம் பெற்று, இல்லமெலாம் எழிலோவியமாகும்; அன்பு மணம் எங்கும் கமழும்; பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் 'கானம்' கிளப்பிடுவது போன்றதோர் களிப்பொலி எங்கும் எழும்! பனி தொலைந்தது; பரிதி அப்பகையினை விரட்டினான்! நில மடந்தைக்குப் புதிய எழிலூட்டினான்—நடுக்கும் குளிர் இனி இல்லை; வாழ்வை நொறுக்கும் கேடுகட்கு இனி ஆதிக்கம் இல்லை!

விளைந்தது குவிந்திடக் கண்டோம்; வினையின் பயனைக் கொண்டோம்; செயலின் செழுமை விளங்கிற்று; செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று; உழவன் பெருமையை உலகே புகழ்கிறது; உலகுக்கே அத்தொழில் அச்சாணி என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர், அறிஞர் பெருமக்கள்!

அவன் காலில் படிந்த 'சேறும் சகதியும்' வாழ்வுக்குச் சந்தனமாகி மணம் அளிக்கிறது. அவன் பூட்டிய ஏர் அளித்த வளம், பெருந்தேரோடும் நிலையை அரசர்க்கே அளிக்கிறது எனில், மற்றையோர் ஏற்றம் பெறாதிருப்பரோ! அவன் 'கஞ்சி' தான் குடித்தான்; கலயமோ மண்ணாலானது; கழனிப் பக்கம் அமர்ந்து கடும் உழைப்புக்குப் பிறகு, உச்சிப்போதிலே அவன் 'இச்சைக்கினியாள்' தந்தது!

இதோ, அவன் இஞ்சியும், மஞ்சளும், வாழையும், பலாவும், மாவும் பிறவும் அளித்து, தன் திறமையையும், வள்ளற்றன்மையையும் எடுத்துக் காட்டுகிறான். கல்லிலும், முள்ளிலும் நடந்தான்—காரிருள் கலையும் நேரமறிந்து எழுந்தான்—பகலெலாம் பாடுபட்டான்—முளைவிட்டதும் மகிழ்ந்தான்—களை கண்டு கவலை கொண்டான்; உழைத்தான், உழைத்தான்—கழனி பச்சை நிறம் பெற்றது; மீண்டும் பாடுபட்டான்; இதோ, பொன்னுடை போர்த்துக்கொண்டு புவிப் பெண்ணாள், செந்நெல் மணி மாலைகள் அணிந்து தென்றலாளுடன் தேனொழுகப் பேசி, தெவிட்டாது பாடி, கோலம் காட்டி நிற்கிறாள்!!

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டுகோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வு சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டின் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள்—மூதறிஞர்கள் கூறிச் சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகத்திலும் ஏராளம், ஏராளம்; அவன், அவை பற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை; கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர், அவன் செய் தொழிலின் சிறப்பு குறித்துச் செப்பியுள்ள ஒப்பில்புலமை நிறை மணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைத்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவைபற்றி அவன் அறியான்; 'கருக்கலிலே போக வேண்டும்—பசுந்தழை பத்து வண்டி வேண்டும்—பண்ணையாரிடம் இன்னது கூறவேண்டும்—வேலியை இவ்விதம் சரி செய்ய வேண்டும்'—என்ற இவை பற்றித்தான் பேசுகிறான். 'பயிர் எவ்வளவு காணும்' என்பதை உரைக்கிறான்—'மணி' அவனுக்கல்ல என்பது தெரிந்தும் மகிழ்ச்சியுடன். அவன் அளித்திடும் 'அம்பாரம்', பண்ணையாரைப் பொன்னார்மேனியனாக்குகிறது—புவியாளும் வாய்ப்பினைத் தருகிறது! அவன், தன் கண்ணாரப் பயிர் ஏறுவது கண்டு களிப்பெய்துகிறான்—தன் உழைப்பு நற்பலனைத் தந்தது என்பதறிந்து!

'உழவர் திருநாள், இப்பொங்கற் புதுநாள்'—என்பதை, அனைவரும் இன்று அறிந்து போற்றுகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை 'சங்கராந்திப் பண்டிகை'யாகவும், 'சூரிய நமஸ்கார'ப் பண்டிகையாகவும் இருந்துவந்த நிலைமாறி, இதுபோது, 'அறுவடை விழா' என்றும், 'உழவர் திருநாள்' என்றும், 'தமிழர் விழா—திராவிடர் திருநாள்' என்றெல்லாம் ஏற்றம் பெற்று விளங்கிடக் காண்கிறோம்.

மற்றையோர், கிழமைதோறும், விழா நடாத்துபவர்; விழா நடாத்துபவர் என்பதைவிட, விழாவினால் நடத்திச் செல்லப்படுபவர் என்பதே பொருந்தும். பெம்மான் பிள்ளைக்கறி கேட்ட நாள்; பேயாண்டியாகிக் கூத்தாடிய நாள்; வெண்ணெய் திருடிய கண்ணன் வேல் விழியாரிடம் மத்தடிபட்ட நாள்; அடிமுடிகாண அயனும் அரியும் முயன்ற நாள்; அறுமுகன் சூரனை வதைத்த நாள்; அரிமுகங்கொண்டு அரிபரந்தாமன் அரக்கனை அழித்த நாள்; அன்னை ஜானகியை ஐயன் மணந்த நாள்;—என்று, அடுக்கடுக்காக விழா கொண்டாடுகின்றனர்; புரோகிதரின் பாதம் பணிகின்றனர்; பகுத்தறிவையும், தன்மானத்தையும் ஒருசேர இழக்கின்றனர்.

பண்படுத்திப் பரம்படித்து, எருவிட்டு ஏர்பிடித்து, விதை தூவி, நாற்று நட்டு, களை எடுத்து, கதிர் முற்றிடக் கண்டு அறுத்தெடுத்துப் புடைத்துக் குவித்து உணவுப்பொருளை உலகோர்க்கு உழவர் அளிக்கும் இவ்விழா தான், நாம் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கொண்டாடும் ஒரே விழா!

ஒரு நாள்—ஊரெல்லாம் விழா! ஒரு திங்களும் போதுமானதாக இல்லை—நமக்கு, நாட்டவரிடம் இவ்விழாவின் மாண்பினைக் குறித்து, வியந்து விரித்துரைத்திட!

ஆண்டுக்காண்டு, இவ்விழாவின் 'கோலம்', வண்ணம் கொள்கிறது; வஞ்சகரின் பிடியில் சிக்கிக் கிடப்போரும்கூட, பிற விழாக்கள்போலன்றி, இஃது பெருமை அளிப்பதாய் அமைந்திருத்தல் கண்டு இன்புறத் தொடங்கியுள்ளனர். நமது இயக்கத் தோழர்கள், உள்ளமெலாம் உவகை பொங்க, இந்நாளில் காட்சி கண்டு களிப்பு கொண்டு, மன்றங்கள் சென்று தமிழரின் தொன்மைச் சிறப்பினை மக்களுக்கு நினைவுபடுத்தி, பொங்கற் புதுநாள் விழாவினைக் கொண்டாடுவது, நாட்டில் ஓர் புத்தார்வத்தை எழுப்பியிருக்கிறது.

ஊர், விழாக்கோலம் கொள்ள வேண்டும்; இசையும் கூத்தும், உடற்பயிற்சி விளையாட்டுகளும் இன்ன பிறவும் நடைபெற வேண்டும்; தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும், அஃதேபிறகுநலிவாக மாறிவிடும்படிசெய்த நயவஞ்சகர் போக்குபற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டி வருதல் வேண்டும்.

பிற எந்த விழாவும், வீட்டோடு அமையும்; அல்லது, கோயிற் பெருவெளியில் நிகழும். மக்கள் மன்றம் கூடி, மகிழ்ச்சிப் பெருக்குடன் கலந்து களிப்பதற்கான விழாவாக இப் பொங்கற் புதுநாளே அமைந்திருக்கிறது.

இந்த ஆண்டும், நாம் விழா கொண்டாடியும், மன்றமதில் நின்று மறத் தமிழன் மாண்பினைக் கூறி

யும், இன்று வந்துற்ற இழிநிலையைப் போக்குவது குறித்தும் எடுத்தியம்பத்தான் போகிறோம்.

ஆரிய மன்னராம் கனகவிசயன்மீது கல்லேற்றிய சேரன் செங்குட்டுவனைக் காட்டுவோம்; ராஜ ராஜ சோழன், குலோத்துங்கன், வேளிர்கள் ஆகிய அனைவரின் திறம், தீரம் ஆகியவைபற்றி மக்களிடம் பெருமிதத்துடன் பேசி நிற்போம்; தமிழகத்து நில வளம், நீர்வளம், மலைவளம், காட்டுவளம் அனைத்தையும் காட்டுவோம்; பிறநாட்டவருக்குக் கிடைத்திலாத அரும்பொருள்கள்—கடலிடை முத்தும், கானிடைக் களிறும், மலையிடைச் சந்தனமும், தென்றலும் நமக்கு உண்டு என்பதனை எடுத்தியம்பி இறும்பூதெய்தி நிற்போம்.

எனினும், இந்த ஆண்டு, ஓர் பெரிய மனக் குமுறலுக்கு இடையிலேயே இந்த விழா கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

நமக்கு வந்துற்ற இடரும் இன்னமும் எத்தகைய நெஞ்சுறுதி கொண்டோரையும் நிலைகுலையச் செய்வதாகவே இருக்கிறது.

தம்பி! வடவருக்கு நாம் அடிமைப்பட்டு, வாழ்விழந்து, தன்மானம் அழிக்கப்பட்டுத் தத்தளித்துக் கிடக்கிறோம்—மனம் எதுபோல் உளது என்பதை, அதோ, மத்திடைத் தயிர் காட்டும்!

எந்த மொழிக்காரனும், 'சிந்தைக்குச் செந்தேனாக அமைந்துள்ள இத்துணை இலக்கியத்தை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே பெற்றிருந்தீரே! என்னே, உம் நாட்டு மனவளம்! எத்துணை நல்லிசைப் புலவர்கள் வீற்றிருந்தனர்! அரசு, அத்தகைய மொழி வளம் மலர்ந்திடச் செய்ததே! கோனாட்சியிலே இந்த நல்லறம் பூத்ததே! இஃதன்றோ பெருமைக்குரிய செய்தி'—என்றெல்லாம கூறி வியப்புறுவான்; எனினும், நாம், இந்திக்குத் தலைவணங்க வேண்டுமென இறுமாந்து கூறும் போக்கினரிடமன்றோ, சிக்கிக் கிடக்கிறோம்.

விழா நாளன்று விசாரம் ஆகாது எனினும், எண்ணிடும்போது நெஞ்சு பதைத்திடாது இருக்குமோ! எண்ணுதவிடததான் இயலுமோ!

வடவரின் பிடியுடன் தொல்லை விட்டதோ! இல்லை! எல்லையைக் களவாடி ஏனையோரும், நமது திராவிட இனத்தினராம் தெலுங்கரும் மலையாளிகளும், இனத்தையும் மறந்த நிலை கொண்டு மொழிவழி அரசு எனும் உரிமையையும் இகழ்ந்து, தமிழருக்கு உரிய பகுதிகளைக் கவர்ந்துகொண்டு, வட்டாட்டமாடுகின்றனர்; இதனைக் கண்டு நீதி வழங்கும் நேர்மையற்று, பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டு வருகிறது வடவராட்சி. தேவிகுளம், பீர்மேடு தமிழரின் குருதி படிந்த களிறு உலவும் காடு சூழ் இடங்கள்; அங்கு செழித்து வளரும் தேயிலைத் தோட்டத்தில், ஓய்வின்றி உழைத்து மாய்ந்த தமிழர் ஓராயிரமல்ல, பல்லாயிரவர்! இன்று, 'அம்மலைநாட்டினை உமக்களித்திட ஒருப்படேன்' என்று கூறி நிற்கிறது மலையாள நாடு! டில்லி, மோதவிட்டு வேடிக்கை பார்த்து மகிழும் போக்கிலே இருக்கிறது.

வடவேங்கடம் — தென்குமரி — என்ற உரை, அரசியல் கிளர்ச்சிக்காரர் கூட்டுக்கட்டிய தொன்றல்ல; இலக்கியம், வரலாறு சமைத்தளிக்கும் உண்மை. அதனை மதிக்க மறுத்திடும் ஆந்திருடன் உடந்தையாக நிற்கிறது, டில்லி—என்று எண்ணத் தரும் போக்கிலே, ஆட்சி நடந்து கொள்கிறது.

விழாவின்போது இவைபற்றி எண்ணாமலும், மக்களிடம் எடுத்து இயம்பாமலும் இருத்தல் இயலுமா! எண்ணிடும்போதோ, விழாக் கோலமே கலைகிறது; வேதனை பொங்கி வழிகிறது; 'எந்தமிழர் நாட்டிலே ஏன் இந்த அவல நிலை'—என்றெண்ணி வாட நேரிடுகிறது. இம்மட்டோ! அந்தோ! தமிழகம் பெற்றுள்ள வடு, இயற்கையின் கோரத் தாண்டவத்தால் ஏற்பட்டுவிட்ட புண்—எண்ணும்போதே, கண்ணீர் கன்னத்தில் புரள்கிறது; கையறைந்து, முகத்தில் மோதிக்கொண்டு கதறும் நிலைக்குச் செல்ல வேண்டி வருகிறது. எனினும், என் செய்வது! விழா, திங்கள்தோறும் வருவதன்று—ஆண்டுக்கோர் விழா; எனவே, கண்ணீரைத் துடைத்துக் கொண்டேனும் இதனைக் கொண்டாடுகிறோம்.

'நேரிட்டுவிட்ட பேரிடியினால் நெஞ்சு ஒடிந்து கிடக்கும் நிலையினை ஓரளவுக்கு மாற்றிக் கொள்வதற்கேனும், விழா பயன்படாதா'—என்ற ஆசை வேறு, உந்துகிறது.

ஏற்பட்ட அழிவை எண்ணிடும்போதோ, உள்ளம் வெந்தழலிடையிட்ட மெழுகாகிறது! பொங்கிய புயலின் கொடுமை, ஐயகோ! எத்துணை நாசத்தை விளைவித்துவிட்டது! அன்பு பொங்கிட அமைந்த இத்திருநாளில், எத்தனை எத்தனை குடும்பங்களிலே, சென்ற ஆண்டு ஓடி விளையாடிய சேயை இழந்து தவிக்கும் தாய்மார்களின் கண்ணீர் பொங்கி வழிகிறதோ; எத்துணைக் குடும்பம் சிதறுண்டு, சிதைந்து, சீர்குலைந்து போனதனால் வேதனை பொங்கிக் கொப்பளித்துக்கொண்டிருக்கிறதோ; குடியிழந்த மக்கள், 'கொட்டும் குளிர் போயிற்று—குதூகலப் பொங்கல் பிறந்தது—பாலும் பழமும், சோறும் சுவையும் கூட்டிக் குழைத்து உண்டு மகிழும் விழா வந்துற்றது'—என்று பிறர் பேசக் கேட்டு, 'எமக்கும் ஓர் இல்லம் இருந்தது—அங்கு அணியும் மணியும் இருந்ததில்லை; அன்பும் பண்பும மிகுதியும் இருந்தது—அங்கு பொன்னும் பொருளும் இருந்ததில்லை; பேசும் பொற்சித்திரங்கள் இருந்தன—கரியும் பரியும் கட்டிவைத்து யாங்கள் கனவான்களாக இருந்ததில்லை; அன்புடன் தன் நாவினால் கன்றினைத் தடவிக்கொடுக்கும் அழகிய பசு இருந்தது—உப்பரிகையும் ஊஞ்சலும் இருந்ததில்லை; கொடியும் செடியும், பயனும் மணமும் அளித்துவந்தன—எல்லாம் போய், ஏதுமற்றவரானோம்; எங்கெங்கோ, பொங்கல்! பொங்கல்! பொங்கலோ பொங்கல்!!—என்று கூவுகிறார்கள்; எம்மைக் கண்டால், ஈரமனம் படைத்த அவர்தம் கண்கள் புனல் நிறையும்; எனவே, அவர் காணாது இருத்தலே சிறந்தது; கண்டிட நேரிடினும், அவர் தம் மகிழ்ச்சியை, நந்தம் துயரத்தைக் காட்டிக் கெடுத்திடாதிருக்கும் திறனுவது நமக்கு வருதல் வேண்டும்'—என்றெல்லாம் எண்ணிக்கொண்டுள்ளனர்.

அவதிக்காளாகி யுள்ளோருக்கு, 'புயலின் கொடுமை எத்துணை வேகமாக அடித்தால் என்ன ; அன்பும் பண்பும், எம்மவர்க்குக் கடலினும் பெருமளவு உண்டு ; அது எம்மை, எதையும் மறந்திடச் செய்யும் அளவிலும் வகையிலும் வந்து சேர்ந்து, வாட்டத்தை ஓட்டுகிறது,' — என்று கூறத்தகும் வகையிலே, விழா கொண்டாடுவோர், விரைந்து உதவியை, அனுப்புதல் வேண்டும்.

நமது கழகம், இத்துறையில் நல்லோர் கண்டு மகிழத்தக்க வகையிலும், நாடாள்வோர் கண்டு மனம் புழுங்கும் நிலையிலும், ஈடுபட்டிருக்கிறது, என்பதை எண்ணியே, வேதனையைக் குறைத்துக் கொள்ள முடிகிறது—ஓரளவுக்கேனும் !

விழாவினன்று, நமது நாடு இன்று எத்துணை துயருற்று இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் சோக சித்திரமாக, புயல் எனும் சிறுகதை இருக்கக் காண்பீர்கள் ; கருத்தில் பதியும் விதத்தது. 'நாயகம்' என்பார் தருவது.

திருவிடத்தின் நிலை ஏன் சீர்கெட்டுக் கிடக்கிறது என்பதை குடை ராட்டினம் எனும் கட்டுரை மூலம், அறிவழகன்—அன்பழகனின் இளவல்—அறிவுறுத்தியிருக்கிறார்.

வேதனைக் காட்சிகளைக் கண்டதால், உள்ளத்தில் எழும்பிய புயலை, சித்தார்த்தர் புத்தராகி உலகுக்கு பொன்னொளி அளிப்பதற்குப் பயன் படுத்திய பாங்கினை, 'வெள்ளி முளைத்தது' எனும் வரலாற்று ஓவியம் காட்டுவதாக இருக்கிறது.

ரஷ்ய நாட்டு மேதை டால்ஸ்டாய், பேராசைக்காரன் பெருமளவு நிலத்துக்கு ஆசைப்பட்டு ஆறடி நிலம் பெற்றதைக் கூறியிருக்கிறார் — இதனையும் 'வெள்ளி முளைத்தது' தந்த அரங்கண்ணல் தந்திருக்கிறார்.

ஒய்யாரியை ஓவியம் தீட்டித் தரச் சொன்ன மகா அலெக்சாண்டரிடம், துணிந்து, உயிரோவியத்தைத் தருமாறு கேட்டது குறித்து தேனொழுகும் பாவினைத் தருகிறார் 'சுரதா'

நம் நாட்டிலே உள்ள நலிவு போன்றும், அதற்கு மேலும் இருந்த நலிவுகள் அத்தனையும் போக்கிட சீன நாட்டிலே பாய்ந்தோடிய 'அன்பின் அருவி'க்கு அழைத்துச் செல்கிறார்—நீவிர், அடிக்கடி சந்திக்கும் வாணன்.

கனவிலே சொர்க்கலோகச் சுந்தரிகள் தோன்றி, தத்தமது சுகானுபவத்தை அல்ல—சொர்க்கத்தில் நரகம் இருப்பதை எடுத்துக் கூறும் கற்பனை ஓவியம் 'சொர்க்கத்தில் நரகம்'—'யார் கண்டது, சொர்க்கத்தை'— என்று கேட்டுவிட வேண்டாம்—நானுகக் கற்பனை செய்துகொண்டதன் விளைவு, இக்கட்டுரை.

பூலோகத்திலே ஒரு புரட்டன், மந்த மதியினருக்கு சந்தான சப்ரமஞ்சம் அமைத்துத் தந்தான்! அவன் போன்றோர் நடாத்திய மாயம், மந்திரம் எனும் புரட்டுகளினின்றும் மக்கள் சமுதாயம் ஆராய்ச்சித் துறையிலே அடிஎடுத்துவைக்கப் பட்ட கஷ்டங்களைக் காட்டும் வரலாற்றினைப் படித்தறியும் ஆர்வம் எழ வேண்டும் என்பதற்காகவே இக்கட்டுரை தந்திருக்கிறேன்.

பாவையின் பயணம்—ஒரு நாடகத் தொடர் மணவினைக்குப் பக்குவம் பெற்றுள்ளோருக்கு, தேவையான நற்கருத்தளிக்கும் நோக்குடையது.

புதிய பொலிவு—கிராமியக் காதை ; இருவேறு உலகிடை உள்ளோருக்குள் ஏற்படும் கூட்டுறவும், அமைந்துவிடும் சூழ்நிலையும், விளக்கமாக உதவும்.

மேலதிகாரி—இன்றையச் சூழ்நிலையில் நம்மவர்கள் 'அவாளிடம்' சிக்கிப் படும் பாட்டினை எடுத்துக் காட்டுவதாகும்.

மற்றுமுள்ளவைகள், நான் இம்முறை தரவேண்டும் என்று எண்ணி எழுதியதில் ஒரு பகுதிதான் !

தம்பி ! சம்பத், 'கல்கத்தா பாதை'யில் சென்று வந்திருக்கிறான்—என்னைக் காஞ்சியில் கைகடுக்க எழுதிக் கொண்டிருக்கச் செய்துவிட்டு ; இருக்கட்டும் ; பாடம் கற்பிக்காமலா போவேன் !

நண்பர்கள் பலர் அனுப்பி உதவிய, 'விருந்து', மலர் சிறிய அளவானதால், வைத்து அளிக்க முடியாமல் போய்விட்டது—இப்போதைக்கு !

செங்கரும்பு, பலா, மா, வாழை, செந்நெல், ஆவின் பால், புத்தாடை—ஏதேதோ தரலாம், தம்பி, உனக்கு ! ஆனால் என்ன செய்வது ? இவைகளை எல்லாம்விட, என் 'அன்பு' இம்மலர் மூலம் உனக்குக் கிடைத்திடச் செய்தலே முறை என்று எண்ணினேன். உன்னிடம் கூறவேண்டுமென்று எண்ணிய கருத்துகள் பல ; பலப் பல ; ஒரு சிலவற்றைத்தான் கதை, கட்டுரை வடிவாக்கி அளித்திட முடிந்தது. இவற்றினைப் பார்க்கும்போது, உன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் வேறு பல நற்கருத்துகளை ஒழுங்குபடுத்தி, வரிசைப்படுத்தி, நற்செயலுக்கு உறைவிடமாக்கி, நமது நாட்டினுக்கு நல்கி, பொங்கலன்று காணும் மகிழ்ச்சி நாட்டின் பொதுமகிழ்ச்சி ஆவதற்கான நற்பணியாற்றிட வரவேண்டும் என்று அழைக்கிறேன்—உரிமையுடன்—நம்பிக்கையுடன்.

'இன்று கூடவா, அண்ணா!' என்று கேட்கிறாய் ?

சரி, சரி, போ ! போ ! அதோ பொங்கும் இன்பத்தைப் பெறு ; பொலிவு கண்டு அகமகிழ்ந்திரு ; உள்ளம் நிறைந்திடும் உவகையுடன் உரையாடி களிப்புற்று இரு ; நின் இல்லம் இன்பப் பூங்காவாகத் திகழட்டும் ; அங்கு அறிவு மணம் கமழட்டும் ; அன்பு பொங்கட்டும் ; அறம் தழைத்திடத்தக்க அரும் பணியாற்றிடும் ஆற்றல் எழட்டும்.

பொங்கற் புதுநாளன்று என் அன்பு நிறைந்த வாழ்த்துதலை வழங்கி மகிழ்கிறேன்.

அதோ, பெற்றோர் அழைக்கிறார்கள் போலும் ; சென்று, செங்கரும்பின் சாறன்ன அன்புரை பெற்று இன்புற்றிரு !

அன்பன்,

அண்ணாதுரை

இன்று திருநாள்!

[கருணானந்தம்]

★

உலகம் வியக்க நிலவிய புகழும்,
கழகம் வளர்த்த பழந்தமிழ் மொழியும்,
அறநெறி பரப்பும் குறள்முறை தழுவிப்
பிறரைப் பணியாத் திறலும் படைத்த
தந்நேர் இல்லாத் தமிழக உழவர்
பொன்னேர் பூட்டிச் செந்நெல் விளைத்தே
ஆண்டின் பயனை அடைந்திடும் பெருநாள்;
தூண்டிடும் உவகையில் துள்ளிடுந் திருநாள்!
ஆயினும், அன்னார் நாயினுங் கீழாய்
நலிந்துளம் நொந்து மெலிந்துடல் வாடி,
வறண்ட பாலையில், இருண்ட வேளையில்,
திரண்டெழுங் காற்றிற் சிக்கியோர் போலத்
திகைத்து, மீளவும் வகையறி யாது,
சுதந்திரம் என்ற இதந்தரும் பெயரால்
கொடுங்கோல் ஆட்சிக் கிடங்கொடுத் துயர்த்தித்,
தாய்மொழி மறந்து, தனியர சிழந்து,
வாய்மை தவறி, வாழ்வினில் தாழ்ந்து,
உழைப்பதற் கேற்ற ஊதியம், உயிருடன்
தழைப்பதற் கான சாதனம் இன்றி,
நெடிய வறுமைக் கடியவ ராகி,
முன்னேறும்நிலை எந்நாள் வருமெனக்
கண்ணீர் சிந்திக் காத்திருக் கின்றார்!
பாட்டாளி மக்கள் படுந்துயர் தொலைத்து,
நாட்டிலே இன்ப நன்னிலை பொங்க
மூட்டுவோம் உணர்வோடு முயற்சித் தீயே!

உழவர் திருநாளே, பொங்கற் புதுநாள் என்று பூரித்துக் கூறுகிறோம். அப் பெருமகனுர்க்கெல்லாம், 'நன்றி நவிலும் நாளாக' இவ் விழா உளது, என்று கூறி இரும்பூதெய்திடுகிறோம், எனினும் உழவுத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் வாழ்க்கைத் தரத்தின் சீர் கேட்டினையோ, அவர்கள் எத்தகைய சுற்றுச்சார்புக்கிடையிலே உழன்று கிடக்கின்றனர் என்பதனையோ, மறந்திடவுமில்லை, மறைத்திடவுமில்லை.

உழவுத் தொழிலின் மேம்பாட்டினையும் கூறுகிறோம், அத்தொழில், உழவர்களை உருக்குலையச் செய்திடும்கொடுமையினையும் எடுத்துரைத்து, இந்நிலை மாற்றப்பட்டாகவேண்டும் என்பதனையும் அஞ்சாது எடுத்துரைக்கிறோம்.

கல்விகற்று ஓடியாடி விளையாட வேண்டிய சிறுவர்கள், கல்லெடுத்தும் புல் சுமந்தும், காளை மேய்த்தும் கட்டை சுமந்தும், சேறு குழைத்தும் செந்நெல் போறுக்கியும், ஒட்டிய வயறுடனும் உலர்ந்த கண்களுடனும் இருப்பது கண்டு, மனம் வெதும்பிக்கிடக்கிறோம்,

உழவர் ஓயாமல் உழைப்பது, ஒரு சிலர் உழைக்காமல் ஒய்யார வாழ்வு நடத்துவதற்கே எனும் இழிநிலை மாறியாகவேண்டும், அவர்கள் படிப்பில்லாதவராக இருந்து, பட்டிகளில் உழன்று கிடப்பது, நமக்கெல்லாம் புதிய பல்கலைக்கழகங்கள் கிடைத்திடச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கொடுமை ஒழிக்கப்பட்டாக வேண்டும், அவர்கள் மாடன், காடன் காட்டேரி, மலையாண்டி இடும்பன் மாகாளி—இவர்களைப் பூஜை செய்து கொண்டு கிடக்கத்தான் வேண்டும், ஏனெனில் அப்போதுதான் நாம் விஞ்ஞானக் கூடங்கள் அமைத்துக் கொண்டு, புதுவாழ்வின் இன்பத்தை நுகர முடியும் என்றெண்ணும் பேதமை ஒழிக்கப்பட்டாக வேண்டும், பட்டிதொட்டிகளில் இந்த வாயில்லாப் பூச்சிகள் இருந்தால் தான், பட்டணங்களிலே பேராசிரியரும் பெரும்புலவரும், நூலாசிரியரும் நுண்ணறிவுத் தொழிலினரும், வாதாடும் வழக்கறிஞரும் கவிபாடும் கலாவாணரும், ஓவியனும் தீஞ்சுவைக் காவியம் தீட்டுவோனும், அரசாள்வோனும் அவனை ஆட்டிப்படைக்கும் ஆண்டிக் கோலத்து அரசனும் கோலாகலமாக வாழமுடியும் என்று எண்ணிடும் கெடுமதி கொண்டோரின் கொட்டம் ஒடுக்கப்பட்டாக வேண்டும் என்று பரணி பாடத் தவறுவதில்லை, பால் பொங்கும் நாள்—ஏரின் சிறப்பினை எடுத்துரைக்கும் நாள் - எங்கள் திருநாள் - பொங்கற் புது நாள் என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்திடும் போதெல்லாம்.

நீண்டகாலத் துயிலுக்குப் பின் விழித்தேழுந்த உழவன் வீறுகொண்டெழலானுன்

வயலோரத்தில் கலகம், வரப்புகளிலே வல்லடி களத்து மேட்டில் அடிதடி, கிராமத்தில் பலாத்காரம்! பேழை யுடையாளிடம் பாசம், ஏழையின் சீற்றம் கண்டு பயம்-இந்த இடுக்கியில் சிக்கிற்று ஆட்சியாளர் மனம்.

காலமே! எங்கள் கண்ணீரைக் காணுயோ? நீதி வழங்காயோ? என்று கலங்கிக் கேட்டனர் உழவர். காலம் புரட்சிக் கருத்துக்களை வழங்கிற்று.

உலகெங்கும், தலைமுறை தலைமுறையாக இருந்து வந்த 'முறை' ஒழிக்கப்பட்டு உருத்தெரியாமல் போய் விட்டது! பண்ணைகள் பிரித்து விடப்பட்டன! நிலப் பிரபுக்களின் ஆதிக்கம் அழிந்தொழிந்தது! கூட்டுப் பண்ணை முறை மூலம் நாட்டு வளத்தையும் பெருக்கிட முடியும், உழைப்போனுக்கு வாழ்க்கைத்தரமும் உயரும், உறிஞ்சி வாழ்வோர் என்ற 'வர்க்கமே' வேரற்றுப்போகும் என்ற எண்ணம் எங்கும் பரவிற்று! காசி கயாவை நம்பிக் கிடந்தாலும், காலம் வீசும் இந்தக் கணைகளிலிருந்து தப்பிட முடியாது என்பதனை உணர்ந்து, மனமொப்பிடாதுபோயினும், பெரும்புரட்சி மூண்டுவிடாமல் தடுத்திடவேண்டுமே என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு ஒப்புக்காகவேனும், நிலஉடமை குறித்த சீர்திருத்தம் பல செய்து தீரவேண்டிய நிலைக்கு ஆளவந்தார்கள் துரத்தப்பட்டனர்.

ஜெமீன் ஒழிப்பு ஏற்பட்டது! மேள தாளம் கொட்டப்பட்டது! மேதினிக்குச் சுப செய்தி அறிவிக்கப்பட்டது! காட்டரசன் தர்பார் இல்லை, கட்டி வைத்து அடிப்போன் இல்லை, கட்டழகியைக் கெடுப்போன் இல்லை. கொட்டம் அடக்கப்பட்டாகி விட்டது: குறை இனி இல்லை, ஜெமீன்முறை ஒழிந்தது, இனி உழவு சிறப்புறும், உழவர் உள்ளத்தில் மகிழ்ச்சி ஊற்றெடுக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜெமீன் ஒழிக்கப்பட்டது, அதன் பயனுக, ஜெமீன்தாரன், ஆலை அரசனுகவும், வணிக வேந்தனுகவும், வட்டிக்கடை வள்ளலாகவும், மாறினுர்—ஏழையின் நிலைமையோ, உழவனின் வாழ்க்கைத் தரமோ, எப்போதும் போல, 'உப்பு காலணு, உள்ளி அரையணு' என்ற போக்கிலேயே இருந்தது.

காத்தானை மரத்தில் கட்டி வைத்து, 'புளிய மிலாரால்' அடித்திடச் சொல்லும் நிலப் பிரபு இல்லை!; கடன் கொடுத்துக் கசக்கிப் பிழியும் கன்னெஞ்சனே மறையவில்லை; பிரபுவே அந்தப் புதிய கோலம் கொண்டான், பெருமளவுக்கு.

வெள்ளைக்காரன் எவ்வண்ணம், வைசிராய், கவர்னர், கலெக்டர் எனும் பதவிகளை விட்டுவிட்டு, அன்னிய ஆதிக்கம் அகன்றுவிட்டது, சுயராஜியம் கிடைத்துவிட்டது என்ற சுவையான சேதியை மக்கள் ரசித்துக் கொண்டிருக்கும் போதே, தோட்ட முதலாளியாகவும்

பாரி நிலைய வெளியீடுகள்

அறிஞர் அண்ணு

மாஜிகடவுள்கள்	3	8	0
பார்வதி பி. ஏ.	3	0	0
காதல் ஜோதி	2	8	0
ரங்கோன் ராதா	2	8	0
ஓர் இரவு (நாடகம்)	1	4	0

கே. ஜி. இராதாமணுளன்

வீணை	2	8	0
நீரோ	1	0	0
கானல் நீர்	1	0	0
அரக்கு மாளிகை	2	0	0
இளவரசி	2	0	0

வ. உ. சிதம்பரனுர்

வ. உ. சி. சுயசரிதை	2	8	0
(வ உ சி குடும்பத்தினர் பதிப்பித்தவை			
சாந்திக்கு மார்க்கம்	0	12	0
மனம்போல் வாழ்	0	8	0
மெய்யறம்	0	8	0
மெய்யறிவு	0	12	0
இன்னிலை	1	0	0

தையற்கலை நூல்கள்

கே. பி. சுந்தரம் எழுதியவை

ஆண்கள் உடைகள்	3	0	0
பெண்கள் உடைகள்	2	0	0
சிறுவர் உடைகள்	3	0	0

எமது புதிய வெளியீடுகள்

ந. சஞ்சீவி எம்.ஏ.

மருதிருவர்	3	8	0
வேலூர் புரட்சி	1	4	0

பூ. அமிர்தலிங்கன்

வள்ளுவர் கண்ட உயிரினங்கள்	2	0	0

க. நாராயணன்

பொன்னரசி (சரித்திரநாவல்)	2	8	0

மா. க. சம்பந்தன்

சென்னைமாநகர்	2	0	0

அழ. வள்ளியப்பா

சின்னஞ்சிறுவயதில்	1	0	0

பொக்காஷியோ

டெக்காமரான் கதைகள் (2 பாகங்கள்)	7	0	0

பாரி நிலையம் 59, பிராட்வே, சென்னை-1.

உங்கள் இல்லம் எழிலோவியமாக விளங்க

எங்கள் இதய பூர்வமான இன்பநாள் வாழ்த்துக்கள்!

SVA TRADE MARK

PHONE: 3085.

எஸ்.வி. அம்பாள் & கோ.,

உரிமையாளர்
எஸ்.எஸ்.பி.லிங்கம்.

ஸ்பிரிட் & வர்ண வியாபாரம்.

319 / 322 ராசப்பசெட்டி தெரு...... சென்னை 3.

கம்பெனி டைரெக்டராகவும், தொழில் அதிபராகவும், நிபுணனாகவும், கடன் அளிக்கும் கனவானாகவும், திட்டம் தரும் அதிகாரியாகவும், இங்கு கோலங் குறையாமல் கொலுவீற்றிருக்க முடிகிறதோ, அது போன்றே' ஜெமீன்தாரர்கள், ஜரிகைக் குல்லாய் போடுவதையும் வயிற்றில் அடித்து வதைப்பதையும், உரத்த குரலையும் மிரட்டுப் பார்வையையும், விட்டொழித்தனரே தவிர, பணம் அவர்கட்கு தரும்பலம் எப்போதும்போல ஆதிக்கக் கருவியாகவே இருந்துவருகிறது; புதிய துறைகளிலே புகுந்துகொண்டு ஏழையின் வாழ்வைத் தமது கரத்தின் பந்தாக்கிக் கொண்டுள்ளனர்.

ஜமீன்தாரர்கள் கொடுங்கோல் நடத்திய போதெல்லாம், ஏற்படாத கிளர்ச்சி, கலகம், குழப்பம், இரத்தக் களரி, ஜமீன் ஒழிந்தான பிறகு, நிலத்தில் உழுது பலன் காணாது வறியராகி வதைபடுவோரிடம் மூண்டது. காரணமறியாது திடுக்கிட்டும்போயினர், ஆட்சியாளர்கள். ஜமீன் ஒழிப்பு என்பது, எவ்வளவு பெரிய புரட்சிகரமான திட்டம், எத்தனை காலமாக, இருந்துவரும் கொடுமை இதனால் ஒழிக்கப்படுகிறது. இதைச் சாதித்து அளித்த நம்மை இவர்கள் கோயில் கட்டிக் கும்பிடுவார்கள், திக்கு நோக்கித் தண்டனிடுவார்கள், என்று எண்ணி இறுமாந்து கிடந்தோம், இப்போதோ, இந்த ஏர் பிடித்ததுகள் நடத்துகிற கிளர்ச்சி நம்மைக் கதிகலங்கச் செய்கிறதே என்றெண்ணினர்; அடக்கித் தீருவதென்று முனைந்தனர்; ஆகாது என்பதன் அறிகுறி கண்டனர்; அடங்கினது போலாயினர்; அகமகிழ வேறோர் உரிமை நல்குவோம்; பண்ணையாள் சட்டம் இயற்றுகிறோம் என்றனர். செய்தனர்; இனிப் பயமில்லை, ஏட்டில் நாம் தீட்டியுள்ள சட்டத்தின் சுவை போதும், எருதுடன் பழகும் இந்த ஏமாளிகளுக்கு என்று எண்ணினர், எனினும் குறைய மறுக்கிறது. கிளர்ச்சி கட்டிலறைக் காரிகையாகிறது சட்டம், சீமான்கள் சல்லாபித்துக்கொண்டிருக்கும்போது, நாங்கள் அணுகும்போதோ சட்டம், எட்டி எட்டிப்போய் நின்று எம்மை ஏளனம் செய்கிறது. எமக்கேன் வீண் வம்பு? உழுது அறுத்திட நாங்கள், உண்டு கொழுத்திட உரிமையாளன், அழுது புரள நாங்கள் அனுபவித்துச் சுவைக்க பிரபுக்கள், வயலிலே வாய்க்கால் ஓரத்திலே நாங்கள், வட்டிலில் வார்த்த பழச் சாறை பட்டுடை அணிந்த பகட்டுக்காரிகள் தர அதனைப் பருகிக்கொண்டே பாடுவோம் பாடிக்கொண்டே பருகுவோம் என்ற நிலையில் நிலத்துக்குப் 'பட்டயம்' பெற்றோர், தொழுவத்தில் நாங்கள், தோகை மயிலாடும் பூங்காவிடுதியில் அவர்கள், ஏர் தூக்கிக்கொண்டு நாங்கள், கார் ஏறிச் சுற்றிட அவர்கள், களை எடுக்க நாங்கள், பழச்சுளை தின்ன அவர்கள், ஏன் இந்த நிலை? இது மாறாதிருக்கும் வரையில், போர் ஓயாது, முறையிலே அடிப்படை மாற்றம் வேண்டும்—பூச்சு புதிதானால் நாற்றம் அடியோடு ஒழிந்தாபோகும்? உழுபவனுக்கே நிலம் என்று திட்டம் இருக்க வேண்டும். என்று உழவர்கள் கேட்டுக் கிளர்ச்சி நடத்துகின்றனர்.

இனி, விளைவதிலே பாதிக்குமேல் உனக்கு, சரிதானா?

100க்கு 60-வது உனக்கு, உடைமைக்காரனுக்கு 40 தான், திருப்திதானா?

"இதுபோதும் இறையே; இதுபோதும்! இதைப் பெறத்தான் நாங்கள் இது நாள் வரை தவங்கிடந்தோம்!" என்று கூறிக் களிநடம் புரிவர் உழவர்கள் என்று எண்ணுகின்றனர் ஆட்சியாளர்கள்; ஏமாற்றம் தான் தாக்கப் போகிறது.

நிலத்தின் மூலமாக மட்டுமே, உழவன், தன் வாழ்வுக்குத் தேவையான வசதியையும் வாய்ப்பையும் பெற முடியாது என்ற பேருண்மை அவன் உள்ளத்துக்குப் பேரிடியாகக் கிளம்பக் கூடிய நாளும் ஒன்று இருக்கிறது—உழுபவனுக்கே நிலம் என்ற திட்டம் நடைமுறைக்கு வந்தான பிறகு!!

இன்று உலகெங்கும் பேசப்பட்டுவரும் **'நிலப்பசி'** மட்டுந்தான் தெரிகிறது, புரிகிறது, இருசாராருக்கும்—ஆனால் பசிக்குப் பனம்பழம் தின்பது என்ற பழமொழி போல, உழுபவனுக்கு நிலமளித்து விட்டு, அவன் அதைக் கொண்டே வாழ்வில் வசதி நிரம்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று அவனுக்குக் கூறப்பட்டான பிறகு தான், தனிப்பட்ட முறையிலும் சரி, நாடு முழுவதிற்கும் சரி, நிலம் ஒன்றின் மூலமே வாழ்வுக்குத் தேவையான சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று எண்ணுவது, பேதமை—பேராபத்து என்ற உண்மை வந்து உறுத்தப்போகிறது.

மக்கட் தொகை குறிப்பிட்ட அளவிலும், வாழ்க்கைத் தேவைகள் விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய அளவிலும் இருந்தபோது "உழுதுண்டு வாழ்வானுக்கு நிகரில்லை, செய்யுந் தொழிலெல்லாம் நெய்யுந் தொழிலுக்கு நிகருமில்லைதான்!

சாது சன்யாசிகள், உபதேசியார்கள், உத்தமர்கள், அணி அணியாகத் தோன்றி அழகழகான பாடம் போதித்தனர். உண்பதுநாழி உடுப்பது நான்கு முழம்—பிறந்தபோது கொண்டு வந்ததில்லை, இறக்கும்போது கொண்டு போவதுமில்லை—போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து—என்றெல்லாம் கூறினர்.

அவர்களின் உபதேசம் என்ன வகையில் இன்று தெரிகிறது என்று பார்த்தால், கோட்டைபோன்ற கோயில்கள் மடாலயங்கள், தங்கக் கூரைகள் ஓடுகள், நவரத்தினம் பதித்த சபைகள், இப்படித் தெரிகின்றன! ஆசை அடக்கிவிடப்பட்டது; நிர்மலனைத் தேடுவதற்காகவே, உடலும் உயிரும் ஒன்றி இருப்பதற்கான அளவுமட்டும், கிடைத்தால் போதும், கனியேனும், செங்காயேனும், உதிர் சருகேனும், கந்த மூலங்களேனும், காற்றேனும் உண்டு உயிர் தரித்திருக்கலாம், ஏனெனில் இறைவன் அடி சேர்வதற்கே இந்த மானிட ஜென்மம் எடுத்தோம் - இங்கு உள்ளதெல்லாம் மாய்கை, காண்பதத்தனையும்-நீர்மேற்குமிழி - நீள் விசும்பில் தோன்றும் இந்திர வில் என்ற உண்மை உணரப்பட்டு;உடைமை வேண்டாம், அதன்மீது உரிமை

சித்திரைத்திங்களில்
சிந்தைமணக்கவரும் செந்தமிழ்ப் பூக்காடு!
சிவகாமி பிக்சர்ஸ்
தயாரிக்கும்
புதுமைப்பித்தன்
சூழ்ச்சி, ஆணவம், சுழன்றடிக்கும் அதிகாரச்சூறுவளி —
அனைத்தையும் சூழ்ந்தெதிர்க்கும் வீரனின் வரலாறு!
கதை வசனம்
மு.கருணாநிதி
டைரக்ஷன்
T.R.ராமண்ணா

வேண்டாம், அவ் வுரிமையினைப் பாதுகாக்கச் சட்டம்எற்றுக்கு ?அச்சட்டம் சரிந்திடாதிருக்கக் கட்டுக் காவலும், வழக்குமன்றமும் சிறையும் ஏன் என்று,ஆலயங்களிலும் ஆதீனங்களிலும் உள்ளவர்களே கூடிடக் காணும் உண்டிப்பெட்டி உனக்கா எனக்கா என்பது பற்றிய வழக்கு உயர் நீதி மன்றம் வரை வருகிறது. கூட்டைகூட்டிட வந்தவளைக் குலவியது உண்மையா பொய்யா என்ற கேள்வி கேட்கப் படுகிறது—வழக்கு மன்றங்களில், அங்கு பதில் கிடைப்பதில்லை என்று ஊர்மக்கள் பேசிக் கொள்கின்றனர், உபதேச பீடங்களிலேயே இந்த நிலை ! உபதேசம் கேட்ட மக்கள், ஆசையை அடக்கினர், போதுமென்ற மனமே பொன்செயும் மருந்தென்று கண்டு கொண்டனர் என்று எங்ஙனம் கூற முடியும்,?

நாளாகவாக, வாழ்க்கைத் தேவைகள் வளரத்தான் செய்யும் – நுண்ணறிவாளர்கள் இதனைத்தான் நாகரீகத்தின் அறிகுறி என்றே செப்புகின்றனர்.

காந்தியாரைவிட கிராமத்தின் சிறப்பு பற்றியும், எளிய வாழ்வின் ஏற்றம் குறித்தும். இதமாகவும், மனப்பூர்வமாகவும் எடுத்துரைக்கவா முடியும்!

நேரு பண்டிதர் சபர்மதியிலும், பாபுராஜேந்திர பிரசாத் அரிபுராவிலும், அபுல்கலாம் ஆசாது திரிபுராவிலும் சென்று, குடிலில் தங்கியா, மக்களுக்கு வழி காட்டுகின்றனர்? முடிகிறதா? இல்லையே!!

உலகின் கண் உள்ள ஒவ்வோர் நாட்டிலும், ஏரும் எருதும்தான் சீரான செல்வமாக கருதப்பட்டு வந்தது.

மக்கள் கூட்டம் பெருகப் பெருக, விவசாயத்தின் மூலமாக மட்டுமே பொருள் ஈட்டி, வாழ்க்கையில் வசதி காணமுடியாது போயிற்று! தொழிலின் துணையும், தொழிலுக்குத் துணையாக யந்திரங்களும், யந்திரங்களைப் பெற்றளிக்கும் அறிவு பெற விஞ்ஞானக் கூடங்களும் தேவைப்பட்டன!

எனவே, பொங்கற் புதுநாள், உழவர் திருநாள் என்று கொண்டாடி வருவதால், உழவு ஒன்றையே உறு துணையாகக் கொண்டு, நாடு எல்லா வளமும் பெற்றுத் திகழ முடியும் என்று சிறப்புச் சிந்து பாடிவிடுகிறோம் என்று பொருளல்ல; நாடு, பல்வேறு தொழில் வளமாக விளங்கிடும் கூட மாதல் வேண்டும். இயற்கைச் செல்வம், புதைந்து கிடப்பதும், மூழ்கிக் கிடப்பதும், மூடிக் கிடப்பதும், முட்புதராகிக் கிடப்பதும் நிபுணர்கள் கூறுவதால் தெரிகிறது. அவை எலாம், மக்கட்குப் பயன்படத்தக்க வகையில் தொழில் திட்டம் வேண்டும்! நெய்வேலி நிலக்கரியும், சேலத்து இரும்பும் நாட்டுக் கோலத்தையே மாற்றி அமைத்திடத் தக்க வளம் அளிக்கும் என்கின்றனர் நிபுணர்கள். ஆட்சியாளர்களும். 'ஆம்' என்கின்றனர்; கூறிவிட்டு நம்மைச் சீராக்கவும் இயலாமல், வெட்கித் தலை குனிகின்றனர்; காரணம், அவர்க்கு அதிகாரம் இல்லை !!

விழாக் கோலம் இருக்கும் நாளிலே, விழியில் துளிர்த்திடும் கண்ணீரை வழிய விடாமல் தடுத்து, செங்கரும்பைச் சுவைத்திடும் நமது செல்வங்களையும், அச் செல்வத்தை அளித்த சிற்றிடையாரையும், அவள் கைவண்ணமாக அமைந்துள்ள இல்லத்து எழிலையும், ஆங்கு பூசிய சுண்ணம் வெண் கருநிறம் கொள்ளும் வண்ணம் புகை எழ, அடுக்களையில் தழல் இருத்தலையும், அதைக்கொண்டு, ஆவின் பாலில் அரிசியைப் பெய்து, பொங்கல் சமைத்திடும் பான்மையையும், பொங்கலோ! பொங்கலென்று ! கூவி புத்தாடை மணமும் புதுமலர் மணமும் ஒன்று கூடிக் கமழும் நிலையில், சிறுவர்கள் ஓடி ஆடி மகிழவும், அவர்தமை எட்டிப் பிடித்துக் கட்டி முத்தமிடுவதும், உச்சி மோந்து அணைத்து ஆனந்திப்பதும், ஆளனுக்கு ஏற்றவள் இந்த அல்லி ! அந்தச் செல்வியோ, மயக்கு மொழி மாது ஆவாள்! எங்கடி கண்ணே! இந்த இசை கற்றாய்! எவரிடம் பயின்றனளோ இந்த நடனம்? என்றெல்லாம் கேட்டு இன்புறவுமான நிலையில், பல இல்லங்களிலே இருப்பர்.

அத்தகைய இல்லங்களே நந்தம் நாட்டில். எங்கும் திகழவேண்டும் என்பதன்றி, வேறென்ன குறிக்கோள் கொள்ள இயலும்.

மனைமாட்சியன்றி, பிறிதோர் பீடுடைக் கொள்கையும் உண்டோ?

உழைத்தான், உருக்குலைத்தான் : உழைத்தான், பறிகொடுத்தான்! உழைத்தான், பசி தீர்த்திடவும் போதாதது கண்டு உள்ளம் வெதும்பி நின்றான்! உழைத்தபடி இருக்கிறான், எனினும் வாழ்வு சிறந்திடும் வகை காணோம் !

இன்புற்றோம் என்பது இன்புற்றாரைக் கண்டால் அன்றி பூர்த்தி அடைவதில்லை. தங்கவளை குலுங்க வெள்ளிச் சிலம்பொலிக்க, வைரம் மின்ன, இவையெலாம் பணத்தின் விளைவு. நானே குணத்தின் விளைவு, என்று கூறிடுவதுபோல புன்னகை பூத்திட, ஆருயிரனையாள், கொடி என அசைந்தாடி, குமரனிடம், உணவு வகைகளை, வெள்ளி வட்டிலிலிட்டு அளித்து, அவனும், அவளிடம் கொண்ட மையலால், கரத்தில் எடுத்த பண்டத்தை வாயினில் கொண்டு செலுத்து முன்பு, கண்ணால் அவளைக் கொத்தி, கரமது பற்றி, இஃதோ நான்கேட்ட விருந்து என்று கேட்டிட, பையப்பைய வரும் பாலகனைப் பார்த்து நட ! ஐயய்யோ ! என்று கெக்கலி செய்வாள் அந்தக் குறும்புக்காரி, 'உன் தங்கை', அதை அறிந்து நட என்று கூறி, அவன் எதிர்பார்ப்பதில் ஏதோ ஓர் அளவு தந்துவிட்டு, இதோ வெண் பொங்கல், அதன் சுவையை அதிகமாக்கும் துவையல், இனிப்புப் பண்டம் இதோ, அதோ தேனில் ஊறிய பலாச்சுளை என்று சுட்டிக் காட்டிட தேனிடை ஊறிய செம்பவளப்பழம், சேயிழையே! எனக்களித்திடாயோ ? என்று இவன் கேட்க, அண்ணா : இதென்ன அதிசயப் பழம் ? செம்பவளப் பழமென்று நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையே என்று, கடிமணமாகா அணங்கு கேட்டுக் குறுநகை புரிய, "ஏடி கள்ளி" இந்த ஆண்டு தப்பினை. அடுத்த ஆண்டில் ஆளன் வருவான். செம்பவளப் பழமும் கேட்பான், வெண் முத்து மணியும் கேட்பான், அறிந்து கொள்வாய் அப்போது" என்றுரைக்க, "அண்ணி மகா கெட்டிக்காரி ! அண்ணனை மயக்கின பலே வேலைக்காரி" என்று குறும்புப் பாட்டுப் பாடியபடி, ஓடுகிறாள் துடியிடை துவள. வார் குழல் புரள, புத்தாடை பொலிவு காட்ட !

இன்பச் சூழ்நிலை யன்றோ இது ! ஆம்! ஆம் ! எனினும் அதோ கேண்மின். ஓர் இருமல் சத்தம் ! ஈளை கட்டி இழுக்கிறது ! இதுவும் மனித உருவம்தான், என்று காட்ட மட்டுமே கா லு ம. கையும், கண்ணும்

மார்ச் 2உ முதல்
கஸ்தூரி பிலிம்ஸ்
சதாரம்
P.பாநுமதி · K.R.ராமசாமி · ஜெமினி கணேசன்
K.சாரங்கபாணி · T.S.பாலையா · M.N.ராஜம்
V.K.ராமசாமி C.K.சரஸ்வதி · M.S.S.பாக்கியம் மற்றும் பலர்
தயாரிப்பு & டைரக்ஷன் V.C.சுப்பராமன்
GAIETY PICTURES CIRCUIT MADRAS
கஸ்தூரி பிலிம்ஸ் சென்னை - 17
வசனம்
A.T.கிருஷ்ணசாமி & A.K.வேலன்
பாடல்கள்
ராமய்யதாஸ் & மருதகாசி
சங்கீதம் G.ராமநாதன்
ஒளிப்பதிவு ஸ்ரீதர்
ப்ரொடக்ஷன் நிர்வாகம்: G.R.செல்வரங்கம்
ஸ்டூடியோ: ரேவதி

பிறவும் உள! அவன் அங்கமெல்லாம் ஏதோ ஒரு நோய் அரித்துக்கொண்டிருக்கிறது! முது கிழவனைக் கண்டதும் பழமும் சுவையும், பாவையும் காதற்பண் அளித்த உல்லாசமும். உலர்ந்தேபோகிறது ! பளிங்கான நீரோடையில் முகத்தழகு கண்டுகளிக்கும் போதே. விளையாட்டுச் சிறுவன் வீசிய கல்லொன்று நீரினைக் கலக்கிடின், ஓடையில் உருவம் தெரியாது கலையுமே, அஃதேபோல, பெற்ற இன்பம் கலைகிறது— பேசொணாத துயரம் வந்து துளைக்கிறது! கவண்கண்ட புள்ளெனக் கடுகிச் சென்றிடுகிறது இன்பம். ஆகவேதான், இன்புற்றோரைக் கண்டாலன்றி, பெற்ற இன்பம் சுவைபயப்பதில்லை, நாடு முழுவதும். நலிவற்று, பொலிவுற்று. துன்பமற்று இன்புற்று, வாழ்வு சிறந்திடா வண்ணம் விளங்கிட இருந்திடில், சீரிய எண்ணங்கள் உண்டாகும், நாடு சிறப்புற்று ஓங்கும்.

இயலுமோ ? என்று கேட்போர் தொகை, குறைந்து வருகிறது !

திட்டம் ஒன்று தீட்டினோம், மேலும் ஒன்று தீட்டி வருகிறோம், பலப்பல மேலும் தீட்டுவோம், எல்லோரும் இன்புற்று வாழ, இல்லாமை. போதாமை, இயலாமை அறவே ஒழிந்திட—என்று கூறுகின்றனர் அரசினர்.

பல்லக்கில் ஏறுவோனும் தூக்குவோனும் இருக்கத்தான் செய்வர், கோபுரம் குப்பை மேடாகும். குப்பை மேடு கோபுரமாகும். எல்லாம் 'அதது' அவன் ஆணைப்படி, ஆகவேண்டிய காலத்தில் ஆகவேண்டிய விதமாக நடந்தேறும், என்று ஆண்டிப் பேச்சு பேசாமல். ஏதோ ஆளவந்தாரானோமே என்பதையாவது மறவாமல் எல்லோரும் இன்புற்றிருக்கத்தான் திட்டங்கள் தீட்டுகிறோம் என்கிறார்களே, மகிழ்ச்சி, நன்றி,

திட்டங்களைக் காட்டி, 'தேனமுது ஊட்டுவதாகக் கூறுகிறார்களே இவர்களிடம் 'கொற்றம்' இல்லை !! இதனை வெளியே கூறிட மனம் இவர்கட்கு இடந்தருவதுமில்லை! அது புரிந்து கொள்ளக் கூடியதுதான் !!

புள்ளிக் கலாபம் எனக்கு இல்லை என்று அடக்கமாக உண்மையைக் கூற, வான் கோழிக்கே மனம் வருவதில்லை என்றால், அமைச்சர் கோலத்திலிருப்பவர்கட்கு எங்கனம், தமது நிலை, உரிமையற்றது, என்று கூறிக் கொள்ள இயலும்!!

பெருமகிழ்வு எல்லா இல்லங்கட்கும் பொதுவாதல் வேண்டுமெனின், கொற்றம் நம்மிடம் இருத்தல் வேண்டும்; அஃது என்னெனில். கயிறுடுபாவையாக உள்ள நிலைபோய், ஆளும் ஆண்மையாளர்களாக இவர்கள் 'மறுபிறவி' எடுத்திடவேண்டும்.

"சேலத்து இரும்பும், நெய்வேலி நிலக்கரியும், புதையுண்டு கிடக்கும் எமது அருஞ் செல்வமாகும்-அரசாள்வோரே! இவை வெளிப்பட்டு, பயன் படுத்தப்பட்டால், எமது வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழிந்து போகும். அருள் பாலிக்க வேண்டும் என்று அன்பு சொரிந்தும், அழுகுரலுடனும், அழுத்த திருத்தமாகவும், அருவருப்பை வெளியே காட்டிக் கொள்ளும் நிலையிலும், ஆளவந்தார்களும் அவர் தம் ஆதரவாளர்களும், பன்முறை கூறினர். நாம் பக்குவமற்றுப் பேசுகிறோம், பயனற்றன செய்கிறோம், காரியமாற்ற எமக்கே தெரியும் என்று கூறிவிட்டு, டில்லி நோக்கி இறைஞ்சி நின்றனர். கண்ட பயன் ? அமைச்சர்களைப் பாருங்கள் புரியும்! வல்லூறு பண்டத்தைக் கொண்டு போகக் கதறிடும் சிறார் போல் என்பதா, குழியில் வீழ்ந்த களிறு என்பதா, எது கூறிடின் அவர் தமக்குச் சீற்றம் அதிகம் பிறவாதோ, அந்த உவமையைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு உமக்கே

மனம் வெதும்பிச் சில நேரம் பேசுகின்றனர்; மார்தட்டுகின்றனர் வேறோர்காலை; ஆனால் நம்மைப் பார்க்கும் போதோ, குறையிலா உள்ளத்தினர் போல் கூவி நிற்கின்றனர்! இல்லாள் பொல்லாதவளாயின், இவளிடம் இடி அடிபடும், இயலாதான், வெளியே உள்ளார்க்கு இது தெரிதல் அழகன்று என்றெண்ணி, அடியைப் பெற்றுக் கொண்டே, ஆஹா! உனக்கு அத்துணைத் துணிவா! இத்துணை அடிபட்ட பிறகுமா, அடங்கினாய் இல்லை! எடி! குடிகேடி! விட்டேனுபார் உன்னை! விலா நொறுக்கி. விட்டுத்தான் வேறு வேலை பார்த்திடுவேன்! கதறு! புரண்டு அழு !! – என்று கூவிடுவானும்!

எது நேர்ந்தாலும் நேரிடலாம், இந்த கழகத்துக் காரர்களுடைய பேச்சை சரி என்று நான் ஏற்றுக் கொள்ளும் விதமாக மட்டும் நான், தவறியும் நடந்து கொள்ள மாட்டேன் என்று, கனம் சுப்பிரமணியம் நடந்து கொண்டு வருபவர்! அப்படிப்பட்டவரே, இந்திங்கள் ஆறும் தேதி டில்லிசென்று 'தேசீய அபிவிருத்தி கவுன்சில்' முன்பு—வற்புறுத்தினராம்—ஏடுகள் தரும் செய்தியினைப் பாரீர்:

"தென்னாட்டைப் பொறுத்த வரையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் திருப்திகரமாக இல்லை.

இயற்கை வளம் இல்லை என்று சொல்லி தென்னாட்டில் ஆலைகள் நிறுவ மறுப்பது அர்த்த மற்றது. சின்னஞ்சிறு தொழில்களையாவது ஏற்படுத்தக் கூடாதா ?

மக்களுக்கு நம்பிக்கை யூட்டக்கூடிய முறையில் திட்டம் இல்லை, அப்படி யிருக்கும்போது மக்களுக்கு எப்படி ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆர்வம் பிறக்கமுடியும்?"

வேறு யார் கூறவேண்டும். வெட்கக் கேட்டினை !

விழா காணும்போது நாடு, வடவரின் பிடியிலே சிக்கிக் கிடப்பதால், பொலிவிழந்து நிற்பதன்றோ, முந்தி வந்து உள்ளத்தை உறுத்துகின்றது.

எவ்வளவு மாந்தருக்கு விழாநாளில் இன்பம் பெறுதற்கு வாய்ப்பு கிடைக்கிறதோ, அவர் தம் உள்ளத்திலெல்லாம், தமக்குக் கிடைத்த இன்பம், அனைவருக்கும் கிடைத்திடச் செய்வதே, நமது வாழ்க்கையின் குறிக்கோள்! அதற்கான பணியாற்றுவோம், என்ற உறுதிப்பாடே நாட்டுக்கு நாம் அளிக்கும் பொங்கற் பரிசு என்று கூறவேண்டும்.

காலமே! இதற்கான அறிவாற்றலை அனைவருக்கும் அளித்திடு என்று காத்து நிற்கிறோம்.

பேசும் பொற்சித்திரத்தை - பெண்கள்குல திலகத்தைப்
பேயாக்கி மகிழும் பித்தனின் வெறிவிளையாட்டு!
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டில்
மண்ணடிமை தீர்வதில்லை என்ற பாடம் போதிக்கும்

அறிஞர் **அண்ணாவின்** பொன்னோவியம்

மேகலா பிக்சர்ஸ் தயாரிக்கும்

ரங்கோன் ராதா

டைரக்ஷன்
A.காசிலிங்கம்

திரைக்கதை, வசனம்.
மு.கருணாநிதி

..நேஷனல் பிக்சர்ஸ்..

G.H.RAO

வெள்ளி முளைத்தது!



குஷ்டரோகி! பிச்சைக்காரன்!! பிணம்!!!

"சீச்சி! அசிங்கம்......"என்று சொல்லியபடி, எல்லோரும் போய்க்கொண்டேயிருந்தார்கள், வீதியில். அவனால் அப்படிப் போக முடியவில்லை.

குஷ்டரோகி! — நின்றபடி, உற்றுப் பார்த்தான் அவனை. உடல் முழுதும் அழுகிப்போன அந்த உருவம், அவன் மனதில் பேரிரைச்சலை உண்டுபண்ணிற்று.

பிச்சைக்காரன்!!—எதற்காக இவன் பிச்சையெடுக்கவேண்டும்? ஏன்?ஏன்? என்று எண்ணலானான். இதயம், எரிமலையாகிக் கொண்டிருந்தது.

பிணம்! — அய்யோ, அதைக் கண்டதும் அனைவரும், எவ்வளவு தொலைவுக்கு ஒதுங்கி ஓடுகிறார்கள்.

அரங்கண்ணல்

அவன் வாய் முணுமுணுத்தது- குஷ்டரோகி! பிச்சைக்காரன்!! பிணம்!!!—என்று.

அவனைச் சூழ்ந்து வந்தவர்கள், "அந்தி மயங்கிவிட்டது! அரண்மனைக்குப் போகலாம்..." என்று அவசரப்படுத்தினார்கள்.

"ஆமாம்! அந்திநேரம் வந்துவிட்டது, அந்திநேரம்தான் வந்துவிட்டது!" என்று ஆகாயத்தைப் பார்த்தபடி சொன்னான், அவன். அங்கே, மேகக்கூட்டங்கள் பரவி ஓடின — எண்ணங்கள் எழும்பியோடும் அவன் மனதை எதிரொலிப்பதுபோல.

குஷ்டரோகி! பிச்சைக்காரன்!! பிணம்!!—மீண்டும், அவன் வாய் முணுமுணுத்தது.

* * *

அரண்மனையின் நிலாமுற்றம் அவனுக்காக சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. மகனின் உள்ளத்தில் கவலையின் நிழல்கூடப் படியக்கூடாதென்பது அரசன் கட்டளை. அங்கு வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு பொருளும் 'உலகம் உன்னுடையது ரசி! ருசி!' எனும் ஆசைகளை உண்டாக்கிக் கொண்டிருந்தன. நட்சத்திரக் கூட்டங்களிடையே உலவும் நிலவுக்கு உயிர் வந்தது போல ஒரு ஆடலழகி அங்கு வந்தாள். இளவரசனை வணங்கிவிட்டு, அபிநயம் பிடிக்கலானாள். அவள் கூட வந்த மற்றொருத்தி தாளம் தட்டினாள் — இன்னொருத்தி வீணை கலந்துவரும் இசையமுதைப் பொழிந்தாள்.

இந்திரலோகம் என்பார்களே — அது, இப்படித்தானிருக்கவேண்டும், உண்மையாகயிருந்தால்!

நேற்று அவள் ஆடியபோது ஒருதங்கச் சுரங்கம்போலத்தென்பட்டாள் அவன் கண்களுக்கு. இன்றோ! சதைகளையெல்லாம் கழித்தெடுத்த எலும்புக் கூடு மட்டுமிருந்தால் எப்படியிருக்கும்? —அப்படித்தான் தோன்றினாள் அவனுக்கு.

ஒரே பயங்கரம்......கண்களை இறுக மூடிக்கொண்டான் ஒரு கணம்...ஆடலழகியின் சலங்கை எழுப்பிய 'சல், சல்' ஒலி, காற்றோடுகலந்து, அந்த அரண்மனை எங்கும் பரவிக்கிடந்தது. இசைக்

கருவிகள் எழுப்பிய கீதம், முரடனையும் தன்வசமாக்கி விடும். ஆனால், அவனுக்கோ, அதெல்லாம், இடியும் மின்னலும் எழுப்பிடும் கோர ஒலிபோல கேட்டது. இருப்புகொள்ள இயலவில்லை. எழுந்தான். எதிரே இருண்டுகொண்டிருக்கும் வானத்தைப் பார்த்தான். சற்று நேரத்துக்குமுன் கண் சிமிட்டிக்கொண்டிருந்த நட்சத்திரம் ஒன்று வீழ்ந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்பு, ஆகாயமே அதற்குச் சோலை! இப்போது, தரைதான் தொட்டில்!

* * *

அவன் போக்கு கண்டு திகைத்த ஆடலழகி, அவனருகில் வந்தாள். அரசோச்சும் மௌனத்தைக் கலைத்தாள்.

"இளவரசே! சிலிர்த்தோடும் தென்றல்; சிந்து பாடிக்கொண்டு ஓடும் தேனருவி, பாடும் குயில், பறக்கும் சிட்டு, துள்ளியோடும் புள்ளிமான்.........இந்தப் பூமியில் இல்லாத அழகு, அந்த இருண்ட வானத்தில் என்ன இருக்கிறது, பிரபு?"

"பகல், மனிதனை மிருகமாக்குகிறது. இருட்டு, அவனை, ஞானியாகச் செய்கிறது."

"என்ன?"

"ஆமாம் அழகி! உலகத்தின் கோர ஒலிகளை இன்றுசாயங்காலம் கேட்டேன்...இந்த இரவுநேரத்தில் அந்தக் கூச்சல்களெல்லாம் அடங்கி அமைதி ஆட்சி நடத்துகிறது எங்கும். ஆகா, இந்த ஆனந்தம் எப்போதும் ஏற்பட்டுவிடக்கூடாதா உலகில்? இந்த அமைதி, நிரந்தரமாகிவிடக்கூடாதா, இந்த நாட்டில்? உலகமே, எப்போதும் இரவாகவே இருந்துவிடக்கூடாதா ஆடலழகி?"

அவள் திகைப்பு மேலும் அதிகமாயிற்று. ஏன், இன்று இப்படியிருக்கிறார் இளவரசர்—இரவாகயிருக்க வேண்டுமாமே உலகம்!—ஏனிப்படியெல்லாம் பேசுகிறார் என்றெண்ணியவளாகக் கேட்டாள்,



"அழகான பொருள்களை பகல் தானே அறிமுகம் செய்து வைக்கிறது .....பிரபு"

"ஆனால் அந்த அழகு தூங்கும் போதுதான் மனிதன் ஞானியாகிறான் ...." இளவரசனின் குரல் அழுத்தமாக ஒலித்தது "ஆடலழகி! என் இதயராணி யசோதரா ஆடிப்பாடி என்னுடன் உறவாடும்போது என்னுடைய மிருக உணர்ச்சிகள் தலை தூக்கி ஆடுகின்றன......அதே யசோதரா, சப்ரமஞ்சத்தில் அயர்ந்து தூங்கும்போது பார்த்தால் நான் உண்மையான மனிதன் ஆகிறேன். பெண்மை, உலவும்போது மனிதனைப் புலியாக்கி விடுகிறது! யசோதராவின், தேனுதடுகள் அசைந்தால், பித்தனாகிறேன் நான். குனிந்து என்னைப் பார்க்கும் போதுதென்படும் அவளுடைய அழகு என் மனதுக்குள் ஏழ்கடலிரைச்சலையும் உண்டாக்கிவிடுகிறது. அவளைக் கசக்கிப்பிழிந்து, அழகு அமுதத்தையெல்லாம் ஒரேயடியாகக் குடித்துவிடவேண்டுமென்று குதிக்கிறேன்............ஆனால் அதே யசோதரா, தூங்கும் போது? நெற்றியிலே புரண்டு கிடக்கும், அந்தக் கருநிற கேசம்! கணவனான நானிருக்கிறேன் எனும் நம்பிக்கையால் அவள் மனதில் நிரம்பிக்கிடக்கும் பூரிப்பின் எதிரொலி! என்னைக்கைபிடித்தபோது, பெற்று வளர்த்தவர்களையும் விட்டுவிட்டு என்னோடு வரத் துணிவுகொண்டு வந்தாளே...........அந்தத் தியாக சுபாவம்......அடடா! பெண்மை, எவ்வளவு அற்புதமான சுரங்கம். தெய்வம் என்கிறார்களே உண்மையில் நடமாடும் தெய்வங்கள் நளினமேனி நங்கையர்தாம், அழகி, நங்கையர்தான். அவர்களைப்பற்றி சிந்திக்கும் போதுதான், உணர்ச்சிக் கூத்துகள் அடங்கி, அன்புப் பிரவாகம் சுரக்கிறது......ஆகா எவ்வளவு அற்புதமான மனித சிருஷ்டி!"

ஆடலழகி திகைத்தாள். இளவரசனின் எண்ணங்கள், இன்று புதுக்கோணத்தில் திரும்பியிருப்பது கண்டு மருண்டாள், அந்த இடத்தைவிட்டு, கானக் குழுவுடன், அவசர அவசரமாக அகன்றாள். இருட்டு அதிகமாகிவிட்டது.

2

இலைகளையும், மரக் கிளைகளையும் தாண்டிக் கொண்டு கிளம்பிய நிலாவின் மூளியான வெளிச்சம் நுழைந்தது அங்கு.

பால், பழம் ஆகியவைகளோடு மனைவி யசோதா நுழைந்தாள். சிலைபோலிருக்கும் கணவனைக் கண்டு, அவனருகே வந்தாள் வியப்புடன்.

"ஆழ்ந்த சிந்தனை எதைப்பற்றி அன்பே......"

"யசோ! ஒரு சிக்கலான கேள்வி...... மனிதனுக்குள் ஏன் யசோதா, இத்தனை வேற்றுமைகள்?"

இளவரசனின் குரலில், சோகம் தென்பட்டது. திகைத்தாள், யசோதை. இந்தக் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்லுவது? பகலுக்குப் பின் இரவு இருப்பதுபோல, ஒரு பக்கம் மாடமாளிகைகளிருந்தால் இன்னொரு பக்கம் குடிசைகள் இருக்கத்தான் வேண்டும்...அதுதான் இயற்கையின் நியதி என்று சொல்லலாம் என்பதாக நினைத்தாள் யசோதா. அதைத் தவிர வேறுபதில் தெரியவில்லை........மனதைத் திடப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

"ஆண்டவனின் கட்டளை, நாதா! அது"

"உல்லாசமாக ஒருவன் வாழும் போது ஓடேந்தி பிச்சைக் கேட்க இன்னொருவனும், புலியைப்போல ஒருவன் நடந்து செல்லும்போது புழுத்த உடலுடன் இன்னொருவனும் உலகத்தில் நடமாடுகிறார்களே—அதுகூட ஆண்டவனின கட்டளை தானா, தேவி? பார்ப்பனன் ஒருவன் படாடோபமாகச் செல்கிறான். அவனருகில் வந்த மற்றொருவனைப் பஞ்சமன் என்பதால் விரட்டி விரட்டி அடிக்கிறான்... அதுகூட இயற்கையின் நியதிதானா, தேவி?"

இளவரசனின் குரலில் தொனித்த கோபத்தைக் கண்ட யசோ திகிலடைந்தவளாய், அவனுடைய தோளில் சாய்ந்தாள்.

"யசோ! இன்று மாலையில் ஒரு குஷ்டரோகியைப் பார்த்தேன்...அவனைக்கண்டு ஓடி ஒலியும் ஒரு வாலிபனையும் பார்த்தேன். அந்த வாலிபனுக்கருகிலேயே வயோதிகத்தால் வளைந்து மெலிந்து கூனிக்குறுகி ஒருவன் தள்ளாடி பிச்சை எடுப்பதையும் பார்த்தேன் ...அதற்கு அப்பால் ஒரு பிணத்தைச் சுமந்து சிலர் செல்லுவதையும் பார்த்தேன்......"

"இதெல்லாம் சாதாரண நிகழ்ச்சிகள்தானே,

நாதா! நம்மைச் சுற்றித் தினசரி நடைபெறுகிற நிகழ்ச்சிகள் தானே...?"

"...உன்னைப் போலத்தான் இந்த உலகிலுள்ள எல்லோரும் எண்ணுகிறார்கள் யசோதரா! ஒவ்வொருவனும் தன்னுடைய வீடு, மாடு, தோட்டம், செல்வம் என்று எண்ணுவதும், அவைகளைக் காப்பாற்ற வாழ்வதும், பிறகு பாடையிலேறுவதுமாக இருக்கிறார்களே ஒழிய, ஒருவர்கூட இதைப்பற்றி எண்ணுவதேயில்லை. நமக்கென்ன! இதெல்லாம் சாதாரண நிகழ்ச்சிகள்!— என்றே போய்விடுகிறார்கள். இதோ, பார்... ......என் உள்ளத்தை ஊடுருவி அறிந்துகொள்ளும் உன்னுடைய கண்களின் வனப்பும் ஒருநாளைக்கு வாடத்தானே வேண்டும்? இப்போது நான் தொட்டு விளையாடும் இந்த ரோஜாக் கன்னங்கள் உலர்ந்து தளர்ந்துதானே போய்விடும்? என்னைப் பிரதிபலிக்கும் உன்மேனிக் கண்ணாடி—ஐயோ! ஒரு நாளைக்கு தீக்குண்டத்தில் உருகிக் கரைந்து நீராகத் தானே ஆகப்போகிறது........"

"அரும்பு மலராவதும், மலர் சருகாவதும் அதிசயமானதல்லவே! இதற்காக ஏன் அலட்டிக்கொள்ளுகிறீர்கள், நாதா?"

"நானில்லாவிட்டாலும் யாராவது ஒருவர் சிந்தித்துத்தான் ஆகவேண்டும் — கண்ணே! பிறந்து...... வளர்ந்து......வயோதிகனாகிச் சாகும் மனிதன், எதற்காக இன்னொருத்தனைப்பற்றி இழிவாக நினைக்கவேண்டும்? தன்னைவிடக் கஷ்டப்படுபவனைக்கண்டு கண்களை மூடிக்கொண்டு 'ச்சீ! போ, போ' என்று விரட்டவேண்டும்? ஏழைப் பிச்சைக்காரர்களை அலையவிடவேண்டும்?— இதுபற்றி அப்பாவைக் கேட்டேன்! மந்திரிமார்களை விசாரித்தேன்! எல்லோரும், 'இது இயற்கை' 'இப்படித்தானிருக்கும்' என்று சொல்லுகிறார்கள், அலட்சியத்துடன். இவைகளைப்பற்றியெல்லாம் நான் ஆலோசிப்பதே 'பைத்யக்காரத்தனம்' என்றுஎண்ணுகிறார்கள்......யசோ!"

"இதற்கு என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்!"

"இதற்கொரு வழி கண்டுபிடித்துவிட்டால், உயர்வு தாழ்வு இருக்காது; உண்டு, இல்லை என்கிற வேறுபாடு தெரியாது; இன்பம், துன்பம் என்கிற சாகரங்கள் பேதமறக் கலந்துவிடும். மேடு தாழும்; பள்ளம் உயரும். சமவெளி, காணலாம்! உயர்ந்தவனின் தொல்லை, வறுமையின் கொடுமைகளெல்லாம் இறந்த காலத்து நிகழ்ச்சிகள் ஆகிவிடும்......"

"அந்தப் புனித நாள் ஒரு நாளைக்கு வராமலா போகப்போகிறது......?"

இருவரும், படுக்கையறைக்குள் நுழைகிறார்கள். சப்ரமஞ்சத்தில் அழகுத் தளிரான மைந்தன் இராகுலன் உறங்குகிறான். இருவரும், படுக்கிறார்கள். யசோதரை தூங்கிவிட்டாள். அவனும் கண்களைமூடுகிறான்.

* * *

"**மாலையில்** கண்டாயே, என்னை! சிவந்த என் மேனியில் படர்ந்த கருங்குஷ்டங்களைப் பார்த்தாயே! அதைப்பற்றி ஏதேனும் சிந்தித்தாயா? மன்னன்மகன் என்ற முறையில் என் குறை தீர்க்க முயன்றாயா! என்னைப்போல கணக்கற்றோர் இந்நாட்டிலிருக்கிறார்களே—அவர்களுக்கெல்லாம் எப்போது நல்வாழ்வு? அரச யோகமும் அறுசுவையும் உனக்கு இருக்கிறது. உன் இதயத்துக்குப் பசியூட்ட ஆடலழகி இருக்கிறாள். இயலாதவர்களாகிய எங்களுக்கு யார் இருக்கிறார்கள்? யார் இருக்கிறார்கள்?"

*

"**தூங்குகிறாயா?** மைந்தனே! தூங்கு! தூங்கு!! ஊராரின் செல்வத்தில் உல்லாசமாய் வாழுகின்ற பாராளும் மன்னனின் மகனே! உறங்கப்பா, உறங்கு. அரசாள்பவன் மகன் நீ. என்னை ஆளாக்கிவைப்பாய் என்று எண்ணினேன். பிச்சைக்காரக்கிழவனை என்னைப் பார்த்தும் பாராததுபோல திரும்பிவிட்டாய். அரண்மனைக்கு வந்தேன். காவலாளிகளோ, ஆயிரம்பேர்! ஓடடா, என்றார்கள். காலத்தால் முதிர்ந்துபோன என் கோலத்தைப் பார்! கருத்தில் கவலையும், உடலில் தளர்ச்சியும் கொண்ட என்னைப் பாரப்பா! பார்!! என் மேனிக்குத் தளர்ச்சி தரும் மேதினி வாழ்வு உனக்கு மட்டும் விதிவிலக்கா?"

*

விழித்துப் பார்த்தான்! நிலவின் கிரணங்கள், அறைக்குள் நுழைந்து கோலம் போட்டிருந்தன. அழகு மனைவி யசோதரா, ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். செல்லக்கிளி இராகுலனும், சிறு மான் குட்டிபோலக் கிடந்தான். இளவரசனின் மனம் ஒரு நிலையிலில்லை. மீண்டும் கண்களை மூடினான். எதிரே, அன்று மாலை அவன் கண்ட பிணம், வந்து நின்றது. முறைத்துப் பார்த்தது.

*

"**அரசிளங்குமரனே** ஏன் அஞ்சுகிறாய்? இறந்துபோன பிணம் எப்படிப் பேசும் என எண்ணுகிறாயா? பேசுகிறேன்! என்னைப்போல் இறந்துபோன பலருடைய சார்பில் பேசுகிறேன்!! நான் பிணமாகிவிட்டேன்—நீயும் ஒரு நாளைக்கு என்னைப்போல பிணமாகப் போகிறவன்தான். மீளாத தூக்கம் பெற்றவன் நான். தூங்கமுடியாமல் தத்தளிக்கிறாய் நீ. இருந்தாலும், இப்போது நாட்டின் அதிபதியின் மகன்! ஆதலால் சொல்லுகிறேன், கேள் — உன் விழி அசைந்தால் போதும், ககனமயமான மாளிகை எழுப்பித் தருவான் காவலன். விதவிதமான ருசியுள்ள உணவுகள் வந்து குவியும் உன்னெதிரே. நான் அப்படி யிருந்தவனல்ல ...உழைத்தால்தான் என்னுடைய ஒரு சாண் வயிறு நிரம்பும்...என் குடும்பம் நகரும். நான் என்ன இரும்பா? ...இறந்துபோய்விட்டேன். வயது முதிர்ந்த தாய், அழகு மனைவி, அருமைக் குழந்தைகள், இவர்களுக்கு இனி யார் சோறு போடப் போகிறார்கள்? கண்களை மூடாதே; திறந்து பார்! வாழ்க்கையில் ஒருபொழுதும் நாங்கள் வாழ்ந்ததே இல்லை; பிறந்தது முதல் அணு அணுவாய்ப் பெருமூச்சுவிட்டு வந்திருக்கிறோம்—இப்போது, மூச்சின் கடைசித் துளியும் முடிந்துபோய் விட்டது. எளிமையுள்ள என் குடிசையினின்றும் என்னை எடுத்துப்போய்க் கொளுத்திவிட்டார்கள். நாளைக்குப் பார்...சந்துமுனையில் நிற்பாள் என் தாய்... அந்தி வந்தால் கதறியழுவாள் என் தாரம் — ஐயோ வெனத் துடிக்கும் என் கண்மணிகள்...சாக்கியமன்னா! நாட்டில் வாழச் சிலர்; வாடப் பலரா?... பாலைவனம் ஒருபக்கம்; சோலைவனம் இன்னொரு பக்கமா? சோபித

மான வாழ்வு ஓரிடத்தில்; சோகக்கண்ணீர் இன்னெரிடத்திலா?''

* * *

"ஐயோ! போதும்......போதும்" என்று அலறிக்கொண்டே எழுந்தான், அவன். அவனுல் சகிக்க முடியவில்லை, அக்காட்சிகளை. கணவன் எழுப்பிய சப்தம் கேட்டு விழித்துக்கொண்ட யசோதரா, "என்ன, கண்ணு!" எனருள். அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாத, சாக்கிய மன்னன், "தூங்கு கண்ணே தூங்கு!" என்று சொல்லிவிட்டு தட்டிக்கொடுத்தான். நீலோற்பலம் போன்ற அவளுடைய கண்கள் மூடிக்கொண்டன. கணவனைக் கட்டியணைத்தவாறு, தூங்கிவிட்டாள் அத்தோகைமயில்.

3

அழகுச் சிலைகள்.........தென்றல் காற்று நுழைவதால் சிறு ஒலி எழுப்பிடும் சல்லாத் துணிகள்........சப்ர மஞ்சம்...ரத்னகுஞ்சம்......அகில் வாசனை......அனைத்தும் நிரம்பிய அந்த அறை, சுடுகாடுபோலத் தோன்றலாயிற்று. மனதில் எழும் எண்ணங்களை மடக்கிக் கொண்டு, கண்களை மூடலானுன்.

ஐயோ, இதென்னக் கோர இரைச்சல்! அவனே பிச்சைக்காரனுகத் தென்படுகிருனே—குஷ்டரோகியின் உருவமாகிவிட்டதே, அவனுடல். இருஉருவங்களும், அவனை நோக்கி நெருங்கி வருகிறதே!!

* * *

1:– சித்தம் குலேயாதே, கிளம்பு......அரண்மனை வாசத்தைவிட்டுக் கிளம்பு.........மனித குலம் அனைத்தும் ஒன்றையொன்று விரோதித்துக் கொண்டு அழிவதைத் தடு......வாழச் செய்... வாழ வழி கிடைக்கச் செய்...

அவன்:- இயலுமா என்னல்?

1:– ஏன் முடியாது? எழும்பு!

அவன்:- அரசனுக இருந்துகொண்டு இவைகளுக்கு நிவாரணம் தேடுகிறேன்......

2:– அரசபோகத்தைவிட மேலான போகம், மக்களின் சேவகனுக உயிர்விடுவது...புறப்படு!

அவன்:- என் மனைவி...?

1:– ஏழைகள், கீழ்சாதிக்காரர்கள், வாடுவோர், வறுமையாளர்கள் ஆகியவர்களுக்காக நீ தியாகம் செய்யவேண்டியவன்...

2:– அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க காடு மேடுகளைத் தாண்டவேண்டியவன்......கடமை செய்யவேண்டியவன் நீ...எல்லோரையும்போல மாமிசப்பிண்டமாக வாழ்ந்து சாகப்போகிருயா? அல்லது புதுமை கண்ட பொன்னெளியாக விளங்கப்போகிருயா?

அவன்:- என் மகன்?

1, 2:– உலகம் பரந்து கிடக்கிறது......அதன் தொட்டிலில் அவன் வளருவான்!......வாழ்வான் நீ, வா! வா!

* * *

இளவரசனுல் தாங்கமுடியவில்லை. இதய மயிலாளைப் பார்த்தான். தன்னைவிட்டு தன் நாதன் எங்கும் போய்விடக்கூடாது என்ற எண்ணத்தாலோ என்னவோ — அவனைக் கட்டியணைத்துக்கொண்டு கிடந்தாள், அந்த எழிலோவியம். "ஏழைகளேயும், இயலாதவர்களையும் கண்டதுமே உன் கணவன், உன்னை விட்டுப் பிரிந்துவிட்டான், யசோ..." என்று நினைத்தவனுகத் தன்னைச் சுற்றிக்கிடந்த அவள் கரங்களை எடுத்து அப்பாலே வைத்தான். ஒரு கணம்! அவன் கண்களில் நீர் துளித்தது. குழந்தை மலரைப் பார்த்தான்—"உலகத்தின் கொடுமைகள் உன்னிடமிருந்து என்னைப் பிரிக்கிறதடா மைந்தனே!" என்று முணுமுணுத்தபடி முத்தம் கொடுத்தான், அவன் முகத்தில். குழந்தை இராகுலன் என்ன கனவு கண்டு கொண்டிருந்தானே அந்தச் சமயத்தில். தூங்கும் அவனுதடுகளில் இலேசாக ஒரு புன்சிரிப்பு தோன்றி மறைந்தது. மனதைத் திடப்படுத்திக்கொண்டு, கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தெறிந்தான். மனைவி, மகன் இருவர்மீதும் பனித்திவலைகள் போல கண்ணீர்சிதறியது. அவர்களுக்கு அவன் வழங்கிய கடைசி அன்பளிப்பு அதுதான்போலும்! வெளியே பார்த்தான். கீழ்வானம், வெளுக்க ஆரம்பித்தது. வெள்ளி முளைத்துவிட்டது, வேகமாகக் கிளம்பினன் —சித்தார்த்தன்—புத்தனுவதற்கு.

குடை ராட்டினம்

பேரரசுகள் தமக்குக் கீழ்ப் பட்ட சிற்றரசுகளை கசக்கிப் பிழிந்து, பெரும் பொருளைக் கப்பமாகப் பெற்று சீரும் சிறப்பும் பேரும் புகழும் கொண்டதை, உலக வரலாற்றுச் சுவடியின் எந்த ஏட்டைப் புரட்டினாலும் கண்டுகொள்ளலாம்.

சிற்றரசுகளும் தமது குடிமக்களின் நலத்தைப் பெரிதெனக் கருதாது, பேரரசின் ஆணையைத் தலைமேற்கொண்டு, அதனைத் திருப்திப்படுத்துவதற்காகக் குடி மக்களுக்குக் கொடுமை விளைவிக்கவும் தயங்கியதில்லை. இன்றோ முடியரசுகள் மறைந்து குடியரசுகள் தோன்றியுள்ளனவெனினும், பேரரசுகள் சிற்றரசுகளைக் கசக்கிப் பிழிவது நின்றபாடில்லை.

மக்களாட்சிக் காலத்திலே, ஒரு பெரிய பூபாகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளை ஓர் மத்திய ஆட்சி ஆதிக்கம் செலுத்துவது காண்கிறோம். அந்தக் கொடுமையைக் களைவதற்காகவே கூட்டாட்சி முறையினை அரசியல் அறிஞர்கள் கண்டறிந்து அளித்தனர்.

* * *

மத்திய ஆட்சியும், இராச்சியங்களும் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு, எளிதிலே மாற்றமுடியாத அரசியலமைப்பை அமைத்துக் கொள்வதுதான் கூட்டாட்சி முறையாகும்.

கூட்டாட்சியின் (Federation) தத்துவங்கள்; மூன்றாகும் அவை:

(1) அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆதிக்கம்; (முதன்மை)

(2) இராச்சியங்களும், மத்திய அரசும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொளல்;

(3) உச்சநீதி மன்றத்தின் அரசியலமைப்புப் பாதுகாப்பு உரிமை ஆகியவை ஆகும்.

இம் மூன்றும் இந்திய அரசியலமைப்பில் உள்ளன. ஆனால் இந்த அடிப்படைத் தத்துவ அமைப்புக்கே காரணமான, இராச்சியங்களின் தனி உரிமைகள் மீது மத்திய அரசாங்கம், எந்த நேரத்திலும் எந்தக் காலத்திலும், எதேச்சாதிகாரம் செலுத்துவதற்கு இடமிருக்கக்கூடாது. இதுதான் இந்திய அரசியலமைப்பில் இல்லை!

கண்ணிருக்கிறது, பார்வை இல்லை; கையிருக்கிறது, விரல்களில்லை; கண்ணாடி இருக்கிறது, ரசமில்லை; விளக்கிருக்கிறது, திரியில்லை; என்பதுபோல இங்குக் 'கூட்டாட்சி' இருக்கிறது; இராச்சியங்களின் தனி உரிமை பறிக்கப்படாத அரசியலமைப்புதான் இல்லை.

க. அறிவழகன் எம். ஏ.

இராச்சியங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்றே மற்ற நாடுகளில் கூட்டாட்சி அரசியலமைப்பை உருவாக்கினர். இங்கோ, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறையைப் பின் பற்றி, இரண்டு ஆண்டு பதினொரு மாதம் பதினெட்டு நாள் காலம் ஆலோசனையில் செலவிட்டு அரசியல் நிர்ணய சபை மூலம், அரசியலமைப்புச் சட்டங்களை உருவாக்கி இந்தியாவைச் "சம்பூர்ண அதிகார ஜனநாயகக் கூட்டுறவுக் குடியரசு" என உலகத்திற்கறிவித்துள்ளனர்.

சுதந்தர இந்தியாவின் புதிய அரசியலமைப்பு என்ற மொந்தையில் பிரிட்டிஷ் ஆதிபத்தியம் என்ற பழைய கள் பொங்கி வழிந்து முடைநாற்றம் வீசுகிறது.

கூட்டாட்சியின் அடிப்படை இலக்கணமான அதிகாரப் பிரிவுகள் மற்ற கூட்டாட்சி நாடுகளில் பெற்றிருக்கிற மதிப்பும் மாட்சியும், நம் பரத 'கண்டத்தில்' படும்பாடு சொல்லுந்தரமன்று.

ஐக்கிய அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, சோவியத் ரஷ்யா, முன்னாள் ஜெர்மனி ஆகியவைகளில், பொதுவாக, மத்திய ஆட்சிக்கென வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர்த்த மற்ற அதிகாரங்கள் அனைத்தும் இராச்சியங்கட்கே உரியனவாம்.

குறிப்பாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மத்தியக் கூட்டாட்சியின் வரையறைக்கு உட்பட்ட சில அதிகாரங்களே உண்டு. மற்ற அதிகாரங்களில் மத்திய ஆட்சி தலையிடவே கூடாதென்றும், சில அதிகாரங்களில் இராச்சியங்கள் தலையிடவே கூடாதென்ற 'உரிமைப் பாதுகாப்பும்' உண்டு.

ஆஸ்திரேலியா சுவிட்சர்லாந்து, முன்னாள் ஜெர்மனி ஆகிய 'கூட்டாட்சிகளில், மத்திய ஆட்சிக்கென்று வரையறைக்கு உட்பட்ட அதிகாரங்களும், இரு அரசாங்கங்கட்கும் உரிய பொது அதிகாரங்களும் உண்டு. ஆனால் மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்கட்கே உரியதாகும். இவற்றில் மத்திய ஆட்சி தலையிடவே முடியாது.

ரஷ்ய சோவியத் குடியரசுகளின் கூட்டாட்சியில் மத்திய ஆட்சிக்கென்று வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர, மற்றவை அனைத்தும் இராச்சியங்கட்கே உண்டு. விரும்பினால், இராச்சியங்கள் தனியுரிமை கோரவும் இடமுண்டு.

இந்தியக் கூட்டாட்சியில் அதிகாரங்கள் மூன்று பெரும் பிரிவாகக் கொள்ளப்பட்டுள்ளன:

ஒன்று: மத்திய ஆட்சிக்குரிய 97 அதிகாரங்கள்;

இரண்டு: இராச்சியங்கட்குரிய 66 அதிகாரங்கள்;

மூன்று: இரு அரசாங்கங்கட்குமுரிய 47 அதிகாரங்கள்.

* * * * *

மத்திய ஆட்சிக்கென்றே 97 முக்கியமான அதிகாரங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே 97வது அதிகாரம் **"இந்த அதிகாரப் பிரிவுகளிலே விடப்பட்ட அதிகாரங்களும், வரிகளும் மத்திய அரசாங்கத்திற்கே சொந்தமாகும்"** என்பதாகும்,

இவையேயல்லாமல், இரு அரசாங்கங்கட்கும் உரியனவாகச் சொல்லப்பட்ட 47 அதிகாரங்களும் வெறும் கண்துடைப்பே ஆகும். இந்த 47 அதிகாரங்களில், எந்த அதிகாரமாவது இராச்சிய அதிகாரங்களோடு மோதுமானால், இராச்சிய சட்டம் திருத்தப்படும். **அல்லது, இராச்சிய அதிகாரம் செல்லுபடியாகாது போய்விடும்.**

மற்ற கூட்டாட்சி நாடுகளில், இந்த ஆதிக்க அதிகாரம் மத்திய சர்க்காருக்குக் கிடையாது.

மேலும் இராச்சியங்களுக்கே உரிய 66 அதிகாரங்களில், எந்த அதிகாரமாவது, மத்திய அரசாங்க அதிகாரத்தோடு மோதுமானால், அதற்கேற்ப அந்தச் சட்டத்தைத் திருத்திக்கொள்வது இராச்சியங்களின் கடமையாகும்.

இது எந்தக் கூட்டாட்சி நாடுகளிலும் இல்லாத எதேச்சாதிகார உரிமையாகும். இந்த ஆதிபத்திய அதிகாரக் குவியல் ஆட்சிக்குப் பெயர்தான் 'மத்தியக் கூட்டாட்சி!'

> "சுதந்திரப் போராட்டத்திலீடுபட்ட இந்தியத் தலைவர்களில் பலர் சோர்ந்துபோய் விட்டனர். அவர்களிலெல்லாம் சோர்வடையாமலும், இந்தியா முழுமைக்கும் தெரியக் கூடியவராகவும் இருப்பவர் பண்டித நேரு ஒருவர்தான். அவருக்குப் பின் காங்கிரசின் கதி என்ன? இந்தியாவின் கதிதான் என்ன? ...இந்தியா, ஒன்றாகவே இருக்கமுடியுமா என்றோர் ஐயம், இந்தியாவைக் கண்டதும் எனக்குப் பலமாகிறது. ஏனெனில், அவ்வளவு சங்கடமான நிலையில், பல பெரிய மொழிகள் உள்ளன. ஒவ்வொரு மொழியும் ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு வருகிறது. இதுமட்டுமல்ல, தேசத்தைப் பிரிக்கவேண்டுமெனும் கோரிக்கையும் வலுப்பெற்று வருகிறது"
>
> —அமெரிக்க ஜனாதிபதியாக போட்டியிட்ட
> **அட்லய் ஸ்டிவன்சன்**
> 1953ல் இந்தியாவைக் கண்டபிறகு.

ஐக்கிய அமெரிக்காவிலே, இப்படி இரண்டு அரசாங்கங்கட்கும் உரிய அதிகாரம் என்பதே கிடையாது. அதிகாரப் பட்டியலிலே, குறிப்பிடப்படாத அதிகாரங்கள் அனைத்தும் இராச்சியங்களுக்கே உரியனவாம்.

கனடாவில் இரண்டு அரசாங்கங்கட்கும் உரிய அதிகாரங்கள் என்று இருந்தபோதிலும், அவை விவசாயமும், மக்கள் இடம்பெயர்தலும் ஆகிய இரண்டுமே ஆகும். அப்படி இரண்டு அரசாங்கங்கட்குள் அதிகாரத் தகராறுகள் ஏற்பட்டால், உச்ச நீதி மன்றத்திடம் செல்லவேண்டும். இதுவரையில் கனடாவில் உச்ச நீதி மன்றம் பெரும்பாலும், மாநிலங்கள் பக்கமே தீர்ப்பளித்துள்ளது.

ஆனால், இங்கு இராச்சியங்களுடைய ஜனநாயக ஆட்சிமுறை. மத்திய ஆட்சிக்கு மாறுபாடாகவோ, அல்லது ஒரு சிறிது ஊறுதேடுவதாகவோ அமைந்தால், அந்த இராச்சியங்கள்மீது எத்தகைய எதேச்சாதிகாரமும் செலுத்துவதற்கான அதிகாரங்கள், மத்திய மேல்சபைக்கும், மக்கள் சபைக்கும் கொடுத்திருப்பது போதாதென்று, இவ்விரண்டு சபைகளையும் கூட்டித் தீர்மானிக்கக் காலதாமதம் ஆகுமென்று ஜனாதிபதிக்கும் ஆதிக்க அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மத்திய மேல்சபை இராச்சியங்களின் உரிமையைப் பாதுகாக்கும் மன்றமாக மற்றநாடுகளில் விளங்குகின்றது. அமெரிக்க நாடுகளில், மேல் சபைக்கு ஒவ்வொரு இராச்சியத்திலிருந்தும், பெரிய மாநிலமானாலும், சிறிய மாநிலமானாலும் இரண்டு பிரதிநிதிகளையே அனுப்பவேண்டும். அந்த நல்லமுறை இங்கு இந்திய அரசியல் சட்டத்தில் இல்லை.

இதனாற்றான் வட இந்தியாவிலுள்ள 26 கோடி மக்கட் பிரதிநிதிகளின், ஏகபோக மிராசு பாத்தியதையாக, வடநாட்டு சர்க்கார் இயங்கவும், அமைக்கப்படும் (கமிஷன்கள்) ஆய்வுக் குழுக்கள், மந்திரி சபைகள், ஐந்தாண்டு திட்டத்திலே நிதி ஒதுக்கும் அமைப்பு ஆகிய அத்தனையும் வடநாட்டுக்கே சாதகமாகவும், தென்னாட்டாரைச் சுரண்டும், பொறிக்குத் துணையாகவும் முடிகிறது. வடநாட்டாரின் சுரண்டல் காடாகத் தென்னாடு அவதியுறுகிறது.

* * *

சில கூட்டாட்சி நாடுகளில், போர் முதலிய அவசர, அவசிய காரியங்களுக்கு மத்திய சர்க்காரின் சட்டம், மாநிலத்தைப் பாதிப்பதாக இருந்தால், உச்ச நீதி மன்றத்திடம் தீர்ப்புக்குச் செல்வர். இது அமெரிக்காவின் நடைமுறை. இங்கோ உச்ச நீதி மன்றம் என்ற ஒன்று அமைக்கப்பட்டிருப்பதும் இராச்சியங்களின் உரிமைகளைப் பறிப்பதற்கே பயன்படுத்தப்படுகிறது.

மத்திய மேல்சபையோ, கீழ் சபையோ மற்ற நாடுகளில் அதிகாரப் பங்கீடுகளைத் திருத்தவோ, மாற்றவோ முடியாது. ஆனால் நமது பாராளுமன்றம் பாதிக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் சம்மதத்தைக் கொண்டு அதைச் செய்ய முடியும்.

நமது ஜனாதிபதி அவசர, அவசியம் என்று சொல்ல, மத்திய பாராளுமன்றம் அதை ஆதரிக்க, ஒரே நாளில் கூட்டாட்சி அரசியலமைப்பையே காலாவதியாக்க முடியும்.

அரசியல் அமைப்புச் சட்டம் 356-வது பிரிவின்படி, ஜனாதிபதி ஒரு இராச்சியத்தில் அரசியல் நிலை சரியில்லை என்று கருதினால், அந்த இராச்சியத்தின் மந்திரிகளை நீக்கிச் சட்டசபையைக் கலைத்து, தன்னுடைய நேரடி ஆட்சியின் கீழ், அதிகாரிகளை நியமித்து ஆளலாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் 93-வது பிரிவிற்கும் இதற்கும், எந்த வித்தியாசமும் இல்லை.

இதைப்போன்றே கூட்டாட்சி முறைக்கே பகையான அதிகாரமே கவர்னர்களை நியமிப்பதும் ஆகும். அமெரிக்காவில் அந்தந்த இராச்சிய மக்களே கவர்னர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இராச்சிய சட்டசபையே அவர்கள்மீது தேசத் துரோக நடவடிக்கை எடுத்து நீக்கினால் தவிர, மத்திய ஆட்சி இதில் தலையிட முடியாது.

இங்கோ கவர்னர்களை நியமித்து, அவர்களின் நேரிடை அதிகாரத்தின் கீழே மாகாண ஆட்சி நடைமுறை நடைபெறுகின்றது.

வேறு எந்தக்கூட்டாட்சியிலும் இல்லாத உரிமை "சுவிஸ்" கூட்டாட்சியில் "காண்டன்கள்" என்றழைக்கப்படுகின்ற இராச்சியங்களுக்கு உண்டு. ஒரு இராச்சியத்தின் அதிகார வரம்பில் மத்திய அரசாங்கம் தலை

யிட, அந்த இராச்சியத்தின் ஆட்சிபீட அனுமதி மட்டும் போதாது.

சுவிஸ் அரசியலமைப்பு 6-வது பிரிவின்படி, ஒரு இராச்சியத்தின் தனி உரிமையில் தலையிட, அந்த இராச்சிய மக்களின் பெரும்பாலோரது ஆதரவு வேண்டும்.

அதுபோன்றே பெரும்பாலான மக்கள், மத்திய அரசியல் அமைப்பைத் திருத்தவேண்டும் என்று கூறின், மத்திய அரசியல் அமைப்பும் திருத்தப்படும்.

மக்களிடம் நேரடி அனுமதி பெறும் (ரெபரண்டம்) முறையை, நம் அரசியல் அமைப்பு அனுமதிக்காததற்குக் காரணமே, மத்திய ஆட்சியின் ஆதிபத்தியச் செயலை, மக்கள் உடனுக்குடன் எதிர்க்க இடமில்லாமல் செய்வதற்கேயாகும்.

சுவிஸ் காண்டன், தாங்கள் மத்திய கூட்டாட்சிக்கு அனுப்பவேண்டிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை, அவர்களின் பதவிக்காலம் முதலியவற்றைத் தாமே முடிவுசெய்துகொள்கின்றன.

இம்முறையில் இராச்சியங்கள் உரிமையோடு விளங்கும் காட்சியை ஆஸ்திரேலியக் கூட்டாட்சியிலும் காணலாம்.

உண்மையில் இங்கே நடப்பது ஜனநாயகக் கூட்டாட்சியல்ல, திருவிழாக்களில் குடைராட்டினம் பார்த்ததுண்டல்லவா?

குடைராட்டினத்திலே சுற்றிலும் யானை, குதிரை, சிங்கம், சிம்மாசனம், மனிதன் போன்ற மரப்பொம்மைகள் தொங்குவதையும்; அவைகளில் ஏறி உட்கார்ந்து குழந்தைகள் சுற்றிச் சுற்றி வருவதையும் கண்டிருக்கிறோம்.

அப்பொழுது ஒவ்வொரு குழந்தையும் தானே சவாரி செய்வதாகவும், சுற்றுவதாகவும், நினைத்துச் சிரிக்கும், மத்தியிலே குடை ராட்டினத்தை இயக்குபவன் இயக்கினால்தான், ராட்டினத்திலுள்ள குதிரைகளும், யானைகளும், அதன்மீதமர்ந்துள்ள குழந்தைகளும் சுற்றிவர முடியும். அவன் நிறுத்தினால், அவர்களும் நிற்கவேண்டியவர்களே தவிர, தாங்களே இயங்கும் சக்தி பெற்றவர்களல்ல.

இதே நிலையில்தான், மத்திய ஆட்சி அரசியல் குடை ராட்டினமாக அமைந்திருக்கிறது.

*   *   *

சில காலமாக இராச்சியங்களை ஆட்டிப்படைக்க, வேறொரு புது வழியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுதான் "மத்திய சர்க்கார் இராச்சியங்களிடமிருந்து வசூலிக்கும் பணத்தைச் சேமித்துவைத்துக் கொண்டு அதிலிருந்து "நிதி உதவி" அளிக்கும் முறையாகும்.

ஏனெனில் எந்த இராச்சியமும் "நிதி உதவி" கேட்காமல் இருக்க முடியாதல்லவா?

காரணம், இராச்சியங்கட்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வரிகள், சாதாரணச் செலவுகட்கே போதுமானதாக இல்லை. இந்நிலையில், மத்திய அரசிடம் இராச்சியங்கள் கைநீட்டித்தானே தீரவேண்டும்.

"நிதி உதவி" மூலம் இப்படித்தான் ஆட்சி நடக்க வேண்டும் என மத்திய சர்க்கார் கட்டளை இடும். எதிர்த்தாலோ, நிதி உதவி கிடைக்காதே!

அதனால்தான் மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா, "மாநில அரசாங்கம் நிதி உதவியை உரிமையோடு கேட்க முடியவில்லை. பல்லையிளித்துப் பிச்சை கேட்கும் நிலையில் இராச்சியங்கள் மத்திய சர்க்காரிடம் கை நீட்டி, உதவி கேட்கவேண்டியிருக்கிறது" என்று வருந்தியுள்ளார்.

இந்திய அரசியலமைப்பு, மத்திய ஆட்சியிடம் ஆதிபத்திய அதிகாரங்களைக் குவித்திருப்பது ஜனநாயகத்திற்கு விரோதம் என்பது மட்டுமேயன்றிப் பரவலாக அதிகாரங்கள் பகுக்கப்படாத பரந்த ஒரு நாடு எந்த நேரத்திலும் சர்வாதிகார நாடாக மாறவும் முடியும்.

இந்திய அரசியலமைப்பில் 'கூட்டாட்சி' நாடுகள் ஒரு சரிசம நாடுகளின் கூட்டாட்சியாக உருவெடுத்துள்ளது.

இந்தியா பரந்த உபகண்டம். உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவு வேறுபாடுடையவர்கள் மக்கள். இருநூறுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. பெருமொழிகளோ பதினைந்து! பல்வேறு மதங்கள், கடவுள்கள்! முரணபட்ட ஆரிய திராவிட கலாச்சாரங்களும் நிலைத்துள்ளன. உணவு, உடை, உறவு, வாழ்வு முறையால் ஒன்றாக இயங்க முடியாத இனத்தினர் பலர். இவர்களைக்கொண்ட இந்தியா குறைந்தது மூன்று தனி நாடுகளையாவது கொண்டிருக்கவேண்டும். அதுதான் இல்லையெனில் அமைத்த கூட்டாட்சி அரசியலமைப்பில், மற்ற நாடுகளைவிட அதிக உரிமைகளையேனும் இராச்சியங்களுக்குத் தந்திருக்கவேண்டும். இவைகளைத் தராமல் பேராசை கொண்ட பிரிட்டிஷ் ஆதிபத்திய போக்கிலேயே இந்திய அரசியலார், தேசியத்தின் பேரால், இராச்சியங்களை ஆட்டிப்படைக்கின்றனர்.

இந்தியா ஒன்றுபட்டிருக்கும் என்ற நம்பிக்கையை, பாகிஸ்தான் பிரிந்தபோதே தேசியவாதிகள் இழந்துவிட்டனர். அதனால்தான் இந்திய அரசியலமைப்பில், *249, 250, 253, 356* ஆகிய பிரிவுகளின்படி, ஏகாதிபத்ய உரிமைகளை மத்திய சர்க்காருக்கு வைத்துக்கொண்டுள்ளனர்.

இவை போதாதென்று, இந்திய உபகண்டத்தில் சிக்கிய நாடுகள், என்றென்றும் டில்லி ஆட்சியின் கீழ் இருக்கவேண்டுமென்ற ஆசையால், புலியை புல் தின்னச் செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளோனைப்போல், இதுபொழுது இந்தி மொழித் திணிப்பு, ஏக இந்தியக் கலாச்சாரத் திணிப்பு ஆகியவைகட்காகக் கோடிக் கணக்கில் பொருளையும் பாழ்செய்கின்றனர்.

இனியும், இந்திய அரசியலமைப்பின் கீழ், ஒன்பது கோடித் திராவிடர், பெரும்பாலோரான வட இந்தியரிடமிருந்து நீதியை நியாயத்தை எதிர்பார்க்க வழியில்லை.

ஆம், திராவிடர்கள் தங்கள் தாயகத்தை—திராவிடத்தைப், பெற்றால் தவிர, அவர்களின் வாழ்விலே வறுமை நீங்க உலகிலே உயர்வுபெற வழியில்லை.

"திராவிட நாடு திராவிடருக்கே" என்ற விடுதலைப் பண்—நிலைமையை உணர்ந்ததன்விளைவுதான். தென்னகம் அந்தப் பண்ணை இசைக்கத் தொடங்கி விட்டது.

ஆம்! அதோ! அகில இந்திய வானொலியில் கூடக் கீதம் கேட்கிறது.

"உனக்கும் எனக்கும் உறவுகாட்டி
உலகம் சொன்னது கதையே"

புயல்

—[நாயகம்]—

ஓர் அடிகூட காலை முன் எடுத்து வைக்க முடியவில்லை. முழங்கால் சேற்றில்கூட நகர்ந்து முன்னேறி விடலாம். ஆனால் புயலை எதிர்த்து முன்னேறவே முடியவில்லை. பன்றிபோல வானம் கருத்து மின்னியது. அங்கே மந்தை மந்தையாக முகில்கள் விளையாடின. இரண்டு நாட்களாக, கதிரவனையே பார்க்க முடியவில்லை. அவன் எங்கே ஒழிந்தானோ? அல்லது அந்த முகில் சேற்றில்தான் புதைந்தே விட்டானோ?

பிச்சையப்பன் கையில் ஊன்றுகோலுடன் புயலை எதிர்த்து நடந்தான். அவன் நல்ல இளைஞன், புயலினும் வலிமை உடையவன் என்றுதான் பெரிய பண்ணையாரும் கூறுவார். இருந்தாலும் அவனால் புயலை எதிர்க்க முடியவில்லை. வீதியில் தண்ணீர் அவன் முழங்காலை எட்டிப் பார்த்தது. ஆயிரம் புலிகள் ஒன்றாகச் சேர்ந்து அவனை அறைவதுபோல காற்றும் மழையும் அவன் முகத்தை நிமிரவிடாமல் செய்தன. தன் தலையையே இந்தப் புயல் திருகி விடுமோ என்று அஞ்சினான். உலகில் கொடூரத்தின் இரு முனைகள் 'புயலும்—எரிமலையும்' என்று நினைத்தான் பிச்சை.

"அம்...மா"—எதிரே ஒரு மாட்டின் வேதனைக் குரல் கேட்டது. கல்லையும் கனியவைக்கும் அந்தக் குரல் இந்தப் புயலின் காதில் விழாதா?

பிச்சையப்பன் முகத்தில் மகிழ்ச்சி ஒளி வீசியது. "முருகா, வந்துவிட்டேன்..." என்று கத்தினான்.

தென்னை மரங்கள் நாணலைப்போல் ஆடின; வாழை மரங்கள் வளைந்து நெளிந்து காற்றுடன் போராடின. குடிகாரனைவிட கொடியவன் இந்தப் புயல். குடிகாரன் தன் மனைவியின் கூந்தலை உலுக்குவதுபோல இவனும் மரங்களைப் பிடித்து ஆட்டி வைக்கிறான்.

"அம்மா...அம்...மா..." புயலின் வலிமை முன் கதறும் அந்த மாட்டை மெல்லத் தடவினான், பிச்சையப்பன். அவனை உணர்ந்துகொண்ட அந்தக் காளை தன் உலர்ந்துபோன நாவை நீட்டியது. பிச்சையப்பன் காளையைப் பிடித்துக்கொண்டு திரும்பி நடந்தான்.

அருகே, முதிர்ந்த ஆலமரம் ஒன்று முறியும் ஒலி கேட்டது. பிச்சையப்பன் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தான். அவனையும் மாட்டையும், காற்றும் மழையும் முன்னே உருட்டிச் செல்லப் பார்த்தது. மூச்சு திணறியது.

எங்கும் போராட்டம். தங்களைக் காத்துக்கொள்ள பயிர்பச்சை உயிர்கள் ஒவ்வொன்றும் போராடின. ஏரியும் குளமும் கரையை உடைத்துக்கொண்டு ஊருக்குள் ஓடி வந்தனர்.

பிச்சையப்பன் மாட்டுடன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நடந்தான். அதோ, பெரிய பண்ணையார்வீடு. அங்கே போய்விட்டால் கவலையில்லை. புயல் அவர்கள் உயிரையும் அடித்துக்கொண்டு ஓடிவிடுவதுபோல் சீறியது.

பெரிய பண்ணையாரின் பெரிய வீடு புயலை எதிர்த்து நின்றுகொண்டிருந்தது. அந்த வலிமை மிகுந்த நவீன வீடும் சில இடங்களில் சேதம் அடைந்ததைக்கண்டு கலங்கினார், பண்ணையார் பரமசிவம்.

அவர் வீட்டை நோக்கி மாடு வந்தது. உயிருக்கு ஆசைப்பட்டு அது வீட்டிற்குள் பாய்ந்தது. அதை பிடித்தபடிவந்த பிச்சையப்பன் படியில் அடியெடுத்து வைக்கமுடியாமல், வீதியில் பெருகிஓடும் நீரில் விழுந்தான்.

பரமசிவம் பதைபதைத்துக் கூக்குரலிட்டார். வீட்டு வேலைக்காரர்கள் ஓடிவந்து அவனைத் தூக்கி விட்டனர். "வளிமிகின் வலியுமில்லை" என்பது எவ்வளவு உண்மை.

*

பிச்சையப்பன் மெல்ல கண்களை திறந்தான். ஈரம் மிகுந்த சாக்கின்மீது அவனை கிடத்தியிருந்தார்கள். அவனால் புயலினின்று காப்பாற்றப்பட்ட மயிலைக்காளை புண்ணாக்கை உருசிபார்த்துக்கொண்டிருந்தது. பண்ணையார் அதை மெல்ல தடவி மகிழ்ந்தார்.

பிச்சையப்பன் மெல்ல தலையைத் தூக்கினான் மழையும் காற்றும் மதயானைபோல் ஊரை அதம் செய்தன. இருள் பரவியது. பண்ணையார் கையில் இருக்கும் அரிகேன் விளக்கும் அணைவதற்கு ஆடியது.

பிச்சையப்பன் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. மேலே ஆடையின்றி அவன் புயலையன்றோ எதிர்த்தான். அந்த ஏழையின் இடையில் ஒரு சிறு துண்டைத் தவிர வேறு ஏது?

அந்தோ? மழையில் தான் விட்டுவந்த மனைவி மக்களை நினைத்துக்கொண்டான். அவன் குடிசை இன்னேரம் இந்தக்காற்றில் பஞ்சாகி இருக்குமே!

"எசமா! நான் போறேனுங்க......" குளிர்காற்றில் பிச்சையப்பனின் எலும்புகள் நடுங்கின. ஆட்கள் மாட்டைத் துண்டால் துடைத்துக்கொண்டிருப்பதை மேற்பார்வையிட்டுக்கொண்டிருந்த பண்ணையார் திரும்பினார்.

"ஏண்டா இந்த மழையில் போறே; காலையில் போடா" என்றார் பண்ணையார்.

தன் மாட்டைக் காப்பாற்ற இந்த மனிதனை உலகத்தையே உருட்டிச்செல்வதுபோல் வீசும் புயலில் அனுப்பிய அந்தப் பணம் கொழுத்தவர்தான் இப்படிச் சொன்னார். அவனுக்கு மனைவி மக்கள் இல்லையா? அவர்கள் தன் மாட்டைவிட கேவலமானவர்களா? என்பதை பண்ணையார் சிந்திக்கவில்லை! பணம் இருக்குமிடத்தில் ஏழைகளைப்பற்றிய சிந்தனை ஏது?

"இல்லை! எசமா! நீங்க அதிக்விலைபோட்டு வாங்கிய இந்த மாட்டை உங்களிடம் சேர்த்துவிட்டேன். இனி என் மனைவியைப் பார்க்கனுங்க! அவள் சின்னக் குழந்தையோடு என்ன செய்வாளோ?"

"நான் சொல்லிட்டேன்! நீ செய்யறபடி செய்!" என்றார் பண்ணையார்.

அந்தப் பண்ணையடிமை பிச்சையப்பன் புயலை எதிர்த்து இருளில் நீரைக் கிழித்துக்கொண்டு வீதியில் மறுபடியும் நடந்தான்!

விளக்கு அணைந்துவிட்டதால் பரமசிவம் 'பாட்டரி லைட்'டை அடித்தார்.

*

சில இடங்களில் பிச்சையப்பன் நீந்த வேண்டியிருந்தது! ஏரி உடைத்துக் கொண்டதால் வயலில் நீர் கடல்போல் தேங்கிக் கிடந்தது.

அவன் சென்ற இடங்களில் மரங்கள் விழுந்து கிடந்தன! ஓடுகள் நொருங்கி வீடுகள் இடிந்து கிடந்தன! ஓரிடத்தில் பாம்புகள் நீந்தின! பல குடும்பங்கள் புயலில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தன.

அவன் தலை சுற்றியது. இருட்டில் எதையுமே பார்க்க முடியவில்லை! மின்னலில் தூரத்தில் உள்ள அவன் சேரி தெரியவே இல்லை. அது புயலில் பஞ்சுபோல் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது.

பிச்சையப்பன் கதறினான். "முத்தாயி! முத்தாயி!' என்று அலறினான். "அத்தான்! அத்தான்" என்று எங்கோ எதிரொலி கேட்டது. அவன் காதுகள் கேட்கும் சக்தியையும் மெல்ல இழந்தன! வளையல் அணிந்த இரண்டு கரங்கள் நீரில் மூழ்கும் அவன் உடலைச் சுற்றி வளைத்தது!

*

பிச்சையப்பன் கண்களைத் திறந்தான். ஒரே இருட்டாக இருந்தது. காற்றின் சீற்றம் வெளியே கேட்டது! அவனைப்போல நூற்றுக்கணக்கான ஏழைகள் அங்கே முடங்கிக்கிடந்தனர். அவன் அருகே அவன் மனைவி முத்தாயி கண்ணீருடன் புலம்பிக் கொண்டிருந்தாள்.

'தெய்வமே! நீயும் இருக்கிறாயா? இந்த உழைக்கும் கூட்டத்தை ஏன் வதைக்கிறாய்? இரும்புப் பெட்டிகளோடு தூங்கும் கல் நெஞ்சங்களை விட்டுவிட்டு ஏன் எங்கள் நெஞ்சங்களைச் சிதைக்கிறாய்! ஐயோ! சாமியே! என் பச்சைப் பாலகனின் உயிரை இந்தப் புயல் அழித்தபோது நீபார்க்கவில்லையா? உன்னை, தாயினும் அன்புடையோய், என்கிறார்களே! நான் கதறுவது உன் காதுகளில் விழவே இல்லையா" -அந்த நிறைமாதக் கர்ப்பவதி கதறினாள். அது அந்தக் கோயில் சுவர்களில் எதிரொலித்தது. உள்ளே கடவுளும் தன் உருவத்தில் இருந்தார்.

பிச்சையப்பன் பேச வாயெடுத்தான் பேச முடியவில்லை, மகன் இறந்து விட்டானா? ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொண்டிருக்கும் உதடுகளைப் பிரிக்க முயன்றான்; முடியவில்லை. அவன் உடல் குளிரால் விறைத்துவிடும்போல் இருந்தது. முத்தாயி அவனை அணைத்துக் கொண்டாள். அவள் உதடுகள் அவன் உதட்டுடன் இணைந்து சூட்டைப் பிறப்பிக்க முயன்றது! முத்தாயியின் நெஞ்சத் துடிப்பு அவன் இதயத் துடிப்புடன் கலந்தது. அவள் வயிற்றில் சுமந்திருக்கும் சிசுவின் உயிர் அவன் காதுகளில் தெளிவாக ஒலி செய்தது!

வெளியே புயலும் மழையும் இருளுடன் கலந்து இரத்த வெறியர்கள்போல் கூச்சலிட்டன! உலகப்போர் ஒன்றை அவைகள் அங்கே நடத்திக் கொண்டிருந்தன.

கோயிலில் கடவுளும் இருந்தார் — தனக்கு மனிதர்கள் அளித்த உருவத்துடன்!

*

பச்சைக் குழந்தைபோல்ப் பிச்சையப்பன் பெரிய பண்ணை பரமசிவத்தின் முன்பு அழுதான். தேள் கொட்டி விட்ட சிறுவனைப் போன்று துடித்தான். தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு இதயமே உடைந்து விட்டது போன்று கதறினான். 'எசமா! என்னைக் காப்பாத்துங்க! கோடி புண்ணியமுண்டு ஆண்டையே! என் குழந்தையைப் புயலுக்குப் பறிகொடுத்து விட்டேன். என் மனைவி பிள்ளையார் கோயிலில் பிரசவிச்சிருக்கா! புயலின் கொடுமையால் வேதனை தாங்காமல் துடிக்கிறாள்! எசமா அவளுக்கும் பிறந்த குழந்தைக்கும் உயிர் கொடுங்க! நீங்க நல்லா இருப்பீங்க!"

புயல் இன்னும் ஓயவில்லை! அதைப் போலத் தான் பரமசிவமும் நாற்காலியில் கிடந்தார்! அவர் பிச்சையப்பனை நல்ல கண்களால் தான் பார்த்தார். அவன் வேதனையைக் கேட்கும் செவிகளால் தான் கேட்டார். பாரி பிறந்த நாட்டில் அவர் தான் இப்படிக் கூறினார். "ஏய்! நீ இங்கே கத்தாதே; என்னால் இப்ப ஒன்றும் செய்ய முடியாது. இந்த வருஷம் என் வயலும் தோட்டமும் நாசமாப் போச்சு. மாட்டுக் கொட்டா கூட விழுந்து போச்சு! நீ எப்படியாவது பொழச்சிக்கோ" என்றார்.

"ஐயோ! நான் என்ன செய்வேன். உங்கள் அடிமையாக வேலை செய்தேனே; உங்களுக்காக நான் உழைச்சேனே? நான் என்ன செய்வேன் எஜமா, நாலு நாளா பட்டினி! ஜுரம் வேறு என்னை வாட்டுது. எப்படியாவது காப்பாத்துங்க......!" என்று அவர் காலடியில் அடியற்ற மரம் போல் வீழ்ந்தான்.

"ஊருக்கெல்லாம் என்னால் கொடுக்க முடியாதுபோடா...." என்றார் பெரிய பண்ணை பரமசிவம். அப்போது அவர் சின்னப் பெண் 'அப்பா சாப்பிட வா"! என்றாள். மிராசுதார் கதவை அடைத்துவிட்டு உள்ளே சென்றார்,

நன்றி கெட்ட அந்த ஜென்மத்தைப் பிச்சையப்பன்பார்த்தான். வயிற்றில் பசி காட்டுத் தீபோல் எரிந்தது. உடல்

> நீர்மிகிற் சிறையு மில்லை தீமிகின்
> மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை
> வளிமிகின் வலியு மில்லை யொளிமிக்
> கவற்றோ ரன்ன சினப் போர் வழுதி.
>
> —ஐயூர் முடவனார்.
> புறநானூறு (டுக)

அனலாகக் கொதித்தது; மனைவியை நினைத்துக்கொண்டு கிழவனைப் போல் நடந்தான்.

பாதி வழியிலேயே புயல் அவனை உருட்டி விட்டது. நீரில் விழுந்து, எழுந்து, தவழ்ந்து கோயிலை நோக்கிச் சென்றான்.

கோயிலில் யாருமே இல்லை! கோயிலில் ஒரு பார்ப்பனன் நின்றுகொண்டிருந்தான். மனைவி எங்கே என்று அவனால் கேட்க முடியவில்லை. கண்கலங்கக் கோயிலைப் பார்த்தான். அந்த நடுப் பகலில்கூடக் கோயில், பெரிய பண்ணையாரின் உள்ளம் போல் இருட்டாகத்தான் இருந்தது. உள்ளே ஒரு விளக்கு ஆடியது. அதன் ஒளியில் ஓர் உருவம் பேசாமல் ஆடாமல் கிடந்தது.

பார்ப்பனன் எதிரே சுட்டிக் காட்டினான், எதிரே பள்ளிக்கூடத்தின் வாயிலில் ஓர் ஏழையர் கூட்டம் அவனை அழைத்தது. "இறைவா உன்னைத் தந்தை என்று கூறுகிறார்களே! உன் மக்களை நடு வீதியில் ஓட்டிவிட்டு நீமட்டும் ஏன் குளிருக்கு அடக்கமாக கல்லாகக்கிடக்கிறாய்." என்று அவன் மனம் கூறியது. அவன் கால்கள் நடக்க முடியாமல் தள்ளாடின.

பள்ளிக்கூடத்திலும் ஒதுங்க இடமில்லை. அதன் மீது வேய்ந்த மங்களூர் ஓடுகள்கூடப் புயலால் அடித்துச் செல்லப்பட்டன. மழை பள்ளியிலும் தன் கை வரிசையைக் காட்டியது. அங்கே அவனுக்காக—ஏழை பிச்சையப்பனுக்காக — பிறந்த குழந்தை இறந்துகிடந்தது. அவன் மனைவி 'ஜன்னியில்' பிதற்றிக்கொண்டிருந்தாள். இதையெல்லாம் அறியாமல் பிச்சை நடந்தான். அவனால் நடக்க முடியவில்லை; புயலும் பசியும் அவனை வேகமாகப் பள்ளிக்கூடத்தை நோக்கித் தள்ளின. பேசும் சக்தி அங்கே யாருக்குமே இல்லை. அவர்கள் உள்ளங்களில் குமுறிக்கொண்டிருக்கும் துன்பம்—புரட்சி, வளியாக மிகுந்தால் அதைதடுக்க எதிர்வலியும் உண்டுகொல்.?

அதே சமயம் வெள்ளித் தட்டில் போடப்பட்ட ஆவி பறக்கும் அமுது பரமசிவத்தின் வயிற்றுக்குள் சென்று கொண்டிருந்தது. அவருக்கு தெரியுமா?—தான் உண்ணும் ஒவ்வொரு பருக்கையும் பிச்சையப்பனைப் போன்ற பண்ணையாட்களின் உழைப்பில் சிந்திய இரத்தத் துளிகள் என்று.

*

மனைவி போய்விட்டாள்; மக்களும் இறந்து விட்டனர்; வீடும் இல்லை, இன்பமும் மறைந்து விட்டது. அந்தச் சுவரின் அருகே அவன் உயிர் மெல்ல மெல்ல சென்றுகொண்டிருந்தது. உடையற்ற அந்த ஏழையின் உடலை பாழும் மழை அணு அணுவாக வதைத்தது.

வானத்தில் ஆகாய விமானங்கள் தொடர்பற்ற அந்தப் பிரதேசத்தை சுற்றி வட்டமிட்டன. அவைகள் அங்கே நலிந்துகிடக்கும் மக்களுக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டுக்கொண்டிருந்த சமயத்தில் இங்கே பிச்சையப்பனின் ஆவி பிரிந்துவிட்டது.

ஏழை—பணக்காரன் என்ற மேடுபள்ளம் மிகுந்த இந்நாட்டிற்கு உழைக்க இளைஞர்களை அனுப்பக் கூடிய அந்தப் பள்ளியின்சுவர் அருகே மூன்று நாட்களாக பிச்சையப்பனின் பிணம் கழுகுகளால் வட்டமிடப்பட்டுக் கிடந்தது.

செல்வச் சீமான்களின் கல் நெஞ்சங்களைத் தூள் தூளாக்கும் ஏ! புரட்சிப்புயலே நீ என்று தான் இந்த நாட்டிற்கு வரப்போகிறாயோ?

புயலின் பொங்கல்!

[வா. செ. பழநிசாமி பி. ஏ.,]

அய்யோவென் தமிழ்நாடே! ஆருண் டாக
ஆற்றவொணுப் பஞ்சத்தி லிறந்து மீண்டாய்;
உய்யுமொரு நேரத்தில் முன்னர் ஓர்நாள்
உயிர்குடிக்க வந்ததொரு புயலின் வீச்சு;
மெய்தனிலே அவ்வடுக்கள் மறைந்த தில்லை,
மீண்டுமதில் வேலெய்தல் போல, இன்னல்
செய்புயலும் வெங்கொடுமை விளைத்த தின்று;
தென்னாட்டி லேனிந்தப் புயலின் பொங்கல்?

கண்காணு, காதுகளால் என்றும் கேளாக்
கடும்புயலின் நெடும்பிடியில் இடிந்து வீழ்ந்த
விண் முட்டும் மாளிகைகள், ஏழைமாந்தர்
வீடுகளும் எத்தனையோ? புயலில் சிக்கி
மண்தின்று ஏப்பமிட்ட மக்கள் எங்கோ?
மானத்தைக் காக்கவொரு உடையு மின்றி
பெண்ணெங்கோ? ஆணெங்கோ? குழந்தையெங்கோ
பெருந்துயரே! இதுவோஉன் புயலின் பொங்கல்?

சொர்க்கத்தில்

நரகம்

நரகம்! பஞ்சமாபாதகம் புரியும் பாதகர்கள் சித்திரவதை செய்யப்படும் இடம்.

கொலை, களவு, காமம், சூது, பொய் எனும் பாதகம் புரிவோர் அங்கு சென்று அவதிப்பட வேண்டுமாம்.

ஆனால், பஞ்சமாபாதகம் புரிவோர் சொர்க்கத்தில் சொகுசாக வாழ்கிறார்கள் என்பதை புராணங்களே காட்டிவிடுகின்றன!

சொர்க்கத்தில் நரகம்

"என்ன பிழைப்படி இது, என்ன பிழைப்பு! எழிலும் இளமையும் இருந்தென்ன, ஆடல் பாடல் அறிந்தென்ன! அடிமை வாழ்வுதானே — செச்சே! என்னென்ன இழிசெயலுக்கு உடன்படவேண்டி இருக்கிறது. உடன்படுவதா? துரத்தப்படுகிறோம்! இந்தக் கேவலமான நிலைமையைப் பெறவா தவமாய்த் தவமிருந்து தேவமாதரானோம். எனக்கு வர வர, ரம்பா! இந்த விண்ணுலக வாழ்வு வேம்பாகி வருகிறதடி" என்று திலோத்தமை கூறினாள்—கண்களில் நீர் துளிர்த்தது.

"வேம்பு என்கிறாயடி திலோத்தமா! எனக்கு இந்த வாழ்வு எட்டியாகிவிட்டது. பட்டியில் மாடு கண்டு பார்த்திருக்கிறோம், அவைகளுக்கு உடலிலேதான் புண்; பசும்பொன்மேனி நமக்கு, ஆனால் உள்ளத்திலேயோ ஓராயிரம் புண். அப்பப்பா! எவ்வளவு இழிநிலைக்கு ஒரோர் சமயம் ஆளாக நேரிடுகிறது. எப்படிப்பட்ட காமாந்தகாரத்துக்கு உடந்தையாக நேரிடுகிறது. தலோ! நம்மைத் தீயிலே தள்ளிவிட்டாலும் பரவாயில்லை, கருகித்தான் போவோம், ஆனால், பிறரை தீயில் தள்ளும் வேலையை அல்லவா நமக்குத் தருகிறார்கள்!" என்று ரம்பை கூறிக்கொண்டிருக்கும்போது, தொலைவில் மேனகை வந்துகொண்டிருக்கக் கண்டு, "பார்த்தாயா! மேனகா வருகிறாள்—எவ்வளவு ஆயாசத்தோடு வருகிறாள், பார்! பாபம், என்ன காரியமாகப் போய்வருகிறாளோ? எத்தகைய இன்னலுக்கு ஆளானாளோ!" என்று பச்சாதாபத்துடன் கூறினாள். மேனகையும் அவர்கள் அமர்ந்திருந்த பளிங்காலான படிக்கட்டில் வந்து உட்கார்ந்து, முகத்திலே முத்து முத்தாகத் துளிர்த்துக்கொண்டிருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

விண்ணுலகத்துத் தருக்கள் யாங்கள் என்று கர்வம் கொண்டிருப்பதுபோல தேவதாரு மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. எம்முடன் அடிக்கடி வானவில் போட்டியிட்டுத்தோற்று மறைவது வாடிக்கை என்று கூறுவது போலப் பல வண்ணப்பூக்கள் நிரம்பிக்கிடந்த சோர்பொழில். குழலும் யாழும் என்ன இனிமையைத் தரமுடியுமோ அதை இதோ நாங்கள் தருகிறோம், கேண்மின என்று கூறுவதுபோல சிற்றாறு ஓடிக்கொண்டிருந்தது. எங்கும் மணம் — விழாக்கோலம். பாசிபடாத, தூசி விழுந்தால் தெரிந்துவிடத்தக்க தெளிந்த நீர்கொண்ட தடாகம். 'ஸ்படிகக்' கண்ணாடியில் தமது முக "லாவண்யத்தை"க் கண்டு களித்திடும் காரிகையர் போல, மலர் சுமந்து கிடந்த தருக்கள் தமது வனப்பைக் கண்டு மகிழ்வதற்காகவே இந்தத் தடாகம் ஏற்பட்டது என்று கூடக் கூறலாம். அந்தத் தடாகத்துப் படிக்கட்டுகளில் அமர்ந்து, ஓரோர் சமயம் தேவலோக மாதர் பொழுது போக்குவர். இதை அறிந்து, தமக்கு எத்தகைய விருந்து வேண்டும் என்று தேர்ந்தெடுக்க அந்த மாலைப்போதினில் தேவர்கள் 'அலங்கார புருஷர்களாக' உலவ வருவர். இவர்கள் அமர்ந்திருக்கும்போது, தேவமாதர் தத்தமது அல்லல், அனுபவம் பற்றிப் பேசிப்பேசித் தமது ஆயாசத்தைப் போக்கிக்கொள்வர்போலும். அவர்களுக்கு என்ன தொல்லை நேரிடமுடியும்? தாங்கமுடியாத குடும்பபாரமா? தொட்டுத் தாலி கட்டினவன் விட்டுப்பிரிந்ததால் வந்துற்ற துயரமா? தொட்டதெல்லாம் தங்கமாகும், அவ்வளவு 'பாக்யவான் இவன்' என்று ஜோதிடரும் தரகரும் கூறியதால், பணமகனுக்கப்பட்டவன், வெறும் மண்ணாங்கட்டி என்பது போகப்போகத் தெரிந்ததால் புலம்பிக்கிடக்கும் பூலோகத்துப்பூவையர் போலவா தேவமாதரின் நிலை இருக்கும்? அவர்களுக்கு என்ன குறை? இந்திரசபையில் நடனம், சந்திரனின் சல்லாபம், அக்கினியே ஓடைக்குளிர் மதிப்பார்வை காட்டுவான்! உண்ண அமுதம், உடுத்திட தேவலோகப் பட்டாடைகள்! நடந்திடும் பாதையோ மலர் தூவியன!! இவர்களின் போகபோக்கியத்துக்கு என்ன குறை? என்றுதான் எவரும் எண்ணுவர். ஆனால், அவர்களுக்கு ஏற்படும் இன்னல் இதயக்குமுறலைத் தரத்தக்கது என்பது அவர்கள் பளிங்காலான படிக்கட்டுகளில் அமர்ந்து பேசும்போதுதான் தெரிந்துகொள்ள முடிந்தது.

தேவமாதர்களின் முகத்திலே ஒரு துளியும் கவலையின் கீறல்கள் தெரியக்காணோம். உள்ளத்தில் ஓராயிரம் சோகக் கதைகளைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்று கண்டறிய முடியவில்லை. அவர்கள் இருளுக்கு ஒளி ஊட்டும் பேரழகுடன் காணப்பட்டனர். பூலோகத்திலல்லவா, தங்கம் நாலாறு ஆண்டுகளில் பித்தளையாகிப் போகிற நிலைமை!

"கனகாவா? நிஜமாகவா? அடபாவமே! மான் குட்டிபோலத் துள்ளி ஓடுவாளே! பழத்தோட்டங்களிலே புகுந்து அவள் ஆடிடும் ஆட்டம் கொஞ்சமா? சிறிதும் பயமறியாதவளாயிற்றே! யாரையும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிவிடுவாள், கோபம் கொண்டு தாக்க வந்தாலோ ஒரே புன்னகையால் அவர்களை வென்றுவிடுவாளே! எவ்வளவு கவர்ச்சிகரமான கண்கள்! குவிந்து சிவந்து இருந்த அந்த அதரத்தை, கொவ்வை என்றெண்ணிக்கொண்டு கிளிகள் கொத்தவருமே! அந்தக் கனகாவா இது? தலையில் நரை! முகத்தில் கவலைக் கோடுகள்! கண்ணொளி எங்கேயோ போயேவிட்டது. அந்த அதரம? அடடா, இப்படியா சுக்காகிக் கிடக்கவேண்டும். கலகலப்பான பேச்சு காணோம். பேசத்தொடங்கும்போதே பெருமூச்சும் கிளம்பிவிடுகிறது. நடையிலே ஓர் தளர்ச்சி!—பாபம்! பரிதாபம்! இத்தனைக்கும் இப்போது வயது என்ன ஆகிவிட்டிருக்கும்; முப்பது அல்லது முப்பத்து இரண்டுதானே இருக்கமுடியும். இதற்குள்ளாகவா இந்த "ஔவையார் கோலம்" என்று பேசும் இடம் பூலோகம். இவர்களுக்கு என்ன! இன்பவல்லிகள்!! எனினும் அன்று அவர்கள் ஆயாசத்துடன் பேசினர். ரம்பை, மேனகையின் கன்னத்தில் காணப்பட்ட 'வடுக்களை'க் காட்டினாள் திலோத்தமையிடம், "பாவம்!" என்று

பரிதாபம் தெரிவித்தாள் திலோத்தமா.

"மேனகா! அலங்கோலமாக இருக்கிறாயே கண்ணே! நெடுந்தூரம் போய்வந்தாயோ?" என்று திலோத்தமா கேட்டாள்.

"நெடுந்தூரமா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் மேனகா-சந்தோஷத்தால் அல்ல—வெறுப்புணர்ச்சியுடன். "நான் சென்ற தூரம கிடக்கட்டும், திலோத்தமா! பட்ட கஷ்டம தெரியுமா?" என்று கேட்டாள்.

"உனக்கு இடப்பட்ட கட்டளை யாதோ?" என்றாள் ரம்பை.

"கட்டளையா? ஏண்டி பைத்யமே! அறிவு புகட்டு, அன்பு போதனைசெய், ஆண்டவனின் கலியாண குணங்களை அறிந்திடும வழியைக்கூறு, என்றா நமக்குக் கட்டளை பிறப்பிக்கபபடுகிறது? பாபத்துக்குச் சம்மதிக்கச் செய்ய வேண்டும், காமப்படுகுழியில் தள்ளவேண்டும், மோகலாகிரியை ஊட்டவேண்டும், கடுந்தவம் புரிவோனைக் காமுகனாக்க வேண்டும், தவம்பல புரிந்து, அற்புதம் பல நடாத்தும் ஆற்றல் பெற்றவனை, நாம் ம்பரமாக ஆட்டிப்படைக்க வேண்டும், ஓமத்தீ கொழுந்து விட்டெரியக் கண்டு களிகொள்ளும் முனிவனுடைய உள்ளத்தில் காமத்தீயை மூட்டிடவேணடும! நமக்கு இடப்படும் கட்டளை இது தானேடி. நாமென்ன, நற்குணத்தைத்தரும் பணிபுரியவா இங்கு அமர்ந்திருக்கிறோம. வேடன் கரத்திலே இருக்கும் அம்பு, மாடப்புறாவையோ, மான்குட்டியையோ சாகடிக்கத்தானே பயன்படுகிறது! அரும்பை மலராக்கவா? அதுபோலத்தானே நாம் இருக்கிறோம்" என்று கோபமும் ஆயாசமும் கலந்த குரலில் மேனகை பேசினாள்.

"ரம்பாவிடம், நான் இப்போது இதையேதான் சொல்லிக்கொண்டிருந்தேன். வரவர இந்தப் பிழைப்பு எனக்குத் துளியும் பிடிக்கவில்லை. பூலோகத்திலே நாம் காண்கிறோமே, அவர்கள் பொற்கொடிகளாக இல்லாதிருக்கலாம், ஆனால் எவ்வளவு கண்ணியமாக வாழ்கிறார்கள். காதலை அவர்கள் தானே, பெறுகிறாாகள்! எட்டுத்திக்கும் வெற்றிக்கொடி நாட்டியவனாயினும், அவனுடைய இன்பவல்லியிடம், பார்த்தனையோ, குழந்தை போலாகிக் கொஞ்சுவதை. மேனகா! அவர்களுக்கு ஆயிரத்தெட்டு அல்லல் இருக்கிறது — எனினும எதனையும போக்கிடும் 'காதல்' மாமருந்தாகிறது. நாமும் இருக்கிறோமே, மாதர்களாக......அதிலும் தேவமாதர்களாக! பாரிஜாதம் சூடுகிறோம, பரிமளகந்தம பூசுகிறோம், பூலோகத்தாருக்குக்கிடடாத பட்டாடையும் பல்வேறு அணிகளும் உள்ளன. பூங்கொடிபோலாடுகிறோம, புள்ளினம்போலப் பாடுகிறோம், பூம்பொழில்கள் உள்ளன உலவிமகிழ, எனினும், உள்ளத்திலே உயர்ந்த எண்ணம் மலர வழி இருக்கிறதா? உலகோருக்கு உயர்நெறி பற்றி எடுத்துக்கூறும வாய்ப்பு கிடைக்கிறதா? கட்டி முத்தமிடு! தழுவித்தாசனுக்கு! கடைகாட்டு, இடை ஆட்டு! காலில் விழச்செய், காமக்குழியில் தள்ளு! வெட்டிப்பேசுவான், எட்டிப் போய்விடாதே! பொறி பறக்கும் அவன் கண்களில்; புன்னகை பூத்திடட்டும் இதழில்! கோபப் பார்வை கண்டு அச்சம் கொள்ளாதே, மோகவலை வீசிப் பிடித்திடு! தவம்! தவம்! என்று எண்ணிக் கிடப்பவனை, பெண்களைத் தேடுவதும் நாடுவதும் பாவம் என்று நினைத்துக்கிடப்பவனை, மலரடி வருடிடும் நிலைக்குக் கொண்டுவா! வேத ஒலி கிளப்பிக் கொண்டிருப்பான் அவன், உன் சாகசத்தால், மணியே! மானே! மரகதமே! என்று உன்னை அர்ச்சிக்கவேண்டும், அந்த வகையில் அவனை அடிமையாக்கிட வேண்டும். என்ன செய்வாயோ தெரியாது. அவன் ரசனை அறியாத காட்டானாக இருக்கலாம்; அனுபவித்தறியா அப்பாவியாக இருக்கலாம்; அல்லது ஆடி அலுத்துப்போனவனாக இருக்கலாம்; நீ சிரித்துப்பேசி மயக்குவயோ. சிந்துபாடி உருகவைப்பாயோ, நாட்டியமாடி வெற்றி கொள்வாயோ, அருகே சென்று ஆரத்தழுவி அதர அமுதளித்து அடிமையாக்குவாயோ, எனக்குத் தெரியாது—அவன் தவக்கோலம கலைந்திடவேண்டும்—யோக தண்டத்தை வீசி எறிந்துவிட்டு அவன் போகபூமியில் புரளவேண்டும்; போ! போ! புனிதன், பூஜ்யன் என்று புகழப்படுகிறான், அவன், காமுகனாகவேண்டும்—இதைச் சாதிக்க, எத்தகைய முறை தேவையோ அதை உன் யுக்தம்போலக்கையாண்டு வெற்றி பெற்ற பிறகே, இங்கு நீ வருதல் வேண்டும். ஆபத்து வருமோ என்று அஞ்சாதே! சாபம் கொடுப்பானோ என்றெண்ணிச் சஞ்சலப் படாதே. அவனைப் பாபியாக்கிட உன் பருவ கருவ மிகுந்த அங்கம். காதல் பொங்கும் டைக்கலங்களாகட்டும். களத்திலே நின்று நீ உன் கண்ணம்பை ஏவினால் தவக்கோலம கலைந்துபோகும். உனக்கென்ன இது தெரியாதா!! இன்று நேற்றா, நீ இந்தக் காரியத்தில் ஈடுபடுகிறாய். கல்லுருவம் கூட உருகிடத்தக்க வகையில் சாகசம் புரியும சல்லாபி அல்லவா நீ. உன்னிடம் எனக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது. சென்றுவா; வென்றுவா!' என்றுதானே நமக்கு இங்கு கட்டளை பிறக்கிறது, இதுதான் நமது வாழ்வு என்று தெரிந்திருந்தால்; ரம்பா! ஆண்டவன்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன; நான் இங்கு வரச்சம்மதித்து இருக்கவேமாட்டேன்". என்றாள திலோத்தமா.

"நமது வேதனை யாருக்குத் தெரியப்போகிறது. கிடக்கட்டும் நாம் செய்த தீவினை இது; என்ன செய்யலாம். எப்போது என்ன காரியமாகச் சென்று வந்தாய்; அதைச்சொல்லு" என்று ரம்பை கேட்டாள்; திலோத்தமா; மேனகையை அருகே அழைத்து அணைத்துக்கொண்டு; ரம்பையிடம் "போடி போக்கிரிச்சிறுக்கி! பார்த்தாலே தெரியவில்லையா; அவள் பட்டபாடு! கிளறிக்கிளறிக் கேட்கிறாயே! கிளியே! நீ வருத்தப்படாதே" என்று ஆறுதல் கூறினாள்.

"திலோத்தமா! மலரினைப் பறிப்பதற்கும் கசக்கி எறிவதற்கும் உள்ள வித்தியாசத்தைக்கூடவா இந்தப் பெரிய ஞானி அறியாதிருப்பான் என்று எண்ணிக்கொண்டேன். ஆனால் அவன் நாலு வேதத்தையும் ஆறு சாஸ்திரத்தையும் படித்துப்படித்துத் தடித்துப்போன உள்ளத்தினனாகிக்கிடந்தான். தங்கமே! தங்கமே! என்றுதான் கொஞ்சினான், ஆனால், இரும்பாலான சிலை என்று எண்ணிக்கொண்டல்லவா தழுவினான். இதழ், மலராம, எனக்கு! மலரை எப்படிப் பக்குவமாக, இலாவகமாகப் பறித்து நுகரவேண்டும் என்றாவது அறிந்திருந்தானா! அப்பப்பா! அவனிடம் சிக்கிச் சீரழிந்தேன். தாயுமானேன், தெரியுமா?" என்றாள்.

"அடி அழகுராணி! தாய் ஆ

விட்டாயா? கேளடி, ரம்பா! மேனகா, தாயாகிவிட்டாளாம். குழந்தை எங்கேயடி கோமளமே! என்ன குழந்தை? ஆணாபெண்ணா? அழகாகத்தானே இருந்தது? ஒரு முகமா, ஆறு ஏழா? பிறந்ததும் பாடிற்று, ஓடிற்று? சொல்லடி சொர்ணபிம்பமே! சொல்லு. எங்கே, குழந்தை? என்று ஆவலுடன் கேட்டாள் திலோத்தமா.

‘‘அழகான பெண் குழந்தை! அடவியிலேயே விட்டுவிட்டேன்.’’ என்று சோகமாகக் கூறினாள் மேனகா.

‘‘அடவியிலா? அரண்மனையிலா? என்று கேட்டாள் ரம்பை.

‘‘அடவியடி அடவி! என் இன்பப் பெருக்கு, அன்புக் குழவி, கானகத்திலேதான்! வேறென்ன செய்வேன்! எனக்கு இடப்பட்ட கட்டளை விசுவாமித்திரனுடைய தவத்தைக் கெடுக்க வேண்டும் என்பதாகும். அவனே முன்கோபியாம்! முரடனாகவும் இருந்தான்! கடுந்தவம் இயற்றிக்கொண்டிருந்தவன்மீது காமக் கணைகளை வீசநான் கால் கடுக்குமளவு ஆடினேன், கண் திறந்தான். சாபமிட வாய்திறந்தான்—என்னைக் கண்டான், கோபம் மடிந்தது, காமம் கொப்பளித்தது. பசும் புற்றரை மஞ்சமாயிற்று, கிளியும் நாகணவாய்ப்புள்ளும் சுபசோபனம் பாடிட, மான் கூட்டம் நடனமாட, எங்கள் மதனவிழா இனிது நிறைவேறிற்று—இனிது என்பது அவர் நிலை—நானா?— தாயானேன்—பெண் குழந்தை—’’ என்று விவரித்தாள் மேனகை.

‘பாரடி ரம்பா! பரமனை வேண்டி அந்த முனிவன் எத்தனையோ காலமாகத் தவங்கிடக்கிறான். நீரில் நின்றிருப்பான், நெருப்பில் அமர்ந்திருப்பான், ஊசி முனையில் தவமிருந்திருப்பான், காற்றைத் தவிர வேறெதுவும் புசியேன் என்று கூறி கடுந்தவம் புரிந்திருப்பான். வகைவகையான யாகங்களைச் செய்திருப்பான். எனினும் வரம்கிடைக்கவில்லை. மேனகையைப்பார்! திவ்ய தரிசனம் தந்தாள், வரமும் கொடுத்தாள்’’ என்றாள் திலோத்தமா.

‘‘வாரி அணைத்துக்கொண்டு உச்சிமோந்து முத்தமிட்டு, கானகத்தில் கிடைத்த கட்டழகி பெற்றெடுத்த கனியமுதே! காவியக் கர்த்தாக்களுக்கும் ஓவிய வித்தகர்களுக்கும் களிப்பூட்டிக் கற்பனையைச் சுரக்கவைக்கும் கலை வடிவே! என் தவத்தின் பலனே! ஓமகுண்டத்தருகே கிளம்பிய வேத ஒலியே உன் வடிவெடுத்து வந்ததோ, என்னை வாழ்விக்க! நிரந்தர இன்பத்தை நாடினேன், நிர்மலனைத் தேடினேன் அதைப் பெற, அது இருக்குமிடம் விண்ணுலகம் என்றெண்ணி அண்ணாந்து பார்த்துப் பார்த்து அலுத்துப்போனேன். சர்வலோக இரட்சகன், என் தவத்துக்கு மெச்சி; ‘வரம்’ உன் வடிவில் அருளி இருக்கிறார்! அழகொழுகும் குழந்தாய்! அடவியில் நான் பெற்ற அருஞ்செல்வமே!!’’ என்றெல்லாம் விசுவாமித்திரர் குழந்தையிடம் கொஞ்சியிருப்பார் என்றாள் ரம்பை—குறும்பாக அல்ல—குதூகலத்துடன்தான். மேனகையின் கன்னத்திலே கண்ணீர் புரண்டது.

‘‘காட்டு வாசத்தால் கல்மனமாகிவிட்ட அந்தக் காதகன், காமுகனாகிவிட்டேனே! கடுந்தவம் கலைந்ததே! கடவுள் சன்னிதானத்துக்கு இந்தக் கரைபடிந்த நிலையில் எங்ஙனம் செல்ல முடியும் என்று கூறிவிட்டு, என் செல்வத்தை, அவனுடைய காதல் விளையாட்டில் கனிந்த இன்பத் திருவைத், தொடவும் மறுத்தானடி! அதே காட்டிலே புலி, குட்டிகளுடன் விளையாடுகிறது. பாம்புப்பிலத்திலே பாசம் இருக்கிறது! பரமபதம் தேடிடும் அந்தப் பாபிக்கு, பெற்றெடுத்த குழந்தையிடம் அன்பு சுரக்கவில்லை.

காரிகையாய் வடிவெடுத்தான் கலகக் கடவுள்!

கண்டு காமுற்றான் கார்மேகக் கடவுள்.

என் அழகைக் கண்டதும, தவம் கலேந்தது—இன்பம் பெற்றுனதும் மீண்டும் தவத்தின்மீது நினேவு சென்றது! என்ன விந்தையான மனமடி இது. கள்ளன, வழி மறித்து அடித்துப் பொருளேப் பறித்துக்கொண்டான பிறகு. கடுகிச் செல்கிருனே, அதுபோலவே என்னிடம் பெறவேண்டியதைப் பெற்றுக்கொண்டானபிறகு, கற்ற வேதத்தைக் கவனததுக்குக் கொண்டு வந்தான், கண்களே இறுக மூடிக் கொண்டான். தேவமாதல்லவோ நான்! இங்கு குழந்தைகளேக் கொண்டு வருதல் முறையல்ல என்டதை அறியீரா? என்று கேட்டேன்—பூலோகத்தில் இவள் ஓர் புவன சுந்தரியாவாள—பூஜிதரே! கையிலேந்திப் பாரும்! கண்ணழகு பாரும்! கருநீலமலர் பாரும், கட்டித் தங்கம், குழந்தை வடிவெடுத்திருக்கிறது! என்று பாசத்தை ஊட்ட முயற்சித்தேன். பாறை மனம் கொண்டோனுனன். உணர்ச்சிக்கே ஆட்படாதவனு என்ருல், சிறிது நேரத்துக்கு முன்புவரை. அன்னமே! சொர்ணமே! அமுதே! கனியே! என்று இளித்துக்கிடந்தான், தங்கள் அந்தஸ்துக்கு இது அடுக்காது, வேண்டாம் அபசாரம் என்று நான் தடுத்தும், என் பாதம் வருடி, தேவலோகத்திலே பாதைகளிலே மலர் தூவி வைக்கிருர்களல்லவா, இலேயானுல் இந்தப் பாதம் நொந்து போகுமே என்று பேசிக் காமம் கக்கினுன், காரியம் முடிந்தானதும் கடுந்தவம செய்வோன் நான், காரிகையே! என்ன காரியம் செய்தனே! என்ன காரியம் செயதனே! என்று கூறி மிரட்டலானுன். என்ன செய்வது? கோழியும் அதன் குஞ்சுகளேக் கொத்த வல்லூறு வட்டமிடக் காணும்போது சீறுகிறது... போரிடவும் செய்கிறது. நான் என்ன செய்ய மு-ந்தது? குழந்தையை, புலியும் பிறவும் உலவும் பெருங்காட்டிலே விட்டுவிட்டு வரவேண்டி இருக்கிறது!!" என்று கூறி விம்மினுள் மே-கை.

"மேனகா! அழாதே! அந்தக் காட்டிலே, கண்மூ-த் தவம் புரியும் தவசிகவ மட்டுமா, வேடர்கள் இருப்பார்கள், அவர்கள் குழந்தையிடம் அன்புகாட்டத் தவறமாட்டார்கள். குற்றம் அந்த முனிவன் மீதுகூட அல்லடி அம்மா! சுவையுள்ள கனி குலு-கும் மரத்தைக் காண்பவன், ஏறிப் பறித்தோ கல்லால் அடித்தோ, பழத்தைப் பெறுகிருன, உண்டு மகிழ்கிருன், ஒருநொடிப்போதில், சுவை தந்த தருவினேமறந்துவிடுகிருன். அதேதான், ஆடவர் போக்கு! அதிலும் நாம் சநதிக்கும் ஆடவரின் போக்கு!! அவர்கள் ஆண்டவனேச சந்தித்து 'ஆனந்தம்' பெறும் பாதையில், இடையில் நம்மைச் சந்திக்கிருர்கள, இன்பம்பெறுகிருர்கள், பிறகோநம்மை நிராகரித்து விடுகிருர்கள்...மீண்டும் புனிதப் பயணத்தைத் தொடங்கி விடுகிருர்கள். நாம்? வீசியெறியப்பட்ட மலராகி விடுகிரோம். கசக்கிப் போடப்பட்ட கனியாகிரோம். நாம் இத்தகைய கொடுமைக்கு உட்பட்டுக் கிடப்பது மடைமை. தேவலோக வாசம், தேவதேவனின் தரிசனம் என்ற மயக்கம் நம்மை இந்தக் கதிக்கு ஆளாக்கி விடுகிறது. பூலோகத்தில் உள்ளவர்களுக்கு, மூபபு, பிணி, சாவு, உண்டு... சாகாவரம் பெற்றவர்கள் நாங்கள்...இளமை மாருது, அழகு குன்ருது, நினேக்கும் வடிவம் எடுக்கவல்லோம், இந்த விநாடி விண்ணகத்திலிருப்போம், மறு விநாடி மண்ணுலகு செல்வோம், அவ்வளவு மகத்துவம் இருக்கிறது எங்களுக்கு என்று பூரித்துக் கிடக்கிருேமே, அதனுல்வந்த வினே இது...எவனெவனுக்கோ பெண்டாகி, எவருடைய அன்பையும்நிரந்தரமாகப் பெற முடியாமல்,

ஐய்யோ! இதென்ன என்று அலறினரே
அறுபது குழவிகள் கீழே விழுந்து அழுதனவே.

கட்டித் தழுவிடும் காதலனையும் பெற்றெடுக்கும் செல்வத்தையும கைவிட்டுவிட்டு, இங்குவந்து கண்ணீர வடிக்கிறோம், நாமாகத் தானே இந்த 'நரக' வாழ்வைப் பெற்றுக் கொள்கிறோம் சொர்க்கத்தில்!! நமக்குச் சிறிதளவாவது சிந்தித்துச் செயலாற்றும சக்தி இருந்தால், இந்த வாழ்க்கைக்குச் சம்மதித்திருப்போமா! சகித்துக் கொள்கிறோம் .. சர்வேஸ்வரன கட்டளை என்று எண்ணிச் சிரம சாய்க்கிறோம்...என்று கூறிப் பெருமூச்செறிந்தாள் திலோத்தமை.

"கொண்டவனைக் கைவிடாதே, கண்டவனுடன் கூடி அழியாதே; காமுற்றுத் திரியாதே, கதியற்ற கன்னியரைக் கெடுத்திடாதே, போகபோக்கியத்தில் புரளாதே என்றெல்லாம். எவ்வளவு அற்புதமான போதனைகள் தருகிறார்கள் பூலோகத்தில்-திலோத்தமா! ஒழுக்கம், குடும்ப வாழ்க்கை, பிறர்மனை நாடாமை, வஞ்சித்து ஒழுகாதிருத்தல் போன்ற அருங்குணங்களை அவர்கள் போற்றி வருகிறார்கள். ஒழுக்கநெறி தவறுவோனை இகழ்கிறார்கள்—தண்டிக்கிறார்கள். இப்படி சிலத்தோடு வாழ்கிற பூலோகமவேண்டாமென்று, இங்குவந்து காமச் சேற்றை தெய்வீகமாகக் கொண்டு உழல்கிறோம். இதை எண்ணும்போது, எனக்குத் திலோத்தமா! அழுவதா, சிரிப்பதா என்று தெரிவதில்லை. ஐயன் ஒழுக்கம் தவறுபவனை நரகத்தில் தள்ளுவான், என்று அங்கே பூலோகத்தில் உள்ள மக்கள் நம்புகிறார்கள — அஞ்சுகிறார்கள—பயபகதியுடன் நடந்துகொள்கிறார்கள கடவுளிடம நெருங்கிய தொடர்பு கொண்ட தோழர்கள் நாங்கள் என்று கூறிடும் சிலர், ஒழுக்கக் குறைவையே தனிச்சிறப்பாகக் கொண்டு, ஐவர் ஒரு அழகியைக்கூடி. மகிழ்கிறார்கள சாமான்யர்களோ, ஒழுக்கத்தை ஓம்பி வருகிறார்கள். அப்படிப்பட்ட இடத்தை மட்டமானது என்று கூறிக்கொண்டு, அங்குள்ளவர்களிலே மிக மட்டரகமானவர்களும் செய்யக் கூசும் காரியங்களை இங்கு செய்துகொண்டு, நாம் இருக்கிறோம். இதென்ன விந்தை!! நாம் பூலோகத்தை மட்டமானது என்று கூறுவது மட்டுமல்ல, பூலோகத்தில் தேவலோகமே மேலானது என்று போதிக்கப்பட்டு வருகிறது, அதுதான் எனக்கு வேடிக்கை கலந்த வேதனையாகப் படுகிறது." என்றாள் மேனகை.

'பூலோகத்திலே மகா உத்தமிகளாக, பதிசொற் கடவாப் பாவையாக, கணவன் பொருட்டு எத்தகைய கஷ்ட நஷ்டத்தையும் தாங்கிக்கொள்ளக்கூடிய காரிகையாக இருப்பினும், மேனகா! இங்கே, தேவலோகத்திலே ஒரு பத்துநாள் தங்கிவிட்டால் போதும் ஒன்று எங்களைத் தலைகீழாகப் பிடித்துத் தள்ளிவிடுங்கள பூலோகத்துக்கு. அக்ரமும் ஆபாசமும் நெளியும் இந்த அமரலோக வாழ்வு எமக்கு வேண்டாம என்றுவக காலடி வீழ்ந்து கண்ணீர் பொழிந்து கேட்பார்கள், அல்லது மெள்ள மெள்ள காமாந்தகாரப் படுகுழியில் தங்களையும அறியாமல் தள்ளப்பட்டுப்போவார்கள். பாவம்! இங்கே இருக்கிற இழிதன்மை இன்னதென்று தெரியாமல், அங்கே அவர்கள், பூஜை நடத்தியும் பூசுரன காலில் வீழ்ந்து வணங்கியும, கடுமையான நோன்பு விரதம ஆகியவைகளில் ஈடுபட்டும். தேவலோகம் வந்துசேர வேண்டும என்று தவம கிடக்கிறார்கள"

"ஆமாம், தேவலோகமென்றால், தேவதேவனுடைய திவ்ய நாமங்களைப் பஜித்துக்கொண்டு. காலையில் கைலாயம். மாலையில் வைகுந்தம் சென்று தொழுது பேரானந்தம் அடையும் இடம், நிர்மலனுடன் நித்தநித்தம் உரையாடி மகிழும் லோகம் என்று எண்ணிக்கொள்கிறார்கள். அவர்களுக்குத் தெரிகிறதா, இங்கு நடைபெறும் காமக் களியாட்ட வெறிச்செயல்கள்"

"அந்த உண்மை தெரிந்து விடக்கூடாது என்பதற்காகத் தானே இங்குள்ள தந்திரக்காரர்

சதங்கை கேட்ட சடையாண்டி சரசமாடினன் சக்கிரதாரியுடன்.

கள் பூலோகத்தில் புராணிகர்கள் என்ற கூட்டத்தினரை அனுப்பி தேவர்களின் மகாத்மியத்தைப் பற்றி மனம்போன போக்கில் புளுகித்தள்ளச் சொல்லி இருக்கிறார்கள். குடித்துவிட்டுக் குளறுவது; கிடைத்தவனுடன் கூடிக்குலவுவது, பிறன் மனையாளை கற்பழிப்பது ஆகிய இழிசெயல்களுக்கெல்லாம் பூலோகத்தில் புராணிகர்கள் தத்துவார்த்தம் கூறி, எல்லாம் மகிமை என்று பேசி மக்களை மயக்குகிறார்கள். தங்கள் லோகத்திலே எவையெவை பஞ்சமாபாதகம் என்று நம்பப்படுகிறதோ, எவைகளைச் செய்ய காரணமானவர்கள் கூசுகிறார்களோ, எவைகளைச் செய்தால் செய்பவனை இழிமகனென்று கண்டித்து, சமூகத்திலிருந்தே ஒதுக்கி வைக்கிறார்களோ, அதே செயல்களை இங்கு தேவர்கள் வெறியோடு கத்துடன் செய்கிறார்களே என்று வெறுப்படையாமல், கடவுளின் லீலைகள் என்று கூறி கற்பூரம் கொளுத்துகிறார்கள், கன்னத்தில் அடித்துக்கொள்கிறார்கள்; கர்மம், கர்மம்!''

"அவ்வளவு போதை ஏற்றிவைத்திருக்கிறார்கள் புராணக்காரர்கள்."

"ஆமாமடி, ஒருநாள் மந்தரத்திலிருந்து ஒரு அரிகதா காலட்சேபத்தைக் கேட்டபோது ஒரு கணம் நானே மயங்கிவிட்டேன்."

"புராணக்காரர்களை ஏவி பூலோகவாசிகளை ஏமாற்றிவருகிறார்கள் புண்யலோக வாசம் என்று கூறி நம்மை ஏய்க்கிறார்கள்..."

"நாம் செய்யும் காமச்சேட்டைகளை கூட புண்ய கைங்கரியம் என்றுதானே கூறுகிறார்கள். வேறு எப்படிக் கூறுவார்கள்? நாம்தான் பார்க்கிறோமே இங்கு மூலவர் என்று கொண்டாடப் படுபவர்களே ஒழுக்கத்தைப்பற்றி ஒரு துளியும் சிந்திக்கவும் மதிக்கவும் மறுக்கிறார்கள்—அப்பப்பா! மகாவிஷ்ணு செய்திருக்கிற ஆபாசங்கள் கொஞ்சமா......"

"பாவமடி, இந்த நாரதர், விஷ்ணுவிடம் சிக்கிக்கொண்டு பட்டபாடு பற்றி எண்ணினாலே சிரிப்புவருகிறது."

"இந்தக் குறும்புக்காரர் என் பெண் வடிவமெடுக்க வேண்டும். புதப்பெண் தெரிந்ததும் அவர் புண்ய கைங்கரியத்தில் ஈடுபட்டுவிட்டார்."

"அறுபது புத்திரர்களாம் அந்த ஆபாசக்கூட்டுறவில் பிறந்தவை."

"பூலோகவாசிகளிடம் புராணக்காரன் இந்த அறுபது குழந்தைகளின் பெயரை அறுபது வருஷங்களாகக் கொண்டாடுவது புண்ய காரியம் என்று கூறிவிட்டான் மக்களும் நம்பி விட்டார்கள்."

"பாரேண்டி அக்ரமத்தை! கள்ளனுடைய் கன்னக்கோலுக்கு கோயில்கட்டிக் கும்பிடச் சொல்லி திருட்டுக் கொடுத்தவர்களிடம் கூறுவது போலச் செய்திருக்கிறார்கள்."

"என்னதான் செய்யமாட்டார்கள் இந்தத் தேவர்கள். பூலோகத்தில் சிவலிங்க பூசையே சிலாக்கியமானது என்று நம்பவைத்திருக்கிறார்களே.

"ஆமாம், இங்கே நடைபெறுகிற ஆபாசம் அத்தனையும் அங்கு தேவப்பிரசாதமாக்கப்படுகிறது."

"மோகினியாக வடிவவெடுத்தாரே, மஹாவிஷ்ணு. எதற்காகத் தெரியுமாடி......"

"இவரும் அரனும் கூடினர், ஐயனார் பிறந்தார்......பூலோகத்தில் மிகப்பிரமாதமாகக் கொண்டாடுகிறார்கள் ஐயனாரை........"

"அதறகல்ல நான் கேட்பது, ஏன் மோகினியாக வடிவ மெடுத்தார் தெரியுமா, மகாவிஷ்ணு. அடி தேவமாதர்களே! நாங்கள் இடுகிற கட்டளைப்படி நடக்காவிட்டால், எங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை, வேறு எத்தனையோ வழிகள் எங்களுக்குத் தெரியும். உங்கள் தயவே தேவையில்லை, எங்களால் மோகினியாகி ஒருவருக்கொருவர் 'சேவை' செய்து கொள்ளமுடியும், என்று கூறி, நம்மை மிரட்டுவதற்காகவே, மகாவிஷ்ணு மோகினி வடிவம் எடுத்தார்".

"இருக்கும், இருக்கும். அந்த முனிவனுடைய தவத்தைக் கெடு, இந்த அரசனை ஆலிங்கனம் செய்து அடிமையாக்கு என்று நமக்குக் கட்டளையிடும்போது,

மூலக்கடவுளர் காமக்கோலம் முகிழ்த்தளித்தது புதுக்கடவுள்!

நாம் சிரமமாக இருக்கிறது, வேறு வேலை நிரம்ப இருக்கிறது! என்று ஏதாவது மறுப்பு சொன்னால், இவ்வளவு தானே! உங்கள் உதவியே வேண்டாம், இந்தத்தவசியின் 'நிஷ்டையைக் கலைக்க இதோ நானே 'மோகினி' யாகிறேன் பார் என்று, மகாவிஷ்ணு கூறிவிடுவாரல்லவா........"

"தாராளமாக, அந்த 'மகா சேவையை இந்தக் கடவுள்களே தங்கள் ஏகபோக உரிமையாக வைத்துக் கொள்ளட்டும்—இந்த இடத்தை விட்டுப் போய் விட வழி செய்து கொடுத்தால்போதும், நமக்கு ஏற்றவன் ஒரு நாணயஸ்தன், பூலோகத்தில் கிடைக்கவா மாட்டான்——அவனோடு காலந்தள்ளுவோம். அமிர்தமும் வேண்டாம், ஆபாசம புரியும் இந்த வாழ்க்கையும் வேண்டாம்,"

"நமமால் இங்கே உட்கார்ந்து கொண்டு, இதுபோல முணுமுணுத்திட மட்டுமே முடிகிறது. முடிவு எடுக்கவேண்டிய கட்டம் வந்ததும் மீண்டும் மனச்சபலம் பிறந்து விடுகிறது, சதங்கையைத் தேடிக் காலில் அணிந்து கொண்டு இந்திர சபையில் ஆடி அதனால் ஏற்பட்ட அலுப்புத் தீருவதற்குள், எவனாவது தேவன் இளித்தால் அவனுக்குஇரையாகிறோம். பூலோகத்தில் மாதவி என்றோர் மடந்தை—கணிகையர் குலம்தான்—கனவான் எவனுக்காவது காமக்கிழத்தியாகி அவனுக்குக் களிப்பூட்டிக் காலந்தள்ள வேண்டிய விதிதான் அவளுக்கு அழகு, இளமை கவர்ச்சி இவற்றுடன் அவளிடம் கலையும பூரணமாக இருந்தது; அரசன் அவையில் அவள் ஆடிய போது, அனைவரும் ஆஹாஹாரமிட்டனர். கோவலன் எனும் வணிக இளைஞன், அவளிடம் காதல், வேண்டிப்பெற்றான். இருவரும் இன்ப வாழ்வு பெற்றனர். பிறகு அவன் காரணமற்று அவளிடம் கோபமடைந்து அவளை விட்டுப்பிரிந்தான்-கணிகைதானே அவள்-பாபப்பிண்டம் என்கிறார்கள் அவளை! பழி சேரும் இடம் என்கிறார்கள் அவள் மனையை...! அப்படிப்பட்ட மாதவி, தன்னை மகிழ்வித்து வந்த இன்னுயிரனையான் தன்னைவிட்டு நீங்கி பிறகு பயங்கரமான ஒரு சூழ்நிலை காரணமாகக் கொல்லப்பட்டுப் போனான் என்று கேள்விப்பட்டதும் என்ன செய்தாள்தெரியுமா அந்தமாதவி? நாமும் இருக்கிறோமே இங்கு புதனை விட்டால் வியாழன், சூரியனை விட்டால் சந்திரன, என்று இப்படி கைமாறியபடி-அப்படியா செய்தாள் அந்த ஆடலழகி- அவர் என் மனதுக் கிசைந்தவர்-எனவே என் மணாளர்—அவர் மடிந்தபின் மாதவியும் மடியத்தான் வேண்டும். அதுதான அறம்—ஆனால் என் கருவில் வளரும குழவியை உலகுக்கு அளித்திடும் கடமை ஒன்றுளது, அதனை நிறைவேற்ற மட்டும் நான் உயிர் துறக்காதிருக்கிறேன் — எனினும் கோவலன் இறந்தபின் அவனுடன் கொஞ்சி விளையாடி கோலமயில் போலாடி, அவன் திருவாயால் கோமளமே! அஞ்சுகமே! என்று கொஞ்சுமொழி கேட்டு, அவனுடன தென்றலைச் சுவைத்து, தேனமுது உண்டு, மாலை மதியத்தின் போது' மாசில் வீணையை மீட்டி மதுரகீதம் அவர் பாட மலர்க்கொடிபோல்தான் ஆட இருந்து வந்த காதல் வாழ்வைப் பெற்றிருந்த மாதவி; இனியும் இருத்தல் அறமாகாது — அந்த மாதவி, சிரித்து விளையாடிய சிங்காரி, நடனம் காட்டி நவரசம் ஊட்டி நடனமாடிய நாரீமணி, எவ்வகையாக இன்று அலங்காரம் செய்து கொண்டால் என் இதய நாதனுக்கு மகிழ்வளிக்கும் என்று கண்டறிந்து அதன்படி கவர்ச்சியைக் கொண்டு கொட்டி, காதலின்பத்தை ஊட்டிய மாதவிமடியவேண்டியதுதான் என்று தீர்மானித்தாள். மலரைத் துறந்தாள் அந்த மலர் முகவதி! ஒளியைத் துறந்தன கண்கள்! பளபளப்பை இழந்தது மேனி! தைலத்தை இழந்தது. அவள் கார்நிறக் கூந்தல்! புன்னகை போன இடம் தெரியவில்லை. ஒரு நாளில் ஔவையானாள்! மாளிகையை வெற்றிடமாக்கினாள்- இருந்த பொருளையெல்லாம் வறியருக்கு அளித்தாள்—புத்த சமயம் புகுந்தாள். இது பூலோகத்தில்! கனிகைக்கு இத்தகைய பெருநோக்கு பிறந்தது. அந்த பூலோக வாசிகள் புண்யம் தேடிக்கொண்டு இங்கே வந்து வாசம் செய்யலாம் என்று புராணிகனை ஏவிக்கூறச் செய்கிறார்கள் நம்மைக் காமச் சேற்றில் உழலவிட்டிருக்கும் உத்தமர்கள்..."

"நாம் மட்டும் கரமச்சேற்றில் உழல்கிறோம்..."

"அந்தத் தேவ லோகத்தை மேலானது என்று எண்ணிக்கிடக்கிறார்களே இந்த ஏமாளிகள் என்று எண்ணும்போது. எனக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது. ஒரு நாள் இதைப் பூலோகத்தாருக்குக் கூறிவிட வேண்டும் என்று கூட எனக்குத்தோன்றுகிறது" என்றாள் திலோத்தமை.

"அதற்கு நாம் கொடுத்துவைக்கவில்லையே! திலோத்தமா! நம்மை பூலோகம் சென்று வரச்சொல்வதெல்லாம் யாரையாவது சீரழிக்கச் செய்வதற்கும் ஒழுக்கத்தைக் கெடுப்பதற்கும் தானே" என்று மேனகா சொன்னாள்

"நாமெல்லாம் புரட்சி செய்து விட்டு பூலோகமே போய்விட்டால்......" என்று கேட்டாள் திலோத்தமை.

"நம்மாலே முடியுமா? நமக்குத் தெரிந்ததெல்லாம் ஸ்வாமி! நாதா! அன்பே! ஆருயிரே! என்று அடிமூச்சுக்குரலால் பேசுவதும், ஆடிடும் கொடியில் அழகுமலர், என் அங்கமதில் உண்டு இன்பமலர் என்று காலைத்தூக்கி நின்று ஆடுவதும், கட்டி முத்தமிடுவதும், பாடுவதும், பிறகுபட்டபாட்டினை எண்ணி விம்முவதும் ஆகிய இதுதானே தவிர ஏன் என்று கேட்க, எதிர்த்துப்பேச புரட்சி செய்யவா தெரியும்" என்று மேனகை இடித்துரைத்தாள். ஆழ்ந்த யோசனையிலிருந்து கலைந்த நிலையில் ரம்பை நம்மால் முடியாதுதான்! ஆனால் பூலோகத்தில் இப்போது அவ்விதமான அறிவாற்றல் வெகுவாகப் பரவிக்கொண்டு வருகிறது. நாம் இருக்கும் இடத்தின் அவலட்சணங்களை எடுத்துக்கூறி மக்களைத் திருத்திக் கொண்டு வருகிறார்கள். புரட்சி வீசுகிறது" என்றாள்.

"கல கல வென மணியோசை கேட்டது" மூவரும் திடுக்கிட்டுப் போயினர்.

"இந்திரசபையில் என் நடனம் இன்று, என்று கூறிக்கொண்டு எழுந்தாள் திலோத்தமை.

"சந்திரனுடைய வெப்பத்தைத் தணிக்க இன்று நான் தொண்டு செய்ய வேண்டும் என்று கூறினாள் ரம்பை.

"நீ?" என்று இருவரும் மேனகையைக் கேட்டனர்.

"நானா? இன்று யமனிடம் செல்கிறேன்" என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

என்னங்க இது, ரம்பையும் மேனகையும்? என்று கேட்டு என் துணைவி என்னைத்தட்டி எழுப்பிடவே என் கனவு கலைந்தது.

கனவான்

"பழங்காலச் சிற்பங்கள் — சின்னங்கள்—ஏடுகள்— இவைபோன்றவை இங்கு கிடைக்குமென்று கேள்விப்பட்டேன்-என்று கூறிய புதியவரிடம், பழைய சாமான் கடை பண்டரி, தன்னிடம் இருந்த சாமான்களைக் காட்டுவதற்கு முன்பு, இனிய புன்னகையைக் காட்டி, "பழங்காலச் சிற்பங்களை தேடிக் கொண்டு வருபவர்களின் தொகையே குறைந்துவிட்டது— இலக்கியமேதைகள்—வரலாறு அறிந்தவர்கள் தானே, அவைகளின் அருமையைத் தெரிந்து கொள்ளமுடியும்; பாமரருக்குப் பளபளப்பும் மினுமினுப்பும் கொண்ட இந்தக் காலத்துச் சாமான்கள்மீதுதான் மோகம்." என்று கூறினன்.

"உண்மைதான் ஐயா! ஆனல், பழங்காலச் சிற்பம், சின்னம் என்று போலிகளைக் காட்டி ஏய்த்து விடுபவர்களும் இருக்கிருர்கள், அல்லவா!! ஒருசமயம் நானே ஏமாற்றப்பட்டிருக்கிறேன் — கல்கத்தாவில். ஒரு அபூர்வமான வேலைப்பாடு கொண்ட குதிரைச்சவுக்கு இருந்தது —இந்தக் காலத்தில் பழக்கத்தில் உள்ளது அல்ல. நான் அதைக் கூர்மையாகக் கவனிப்பதைக் கண்ட கடைக்காரர் என்னிடம் மிக பக்குவமாகப் பேசி, அந்த குதிரைச் சவுக்கு தேசிங்க ராஜனுடையது என்ருன்—பல ஆதாரங்கள் காட்டினன்—நான் மலைத்துப்போனேன் — உண்மையிலேயே, தேசிங்க ராஜனுடையதாக அந்தச்சவுக்கு' இருக்குமானல்' ஆஹா! எவ்வளவு அபூர்வமான கண்டு பிடிப்பு —எத்தனை வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு உபயோகப்படும் என்றெல்லாம் எண்ணினேன்; அவ்விதம் எண்ண எண்ண என் ஆவல் அதிகரித்தது; கடைக்காரன் என்னைச் சரியாக மயக்கிவிட்டான்; தேசிங்கு நடத்திய போரிலே நேரடியாக ஈடுபட்ட நசுருதீன் அதை எடுத்து வந்ததாகவும், அந்தச் சவுக்கு, அவன் குடும்பத்தில் பலகாலம் இருந்ததாகவும், நசருதீன் பேரன், அதை ஒரு அலகாபாத் அப்துல் சத்தாருக்கு விற்பனை செய்ய, சத்தாரிடமிருந்து அது நாகபுரிக்குச் சென்று, கடைசீயில் மி கு ந் த சிரமப்பட்டு தான் அதை வாங்கி வந்ததாகவும் கூறி, அதற்கான சில குறிப்புகளையும் காட்டினன்—500 ரூபாய் கொடுத்துவிட்டேன்! பிறகு, நான் ஒரு பெரிய ஆராய்ச்சியாளரிடம் பேசும் போது, தேசிங்கு, குதிரைச் சவுக்கு உபயோகப்படுத்தும் வழக்கமே கிடையாது என்பதை நிரூபித்தார். எவ்வளவு ஏமாளியாகிவிட்டேன் என்று வருத்தப்பட்டேன். பயன்? பணம் பாழாயிற்று" என்று, வந்தவர் சோகத்துடன் கூறினர். "அனேகமாக அப்படித்தான்" — என்று கடைக்காரன் அவர் பேச்சை ஆமோதித்துவிட்டு, அருணகிரியார், ஆர்ச்சிபால்டு துரை, புரபுசர் இபுராகீம், வஸ்தாது வாலிகான்போன்ற பல பிரபல ஆராய்ச்சியாளர்கள் தந்த நற்சாட்சிப் பத்திரங்களைக் காட்டிவிட்டு, எந்தப் பொருளை வேண்டுமானலும் தகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு வாங்கிக்கொள்ளுங்கள், நானுக வலியுறுத்தப்போவதில்லை என்று உறுதி அளித்தான்.

வந்தவர், பல பொருள்களைப் பார்த்துக்கொண்டே இருந்தார்.

ஏதோ கணக்கு எழுதிக்கொண்டிருந்த கடைக்காரர், சிறிது நேரத்துக்குப் பிறகு, "நானுக எதையும் தங்களுக்குக் காட்டக் கூடாது என்று தான் தீர்மானமாக இருந்தேன் என்றுலும் இவ்வளவு நல்லவருக்குக் காட்டாமல் இருக்க என் மனம் இடம் தரவில்லை. நீங்கள் விலை கேட்க வேண்டாம்—பார்த்து ம கி ழ் ந் தா ல் போதும், இதோ" என்று கூறியபடி, ஒரு பேழையைத் திறந்து, அதற்குள்ளிருந்து ஒரு 'கழல்' எடுத்துக் காட்டினன்.

தங்கமல்ல! வெள்ளிகூட அல்ல!......ஆனல், தங்கமும் வெள்ளியும் கிடைக்கக்கூடும்; இந்தக் 'கழல்'......... கிடைக்கும் பொருள் அல்ல.........இது கட்டப்பொம்மன் அணிந்திருந்த வீரக் கழல்!! கும்பெனிக் கொடியவர்கள் என் உயிரை வேண்டுமானல் பறித்துக் கொள்ளட்டும் ஆனல், என் மக்கள் எனக்களித்த இந்த வீரக்கழலைமட்டும் அந்த நீசர்கள் கையில் சிக்கவிடமாட்டேன், என்று வீராவேசமாகப் பேசி; வெட்டாக் குளத்தில் வீசி எறிந்து விட்டார்; குளத்திலே பலகாலம் கழல் கிடந்திருக்கிறது— பிறகு குளம் வரண்டுபோய், மண்மேடு ஆகிவிட்டது, இப்போது, முப்பது வருஷத்துக்கு முன்பு சேவலூர் சாந்தியப்பன், அந்த இடத்தை வாங்கினர்—மாளிகை கட்ட! அதற்காகத் தோண்டும் வேலை நடந்தபோது, இந்தக் 'கழல்' ஒரு சிற்ருளிடம் கிடைத்தது; அவன் அதை ஒரு கள்ளுக் கடையில் கொடுத்துவிட்டான்—அந்தக் கடைக்காரர் வீட்டிலே தான் எனக்கு பெண் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது—இப்போது என்னிடம் இது கிடைத்தது— எனக்குக் கட்டப்பொம்மன் கழல்பற்றி சட்டிச்சாமியார் சொல்லித் தெரியும்—அவருடைய குருநாதர் பிட்டுக்கு மண் சுமந்தார் பெரிய கவி வாணர்'. அவர் கழலிடம் கழலுவேன் என்ருேர் அருமையான அகவல் தீட்டியிருந்தார்-இதோ பாருங்கள், இதுதான் அந்த அகவல்" என்று கூறி ஒரு ஏட்டுச் சுவடியைக்கொடுத்தான்.

வந்தவர், மிகுந்த அக்கரையுடன், ஏட்டுச்சுவடியைப் படித்தார்; ரசித்தார்.

கழலை, பழையபடி பேழையில் வைத்துவிட்டான், பண்டரி.

வேறு சில சாமான்களைப் பார்த்துக்கொண்டே வந்தவர், ஒரு பழைய பிடில் கண்டார், கையில் எடுத்தார், இப்படியும் அப்படியும் திருப்பித் திருப்பிப் பார்த்தார்; பண்டரி சிரித்துக்கொண்டே, "இது பழங்கால அபூர்வப் பொருள் அல்ல; இப்போது எங்கும் கிடைக்கும் பிடில்தான்-ஆனல், இந்த வாத்தியம், ஒரு பெரிய குரு எனக்கு" என்ருன்.

வந்தவர், "அது என்னப்பா, பிடில் உனக்குக் குரு என்கிருயே" என்று கேட்டார்.

"அது கிடக்கட்டும்-இது என்ன விலை பொறும்?— சொல்லும் பார்ப்போம்" என்று கடைக்காரன் கேட்டான்.

வந்தவர், சிரித்துக்கொண்டே, "இது மிகச் சாதாரணமான பிடில்; பழசுகூட.........பதினைந்து இருபது ரூபாய் தரலாம்......" என்ருர்.

"அருமை! அருமை! அப்படியே சொல்லிவிட்டீரே... முன்னூறு ரூபாய் கொடுத்தேன் இதற்கு என்பது எப்படி உமக்குத் தெரிந்தது'' என்று கடைக்காரர் கேட்டார்.

:'யாரய்யா 300 சொன்னா, பதினைந்து அல்லது இரு பது ரூபாய் தரலாம் என்று சொன்னேன்......'' என்று வந்தவர் விளக்கம் தந்தார்.

"அப்படியா? நான், பதினைந்து இருபது என்று பெருக்கல் கணக்கில் கூறுவதாக எண்ணிக்கொண் டேன். நீங்களாவது 15 ரூபாய் தரலாம் என்றீர்கள், நான் 10 ரூபாய்க்குமேல் ஒரு பைசாகூடத் தரமாட்டேன்– ஆனால், இதற்கு நான் கொடுத்தது 300—என்னை அவ்வ ளவு 'முட்டாள்' ஆக்கிவிட்டது இந்தப் பிடில். கேளுங்கள் என் ஏமாளித்தனத்தை.

என் கடைக்கு எதிரில் ஒருநாள் மாலை, ஒரு பிச்சைக் காரச் சிறுமி, பத்து வயது இருக்கும், இந்தச் சனியனை இழுத்தபடி ஏதோ பாடிக்கொண்டிருந்தாள் — ஒருவரும் காசு போடவில்லை—அந்தச் சிறுமி, நெடுநேரம் பார்த்து விட்டு, கடைக்குள் நுழைந்தாள்......''

"நுழைந்து, பிடிலை, விலைக்கு விற்றுவிட்டாளா?''

'300 ரூபாய் கொடுத்தா வாங்குவேன்............சொல் கிறேன் கேளும். அந்தச் சிறுமியின் முகம், என்னை உருக்கி விட்டது-கண்களிலே நீர்–"ஐயா! தர்மப் பிரபு!... என்று கூறிக்கொண்டே என் காலில் விழுந்தாள்...... நான் வழக்கப்படி, ச்சீ! கழுதே! காலை விடு! எட்டிப் போ! வெளியே போ! என்றெல்லாம் சொன்னேன். அந்தப் பெண், விடவில்லை, "ஐயா! ஒரு ஐந்து ரூபா கொடுங்கள் ஐயா! பிச்சை அல்ல அய்யா! கடனாகக் கொடு!...... என் தாயார் ஆபத்தான நிலையிலே இருக்கிறாள் ஐயா! மருந்து வாங்கப் பணம் வேணும்! மார்க்கட்டிலே பாடினேன், இரண்டே காலணா கிடைத்தது, சினிமா கொட்டகையிலே இரண்டு சாக்லேட் தான் போட்டார்கள், இங்கே நீங்களே பார்த்தீர்கள்... ஒரு காசும் கிடைக்கவில்லை...... இருட்டு வதற்குள்ளே எங்கம்மாவுக்கு மருந்து வாங்கியாகணும்... இல்லையானா...... ஐயோ! நினைத்தாலே பயமாயிருக்கையா ஐஞ்சு ரூபாயை, நான் தினம் தினம் கொஞ்சம் கொஞ்ச மாககொடுத்துவிடறேன்...நாளைக்குச் சந்தை !அங்கேயே ஒண்ணோ ரெண்டோ கிடைக்கும்... நான் நல்லாப் பாடு வேன்... ஆடுவே... ஐயா! ஒரு அஞ்சு ரூபா...!'' என்று கேட்டாள்; எனக்கு சிரிப்புதான் வந்தது, ஒரு பிச்சைக் காரப் பெண், அஞ்சு ரூபா கடன் கேட்கறதுன்னா, சிரிப்பு வராமலா இருக்கும்...''

"அதிலும் பத்து வயசுப் பொண்ணு!''

"ஆமாங்க............ சிறுசு.........தா! கழுதே! ஓடிப் போன்னு மிரட்டினேன்..........அந்தப் பெண், இந்தப் பிடிலைக் காட்டி, ஐயா! என்னை நம்பிக் கடன் கொடுக்காவிட்டாலும், இதோ இந்தப் பிடிலை, வைச்சுக் கிட்டு கொடுங்கள் — இதோபாருங்க முப்பது ரூபா இது விலை, நாங்க வாங்கரப்போ... இது என் பிழைப்புக்குத் தேவையானது........ கஞ்சி தண்ணிகிடைக் கறது, இதாலேதான் ....எங்கம்மாவைக் காப்பாத்த நான் கண் ணைப் பெயர்த்துக் கொடுக்கறது போல, இதைக் கொடுக் கறேன்...நான்அஞ்சி ரூப்பாயைத் திருப்பிக் கொடுத்ததும் இதைத் திருப்பிக் கொடுங்க என்று சொன்னாள்.''

"ஆயிரம் தோல்விகள் அடுக்கடுக்காக ஏற்படட்டும். அத்தனையையும் தழுவத் தயார். ஆனால் நன்றி கெட் டவன் செய்யும் நயவஞ்சகம்– அதைமட்டும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.''

—நெபோலியன்.

"பரவாயில்லையே...நியாயமான பேச்சுதான், அந்தக் குட்டி சொன்னது...''

"நியாயமோ இல்லையோ, எனக்கு அந்தப் பெண் ணுக்குத் தன் தாயாரிடம் எவ்வளவு அன்பு இருக்கிறது என்று எண்ணினபோது, ஐந்தென்ன, பத்துகூடத் தரத் தான்வேணும்னு தோன்றிவிட்டது. சரி என்று ஐந்து ரூபாய் கடன் கொடுத்தேன்...''

"பிடில்...?''

"நான், பரவாயில்லைன்னு சொல்லியும் கேட்காமல், பிடிலை அந்தப் பெண், கடனுக்கு ஈடாக என்னிடம் கொடுத்துவிட்டுப் போனாள்...''

"முன்னூறு கொடுத்தேன், என்றீரே''

"முழுவதும் கேட்டால்தானே தெரியும்...''

இது நடந்து, நாள் நாலு ஐந்து, ஆறு, கூட ஆகி விட்டது. பெண் வரவில்லை...சரி ஐந்து ரூபாய் போனது போலத்தான் என்று நான் எண்ணிக்கொண்டேன்... ஏழாவதுநாள், ஒருவர், பிரபு, மேதை போலத்தான் இருந் தார், என் கடைக்கு வந்தார், இப்போது நீங்கள் பார்ப்பது போலத்தான் பல சாமான்களைப் பார்த்துக் கொண்டே வந்தவர், இந்த 'பிடி'லைக் கண்டதும், திடுக்கிட்டுப்போனார் அவர் இதை எடுத்தபோது, உண்மையிலேயே அவ ருடைய கரம் நடுங்கிற்று, நானே பார்த்தேன்—மிகவும் சோகமான குரலில் அவர்

"ஐயா! இந்தப் பிடில் கிடைக்குமென்று நான் கனவு கூடக் காண முடியாதிருந்தது...எத்தனையோ நகரங்களில் தேடித் தேடி அலுத்துப்போனேன்...கடைசீயில் கடவுள் கண் திறந்தார்...இங்கே கண்டேன்...'' என்று கூறும் போது, அவருடைய கண்களில் நீர் தளும்பிற்று. நான் திகைத்துப் போனேன்.

அவர் அந்தப்'பிடிலை' வாசிக்கத் தொடங்கினார்— இனிமையாகவே இருந்தது. கடை, அதிலிருந்த சாமான் கள், நான், எதுவும் அவர் கண்களுக்குத் தெரியாதது போன்ற நிலையில் காணப்பட்டார்.

"ஐயா! இது என்ன அபூர்வம் வாய்ந்தது?'' என்று நான் அவரைக் கேட்டேன். அவர் சிரித்தார். சிரித்து விட்டு, கடைக்காரர்களல்லவா, தங்களிடம் உள்ள பொருளின் அருமைபற்றிக் கூறுவார்கள், நீர்—என்னைக் கேட்கிறீரே, என்றார்; நான் சிறிது வெட்கப்பட்டேன்.

"பரவாயில்லை; கோஹர்ஜான் தெரியுமா உனக்கு''

"கேள்விதான்...இந்துஸ்தானி பாடகி...பிரபலமான வளாம்...''

"......ளாம்......! ளாம்! பைத்யக்காரரய்யா நீர். பிர பலமான பாடகி, அவள் ஒருவள்தான் — கோஹர்ஜான் பாட்டு கேட்டால், கொலைகாரன்கூட சாது ஆகிவிடுவான் —பாம்பு படமெடுத்தாடும்—அந்த இனிமை, அந்த இசை, அந்தச் சொல்வளம்' இனி ஒருவருக்கு வருமா; தவமிருந் தாலும் வராது. கோஹர்ஜான் புகழ் எந்த அளவிற்குப் பரவிற்று தெரியுமா...கோஹர்ஜான் புடவை, கோஹர் ஜான் வளையல், கோர்ஹர்ஜான் பாஷன் என்று நாடே புகழ்ந்ததய்யா...அப்படிப்பட்ட கோஹர்ஜானுடைய சங் கீதச் கச்சேரியில் உபயோகமாகிக்கொண்டிருந்த 'பிடில்' இது...என் தகப்பனாருடையது......அவர் 'வித்வான்' தொழில் செய்தவரல்ல......வீரபுரியில் பெரிய வியாபாரி, கோஹரிடம் அவருக்கு ஏற்பட்ட 'காதல்' அவரை 'பிடில்' வித்வானாக்கிற்று — பராரியுமாக்கிற்று...பித்தனாகவுமாக்கி விட்டது—குடும்பத்தைவிட்டு எங்கெங்கோ அலைந்தார்... பஞ்சையாகவே மாண்டுபோனார். நான் என் மாமன் உதவியால் படித்து முன்னேறி, வியாபாரம் நடத்தி செல்வ வானானேன். பணம் சேர்ந்த பிறகு, நான் என் தகப்பனா

ரிடம் இருந்த இந்தப் 'பிடில்' எங்கே இருக்கும் என்று தேடித் தேடி அலைந்ததில்மட்டும் எனக்கு இரண்டாயிரம் செலவாகி இருக்கும். கடைசியில் இங்கே காண்கிறேன், என் தகப்பனாரின் கரத்தில் தவழ்ந்த இந்தப் பிடிலை, கோஹர்ஜான் பாராட்டிய பிடிலை, ஆயிரம் மேடைகளிலே ஆனந்தம் அளித்த அற்புதமான பிடிலை...ஐயா! இதற்கு என்ன விலை வேண்டுமானாலும் கேளுங்கள், கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்'' என்றார்.

''யார்? உமக்கு முன்பின் தெரியாதவர்...';

"ஆமாம், ஆனால், அவர் இந்தப் பிடிலை, மார்போடு அணைத்துக்கொண்டதையும், கண்களில் ஒத்திக்கொண்டதையும், நீங்கள் பார்த்திருந்தால்அல்லவா தெரியும்''

''சரி, பிறகு என்ன நடந்தது?''

''என்ன செய்வேன்! ஆயிரம் ரூபாய் என்று அடாவடியாகச் சொன்னாலும் அந்த ஆசாமி கொடுத்துவிடத் தயாராக இருந்தது தெரிந்தது. ஆனால், எப்படிக் கொடுப்பது? நாளைக்கே ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டு, அந்தப் பெண் 'பிடிலை'க் கேட்டால் என்ன சொல்வது? சும்மாவிட மாட்டாளே, பிச்சைக்காரி. தெருவில் கும்பலல்லவா சேர்ந்துவிடும்; பிறகு என் மதிப்பு, என் கடையின் மதிப்பு என்ன ஆவது. சங்கடம்; சிக்கல். அந்த ஆசாமியோ, நூறு ரூபாயிலிருந்து துவக்கி, ஆயிரம் வந்து நின்றார். நான் சொன்னேன், ஐயா! இது என்னுடையது அல்ல; வேறு ஒருவருடையது. நான் அவர்களைக் கேட்காமல் இதை விற்பது நியாயமல்ல. நீங்கள் அடுத்த வெள்ளிக் கிழமை வாருங்கள்; அதற்குள் நான், 'பிடில்' சொந்தக்காரரிடம் சொல்லி ஏற்பாடு செய்துவைக்கிறேன்...ஆயிரம் சம்மதம்தானே, என்று கேட்டேன்! என் தகப்பனார் எனக்குத் தரும் ஒரே ஆஸ்தி ஐயா இது! ஆயிரம் என்ன, மேலும் கேட்டாலும் தருவேன். எப்படியும் எனக்கு இதைத் தாங்கள் வாங்கித்தரவேண்டும்......தங்களுடைய உதவியை நான் என்றென்றும் மறக்கமாட்டேன்...எப்படியும் வாங்கித் தருவதாக 'சத்யம்' செய்து தந்தால்தான் என் மனம் நிம்மதி அடையும்—என்றார்; சரி என்றேன்; அடுத்த வெள்ளி வருவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றார்.

மறுநாள் அந்த பிச்சைக்காரி 5 ரூபாயுடன் வந்துசேர்ந்தாள்! ஐயா உங்கள் புண்ணியத்தாலே என் அம்மா பிழைத்துக்கொண்டாள்—சந்தையிலும் எனக்கு நிறைய வருமானம் கிடைத்தது—இதோ பணம்—பிடிலைக் கொடுத்துவிடுமய்யா...'' என்றாள். சீமான்களெல்லாம் வாக்குத்தவறும் இந்தக் காலத்தில், கேவலம் ஒரு பிச்சைக்காரப்பெண், சொன்ன சொல்லின்படி நடந்தது எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. நீ நல்ல பெண்ணம்மா! ஆண்டவன் உனக்கு நன்மை செய்வார். இப்போது உனக்கு ஒரு அதிர்ஷ்டம் அடிக்கப்போகிறது. இந்தப் பிடிலை, நூறு ரூபாய் விலைக்கு ஒருவரிடம் பேசி வைத்திருக்கிறேன் — பணம் தருகிறேன்—அதை வைத்துக்கொண்டு, நீயும் உன் தாயாரும் ஏதாவது சிறிய தொழில் செய்யலாம் என்றேன். அந்தப்பெண் ஆனந்தப்பட்டு என் காலில் விழுவாள் என்று நான் நினைத்துக்கொண்டேன். ஆனால் அந்தப் பெண்ணோ, "ஐயயோ! அதுமட்டும் வேண்டாம்......இந்தப் பிடில்தான் எங்களுக்கு 'சோறு'போடுவது, பகலெல்லாம் என் கையிலிருக்கும், இரவெல்லாம் என் 'தலைமாட்டில்' இருக்கும், இதை இழக்க என் மனம் துளியும் சம்மதிக்காது... என் தாயாரும் ஒப்புக்கொள்ளவே மாட்டாள் என்றாள்—என்னசெய்வது! அந்தஆசாமியோ ஆயிரம் தரச் சம்மதிக்கிறான்; மறுபடியும் வற்புறுத்தினேன். தன் தாயாரையழைத்து வந்தாள்; அவளிடம் அன்பாகப் பேசினேன்—கடைசியில் 300 ரூபாய்க்குச் சம்மதிக்கச் செய்து, எதற்கும் நல்லது என்று, ஒரு விற்பனைச் சீட்டு எழுதி, கையெழுத்துப் போடச் சொன்னேன் — தட்டுத்தடுமாறிக் கொண்டு நின்லை என்று போட்டாள்! பணத்தை எடுத்துக் கொண்டு சென்றாள்—சோகமாகத்தான்!

700 இலாபம், என்பதை எண்ணி எண்ணி நான் பூரித்துப் போனேன்!

செவ்வாய் ஓடிற்று—புதன் நகர்ந்தது—வியாழனை ஓட்டினேன்—வெள்ளிக்கிழமை, பிடிலை நன்றாகத் துடைத்து வைத்துவிட்டு, காத்துக்கொண் டிருந்தேன். ஆசாமியை ஆயிரத்தோடு விடுவதா, மேலும் பத்தோ இருபதோ கறப்பதா என்று வேறு யோசனை.

பேராசை! வெள்ளிக்கிழமை, இந்த நினைப்பிலேயே மூழ்கியதால், கடை வியாபாரத்தைக்கூடக் கவனிக்கவில்லை மனம் எதிலும் செல்லவில்லை. மணி பத்துதானே, இன்னும் ஒரு மணி நேரம் கழித்துத்தான் வருவார், என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். மணி இரண்டாயிற்று, என்ன இன்னும் வரக் காணோமே என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். மூன்று, நான்கு, ஆறு, எட்டு! கடை மூடவேண்டிய நேரம், ஆசாமி வரவேயில்லை!!

அடுத்த வெள்ளி... அதற்கு அடுத்த வெள்ளி...நாலு வெள்ளி சென்று விட்டது, ஆசாமி வரவேயில்லை! 700 இலாபம் கிடைக்குமென்ற பேராசை! பிச்சைக்காரியை ஏய்த்து, பெரும் இலாபம் சம்பாதிக்க நினைத்தேன், எனக்குப் பட்டைநாமம் சாத்தப்பட்டது.

பிச்சைக்காரப் பெண்ணைத் தேடித் தேடிப் பார்த்தேன் கிடைக்கவில்லை.

பேராசை பெருநஷ்டம் என்ற அரிய பாடத்தை எனக்கு அருமையாகக் கற்றுக் கொடுத்த குருநாதன் என்று இந்தப்'பிடிலை' நான் தினம் தினம் கும்பிட்டு வருகிறேன், என்று, கடைக்காரன்தான் ஏமாந்த விவரத்தைக் கூறினான்.

வந்தவர் சிரித்துவிட்டு, பைத்யக்காரத்தனம்! அந்த பிச்சைக்காரப்பெண்ணும் சீமான் வேடத்தில் வந்த எத்தனும் உன்னிடம் பறித்த பணத்தை வைத்துக் கொண்டு, எங்கே இந்நேரம், விருந்து சாப்பிடுகிறார்களோ! என்று கேலி பேசினான்.

"என்ன செய்வதய்யா! நான், கள்ளம் கபடம் அறியாதவன்—யார் எதைச் சொன்னாலும், அது பொய் என்று எனக்குத் தெரியா முன்னம், உண்மை என்று நம்பி விடுகிறேன்'' என்றான்.

"ஆமாம்! அது போலத்தான் கட்டபொம்மன் கழல் விஷயத்திலும் ஏமாந்து போயிருக்கிறீர்! இது கட்டபொம்மனுடையதுமல்ல, கழலுமல்ல! இது சிலம்பு! மாரி கோயில் பூஜாரிகளிடம் இருப்பது! இதை யாரோ, உன் தலையிலே கட்டிவிட்டார்கள்! ஏட்டுப்பிரதி வேறு, காட்டுகிறீர்! எவ்வளவு கொடுத்து விட்டீரோ; ஏமாளியாகிவிட்டிருப்பீர் என்று அவர் கூறினார்.

"இப்படித்தான் ஐயா! பலர் ஏமாளியாகிறார்கள் — சிலர் எப்போதும் சர்வ ஜாக்ரதையாக இருப்பார்கள்." என்று கடைக்காரன் கூறிவிட்டு இவரிடம் வியாபாரம் ஏதும் செய்யமுடியாதுஎன்று தீர்மானித்துக்கொண்டான்.

''எதற்கும் அந்தப் 'பிடிலை' வாங்கினதில் உனக்கு ஏற்பட்ட நஷ்டத்தை நானும்

தான் பிறந்த நாட்டின் கண்
தனிப்பற்றும் உணர்வுமிலான்
ஏன்பிறந்தான்? விண்கொடியோன்?
எனுமிழிவே எய்துகிற்பான்
தேன் சிறந்த நந்தமிழும்
செழுஞ் சமயம் கலைகளுமே
வான் சிறந்த மாட்சியவென்
றுணராதான் மடவோனே!

—ஒளி.

பங்கு போட்டுக் கொள்கிறேன். ஏதாவது ஒரு விலை சொல்லிக் கொடுமய்யா'' என்று அவர் கேட்டார்; கடைக்காரன் திகைத்துப்போனான்.

“உங்களுக்கு எதற்காக வீண்நஷ்டம்? நான் ஏமாளி, அதன் பலனை நான் அனுபவித்துக்கொள்ள வேண்டியது தான்முறை.''என்று கடைக்காரன் கூற, “அது சரிதான், எனினும் எனக்கு இந்தப் பிடில்' கச்சிதமானதாகத் தெரிகிறது. ஆகையால், ஐம்பது ரூபாய் கொடுக்கிறேன்...'' என்று பேரம் பேசலானார். “நான் கொடுத்தது 300...'' என்று வியாபாரி தன் தொழிலைத் துவக்கினான். “கொடுத்தது என்று கூறுதீர்... ஏமாந்து கொடுத்தது என்று சொல்லும்; நான் இதற்கு ஐம்பதுதான் தரமுடியும்... வேண்டுமானால், உம்முடைய கட்டப் பொம்மன் கதையையும் நம்பித் தொலைக்கிறேன், அந்தக் கழலையும் சேர்த்து நூறு ரூபாய்... சம்மதமா?'' என்று கேட்டார் வந்தவர். கடைக்காரருக்குப் பலத்த சந்தேகம் வந்து விட்டது. ஒருவேளை, உண்மையிலேயே, பிடில் கோஹர்ஜான் கச்சேரிக்கு உபயோகப்பட்டதுதானோ? என்று யோசிக்கலானார். செச்சே! இருக்காது. இந்தக் 'கழல்' கட்டப் பொம்மனுடையது என்பதை இவர் நம்பிவிட்டாரே, அது போலத்தான் இதுவும். இதைத்தான் நாம் குதிரை வண்டி குப்புசாமியிடம் பதினைலணவுக்கு வாங்கினோமே! என்று தனக்குள் கூறிக்கொண்டு, கழலையும் பிடிலையும், நூறு ரூபாய்க்கு விற்றுவிட்டான். கனவான், இரண்டையும் எடுத்துக் கொண்டு போக, வெளியே கிளம்பினர் “பைத்தியக்காரன்!'' என்று மனதுக்குள்ளாகவே கடைக்காரன் கேலி செய்தான்.

தில்லையும் அவள் மகளும் சுடச் சுட இட்டிலி தோசை சுட்டு விற்றுக்கொண்டிருந்தார்கள் பக்கத்து ஊரில்.

சுருள் மீசை சுந்தரம், தன் நண்பனிடம் தன் சமர்த்தைச் சொல்லிக் கொண்டிருந்தான்-

“தெரியுமாடா! கோஹர் ஜான் பிடில் என்று ஒரு 'டுப்' விட்டேன்; கடைக்காரன் நம்பி விட்டான்; பிறகு நம்ம 'பொடிசை' அனுப்பினேன்; தில்லையும் போனாள்; 3 நூறு தட்டிக்கொண்டு வந்தோம் என்றான்.

'பைத்தியக்காரன்!' என்று அவன் கடைக்காரனைக் கேலி செய்தான்.

“பைத்தியக்காரன்!'' என்று கடைக்காரனைக் கேலி பேசியபடி, கழலை உடைத்து அதற்குள்ளே பதுக்கி வைக்கப்பட்டிருந்த வைரக்கற்களை எடுத்து மகிழ்ந்தான் கனவான்.

அவனுடைய மனம் இரண்டாண்டுகளுக்கு முன்பு நடை பெற்ற சம்பவத்திற்குச் சென்றது.

புதுவையிலிருந்து 'முத்துமாரி' ஊர்வலம், கிளம்பி, தடபுடலாக வந்துகொண்டிருந்தது. மரியம்மை திருவிழாவைவிட, இது கனஜோராக இருக்கவேண்டுமென்று 'இந்து' தலைவர்கள் திட்டமிட்டனர்; எனவே திருவிழா கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

'முத்துமாரி' புதுவையிலிருந்து புறப்பாடாகி, 'இந்தியா' எல்லையில் உள்ள இலுப்பைத் தோப்பிலே, 'வன போஜனம்' செய்வதற்கான, தனி அனுமதியை 'இந்து' பணக்காரர்கள், கவர்னரிடம் பெற்றிருந்தனர். எதிலே குறுக்கிட்டாலும் பரவாயில்லை, எதற்குத் தடை விதித்தாலும் சங்கடமில்லை ஆனால் மதசம்பந்தமான காரியத்துக்கு மட்டும் தடை விதிப்பது மகா ஆபத்து என்பது 'துரை' மார்களுக்குத் தெரியும்; ஆகவே, தனி அனுமதி கொடுத்தனர்.

'முத்துமாரி'யை வர்ணித்துக் கொண்டு பூஜாரிகள் சிலம்பம் போட்டுக்கொண்டு வந்தனர். எல்லையை நெருங்கிக்கொண்டிருந்தது ஊர்வலம் — வழி நெடுக பக்தர்கள் தீபாராதனை செய்ததால், தாமதம்.

சுங்க இலாகா அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல், அவர்களைத் திடுக்கிடவைத்தது. விலையுயர்ந்த வைரங்களைக் கள்ளத்தனமாகக் கொண்டுபோய்விட, முத்துமாரி பண்டிகையைச் சில பக்காப் பேர்வழிகள் பயன்படுத்துகிறார்கள் என்பது அவர்களுக்குக் கிடைத்த தகவல். என்ன செய்வது?

மாரியம்மன் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி, சகலரையும் சோதனை போடவேண்டும்—மாரியம்மன் சிலையைக்கூட! செய்வதா? செய்தால் விஷயமறியாத மக்கள் வெகுண்டோடு முன்னால் இரத்தக் களரியாகிவிடக் கூடுமே, என்ன செய்வது? இது அவர்களின் திகில். மத சம்பந்தமான விஷயத்தில் குறுக்கிடுவது ஆபத்து என்பதும் அவர்கள் அறியாததல்ல.

“அதைப் பார்த்தால், அயோக்கியர்கள் தப்பித்துக் கொள்வார்களே, அதற்கென்ன செய்வது?'' என்று கேட்கிறார் ஒரு அதிகாரி.

“அதற்காக, மாரிதிருவிழாவில் நாம் சோதனை நடத்தினால், மக்கள் சீறுவார்களே—கல்லால் அடிப்பார்கள்—கலகம் கிளம்பும்—பிறகு நாம் துப்பாக்கி தூக்கவேண்டும்-மறுநாள் பத்திரிக்கைகளில், புதுவை எல்லையில் தொல்லை—மாரி திருவிழாவுக்குத் தடை—என்றெல்லாம் தலைப்புகள் வெளியிடுவார்கள். வீணான அபவாதம்'' என்றார் மற்றோர் அதிகாரி.

“மகா பாபம் கூடத்தான் சார்! இந்த முத்துமாரி மகா சக்தி வாய்ந்த தெய்வம்—பாபம் செய்பவர்கள், மூக்கிலும் வாயிலும் இரத்தம் கக்கி சாவார்களாம்'' என்று திகிலுடன் பேசினர் இன்னொருவர்;

“இந்தக் காலத்திலே, யார் சார்! இப்படிப்பட்ட கட்டு கதைகளை நம்புவார்கள்'' என்று வேறோர் அதிகாரி பேசினர், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு. பெரிய அதிகாரி 'சோதனை'யிடுவது அவ்வளவு சரியாகாது - தகுந்த ஆதாரம் கிடைத்தாக வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

துணிந்த பேர்வழியாகத் தென்பட்டவர், “சார்! நான் மாறு வேடமிட்டுக் கொண்டு மாரி திருவிழா ஊர்வலத்தில் சென்று துப்பு அறிகிறேன்-நீங்கள் நாலு பேர், சாதாரண உடையில் வாருங்கள். துப்புக் கிடைத்ததும் தெரிவிக்கிறேன்—கள்ளனைக் கையும் பிடியுமாகப் பிடித்திட ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறினர். அதுபோலவே, அவர் 'பூஜாரி'யாகி, மிக அற்புதமாகப் பாடி, 'சிலம்பு' போட்டார். அவருடன் போட்டியிடுபவர் போல மிகத் திறமையாக மற்றோர் பூஜாரி 'சிலம்பு' போட்டார். அந்த இரு பூஜாரிகளின் 'போட்டா போட்டி' ஆட்டத்தை மற்றப் பூஜாரிகள் வெகுவாக இரசித்தனர்.

வாங்கி வைச்ச, வைரம் எங்கே?

வாயை விட்டுச் சொல்லிடம்மா வகையான படையல் தாரேன் முத்துமாரியம்மா!

இல்லையானு, வளையம் போட்டு இழுத்துப் போவேன், சொன்னேன் மாரியம்மா!

அமெரிக்கா, பிரிட்டிஷ் நாடுகளில் வெளியாகும் தங்களுக்குத் தேவையான எந்தப் பத்திரிகைகளுக்கும் தயவு செய்து சந்தா விவரத்திற்கும் மற்ற விபரங்களுக்கும் உடனே எழுதுங்கள்.

அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுகள்:

SALEM ADVERTISING SERVICE,
GUGAI, SALEM 1. South India.

என்று பூஜாரி வேடமிட்ட அதிகாரி சொல்லிப் பார்த்தார்; போட்டியிட்ட பூஜாரியோ, அதைக் கவனிக்கவில்லை; ஆவேசம் வந்தவன் போல, ஆடினன், பாடினன்.

அந்தப் பூஜாரிதான், இந்தக் கனவான்!

அவன் கைச் சிலம்பிலேதான் வைரம்!!

பூசாரி வேடமிட்டு, துப்பு அறிய வந்த அதிகாரியின் சந்தேகம் முழுவதும், 'கரகம்' ஆடியவன் மீது சென்றது. அவன் வாய்விட்டுப் பாடவும் செய்தான்.

வைரமடி, வைரம்;
வகையான வைரம்,
வாங்கி வைத்தா கோடி கோடி
இலாபம் தரும் வைரம்!

இந்தப் பாட்டைக் கேட்டதும், துப்பறிய வந்தவருக்கு, சந்தேகம் பலமாகிவிட்டது—உடனே 'பூஜாரி' வேலையை நிறுத்திக்கொண்டான், கூவினன், அதிகாரிகள் சூழ்ந்துகொண்டானர், சோதனை ஆரம்பமாகிவிட்டது, மக்கள் சபிக்கத் தொடங்கினர்.

அதிகாரியுடன் போட்டியிட்ட 'பூஜாரி' அப்போதுதான், தன் கைச்சிலம்பை, பக்கத்திலிருந்த இன்னொரு பூஜாரியிடம் கொடுத்தான். அவனும் காரணம் கேட்காமல் அதை வாங்கிக்கொண்டான், மீண்டும் அதைத் தன்னிடம் தரச்சொன்னன்; மீண்டும் அவனிடம் தந்தார்; இப்படி 'சிலம்பு' மாற்றும் விளையாட்டு நடந்துகொடிருந்தது.

அந்தப் 'பூஜாரி' சோதனை போடுவது தெரிந்ததும், நடுநடுங்கிப்போனன்—காரணம், அவன் மடியில் ஒரு சிறு பொட்டலம் அபின்.

மெள்ள நழுவினன்.

சோதனைபோடுவதால் சீற்றமடைந்த மக்கள் குழப்பம் விளைவித்தனர், அதனல் அவன் மெள்ள நழுவ முடிந்தது,

தன் 'சிலம்பு' அவனிடம் சிக்கியதால் அவனை விடாமல் துரத்தலானன், அதிகாரியிடம் போட்டியிட்ட பூஜாரி; பிடிபட்டான்; மடியில் எலுமிச்சமளவு தங்கமிருந்தது; வைரம் யாரிடமும் இல்லை! பிடிபட்டவன், அதிகாரியைத் தாக்கிவிட்டு ஓட எத்தனித்தான். எனவே 'ஓராண்டு' கடினக்காவல் கிடைத்தது. சிறையிலே அவனுக்கு, வெட்கமாகவும் இருந்தது, வேதனையாகவுமிருந்தது, எவ்வளவோ சிரமப்பட்டு, 'வைரம்' எடுத்துவர, பகல் வேடம்போட்டுக்கூடப்பார்த்தோம் கடைசியில் அது வேறொருவன் கையிலல்லவா போய்விட்டது' இப்படி ஏமாந்து போனேமே, என்று எண்ணி வேதனைப்பட்டான்.

"அண்ணேன்! இங்கேயா வந்துவிட்டே?" என்று கேட்டான், புதிதாகக் கொட்டடிக்கு வந்தவன்.

"அடப்பாவி, நீயா?" என்று கேட்டான் பழைய ஆள்.

"பூஜாரி வேலைக்கு இதுதானு பலன் கிடைச்சுது. அண்ணேன்! உன்னை நான் நிஜமாகவே பூஜாரி என்று எண்ணிக் கொண்டேன். தங்கமல்ல, கடத்திக்கொண்டு வந்தயாம், நீ —பேப்பர்காரன் போட்டிருந்தானுமே" என்று விசாரித்தான் புதியவன்.

"அதெல்லாம் கிடக்கட்டும், சிலம்பு உன்னிடம் கை மாறி வந்து விட்டதே, அதை என்னடா செய்தே? வீட்டிலே இருக்கா, ஜாக்ரதையா?" என்று விசாரித்தான் அவன்.

"என் கஷ்டத்துக்கு அது ஒரு நாள் உபயோகப்பட்டுது. பழையசாமான்கடைபண்டரிக்கு விற்றுவிட்டேன்" என்று புதியவன்சொன்னபோது, அவன் மூர்ச்சையானன் பிறகு தெளிந்தெழுந்து, பண்டரி கடை பற்றிய சேதிகளைக் கேட்டறிந்து கொண்டான்.

அவன்தான் பிறகு 'கனவான்' வேடமிட்டு, கடை சென்ருன்.

அவனிடம் சிறிது இலாபம் தட்டலாம் என்று, சிலம்பைக் காட்டி, இது கட்டப்பொம்மன் கழல் என்று கூறிக்கயிறு திரித்தான் பண்டரி. கனவானுகவே நடித்து, 'கழலை' வாங்கினன் கள்ளன், உடைத்தெடுத்தான், அவ்வளவும் அருமையான வைரம்!

பரவாயில்லை, பட்டபாடு வீணுகவில்லை. பண்டரியிடம் கனகச்சிதமாக நடித்ததால் அவன் துளியும் சந்தேகப் படவில்லை, என்றெண்ணி மகிழ்ந்தான் கள்ளன்.

திருட்டுச் சாமான்களை வாங்கும் திரிபுரதாஸ் கடைக்குச் சென்ருன்—வைரங்களைக் காட்டினன்.

இதோ இப்படி, பைட்டோ — என்று கூறிவிட்டு, அவனுக்குத் தெரியாமல், போலீசை வரவழைத்து, கள்ளனை அவர்களிடம் ஒப்படைத்து, "இதோ, இமிடேஷனை, வைரம் என்று என் தலையிலே கட்டவந்தான், இந்த திருடன்" என்று கூறி, அவன் கொடுத்த பொட்டலத்தை அல்ல, வேறொரு பொட்டலத்தைக் காட்டினன் சேட்!

மூன்று வருடம் கடுங்காவல் கிடைத்தது, கனவான் வேடமிட்ட கள்ளனுக்கு.

சேட் திரிபுரதாஸ், மிகச் சிறந்த தர்மிஷ்டர்—சீமான்—கனவான்—என்று பாராட்டிப் பேசி, ஜில்லா கலெக்டர், சேட் திரிபுரதாஸ், 'தர்ம சபா'வைத் திறந்து வைத்தார்.

வைபவத்திற்கு விஜயம் செய்த, தனதனவான்களெல்லாம், சேட்ஜியைப் பாராட்டினர்.

'பாரத் சேவா' பத்திரிகையில், பரோபகாரி சேட் திரிபுரதாஸின் படம் வெளியிடப் பட்டது. கனவான் என்ற பெயருக்கு உண்மையான இலக்கணமாக சேட்ஜீ விளங்குகிருர், என்று ஆசிரியர் குறிப்பும் எழுதியிருந்தார்.

மனத்திற் கொள்க

உலகத்தே வாழ்கின்ற
மக்க ளுள்ளே
உயர்குலமும் தாழ்குலமும்
இல்லை; யாரும்
கலகம் செய்திடவேண்டாம்
இணைந்து வாழ்ந்து
காசினியில் அன்புநெறி
வளர்த்தல்வேண்டும்.

இன்னலுனை வந்துற்ற
போதும் உள்ளம்
எள்ளளவும் சளைக்காமல்
எதிர்த்து நின்று
சென்னியினைச் சேவலைப்போல்
நிமிர்த்தி இந்தச்
செகத்தினிலே வாழ்வெய்திச்
சிறக்க வேண்டும்.

பொறுத்திருக்குங் காலத்தே
அமைதி வேண்டும்
பொன்னுன வாய்ப்பணுகும்
போது, சற்றும்
சறுக்காமல் செய்துமுடித்
திடுதல் வேண்டும்
தவருதே! இதையுன்றன்
மனத்திற் கொள்க.

கல்கத்தா பாதையில்.....!

எங்கள் அறுவரையும் தாங்கி கார் காசியிலிருந்து கல்கத்தா நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. இரவு மணி பத்தாகிவிட்டது. கல்கத்தா இன்னும் எழுபது மைல் தொலைவில் உள்ளது. பர்துவான் என்னும் நகரை அடைந்திருந்தோம். நகரை நெருங்க நெருங்க சிறியதும் பெரியதுமாகப் பல தொழிற்சாலைகள் ஒளிவீசிக்கொண்டிருந்தன. சிறிது முன்பிருந்தே காரின் அச்சுகளை இயக்கும் பகுதியிலிருந்து (Differential) இரைச்சல் கேட்டுக்கொண்டே இருந்தது. காரின் மிக முக்கியமான பாகமாகையால் அதை உடனடியாகக் கவனிப்பது நல்லது என்று கருதி, முதலில் தென்பட்ட ஒரு பெட்ரோல் கடையின் விளக்கொளியில் காரை நிறுத்தி பரிசோதித்தோம். அச்சுகளை வேகமாகச் சுழற்றிக்கொண்டிருக்கும் பல்சக்கரங்கள் பொருந்தியுள்ள பெட்டியில் நிறைந்து தளும்பிக் கொண்டிருக்கவேண்டிய எண்ணெய் பெரிதும் ஒழுகி விட்டிருந்தது. அதே நிலையில் வண்டிமேலும் செல்லுவது ஆபத்தானதாகும் என்பதையறிந்ததும், கடையில் அந்தப் பெட்டிக்கு உரிய எண்ணெய் கிடைக்குமா என்று விசாரித்தேன். எண்ணெய் கிடைத்தது. ஆனால் எண்ணெயைப் பெட்டிக்குள் செலுத்துவதற்குத் தேவையான விசேஷ சாதனங்கள் கிடைக்கவில்லை. எப்படியும் எண்ணெயைச் செலுத்திவிடுவது என்ற முயற்சியில் எனது நண்பர் ஈரோடு தாமன் அவர்கள் ஈடுபட்டார்கள். கடைக்காரரும் துணைக்கு ஒருவரை அளித்தார். இரப்பர் குழாய் ஒன்றுடன் நண்பரும், அவரும் வண்டிக்கடியில் சென்று மறைந்தனர். எண்ணெயை உறிஞ்சும் சத்தம்வர ஆரம்பித்தது. அதற்குள் கடைக்காரர் குறைந்தது அரைமணி நேரமாவது ஆகும், உள்ளேவந்து அமருங்கள் என்றழைத்தார். உள்ளே சென்று அமர்ந்தேன். எங்கிருந்து வருகிறோம் என்பதை விசாரிக்க ஆரம்பித்தார். சென்னையிலிருந்து புறப்பட்டு பெல்காம், புனா, பம்பாய், மவ், இந்தூர், ஆக்ரா, மத்ரா, டில்லி, ஆஜ்மீர், லக்னோ, கான்பூர், அலகாபாத், காசி ஆகிய ஊர்களைக் கடந்து கல்கத்தா நோக்கிச் செல்லுகிறோம் என்பதைக் கேட்டு மிகவும் வியப்படைந்தார். பின்னர், டில்லியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொழிற் கண்காட்சியைபற்றிக் கேட்டுக்கொண்டு வந்தார். குறிப்பாக கிராமங்க் ஷாப்ட் கிரைண்டர் என்னும், மோட்டார்கார் எஞ்சினில் உள்ள மிக முக்கிய உறுப்பைச் செப்பனிட்டுப் புதுப்பிக்கும்இயந்திரத்தைப்பற்றி விசாரித்தார், டென்மார்க் பகுதியில் உள்ள அந்த இயந்திரத்திற்கும், செக்கோஸ்லோவாக்கியா பகுதியில் உள்ளதற்கும் இடையே உள்ள தாரதம்மியத்தைப்பற்றிக் கேட்டார். நான் அந்த அளவு தொழில் நுணுக்க அறிவுபடைத்தவன் அல்ல என்பதைத் தெளிவாக ஒப்புக்கொண்டேன் அதற்குப் பின் அவரிடம் நடத்திய உரையாடலில் வெளிப்பட்ட சில விஷயங்கள் என்னுடைய உள்ளத்தில் உண்டாக்கிய உணர்ச்சிகளின் தன்மையை எப்படி சொல்வது என்றே தெரியவில்லை. கூடுமானவரை எங்களிருவருக்குமிடையே நிகழ்ந்த உரையாடலை அப்படியே கீழே தருகிறேன்.

நான்:- நாங்கள் எவ்வளவு தொலைவில் இருந்து கண்காட்சியைக் காணவந்திருக்கிறோம். நீங்கள் இவ்வளவு அருகில் இருந்துகொண்டு பார்க்காமலிருக்கிறீர்களே.

அவர்:- எனக்கு இதுவரை ஓய்வு கிடைக்கவில்லை. இன்னும் இரண்டொரு தினங்களில் செல்ல இருக்கிறேன் எனக்கு அங்கு வியாபாரம் ஒன்று முடிக்கவேணடியிருக்கிறது.

நான்:- டில்லி நகரிலா, அல்லது கண்காட்சியிலா?

அவர்:- கண்காட்சியில்தான். நான் ஆரம்பிக்க இருக்கும் சிறு தொழில் ஒன்றுக்கு இயந்திரம் வாங்க வேண்டும். அதுபற்றி ஏற்கனவே கடிதப் போக்குவரத்துகள் நடைபெற்றிருக்கின்றன.

நான்:- நீங்கள் ஆரம்பிக்கப் போகும் தொழில் என்னவென்று நான் அறியலாமா?

அவர்:- விளக்கமாகவே அறியலாம் என்று கூறிக்கொண்டே எழுந்து சென்று இரண்டு பைல்களை (கடிதப் போக்குவரத்து கற்றைகளை) எடுத்து வந்து என்னெதிரே போட்டார். நான் இந்தப் பெட்ரோல் கடையோடுகூட நான்கு பஸ்கள் வைத்து நடத்திவருகிறேன். ஆனால் கடந்தபல நாட்களாவே இயந்திர தொழிற்சாலை ஒன்று தனியாக நடத்தவேண்டுமென ஆவல் என் உள்ளத்தில் வளர்ந்து வந்தது. அந்த ஆவலைக் கிளப்பிவிட்டது இதுதான்,என்றுகூறிஒரு 'பைலை' திறந்து ஒரு அச்சடிக்கப்பட்ட காகிதத்தைக் காண்பித்துப் படிக்கச்

சம்பத்

சொன்னார். அதில், "அகதிகள் புனர் வாழ்வுக்காக இந்திய சர்க்கார் காட்டும் அக்கரையும், மேற்கொள்ளும் திட்டங்களும் யாவரும் அறிந்ததே. அவற்றில் ஒன்று அகதிகள் புனர் வாழ்வுக்காக சிறிய நடுத்தர, பெரிய தொழில்களைத் தனிப்பட்டவர் ஏற்படுத்தி நடத்துவதற்குச் சர்க்கார் ஊக்கமளிப்பதும் ஒன்றாகும். அதன்படி உத்திரப் பிரதேசம், பீஹார், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய பகுதிகளில் உள்ளவர்களில் எவர் வேண்டுமானாலும் தொழில் திட்டம் ஒன்று தயாரித்துச் சர்க்காருக்கு அனுப்பினால் அதை சர்க்கார் பரிசீலிக்கும். திட்டம் சரியானது எனப்பட்டால், தொழிற் சாலைக்கு வேண்டிய இயந்திரங்களை வெளி நாடுகளிலிருந்து தாமதமேதுமின்றி சகல சலுகைகளுடனும் வரவழைத்துக் கொடுப்பதற்கும், தொழிற் சாலைகளுக்கான இடத்தையும், கட்டிடத்தையும் சர்க்கார் செலவிலேயே ஏற்படுத்தித் தந்துவிட்டு, அவைகளுக்காகும் செலவினத்தை நான்கு சதவிகித வட்டி போட்டு ஐந்து ஆண்டுகளில் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கும் சர்க்கார் சித்தமாயுள்ளது. அப்படி ஆரம்பிக்கப்படும் திட்டத்தில் கூடுமான வரை அகதிகளையே வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும்; எனக் கண்டிருந்தது. மத்திய சர்க்காரின் சுற்றறிக்கைகளில் அது ஒன்றாகும். அதைப் படித்ததும் இந்திய சர்க்காரின் மனோபாவத்தைப்பற்றி ஏற்கனவே நன்கு அறிந்துள்ள எனக்கே ஆத்திரம் வந்தது. அகதிகளுக்காக என்ற பெயர் ஒருபுறம் அதை ஒட்டி உத்திரப்பிரதேசம், பீஹார், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களுக்கு மட்டும் பிரத்தியேகமாகத் தொழில் வளர்ச்சித் திட்டம் மற்றோர்புறம். எத்தகைய ஓரவஞ்சனை என்றெண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போது மீண்டும் அவரது குரல் ஒலித்தது.

கேள்வி:- பழையகாலத்தைப் போல இக்காலத்தில் முனிவர்கள் இல்லாது போனது எதனால்?

பதில்:- இக்காலத்தில் க்ஷவர பிளேடுகள் மலிவான விலையில் கிடைக்கும் நிலை ஏற்பட்டதால்.

அவர்:- இந்த அறிக்கையைப் பார்த்ததிலிருந்து தான் தொழில் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் உருவாகி வந்தது. இடமும் கட்டிடமும் நானே ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன், இயந்திரங்களை வாங்கித்தர முடியுமா என்று சர்க்காருக்கு எழுதிக் கேட்டேன். சம்மதமளித்து, மேலும் விபரம் கேட்டு சர்க்காரிடமிருந்து வந்த கடிதம் இதோ என்று கூறி அந்தக் கடிதத்தையும் காண்பித்தார்.

நான்:- தொழில் எது சம்மந்தப்பட்டது என்பதை தெரிவிக்கவில்லையே?

அவர்:- அதைப்பற்றிச் சிந்தித்தேன். இந்த பர்துவானில் இல்லாத ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று பல நாட்கள் மூளையைக் குழப்பிக் கொண்டேன். கடைசியாக மோட்டார் லாரிகள், டிரக்குகள், டிராக்டர்கள் ஆகியவைகளின் பழைய எஞ்சின்களை புதுப்பித்துக் கொடுக்கும் [Engine Reconditioning] தொழிலே சிறந்த தொழில் எனக் கண்டேன். அதற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுவது, முன்பு தங்களிடம் கேட்டேனே, கிராங்க் ஷாப்ட் கிரைண்டர், அதுதான். டென்மார்க் நாட்டில் செய்ததை வாங்கலாமா, செக் நாட்டில் செய்ததை வாங்கலாமா என்று யோசித்துக் கொண்

டிருக்கிறேன். முடிவு செய்ததும் சர்க்காருக்கு எழுதுவேன். உடனே இயந்திரங்கள் கிடைத்துவிடும் என்று கூறி இன்னொரு பைலைத் திறந்து காட்டினார். அதில் இவருக்கும், டென்மார்க், செக்கம்பனிகளுக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துகள் இருந்தன. பின்னர் கனவுலகத்தில் சஞ்சரிப்பவரைப் போல் வெறித்தபடி பேசிக்கொண்டிருந்தார்,) தாமோதர நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அதன் மூலம் இந்தியாவிலேயே மிகவும் சரசமான விலைக்கு, அதாவது யூனிட் கரண்ட் சில தம்பிடிகள் விகிதத்தில் பீஹாரிலும், வங்கத்திலும் உள்ளோருக்குக் கிடைக்கும். மேலும் ஐந்தாண்டு திட்டப்படி ஏற்படயிருக்கும் பிரம்மாண்டமான இரும்புத் தொழிற்சாலை இங்கிருந்து முப்பது மைல் தொலைவிலுள்ள துர்க்காபூரில்தான் ஏற்படப் போகிறது. அதை ஒட்டி இப்பகுதியில் ஏராளமான லாரிகளும், டிரக்குகளும், டிராக்டர்களும் நடமாடும். எனக்கு நிறைய வேலை கிடைத்துக் கொண்டிருக்கும். வேலைசெய்ய ஆட்கள் இத்தனை பேர் தேவைப்படும். அவர்களுக்குச் சம்பளம் இவ்வளவு இருக்கும். எனக்கு நிர்வாக, மின்சார செலவு இவ்வளவாகும். லாபம் குறைந்தது இவ்வளவாவது கிடைக்கும். சர்க்கார் வாங்கிக் கொடுக்கும் இயந்திரங்களின் கிரயமான சில இலட்ச ரூபாய்களைத் திருப்பித் தர ஐந்து வருஷங்களல்லவா தவணை அளித்திருக்கிறார்கள். ஆறேமாதத்தில் அந்தப் பணத்தை வீசி எறிந்துவிட்டு இயந்திரங்களைச் சொந்தமாக்கிக்கொள்ள முடியும் என்றால்.

நான்:- (ஈனசுரத்தில்) ஆனால் அகதிகளைத் தவிர வேறு யாரையும் வேலையில் வைத்துக் கொள்ளமுடியாதல்லவா?

அவர்:- அகதிகள்? நானும் அகதிதான். நீங்களும் அகதிதான். இங்கு நினைத்தமாத்திரத்தில் யார் வேண்டுமானாலும் அகதிகளாய்விட முடியும் என்று கூறி பலமாகச் சிரிக்க ஆரம்பித்தார்.

பார்த்தால் ஒருகணம்பைத்தியம் பிடித்தவரைப்போல் காணப்பட்டாரே தவிர, மேஜையின்மீதிருந்து 'பைல்'கள் அவர் எண்ணிக் களிப்பவை அனைத்தும் நடக்க இருப்பவை என்பதைத் தெளிவாக உணர்த்திக் கொண்டிருந்தன.

அவர்:- இன்னும் மூன்றேமாதங்கள், சார்! வந்துபாருங்கள், இதோ பின்புறமுள்ள கட்டிடத்தில்தொழிற்சாலை நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

நான் சிந்தனையில் ஆழ்ந்து விட்டேன். என் நாட்டவர்கள் கையில் பணம் வைத்துக் கொண்டு ஏதேனும் தொழில் தொடங்க எண்ணுவதே அரிது எண்ணி முயன்றாலும், பம்பாய்க்கும் டில்லிக்கும் பல முறை சென்று மீளுவதும், கண்டவனிடம் பல்லைக்காட்டிப் பணம் கொடுத்து வருவதும்தான் மிஞ்சுகிறதேயொழிய, காரியம் கைகூடுவதில்லை. அங்கு உத்திரப்பிரதேசம், பீஹார், வங்கம் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் உள்ளோரை புதிய தொழில்களை தொடங்குங்கள், தொடங்குங்கள் என்று "அகில இந்திய" சர்க்கார் வேண்டுகோள் விடுகிறது. பொருள் உதவுகிறது. ஊக்கமளிக்கிறது.

'எண்ணெயை உட்செலுத்திவிட்டோம்' என்ற குரல் கேட்டு, சிந்தனுலோகத்திலிருந்து மீண்டேன். எண்ணெய்க்குரிய விலையைத் தந்துவிட்டுத் திரும்பினேன். துணைக்கு ஆள் அனுப்பியதற்கு 2 ரூபாய்கள் என்றார் கடைக்காரர். பேரம் பேசுவதில் நிபுணரான ஒரு நண்பரும் என்னுடன் வந்திருந்தார். அவர் உடனே 'என்னய்யா அக்கிரமம்' என்ற தொனியில் அவரிடம் பேசத் தொடங்கினார். எனக்கென்னமோ சீக்கிரம் அங்கிருந்து புறப்படவேண்டுமெனத் தோன்றியதால், இரண்டு ரூபாய்களை மேஜையின்மீது வைத்துவிட்டு நண்பரையும் அழைத்துக் கொண்டு காரில் வந்து ஏறிக்கொண்டோம். காரும் கல்கத்தா நோக்கிச் சீறிப்பாய்ந்தது. எனது சிந்தனை மட்டும் வெறிச்சென்று தமிழ் நாட்டின்பாலும், தமிழர் பலரின் உள்ளங்களின்பாலும் தாவிப் பாய்ந்து கொண்டிருந்தது.

★

கேள்வி: கணவனும் மனைவியும் திருமணத்தின்போது எதற்கு கை கோர்த்துக் கொள்ளுகிறார்கள்?

பதில்: குஸ்தியை ஆரம்பிப்பதற்கு முன்பு ஒருவர் பலத்தை இன்னொருவர் தெரிந்து கொள்ள பயில்வான்கள் கைகுலுக்குவதுபோல மாப்பிள்ளையும் பெண்ணும் கை பிடித்துக்கொள்ளுவதுமிருக்கலாம்

★

கேள்வி: செல்வத்திற்காகமட்டும் செய்யப்படும் திருமணம் எதைப்போன்றது?

பதில்: தரித்திரோம் என்று சொல்வதைப் போன்றது.

★

கேள்வி: வள்ளலாக இருந்த தமிழன் இன்று வறுமைக்கடலில் தவிக்க காரணம் என்ன?

பதில்: தனக்கு மிஞ்சித்தான் தானதர்மம் என்கிற பழமொழியை மறந்ததால்.

★

கேள்வி:- நம் நாட்டில் குழந்தைகள் அதிகமாய்ப் பிறப்பதற்குக் காரணமென்ன?

பதில்:- வறுமை, பசி, குறைந்த வாழ்க்கைத் தரம், போதிய தேகாரோக்கிய வளர்ச்சியின்மை...

★

கேள்வி:- பெரிய மனிதர் என்பவர் யார்?

பதில்:- மற்றவர்களைச் சின்ன மனிதர் என்று நினைக்காதவர்.

★

—சுதந்திரன்

சந்தான சப்ரமஞ்சம்

—பழநி—

"அரசே! இந்த மாங்கனியைப் பூர்ணச் சந்திரன் பிரகாசிக்கும் நாளில், தங்கள் தர்மபத்தினியாரும் தாங்களுமாக உண்பீர்களானல், நிச்சயம் தங்களுக்குப் புத்திர சந்தானம் உண்டாகும்"

"மகரிஷியே! தன்யனுனேன்! தங்கள் வரப்பிரசாதத்துக்கு ஆயிரங்கோடி நமஸ்காரம்."

இங்கு புராணகாலத்தில்

*

"விரிஞ்சிபுரம் கோயிலுக்குச் சென்று, திருக்குளத்தில் குளித்துவிட்டு, ஈரத்துணியுடன், கோயில் மண்டபத்தில் அன்றிரவு படுத்துக் கொண்டால், மலடிக்கும் புத்திர சந்தான வரம் கிடைக்கும்."

இங்கு இப்போதும்

*

"ஐம்பதுபவுன் கட்டணம் செலுத்தி சந்தான சப்ரமஞ்ச கூடத்தில் ஓர் இரவு சயனித்தால், நீண்டகாலமாகப் பிள்ளைப் பேறு இல்லாத தம்பதிகளுக்கும், குழந்தை பிறக்கும்.

இலண்டன் 1779.

* * *

முன்னவை இரண்டும் தெரிகிறது, புரிகிறது மூன்ருவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, சந்தான சப்ரமஞ்சக் கூடம், அது என்ன, அதனுடைய விவரம் கூற வேண்டுகிறோம் என்று ஆவலுடன் கேட்கத்தோன்றும். அன்பர்கள், அவ்வளவு வேகமாக அந்தக்கட்டம் செல்ல முடியாது; அதனை அடையுமுன், மனிதகுலம் மாயம் —மந்திரம்—மருந்து எனும் கட்டங்களில் எங்கனம் சென்றனர்—என்னென்ன அனுபவங்களைக் கண்டனர் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

மாங்கனி கொடுத்தவர் மகரிஷி!

சப்ரமஞ்சக்கூடம் அமைத்துத்தந்தவன், மகரிஷி அல்ல, வெள்ளைக்காரன்.

இருவரும் வேறு வேறு என்ருலும், அவர்கள் நோக்கம் ஒன்றேதான்.

மகரிஷி தரும் மாங்கனி, மகத்துவம் வாய்ந்தது என்று நம்பிக்கை கொண்டான் மன்னன்; சந்தான வரமளிக்கவல்ல மகிமை இருக்கிறது இந்தப் பஞ்சணைக்கு என்று நம்பினுன் பாமரன்.

இருவரின் நம்பிக்கையும், அறிவுத்துறை வளராததால் ஏற்பட்டதுதான்—அந்த வரலாறுபற்றிய குறிப்புரையாகக் கொள்ளலாம், இந்தக் கட்டுரையை.

*

"எல்லா வைத்தியமும் செய்து பார்த்தாகிவிட்டது. ஒரு பலனும் தெரியவில்லை, உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது, வைத்தியர்கள் நம்பிக்கை இல்லை என்று கூறிவிட்டனர், நாளைப் பொழுது தாங்காது என்றனர், என்ன செய்வது? ஒன்றும் தோன்றவில்லை. உடனே ஏழுமலையானே! நீதான் துணை. மனிதர்களெல்லாம் கைவிட்டுவிட்டார்கள், இனி நீதான் உயிர்ப்பிச்சை கொடுக்கவேண்டும், குழந்தை பிழைத்ததும், உன் சன்னதிக்குக் கொண்டு வருகிறேன், வெள்ளியாலே கால் செய்து சமர்ப்பிக்கிறேன் என்றுவேண்டிக்கொண்டு, ஒரு மஞ்சத் துணியில் காலணு முடிந்து, கையிலே கங்கணம் கட்டிவிட்டு, ஏழுமலையான்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, குழந்தை பக்கத்திலேயே படுத்துக்கொண்டேன் —

இராத்திரி பனிரண்டுமணி இருக்கும், கண் இழுத்துக் கொண்டே போய் விட்டது, கொஞ்சநேரம் தூங்கி விட்டேன், யாரோ ஒரு கிழவர், நெற்றியிலே பெரிய நாமம் போட்டுக் கொண்டிருந்தார், என்னடிம்மா இது? என்னை கூப்பிட்டனுப்பிவிட்டு நீ குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டு இருக்கறயே, எழுந்திரு எழுந்திரு குழந்தைக்குப் பால் கொடு, நான் காப்பாத்தியாகி விட்டது, என்று சொல்லிவிட்டு என்னைத்தட்டி எழுப்பினது போலக் கனவு கண்டு திடீரென்று விழித்துக்கொண்டு பார்த்தேன் — அதிசயத்தைப் பாரு, அம்மா! பாலாவது காபியாவது கொடு, ரொம்பப்பசியா இருக்குது என்று குழந்தை கேட்டானே! ஏழுமலையானே! உன்னுடை மகிமை என்று சொல்லிக்கொண்டே, ஓடிப்போயி, காப்பி போட்டுக் கொண்டுவந்து கொடுத்தேன், நாலு முழுங்கு சாப்பிட்டான், மளமளன்னு ஜுரம் இறங்கி, கோழி கூவும் போது, உடம்பு கொதிப்பே இல்லை, நாலே நாளிலே எழுந்து உட்கார்ந்தானே! இதுக்கு என்ன சொல்கிறே? நாற்பதுநாள் காச்சல்—நாலுடாக்டர் பார்த்தாச்சி—கொடுக்காத மருந்து உண்டா—இருக்காத பத்தியமா?—எதுக்கும் மசியாத அந்த விஷ ஜுரம் ஏழுமலையான் பேரைச்சொல்லிக் கங்கணத்தைக் கட்டினதும் 'டக்'குன்னு ஓடியே போயிட்டுதே!"

"இதெல்லாம் ஒரு அதிசயமல்லாடிம்மா! நம்ம ஏகாம்பரத்தோட சம்சாரம் எலும்பா உருகிக்கொண்டு வந்தாளா? ஒவ்வொரு ஆஸ்பத்திரி படிக்கட்டும் ஏறி ஏறி இறங்கியாச்சி, பட்டணத்திலே இருந்து ஏகாம்பரம், பணமென்று பார்க்காமத்தான் வித விதமான மருந்து வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தான், அவளுடைய குடலே வெந்து போயிட்டுது மருந்து மேலே மருந்தாச் சாப்பிட்டதாலே. இனி ஏது அவள் பிழைக்கிறது? அவ்வளவுதான் அவன் கொடுத்து வைத்தது என்று எல்லோரும் சொல்லியுமாச்சி. வேலை செய்யரு இல்லை, வெங்கம்மா, ஏகாம்பரம் வீட்டிலே, அவ சொன்னளாம், எத்தனையோ வைத்யம் செய்து விட்டிங்க, குணமாகவில்லை, நான் ஒரு யோசனை சொல்கிறேனுங்க, ஏழையாச்சேன்னு தள்ளி விடாதிங்க, நம்ம பெரியதெரு மசூதி இருக்கு பாருங்க அங்கே, தொழுகை நடத்திவிட்டு வாராங்களே அந்த நேரமா ஒரு பதினைந்து நாளைக்குப் போகணும், தொழுதுவிட்டு வெளியே வருகிறவங்க உஸ்! உஸ்!னு முகத்திலே ஊதிவிட்டுப் போவாங்க, எப்படிப்பட்ட வியாதியா இருந்தாலும், பஞ்சு பஞ்சாப் பறந்து போகுதுங்க, அதைக் கையாண்டு பாருங்கன்னு சொல்லியிருக்கா. ஏழை பேச்சு அம்பலத்திலே ஏறுமா? அடிபோடி முட்டாளே! ஆனைப் பட்ட டாக்டர்களெல்லாம் சாதிக்காத காரியத்தை, மசூதிக்குப் போய்விட்டு வருகிறவங்க வாயாலே ஊதுவதாலேயா சாதிக்கமுடியும் என்று கேலி செய்தார்களாம். ஏகாம்பரம் எதற்கும், அதையும் தான் செய்து பார்த்துவிடுவமென்று, மசூதிக்கு அழைத்துக்கொண்டு போனனும், சரியா பத்தாம் நாள், அவ உடம்பு பசபசன்னு ஒரு புது மேனி போட்டு, இப்பப் பார்த்தேன், நோய்நொடி ஒண்ணுமில்லை, அன்னசிப் பழம் போல இருக்கரு, இது அல்லவா அதிசயம்? ஆறு நூறு இதுவரை செலவாகிவிட்டிருக்குது, மருந்துக்கு. ஒரு காலணு செலவு கிடையாது மசூதிக்குப் போய்வந்ததிலே, நோய் ஒழிந்தே போச்சே. இதுக்கு என்ன சொல்கிறே?"

"ஆமாமாம்! அப்படிப்பட்ட அதிசயமெல்லாம் நடவாமலா இருக்கு? நம்ம வீராசாமி, இரண்டாவது கலியாணம் செய்துகொண்டாகணும்னு கிளம்பிவிட்டானே; கலியாணமாகி வருஷம் எட்டு ஆகுது, குழந்தை இல்லையேன்னு, டானிக்குமேலே டானிக்கு வாங்கித்தான் கொடுத்தான் தமயந்திக்கு. அவளும் 'சாண்டோ' மாதிரி ஆயிட்டா, ஆனு குழந்தை இல்லை. நம்ம 'வினை' அது; அதுக்காக நாமென்ன செய்யறதுன்னு அவ பொலம்பிக்கொண்டிருக்கச்சே, தோட்ட வேலை செய்யலே தொப்பை, அவன் தெய்வம்போல வந்து சேர்ந்தான். இதுக்காக ஏம்மா கவலைப்படறிங்க, விரிஞ்சிபுரம் கோயிலுக்கு 'வேண்டுதலை' செலுத்தினு, வேண புள்ளை பொறக்குதுன்னு சொன்னனும். அந்தப் பொண்ணு, புருஷனோடை சொல்லி, இந்த ஒரு முறையையும் செய்து பார்த்துவிடுவோம், இதிலேயும் பலன் ஏற்படவில்லைன்னு, உனக்கு நானே என் தங்கச்சியை இரண்டாம் தாரமாகக் கட்டிவைக்கிறேன்னு சத்தியம் செய்துகொடுத்தாளாம். விரிஞ்சிபுரம் போயிருக்காங்க. அங்கே குளித்துவிட்டு, ஈரப்புடவையோடவே, இராத்திரிக்கு, கோயில் மண்டபத்திலே படுத்துக்கொள்றதாம், கனவிலே சாமி வருமாம், சாமி! பூ பூக்கோணும்னு நாம்ப கேட்டதே, பூ பூத்துவிடும் என்று சொல்லி வரம் கொடுக்குதாம். சில பேருக்கு முத நாளே கொடுக்கறதுண்டாம், சிலபேர் மாதக் கணக்காப் போய்தான் வரம் வாங்கமுடியுமாம். யாரார் எவ்வளவுஎவ்வளவுகொடுத்துவைத்திருக்கிருர்களோ அவ்வளவுதானே கிடைக்கும். இவளோட அதிர்ஷ்டம் விரிஞ்சிபுரத்திலே ஏழாம் நாளே வரம் கிடைச்சிருக்குது—இப்ப கொழந்தைக்கு ஆரும் மாசம்; கொழுகொழுன்னு இருக்கருன்; விரிஞ்சியப்பன்னு பேரு வைச்சிருக்காங்க. இதுக்கு என்ன சொல்றே? ஒரு மருந்தில்லை, ஊசியில்லை, பத்தியமில்லை, தைலமில்லை, ஈரத் துணியோட படுத்துக்கொண்டு பயபக்தியோட வேண்டிக்கொண்டா, போதும்! அதிசயமா இல்லையா?"

* * *

கங்கணம்
முடிக்கயிறு
முழுக்குப் போடுவது
தாயத்து அணிவது

இவைபோன்றவைமூலம், தீராத வியாதியெல்லாம் தீர்ந்துபோகும் என்று மூதாட்டிகள்மட்டுமல்ல, மற்ற பல துறைகளிலே புதுமை அளித்திடும் வசதிகளையும் வாய்ப்புகளையும் பெற்றுப் பலன் காணும் கற்றறிவாளர்களிலேகூடப் பலர், பேசுகின்றனர்—நம்புகின்றனர்—நம்பாதவர்களுக்கு 'வாதங்கள்'கூடச் செய்ய முன்வருகின்றனர்.

மூதாட்டிகள், 'மாயம் மந்திரம் தெய்வானுகூலம்' என்பவைகள்மூலம், எத்தகைய வியாதியும் தீர்ந்து போகும் என்று கூறும்போது, "பாட்டி! இது உண்மை என்றால், இவ்வளவு சுலபத்திலே நோய் தீர வழி இருக்கும்போது, கோடிகோடியாச் செலவிட்டுப் புதிய புதிய ஆஸ்பத்திரிகள் கட்டுவானேன், இலட்ச இலட்சமாகக் கொட்டி மருந்துகளை வாங்குவானேன், ஆயிரக்கணக்கிலே பணம் வாங்கிக்கொண்டு டாக்டர்கள் வேலை செய்வானேன், பிள்ளைப்பேறுக்கு விரிஞ்சிபுரம், பேய் பிடித்து ஆடினல் சமயபுரம், வயற்றுவலிக்கு வள்ளி புரம், காச்சலுக்கு காசிபுரம், இருமலுக்கு தாராபுரம் என்று இப்படி எங்கெங்கே போனல் என்னென்ன அதிசயம் மகிமை கிடைக்குதோ அதன்படி

'நோயாளிகளை' அனுப்பி நொடியிலே சுகமாக்கிக் கொள்ளலாமே! எதற்காக வைத்தியத்துக்கு ஒரு படிப்பு—ஒரு பட்டம்! —ஆஸ்பத்திரியிலே ஏன் இவ்வளவு டாக்டர்கள்?—என்று கேட்டோமானல், அவர்கள் நம்மிடம் வீரதீரமாக வாதாட வருவதில்லை, அன்புடன் பார்த்து, "அதெல்லாம் எப்படி என்று எனக்குச் சொல்லத் தெரியாதடா அப்பா! இதுக்கெல்லாம் அர்த்தமும் தெரியாது. எனக்குத் தெரிஞ்சது, அந்த அதிசயமெல்லாம் இருக்குது என்பதுதான். மத்ததைப் புரிந்துகொள்ள, நான் என்ன ஆயிரம் பத்தாயிரம் செலவழிச்சா உன்னைப்போலப் படிச்சிருக்கிறேன்" என்றுதான் பேசுவார்கள். அந்த மூதாட்டிகளை, அவர்களுடைய வெள்ளை உள்ளத்துக்காகவும், நாணயமான நம்பிக்கைக்காகவும்! மதிக்கக்கூடச் செய்யலாம்; ஆனல், ஆபரேஷன், இஞ்சுலேஷன், இன்ஜக்ஷன், ரேடியம் டிரீட்மென்ட், எக்ஸ்ரே, அல்ட்ரா வயலட்ரே — என்று அள்ளி அள்ளி வீசுவார்கள், வைத்ய சம்பந்தமாகப் பேசும்போது, டாக்டர் ரங்காச்சாரி இவ்வளவு திறமையானவர், டாக்டர் ராஜன் இவ்வளவு பெரிய ஆபரேஷன் செய்தார் என்று பெருமையாகப் பேசுவார்கள் இன்னின்ன வியாதிக்கு இன்னின்ன மருந்து சாப்பிடலாம் என்று குட்டி டாக்டர் போலவே பட்டியல் தருவார்கள், இன்னின்ன பொருளில் இன்னின்ன வைடமின் இருக்கிறது என்று சொல்லுவார்கள்; இவ்வளவு மேதாவித்தனத்தையும் காட்டிவிட்டு, அதே மூச்சில், கங்கணம், கயிறு கட்டுதல், முழுக்குப் போடுதல், பேய் ஒட்டுதல் போன்ற பாட்டி முறைகளுக்கும் அதிதீவிர வக்கீல்களாகி, தீர்ப்பே அளித்துவிடுவார்கள்.

சப்ரமஞ்சம்

மாயம், மந்திரம், மருந்து—மணிமந்தர அவுஷதம் —என்று நிலைமை வளர்ந்துவிட்டது; ஆனல் வளருவதற்கு முன்னலே, மடைத்தனத்தால் தாக்கப்பட்டு, புத்தறிவு மெத்தச் சிரமப்பட்டிருக்கிறது.

குழந்தை வேண்டி கோயிலையோ மரத்தையோ சுற்றுவதோ, குளத்தில் மூழ்குவதோ, 'குளிசம்' கட்டிக்கொள்வதோ, இங்குமட்டுமல்ல, அறிவுக்கதிர் எழாமுன்பு, நாடு பலவற்றிலும் இருந்துதான் வந்தது.

நோய் நொடியே, உடலுக்குள் புகுந்துவிட்ட 'கிருமிகளின்' விளைவு என்ற புத்தறிவு, இப்போது தான் ஏற்பட்டது; பன்னெடுங்காலத்துக்கு முன்பிருந்து இங்கும், எங்கும், நோய், கடவுளின் கோபத்தாலோ அல்லது துர் தேவதையின் சேஷ்டையினலோ ஏற்படுகிறது, எனவே துஷ்ட தேவதையை விரட்டுவதாலோ, கடவுளைச் சந்தோஷப் படுத்துவதாலோ நோயை நீக்க முடியும் என்று நம்பினர் மக்கள்—அந்த நாட்களிலே, பூஜாரி தான் டாக்டர், கோயில்தான் ஆஸ்பத்திரி! இன்று கோயில்களை ஆஸ்பத்திரிகளாக்கலாம் என்று ஓர் முயற்சியும் இருக்கிறது, ஆஸ்பத்திரிகளிலேயே ஒரு மூலையில் சிறிய கோயில்களைக் கட்டலாமா என்றும் முயற்சி இருக்கிறது. ரயிலேறி ராமேஸ்வர யாத்திரைக்குச் செல்பவர்களின் 'பிடி'தானே அழுத்தம், இன்னும்! விமானத்திலே பயணமாகி, உள்ளூர் 'தெப்போற்சவம்' தரிசித்துவிட்டு, மறு விமானம் ஏறிச் சென்று, ஐக்யநாடுகள் சபையிலே அறிவுரையாற்றுவோர், இருக்கிறார்களே!! மாயம், மந்திரம், மருந்து, என்கிற போது, மற்றநாடுகளில், மூன்று கட்டங்கள், வளர்ச்சிகள் என்று பொருள் கிடைக்கிறது, இங்கோ, மாயமும் மந்திரமும் மருந்தும் என்று கூட்டிக் குழப்பிக் கொடுக்கப்படுகிறது!! தெளிவு பெற விரும்புவோர், 'மருந்து'தான் நோய் தீர்க்கும் முறை, மாயமல்ல, மந்திரமல்ல, என்ற முடிவுக்கு வருவதற்கு, பிறநாட்டு அறிவாளர்கள் எவ்விதம் கஷ்டப்பட்டிருக்கிறார்கள், எத்துணை ஆராய்ச்சிகளை நடத்தினர், எத்தகைய விஞ்ஞான உண்மைகளெல்லாம் கண்டறியப்பட்டன, அவைமூலம், மனித குலத்தின் இடர்ப்பாடு, இன்னல், எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டு, இதம், இன்பம், கிடைத்திருக்கிறது, என்பது பற்றிய 'வரலாறு' படித்தறியவேண்டும். ஒரு கட்டுரை மூலம், அதற்கான ஆவலைத்தான் தூண்டலாம், வரலாறு தரமுடியுமா!!

மண்டை ஓடுகள், மிருகங்களின் பல், நகம், விதவிதமான வளையங்கள் மோதிரங்கள்—இவைகளெல்லாம், 'நோய் போக்கும்' சாதனங்களாக இருந்து வந்தகாலம் மாறி இன்று, நோய் தீர்க்கும் முறை, உடலைப் பேணுவதும், உடலை அரிக்கும் கிருமிகளை அழிப்பதும் என்ற காலம் நடந்துகொண்டிருக்கிறது.

மண்டை ஓடுகளை மாலையாகப் போட்டுக்கொண்டால், 'மரணதேவன்' அருள்கிடைக்கும்; அவன் அருள் இருப்போரிடம் எந்த நோய் நொடியும் அணுகாது; ஏனெனில், எந்தத் துஷ்ட தேவதையும் அவனைப் பிடித்தாட்டத் துணிவுகொள்ளாது — என்று எண்ணினர், காடுகளில் உலவி குகைகளில் வசித்து, இறைச்சியைப் பச்சையாக உண்டு, வாழ்வு நடாத்தி வந்தவர்கள்; காடு நாடாகி, குகை மாளிகையாகி, உடை, உணவு, ஊராள்முறை, எல்லாம் மாறிய பிறகும், மண்டை ஓடு மாலையானல் மாமருந்தாகும் என்ற 'பழமை' அடியோடு மறைய மறுக்கிறது. இப்போது அதன் விட்டகுறை தொட்டகுறைபோல், நவரத்ன மாலை அணிந்துகொண்டால், இன்னின்னநோய் அண்டாது என்று செல்வர்களும், நீறு பூசி உருத்திராட்சம் அணிந்துகொண்டால், எந்த நோயும் தீண்டாது என்று சைவர்களும், திருத்துழாய் மாலை அணிவோரைத் தீவினையும் தீண்டாது நோய் நொடியும் அண்டாது என்று வைணவர்களும், நூற்றுஎட்டு முடி போட்ட கறுப்புக் கயிறு போட்டுக்கொண்டால், ஆயிரத்தெட்டு வியாதியும் நெருங்காது என்று

அடுத்த வரிசையினரும் பேசுகின்றனர்; பகுத்தறிவாளர்களை ஏமாறச் சொல்கிருர்கள் புராணீகர்கள்.

*

இந்த நாட்டுப் புராணீர்களைப்போலவே கிரேக்க—ரோம்நாடுகளிலே இருந்தவர்கள், அண்டப்புளுகுகளைச் சுவையுள்ள கதைகளாக்கி, அந்தக் கதைகளைக் கடவுள் சித்தமாக்கி, மக்களின் மதியை மாய்த்ததிலே மிக வல்லுநர்களாக இருந்தனர். அவ்வளவு புராணத்தனம் அங்கு நெளிந்ததால்தான், முதல் பகுத்தறிவு வாதி எனத்தகும் சாக்ரடீஸ கிரேக்க நாட்டிலே புறப்படவேண்டி இருந்தது.

நோய் நொடிகளைத் தெய்வமேனும், தீய தேவனேனும் தருவர், பூஜை நோன்பு விரதம், இவை மூலம் நோய்நொடி தீரும் என்று பொதுவாகக் கூறியதுடன், திருப்திகொள்ளவில்லை, பண்டைய கிரேக்க ரோமானிய நாடுகளின் புராணீகர்கள். ஒவ்வொரு வியாதிபோக ஒவ்வொரு தனி தெய்வம்! கண்வலி தீர்க்கும் வல்லமைகொண்ட தெய்வத்திடம் சென்று, நாளெல்லாம் முறையிட்டாலும்; கால்வலி தீராது—அந்த இலாகா வேருேர் தெய்வத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! இப்படி ஒவ்வோர் நோய்க்கு ஒவ்வோர் தெய்வம் என்று குறித்து, பக்தர்களைக் கசக்கிப் பிழிந்து, கொழுத்திடும் பூஜாரிக் கூட்டம்—புரட்டர் படை—அந்த நாடுகளிலே ஆதிக்கம் செலுத்திற்று.

கிரேக்க நாடு மக்கள் மனதைக் கப்பிக்கொண்டிருந்த இருளை முதலில் ஓட்டிட முனைந்தது; பிற நாட்டவரின் தலைகளை வெட்டிக் குவித்துக்கொண்டு, உலகை ஒரு குடையின் கீழ் ஆள்வதற்கான திட்டம் வகுத்துக்கொண்டிருந்த ரோம் நாடோ, கிரேக்க நாட்டிலே பகுத்தறிவுக் கதிர் பரவிய பிறகும், கருத்துக் குருடர்களின் காலடி விழுந்துகிடந்தது.

சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்ட்டாடில்—எனும் கிரேக்க நாடு தந்த அறிவுக் கருவூலங்கள் ஒவ்வோர் துறைக்கும், இன்றும், 'ஆசான்களாக' 'வழிகாட்டிகளாக' எங்ஙனம்கொள்ளப்பட்டுள்ளனரோ, கொண்டாடப்பட்டு வருகின்றனரோ, அதுபோலவே மருத்துவ முறை எனும் துறைக்கு முதல்வர் என்ற சிறப்பிடம் பெற்றுத் திகழ்பவர், இன்றும் பாராட்டப்படும் நிலையில் உள்ளவர் கிரேக்க நாட்டவர்தான் — ஹிப்போகிராடிஸ் எனும் பெயர்கொண்டவர்.

ஹிப்போகிராடிஸ், மருத்துவ மாமன்னராகத் திகழ்ந்தார்; அவர் கண்டறிந்ததும், கொண்டிருந்ததுமான மாண்பு, இன்றும், மருத்துவத் துறையினரின் இலட்சியமாக வைக்கப்பட்டிருக்கிறது.

அவரிடம் பயிற்சி பெற்று மருத்துவத் தொழிலைத் திறம்படப் பலர் செய்துவந்தனர்; குறிப்பாக பிள்ளைப்பேறு ஆபத்தின்றி இருப்பதற்காக அவர் வகுத்தளித்த வழி முறைகள் மிகச் சிலாக்கியமானவை. பிள்ளைப்பேறு ஆபத்தின்றி இருப்பதற்கான முறைகளை மருத்துவ மாதர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

பிள்ளைப்பேறுக்காக, மருத்துவ முறை அறியாதார், நடுக்கமளிக்கக் கூடிய, கொடுமை நிரம்பிய வழிகளையே வைத்திருந்தனர்.

கருவிலிருக்கும் குழவி, வெளியே வரத் துடிக்கிறது, ஏனெனில் அதற்கு அவ்வளவு பசி—எனவே கர்ப்பிணியின் எதிரில் விதவிதமான பண்டங்கள் பலகாரங்களை வைத்தால், அந்த 'வாடை' கண்டு குழந்தை வெளியே வந்துவிடும் என்றெண்ணி, உணவுப் பொருளைக் குவித்துவைப்பார்கள் கர்ப்பிணி எதிரில். இதுவாவது வேடிக்கை என்று கருதக்கூடியது. கொடுமையான வேறு எத்தனையோ முறைகள் இருந்துவந்தன,

கருவில் இருக்கும் சிசு வெளியே வராமல் நம்மை ஏதோ விளையாட்டு காட்டுகிறது என்று கருதிக்கொண்டு, கர்ப்பிணியைத் தூக்கி, தலைகீழாக்கிக் குலுக்குவார்களாம் — கண்ணுடி சீசாவுக்குள் அடைபட்டுக்கொண்டுள்ள 'கார்க்' வெளியே வந்து விழுவதற்காகச் செய்கிருேமே அதுபோல! மரத்தில் கட்டித் தொங்கவிடுவதுதான் பலனளிக்கும் முறை என்று கருதினர் சிலர். மற்றும் சிலர், கர்ப்பிணியின் வயிற்றிலே ஏறி மிதிமிதி என்று மிதிப்பார்களாம், பிரசவத்துக்காக! எல்லா முறைகளையும் தூக்கி அடிக்கத்தக்கதான வேருேர் முறையை மலைவாசி மக்கள் கொண்டிருந்தனர். ஒரு திடலில், கர்ப்பிணியை ஒரு கம்பில் கட்டிவைத்துவிடுவார்கள்: எதிர்ப்புறமிருந்து குதிரை வீரனெருவன் வேகமாகக் குதிரையை ஓட்டிக்கொண்டு வருவான்—அவளை மிதித்துத் துவைத்துவிடுவதுபோல—அந்தப் பயத்தால் 'பிரசவம்' ஆகிவிடும்.

இவ்விதமெல்லாம் இருந்த நிலைமையை மாற்றி, ஹிப்போகிராடிஸ், மருத்துவ முறையைப் புகுத்தினர்—அறிவுத் தெளிவு என்பது வெகுவாகப் பரவிவிட்ட பிறகு அல்ல—குருட்டு நம்பிக்கைகள் கப்பிக்கொண்டிருந்த நாட்களில்—ஏறத் தாழ கி. மு. 450-ல்.

ஹிப்போகிராடிசின் நாட்களிலே எத்தகைய மூட நம்பிக்கை இருந்துவந்தது என்பது, மருந்துவதேவன் பற்றிய புராணமூலமே தெரிகிறது.

மகாதேவன் ஜூவஸ் முன் மண்டியிட்டு நின்றபடி மரணதேவன் ப்ளூடோ, 'மகாப் பிரபு! என் மண்டலத்துக்கு இப்போது அதிகமான மக்கள் வருவதில்லை; இதற்கோர் பரிகாரம் தரவேண்டும்'' என்று முறையிட்டான்.

மகாதேவன், இந்த நிலைமைக்குக் காரணம் என்ன என்று யோசித்தான், புரிந்துவிட்டது.

அபாலோ தேவனுடைய குமாரன் இஸ்குலாபஸ் என்பான் மருத்துவ முறைகளை அறிந்து, மக்களின் மரண பயத்தைப் போக்கிவந்தான்; அவனுடைய உதவியினல் மக்கள் ஆபத்தான வியாதிகளினின்றும் தப்பித்து வந்தனர்; மரண எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிட்டது.

நல்லதுதானே! மரணத்தைத் தடுத்திடும் இஸ்குலாபஸ் வணக்கத்துக்குரிய தேவனாகத்தானே கொண்டாடப்படுவது முறை என்பர்; கிரேக்க மக்கள் அதுபோலத்தான் செய்தனர்; மருத்துவ தேவனுக்குக் கோயில் கட்டினர், கோலாகலமான திருவிழா நடத்தினர்.

கிரேக்க மக்கள் இங்ஙனம், மருத்துவதேவனைப் பூஜித்து வந்தனர்; ஆனால் கிரேக்கக் கடவுளரோ, அவன் மீது கடுங்கோபம் கொண்டனர்.

தங்கள் எல்லோரையும்விட அதிகமான பூஜைகள் பெற்று அமோகமான செல்வாக்குடன் மருத்துவ தேவன் விளங்குவது மற்றக் கடவுள்களுக்குப் பிடிக்குமா? பொறாமை, கோபம்! குறிப்பாக மரண தேவனுக்குத்தான் அதிகமான கோபம்; தன் மண்ட

லத்துக்கு வருகிற மக்கள்தொகை வரவரக் குறைகிறது என்று.

மகாதேவனும் ஜூவஸ், மரணதேவன் முறையீட்டைக் கேட்டு, தன் இடியாயுதத்தை வீசி, மருத்துவ தேவனைச் சாகடித்தார். மீண்டும் மரணதேவனுடைய ஆதிக்கம் பூலோகத்தில் செல்வாக்குப் பெறும் என்ற நம்பிக்கையில்.

மரணபயமற்றுப் போனால் மக்கள், கடவுளையும் மறந்து போவர், என்பது பூஜாரிக் கூட்டத்தின் போதனை.

எனவேதான், கடவுளில் யாரேனும் ஒருவர், மரணத்தை நீக்கிவிட முனைந்தாலும், மகாதேவன் சும்மாவிடமாட்டார் என்று கூற, இப்படி ஒரு கதை—புண்ய கதைதான்—கட்டினர்.

மருத்துவதேவன் கொலுவீற்றிருந்த கோயிலுக்கு, பிணிகொண்டோர் வருவர், விதவிதமான பூஜை முறைகளைக் கூறுவர் பூஜாரிகள், காணிக்கை பெறுவர், நோய் தீராவிடினும், நோயாளியாவது தீர்ந்து போவான்—கடவுள் சித்தம் என்று இருந்துவிடுவர்.

அப்படிப்பட்ட தேவாலயத்தையே, பிறகு, மருந்துவ விடுதியாக்கினர், கிரேக்கநாட்டு அறிவாளர்கள்.

கிரேக்கநாடு இதுபோல பகுத்தறிவுத் துறையில் முன்னேறிற்று, ரோம் நாடோ, ரணகளத்தில் தன் வெற்றிகளைக் கண்டு, அங்கு கிடைத்த செல்வத்தைக்கொண்டு, கோலாகலமான திருவிழாக்கள் நடத்திக் கொண்டுவந்தது, பூந்தோட்டத்தில் புதுமலர் போதுமான அளவு காணப்படாவிட்டாலும், பூவையர் மதலையரைப் பெற்றெடுக்காவிட்டாலும், எந்தக் குறைபாடானாலும், ஏதாவதொரு தேவனுக்குப் பூஜை செய்வர், வரம்கேட்பர்!

கிரேக்கநாட்டு மருத்துவர்கள், இத்தகைய கண்டனங்களைப் பொருட்படுத்தாமல், தமது பணியினைத் தொடர்ந்து நடத்தினர், வெற்றி பெற்றனர், மருத்துவமுறை, ரோம் நாட்டிலேயும், நிலைத்தது. ஆனால் மீண்டும் ஒரு ஆபத்து எழுந்தது.

ஐரோப்பியநாடுகளில் கிருஸ்துவ மார்க்கத்துக்கு மட்டற்ற செல்வாக்கு வளர்ந்து, மார்க்கக் காவலர்கள், குறிப்பாக மடாலயத்தினர் வார்த்தையே வேதம் என்ற அளவுக்கு நேரய் மூண்டுகிடந்தது. எந்தத் துறையிலே புதிய கருத்து வெளியிட ஆராய்ச்சியாளர் முனைந்தாலும், மடாலயத்தினர், புருவத்தை நெறித்து, "புல்லர்காள்! புவியாளும் ஈசன் அனைத்தையும் அறிவித்துவிட்டான்; தரவேண்டியதனைத் தந்துவிட்டான்; அத்துடன் திருப்தி அடையாமல், ஆராய்ச்சி என்று கூறுகிறீர், புதுக் கருத்துக்கள் என்று குளறுகிறீர், புதுப் பொருள்களைநாடி அலைகிறீர், இது பெரும்பிழை, பெரும் பாதகம்" என்று கூறினர். ஆராய்ச்சியாளர்கள் அஞ்சி வாழ்ந்திட வேண்டிய நிலை ஏற்பட்டது; ஏனெனில் மத அதிபராகக் கோலோச்சி வந்த போப்பாண்டவர், ஆராய்ச்சியாளர்களை, 'மாபாவிகள்' என்று சபித்துவிடும் அதிகாரம் பெற்றிருந்தார், மண்டிலங்கள் பலவும் அந்த அதிகாரத்துக்குத் தலை வணங்கின.

ஆதிநாட்களிலே கிரேக்கநாடு, பகுத்தறிவுக் கதிரொளியைப் பரப்பியபோது, எந்த ரோம் எள்ளி நகையாடியும், எதிர்த்துப் போராடியும், வைதீகத்துக்குப் பாசறையாக இருந்து வந்ததோ, அதே ரோம் நகரமே, புனிதத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் புத்தறிவைப் பொசுக்கியாகவேண்டும் என்று துணிந்து கிளம்பிய மத அதிபாரம் போப்பாண்டவருக்குக் கோயிலாயிற்று.

*

பிள்ளைப்பேறு, பெண்களின் உயிரைப் போக்கிடும் அளவுக்கு ஆபத்தானது; அது மட்டுமல்ல, அதுபோது மாதர்கள் அடையும் வேதனை சொல்லுந்தரத்தன்று எனவே, மருத்துவ முறை ஆராச்சி யாளர்கள், பிள்ளைப்பேறு அதிக வேதனை இல்லாமலிருப்பதற்கான வழி கண்டறிய முனைந்தனர். சுகப் பிரசவத்துக்காக குறிப்பாகவும், பொதுவாகவே அறுவையின்போது (ஆபரேஷன்) அதிக வேதனை தெரியாமலிருப்பதற்கும் பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தி, சிகிச்சை பெறுவோருக்கு மயக்கமருந்து அளித்து, அவர்கள் தம்மை மறந்து இருக்கும்போது, 'ஆபரேஷனை' நடத்துவது என்று மருத்துவ வல்லுநர் கூறினர்; அதற்கான மருந்து வகையும் தயாரிக்கப்பட்டது; மதவாதி இதை ஏற்றுக்கொள்ளவில்லை — வேதனையை அவள் அனுபவிக்க வேண்டும் என்பது ஐயன் சித்தம், அதை மாற்றிட நீ யாரடா அறிவிலி! என்று கேட்டு ஆர்ப்பரித்தனர்.

அதற்கு வேதபுத்தகத்திலிருந்து ஆதாரம் காட்டினர் மதவாதிகள்.

பைபிளில் ஓரிடத்தில், "வேதனைக்கிடையே பிள்ளையைப் பெற்றெடுத்தல்" என்று ஓர் குறிப்பு காணப்படுகிறது; கர்த்தர் இங்ஙனம் கூறியிருக்கிறபோது, கர்ப்பிணியின் வேதனை அவளுக்குத் தெரிய ஒட்டாமல், மயக்க மருந்தளிப்

பதன் மூலம் தடுப்பது, பாபமல்லவா? பரமன் இதை அனுமதிப்பாரா? வேதனையின்றி குழந்தை பிறந்திட வேண்டும், என்று கூறுகிறார்களே, மருத்துவம் படித்து மாபாவிகளானோர், வேதனையை அனுபவிக்கத்தான் வேண்டும் என்று வேத புத்தகம் கூறுகிறதே அதற்கென்ன கூறுகின்றனர்? கர்த்தருக்கு இருப்பதைவிடவா, இக்கயவர்களுக்கு மக்களிடம் கனிவு! ஆண்டவனுக்குத் தெரியாததையா இந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிந்துகொள்ள முடியும்! எவ்வளவு கருவமிருந்தால் வேதத்தில் கூறியிருப்பதை மாற்றத் துணிவு பிறக்கும்? பிள்ளைப் பேறின் போது மாதர்கள் வேதனைப்படுவதுதான் முறை—அதை மாற்றுவது பச்சை நாத்தீகமாகும் — என்று கூறி, மதக் காவலர் தீவிரமாக எதிர்த்தனர்.

இன்று, இத்தகைய எதிப்புபற்றி படித்திடும் போது, நமக்கெல்லாம் சிரிப்புக்கூட வரும்—இதற்கா தகராறு! என்று கேட்போம். ஆனால், பிள்ளைப்பேறு வேதனையுடன் இருப்பது முறையா, வேதனையைப் போக்குவது முறையா என்ற பிரச்சினை, பல்கலைக் கழகங்களிலும் பாதிரிமார் கூட்டங்களிலும், கிளப்பிய பொறிகள், நாடெங்கும் தெறித்து, எத்துணையோ சச்சரவுகளை, விவாதங்களை, விரோதங்களை மூட்டி விட்டன.

"பக்தர்களே! பரமனருளை இழக்கச் சம்மதிக்காத பக்தர்களே! கேளுங்கள். பிள்ளைப் பேறு வேதனையுடன்தான் இருக்கவேண்டும் என்று வேதம் கூறுகிறது — இதற்கு ஆதாரம் தேவையில்லை—வேதத்தைப் பாராயணம்செய்யும் பக்தர்களல்லவா நீவிர்—ஆனால் இந்த வேதனையைத் துடைத்திடத் துடிக்கிறார்களே இந்த ஆராய்ச்சியாளர்கள், அவர்களை நான் கேட்கிறேன் — நாதன் பெயரால் கேட்கிறேன், நமது புனித மார்க்கத்தின் பெயரால் கேட்கிறேன், மாதர்கள் பிரசவ வேதனைப்படவேண்டும் என்று ஏன் கர்த்தர் கூறுகிறார்? அதற்கென்ன காரணம்? மக்களுக்குத் தேவையல்லாததையா தேவன் தருவார்? வேதனைப்படத்தான்வேண்டும் என்று கர்த்தர் கூறியதற்குக் காரணம் என்ன? இதை ஆராய்ந்து பார்த்தார்களா, இந்த ஆராய்ச்சியாளர்கள்? எதை எதையோ ஆராய்கிறார்களே? கிருமிகளைப் பூதக்கண்ணாடி போட்டுப் பார்த்து ஆராய்கிறார்களாம்! இவைகளை ஆராய்கிற இவர்கள், கர்த்தரின் கட்டளைக்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தனரா? இல்லை! ஏன்? முடியாது! ஏன் முடியாது? இவர்கள் மற்ற ஆராய்ச்சிகள் நடத்தும்போது, செத்துப் போன தவளை, புழுத்துப்போனபழம், அழுகிப்போன உடல், இவை போதும்—நான் கூறும் ஆராய்ச்சிக்கு, பக்தி ததும்பும் மனம் வேண்டும், அதிலே நாதன்மீது நம்பிக்கை இருக்கவேண்டும்—இந்த மாபாவிகளிடம் பக்தியும் நம்பிக்கையும் கிடையாது — ஆகவேதான் அவர்களால் கர்த்தர் வாக்கின் பொருளை அறிந்துகொள்ளமுடியவில்லை.

கர்த்தர், திட்டவட்டமாகக் கூறுகிறார், பிரசவவேதனை இருக்க வேண்டும் என்று, காரணம் என்ன? காரணம் தெரியுமா? பிரசவ வேதனை இருந்தால்தான் பக்தி பரவுகிறது!

வேதனையுடன் அந்த மாது துடிக்கும்போது, எத்தனை ஆயிரம் தடவை கர்த்தரின் நாமத்தை ஜெபிக்கிறாள் அன்னை மேரியின்பெயர்கூறிபஜிக்கிறாள் அறிவீர்களா?

கர்த்தரே சரணம்! கர்த்தரே, காப்பாற்றும்! ஏசுநாதா, என் வேதனை தீர்த்திட வாரும்.

மாமணியே, மரியம்மையே, இந்தப் பாபிமீது இரக்கம் காட்டும்.

என்று, இதயத்திலிருந்து பக்தி வெளிவருகிறது. வேதனைப்படும் மாதுமட்டுமல்ல, அந்த வேதனையைக் கண்டு மணாளனுக்கும், பெற்றோருக்கும் வேதனை—எனவே அவர்களும், பஜிக்கிறார்கள் — கர்த்தரின் நாமத்தை எல்லோரும் பஜிக்கிறார்கள்—பிரசவ வீடே, பஜனைக்கூடமாகிறது — கர்த்தரின் மீதுதான் அனைவரின் கவனமும் செல்கிறது — அனைத்துக்கும் அதிகாரி அவரே என்ற உண்மை புலனாகிறது——குழந்தையே அவர் அளித்திடும் பிரசாதம் என்ற புத்திபிறக்கிறது — படைத்தவன், இதோ துடித்திடச் செய்யவும் முடியும் என்பதைக் காட்டுகிறான், அவன் நாமத்தை ஜபித்தால், அவனே ரட்சிக்கவும் செய்வான் என்ற நம்பிக்கை கிடைக்கிறது.

பொதுவாகக் கூறுவதானால், பிரசவ வேதனை, வேத மார்க்கத்தின்மீது அனைவருக்கும் புதிய நம்பிக்கை ஏற்பட உதவுகிறது. கர்த்தனின் புகழ் பரப்பும் புனித காரியம் அது! பக்தியைப் பரப்பும் காரியம்! தேவாலயத்திலே இசை மூலம் பக்தியைப் பெறுகிறோம்—பிரசவ விடுதிகளிலே, வேதனைக் குரலொலியே, பக்தியை மேலும் தூண்டிவிட உதவுகிறது. சுடர்விட்டெரிகிறது பக்தி!

இதற்காகத்தான் கர்த்தர் வேதனையுடன்தான் பிரசவம் இருக்கவேண்டும் என்று சொன்னார்——இந்த விதண்டவாதிகளின் போக்கை இப்போது என்னவென்று கூறுகிறீர்கள்?"—என்று பாதிரியார், விளக்கமளித்துக் கேட்பார், பாமரமக்கள், மருத்துவர்கள் மாபாவிகள்! கர்த்தருக்குத் துரோகமிழைக்கும் கயவர்கள்!—என்று கூறிச் சீறுவர்.

இதுபோன்ற எதிர்ப்புகளைச் சமாளிக்கவேண்டிய பொறுப்பு சிம்சன் எனும் மருத்துவல்லுநரை ஒரு பெரிய விளக்க ஏடே தீட்டச்செய்தது 1847ல்!

வேத புத்தகத்திலிருந்து பாதிரிகள் ஆதாரம் காட்டிக்கண்டித்தனர்—வேதபுத்தகம் உள்ளத்தைப் பற்றியது, மருத்துவம் உடற் கூறு பற்றியது—வேதத்தில் இதற்கான ஆதாரம் காட்டுவது பொருத்தமற்றது, என்று இன்றுகூறிவிடலாம். அப்போது அங்ஙனம் கூறமுடியாது—எனவே **சிம்சன்** வேதத்திலிருந்தே, தமக்கு ஆதரவான கருத்தளிக்கும் வாசகத்தைத் துருவித் துருவி ஆராய்ந்து அந்த ஏட்டிலே காட்டினார்.



வேதனையைக் குறைக்கக்கூடாது, என்று கர்த்தர் ஒருபோதும் சொல்லவில்லை ஐயா! பிரசவம், வேதனை தருவது என்று மட்டும் சொன்னாரே தவிர, அந்த வேதனையை நீக்கும் முறையே கூடாது என்று கூறவில்லை. கர்த்தரே, மயக்க மருந்தளித்து ஒரு ஆபரேஷன் நடத்தி இருக்கிறார் தெரியுமா! மயக்க மருந்தளித்து, ஆபரேஷன் நடத்திய முதல் டாக்டரே கர்த்தர்தான், அறிவீரா? என்று கேட்டார் சிம்சன்.

பாதிரிகள் பயந்து போயினர்; அவர்கள் வேத

புத்தகத்தையும், கர்த்தரின் கட்டளையையும் சிம்சன் மறுத்துப் பேசுவார், என்று எதிர் பார்த்தனர். சிம்சனே ஏசுதான், மயக்கமருந்தளித்து ஆபரேஷன் நடத்திய முதல் டாக்டர் என்கிறார்!

"எப்போது? யாருக்கு? எப்படி?"

"கர்த்தரின் கட்டளைகளை நம்பவேண்டும், என்று கூறி மிரட்டத்தான் தெரிகிறதே தவிர, கர்த்தர் என்னென்ன மகத்துவமான காரியமாற்றியிருக்கிறார், என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியவில்லையே, உங்களால். போகட்டும். நான் கூறுகிறேன் கேளுங்கள். வேதபுத்தகத்தை எடுங்கள் — என்னைக் கண்டிக்க, பல முறை அந்தப் புனித ஏட்டினைப் புரட்டிப் புரட்டிப் படித்திருப்பீர்களே—மற்றோர் முறை பாருங்கள்"

"எந்த இடம்? எதைக் குறிப்பிடுகிறீர்?"

ஆண்டவன் மனிதனைப் படைத்திடும் கட்டம் இதோ பாருங்கள்,

"பிறகு கர்த்தர், நீண்டதோர் துயிலை ஆதாமுக்கு ஊட்டினார்; ஆதாம் துயிலலானான்; அவனுடைய விலா எலும்பிலொன்றை எடுத்துவிட்டு, சதையை மூடிவிட்டார்" வேதத்தில் இருப்பதய்யா, பாதிரிமாரே! ஆதாமுக்கு ஆபரேஷன் நடந்திருக்கிறது; கடுமையான ஆபரேஷன்—ஒரு எலும்பையே வெளியே எடுத்துவிட்டார் — பிறகு சதையை பழயபடி ஆக்கிவிட்டார்! ஆண்டவன் ஆபரேஷன் நடத்துவது ஆச்சரியமல்ல—வார்த்தைகளைக் கவனித்தீர்களா— **ஆதாமை நீண்ட துயில்கொள்ளச்செய்தார்!**

ஆதாமுக்கு நீண்ட தூக்கத்தை வருவித்தார்!! ஏன்?

ஆபரேஷனால் ஆதாம் வேதனை அடையக் கூடாது என்றுதான்.

அந்த நீண்ட துயில், மயக்க மருந்தளித்துத்தான் ஏற்படுகிறது. அதைத்தான் நாங்கள் செய்கிறோம். ஆகவே, கர்த்தர்தான் எமக்கு வழிகாட்டி; அவர்தான் மயக்க மருந்தூட்டி ஆபரேஷன் நடாத்திய முதல் டாக்டர்"

'இப்படி 'வாதம்' நடத்தியிருந்தார் சிம்சன், தமது ஏட்டில்!

இவ்வளவும் இதற்குமேலும் தேவைப்பட்டது மதவாதிகளின் எதிர்ப்புகளைச் சமாளிக்க, மதவாதிகளிடம் மக்களுக்கு அச்சம், அவர்களை மீறி நடந்தால் மாபாவம் சம்பவிக்கும் என்ற திகில். பாமரரின் அந்த அச்சத்தைப் போக்க, ஆராய்ச்சியாளர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல.

*

சந்தான சப்ரமஞ்ச கூடத்தில் சயனிக்க வாருங்கள்! நிச்சயம் கருத்தரிக்கும்—சொர்ணமயமான குழந்தை பிறக்கும்.

இவ்விதம் ஓர் விளம்பரம்வெளியிட்டான், சாகசப் புரட்டனொருவன்.

அந்த 'சப்ரமஞ்சம்' மகிமை பொருந்தியது—தேவலோகத்தது—எனவே அதிலே 'தம்பதிகள்' சயனித்தால், நிச்சயமாக சந்தானவிருத்தி ஏற்படும் என்றான்.

மருந்து, மந்திரம், முழுக்கு முடிக்கயிறு இவைகளை எல்லாம்விட, இந்த 'முறை' சுவைமிக்கதல்லவா! எனவே இதற்கு கிராக்கி அதிகமாயிற்று.

தம்பதிகள் கட்டணம் செலுத்திவிட்டு, வருவர்.

ஆரோக்கிய ஆலயம் என்பது அதற்குப் பெயர்; அங்குதான் இந்த மகிமை வாய்ந்த கட்டில். 1779ல்!

அவன் புரட்டனானாலும், நல்ல ரசிகன் என்று தெரிகிறது. படுக்கை அறையை அவ்வளவு அலங்காரப்படுத்தி வைத்திருந்தான். பளிங்குபோல் மின்னும் நாலுகால்களைக் கொண்ட அந்தக் கட்டில் காமக்களியாட்ட ஆர்வத்தைத் தூண்டிவிடத் தக்க, கவர்ச்சிகரமானதாக்கப் பட்டிருந்தது. மலர்மாலைகள் கட்டிலின் பக்கங்களிலே தொங்கவிடப்பட்டன; தங்க முலாம் பூசப்பட்ட உலோகத்தால் செய்யப்பட்ட மாலைகள். கட்டிலில் படுத்ததும், இனிமையான இசை கேட்கும்—அதற்கான 'விசை'யைக் கட்டிலிலே பொருத்தி வைத்தான். வேறுபுறமிருந்து அழகான ஒளி, படுக்கையின் மீது வீசும் ஓர் பொறியும் அமைத்திருந்தான்.

ஐம்பது பவுனுக்குமேல் கட்டணம் செலுத்தி, ஓர் இரவு, அந்த சப்ரமஞ்ச கூடத்தில் சல்லாபித்திருக்கலாம்.

தம்பதிகளை இனிய மொழியால் வரவேற்க வனிதையர் சிலரை அமர்த்தினான். சல்லாபத்தை முடித்துக் கொண்டு தம்பதிகள், வெளியே புறப்படும்போது, விருந்துமளிப்பான். சுகானுபவத்தை அடைவதற்கான சூழ்நிலையை அமைத்துக்கொடுத்தான்—இன்று சட்டப்படி தண்டனைக்குள்ளாக வேண்டிய செயல்—அன்று அது 'மகிமை' என்று அறிவிக்கப்பட்டது.

ஆராய்ச்சியாளர்களின் எண்ணங்களை நாத்திகம் என்று ஏசிக் கண்டித்த மதக்காவலர்கள், சந்தானசப்ரமஞ்சம் அமைத்த எத்தனைக் கண்டிக்க முன்வரவில்லை. இன்ப இரவு ஏற்பாடு தங்கு தடையின்றி மக்களுடைய ஏமாளித்தனம் இருந்த வரையில் நடைபெற்றது.

தங்கள் கோட்பாட்டைப் பொய்யென்று வெட்ட வெளிச்சமாக்காதிருக்கும்வரையில், தங்கள் ஆதிக்கத்துக்கு எதிர்ப்போ மறுப்போ கிளம்பாதிருக்கும் வரையில் மதவாதிகள், எந்த எத்தனுடைய திட்டத்தையும் தகர்த்ததில்லை. ஆனால் ஆராச்சியாளர் மீது மட்டும் கோபம் கக்கினர், கொடுமை வீசினர்.

சந்தான சப்ரமஞ்சம் எனும் சாகசத்தை அனுமதித்த மதத் தலைவர்கள், மருந்து முறையை எதிர்த்தனர்—மாயம்—மந்திரம் இவைகளை ஆதரித்தனர். அந்தச் சூழ்நிலைதான் தங்கட்கு ஏற்ற இடம் என்று எண்ணினர்போலும்.

ஆனால் இன்று அவர்களின் பிடிதளர்ந்து வருகிறது—மக்கள் வெகுவாகத் தெளிவுபெற்று, மந்திரம் மாயம்—ஆகியவைகளிலே கொண்டிருந்த பித்தத்தை நீக்கிக்கொண்டு மருத்துவ முறையிலே நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அம்முறை வளர்ந்த வரலாறு படித்திடச் சுவையும் பயனும் தரும்; இக்கட்டுரை அதற்கான ஆவலைத் தூண்டும் என்ற எண்ணத்துடனேயே எழுதப்பட்டிருக்கிறது.

★

தொழில் கிடைத்தது

எத்தனையோ 'தொழில்' நடத்திப்பார்த்தேன் — கட்டிவரவில்லை. தொட்டது அத்தனையும் கெட்டுவிட்டது; குடும்பத் தொல்லையோ அதிகமாகி விட்டது. எப்போதுதான் எனக்குக் கஷ்டம் தீரும் என்று கவலைகுடைந்தது. சுவடி ஜோதிடம், சுப்பைய்யாப்பிள்ளையிடம் போய்க் கேளப்பா, சொன்னது சொன்னபடி நடக்கும் என்றார்கள் சென்றேன்.

சுக்கிரன் வருவான் பின்னே
சூழ்ந்திடும் சனியும் முன்னே
தக்கதாம் வழியும் கண்டு
தாரமே நீயும் கொண்டால்
மிக்கதாம் நலனும் சேரும்
மேதினி அறியச்சொன்னேன்.

என்ற பாசுரம் பாடி, பொருள் கூறி எனக்கொரு கலியாணத்தின் மூலம் தான் 'வழி' பிறக்கும் என்று சுப்பையாப்பிள்ளை கூறிவிட்டு, மேலால் கூற மறுத்துவிட்டார். எட்டணாதான் கொடுத்தேன் அதனால்.



திரும்பி வீடுபோகும் வழியில், கலியாணம் எப்போது கைகூடும் என்பதுபற்றி எண்ணிக் கொண்டே சென்றேன்.

ஒரு அணா! ஒரு அணா! கிளி ஜோதிடம்!! என்ற குரல் கேட்டது; சென்றேன்.

ஊரெல்லாம் பேரிருக்குது
உற்றருக்குக் கார் இருக்குது
உதவிக்கொரு வார் இருக்குது
ஊனமில்லே, ஞானம் சொல்லுது

என்ற பாட்டுள்ள சீட்டு கிடைத்தது; உதவிக்கொரு வார் இருக்குது—என்பதற்கு, வார் என்றால் வார் குழல், அதாவது பெண் என்று நான் பொருள் கொண்டேன் — நான் குறுக்கெழுத்துப் போட்டியில் மட்டும் நானூறு ரூபாய் தொலைத்தவனாயிற்றே எனக்கா பொருள் தெரியாது!

கிளியல்ல, காக்காயல்ல
புரபசர் புத்திமான்,
ஜோதிடம்

என்ற 'போர்டு' என்னை வாட்டிவிட்டது; உள்ளே சென்றேன்; அது ஒழுங்காக அமைக்கப்பட்ட ஜோதிடராலயம் உட்கார நாற்காலி! முகம் பார்க்க கண்ணாடி! கை ரேகை படங்கள்! அந்தப் படங்கள் எடுக்கும் மை! எல்லாம் ஏற்பாடாக இருந்தன. கட்டணம் ஒரு ரூபாய்! கொடுத்தேன்! அவன் பலவிதமான கணக்குகள் போட்டு, கிழக்குப் பக்க மிருந்து பெண் கிடைக்க இருப்பதாகவும் பெண்ணின் போக்கும் என் போக்கும் ஒத்துப்போகும் என்றும் கூறியதுடன். எனக்குப் பலபேர்களுக்கு உபகாரமாக இருக்கும் சிலாக்கியமான தொழில் கிடைக்குமென்றும், கூறினான். மேற்கொண்டு தகவல்கள் கிடைக்கவில்லை, ஆனால் மகிழ்ச்சி பெறுவதற்கு இது போதுமானதாக இருந்ததால், நான் கெம்பீர நடை நடந்தேன்.

ஐயா போற 'ஜோரை'ப்பார்த்தா, ஆகணும்னு நினைக்கிற காரியம் நிச்சயமாகக் கைகூடும்—என்று கூறினாள், கோல்கொண்டு குறி சொல்லும் மாது.

என்னுடைய எதிர்காலத்தைப்பற்றி நான் ஏதும், கேட்கவில்லை — மனம்வேகமாக வேலை செய்தது. மனம்துள்ளிற்று சந்தோஷத்தால், மறுகணமோ துவண்டது ஏனெனில் அந்த மாதரசி, மேற்குப் பக்கமிருந்து வந்ததை அறிந்தேன்.

மனமொடிந்த நிலையில், எந்த ஊர் உனக்கு என்று கேட்டேன், கிழக்கே வெகுதூரம் கீழச்சீவல் பட்டி என்ற உடன், என் களிப்பு கட்டுக் கடங்கவில்லை.

இன்னமும் விவரம் சொல்லுவானேன், இதோ இரண்டுபேருமே கிளம்புகிறோம்—நான் ஒரு வீதி, என் துணைவி மற்றொரு வீதி மாலையிலே சந்திப்போம், இரவு நேரங்களில், இளித்தவாயர்கள் எவ்வளவு பேர்கள் இன்று கிடைத்தார்கள் என்ற கணக்கெடுக்கிறோம்.

★

மோ-சே-துங்

சூ-என்-லாய்

திருமதி சூ-என்-லாய்

சௌ-டெவ்

அன்பின் அருவி

[ப. வாணன்]

"இதோ மாவீரன், தூங்கிக் கொண்டிருக்கிறான்; அவன் விழிப்பதற்குள் ஐரோப்பா ஒன்றுபட்டு பலமாக வேண்டும்!" என்று பூகோளப் படத்திலே சைனாவைக் காட்டிக் கூறினான், நெப்போலியன். இன்று மாவீரன் விழித்துக் கொண்டான்; எழுந்து உலாவவும் ஆரம்பித்து விட்டான்!

உலக வரலாற்றிலே, மாபெரும் மாறுதலை உண்டாக்கிய பெரும் பொறுப்பு சைனாவின் மூன்று தலைவர்களையே சாரும்; இன்றைக்கு சீன குடியரசின் தலைவரும், ஆரம்பகாலத்திலிருந்து கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான மோ-சு-துங் இன்று பிரதம மந்திரியும் முன்னாள் கமயூனிஸ்ட் கட்சி ஊழியருமான சௌ-இன்-லாய். ஆரம்ப காலத்திலிருந்தே கம்யூனிஸ கொரில்லா பட்டாளங்களுக்கு தளபதியாக இருந்து வந்து, இன்று சைனாவின் ராணுவத்தின் தலைமை பீடத்தில் வீற்றிருக்கும் சௌ-டெவ். "ரோமனாவ பரம்பரையும் மஞ்சு வம்சமும் அழிந்த இடங்களிலே இன்று கம்யூனிஸ்ட்டுகள் அமர்ந்திருக்கின்றனர். ஆகவே இரு நாடுகளையும் (ரஷ்யாவும் சைனாவும்) ஒன்று சேர்த்து தான் கணக்குப்போட வேண்டும். உலகத்தின் பாதி பூபாகத்தை அடக்கி இருக்கும் அவர்கள் பக்கத்திலே, 80 கோடிக்கு மேல் மக்கள் நிற்கிறார்கள். அவர்கள் நினைத்தால் எந்த நேரத்திலும் உலகத்தை ரத்தக்களரி ஆக்கலாம்!" என்று எச்சரிக்கிறார் பேரறிஞர் பெட்ரெண்ட் ரஸ்ஸல்.

நாகரீக உலகத்திற்கு அப்பால், ரோடு வசதிகள்கூட இல்லாமல் தனித்து நின்ற ஹீனான் மாகாணத்திலே பிறந்த மோ-சு-துங்கின் தந்தை விவசாயி. தன்னுடைய இருபத்து ஏழாம் பிறந்த நாள்வரை விவசாயத்திலே ஈடுபட்டு வந்த மோ, பீகிங் நகருக்கு வந்தவுடன்தான் நாட்டிலே நடந்துவரும் அக்ரமங்களை உணர்ந்தார். அந்த நேரத்திலேதான் சைனாவின் உரிமைகளை ஜப்பானியரும், ஆங்கிலேயர்களும் பங்கு போட்டுக்கொண்டிருந்தனர். மகாயுத்தம் முடிந்தநேரம். நாட்டிலே இருந்த முக்கியமான துறைமுகங்கள், ரயில் பாதைகள், உப்பளங்கள், சுரங்கங்கள், ஆலைகள், எல்லாம் ஜப்பானியர்களாலும், பெரும்பகுதி ஐரோப்பியர்களாலும், அபகரிக்கப்பட்டு விட்டன. ஆதிகாலத்திலிருந்தே சைனாவின் அறிவாளிகள் சூழ்ந்திருந்த பல்கலைக் கழகக் கட்டிடங்கள்கூட வெளிநாட்டு பேராசிரியர்களையே நிரப்பிக் கொண்டது. இவ்வளவுக்கும் இடம் கொடுத்து விட்டு, வாளாவிருந்தனர் சைனாவை ஆண்ட நிலச்சுவான்தார் பரம்பரை. தாய் நாட்டை எங்கிருந்தோ வந்த சூதுக்காரர்கள் சுரண்டித் தின்கின்றனரே என்று கொதித்து எழுந்தனர்- சைனாவின் வாலிபர்கள்! "நாட்டு விடுதலை—மக்கள் நல்வாழ்வு!" என்று கூக்குரலிட்டு பீகிங் தெருக்களின் வழியாக ஊர்வலம் வந்தனர். அப்படி ஊர்வலம் வந்தபோது சந்தித்துக் கொண்ட மூன்று உருவங்கள்தான் மோ-சு-துங்கும், சௌ-இன்-லாயும், பின்னால் அவருக்கு மனைவியான டேங்-யெங்-சோவோயும். விவசாயிகளிடையே விவசாயியாக வாழ்ந்து வந்த மோவுக்கு முற்றிலும்மாறுபட்ட பாதையிலே வந்தவர் சௌ. முற்றிலும் நகர நாகரீகத்திலேயே வளர்க்கப்பட்ட சௌ, சைனாவில் அப்பொழுது தோன்றிக் கொண்டிருந்த புதிய பரம்பரையின் பிரதிநிதி. ஷாங்கை நகரத்தின் அருகில் 1899-ல் பிறந்த சௌ, தன்னுடைய இளமைப் பருவத்தை தொழிற்சாலைகள் நிரம்பிய மஞ்சூரியாவிலே கழித்தார். அலுவலகத்திலே குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்த சௌவின் தகப்பனாருக்கு பரம்பரை நிலங்கள்கூட உண்டு. நாட்டுப் பற்று நிரம்பிய அவர் சௌவுக்கு குழந்தைபருவத்திலேயேசீனப் பேராசிரியர் கன்பூசியாரின் நான்கு புத்தகங்களையும் முறையாகக் கற்றுக்கொடுத்தார். சௌவுடைய தாயாரோ அக்காலத்திலிருந்த சைனப்பெண்களுக்கு முற்றிலும் மாறானவர். வழக்கத்திற்கு மாறாக நன்றாகப்படித்திருந்த பெண்மணி அவர்.

தன் மகன் மேற்கத்திய இலக்கியங்களை படித்து அறிவாளியாகத் திகழ வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார். "அன்பின் அருவி" என்ற பொருள்படும் என்-லாய் என்ற பெயர் சூட்டப்பட்ட அந்தக் குழந்தை இப்படிப்பட்ட தாய் தந்தையரிடம் வாழ்ந்தபோது, எப்படிப் பிற்காலத்தில் திகழாமலிருக்க முடியும்?

நாட்டுப்பற்றும், மனிதாபிமானமும்கொண்ட இளைஞர்கள் தெருத்தெருவாக ஊர்வலம்போனார்கள். தங்களுக்குள்ளே ஒன்றுபட்ட முயற்சி இருக்கவேண்டும் என்று "விழிப்புற்றவர்கள் கழகம்" ஒன்றை நிறுவினர். ஒவ்வோர் மூலையிலிருந்து வந்த மோவும், சௌவும், டெங்-யெங்-சோவாவும் இதில் முக்கியமானவர்கள். "விவசாயி நிலச்சுவான்தார் பாகுபாடு ஒழியட்டும்!" என்றார் மோ. "நாட்டைக் காட்டிக் கொடுக்கும் அரசாங்கம் பூண்டோடு ஒழிக்கப்படவேண்டும்!" என்றார் சௌ.

"பெண்களும்-ஆண்களும் சரிநிகர் சமானம். இனி சைனாவின் பெண்கள் அடிமைகளாக விற்பது நடவாது!" என்று கதறினர், பருவத்தின் அழகோடு வீரமும் கலந்து காட்சியளித்த டெங்-யெங்-சோவா.

"விழிப்புற்றவர்கள் கழகம்" அரசியல் அறிவைப்பரப்பபாடுபட ஆரம்பித்தது. நாடு செழிக்க நல்லமுறை எது என்றுஆராய ஆரம்பித்தது. புத்தகங்களை வைத்து ஆராய்ந்ததோடு, மேற்கத்திய நாடுகளுக்கே சென்று அங்கு நடக்கும் ஜனநாயக ஆட்சி முறைகளையும், அரசியல் நுணுக்கங்களையும் தெரிந்து வர 'விழிப்புற்றவர்கள் கழகம்' முடிவு செய்தது. அதன்படி ஐரோப்பாவிற்கு போக முடிவு செய்த வாலிபர்களில் சௌவும், மோவும் முக்கியமானவர்கள். ஆனால் கடைசி நேரத்திலே மோ-சு-துங் எக்காரணத்தினாலோ போகவில்லை.

பிரான்ஸ் நாட்டிலே ஹோட்டல் ஊழியனாகவும், சுரங்கத் தொழிலாளியாகவும் எங்கெங்கு வேலை கிடைத்ததோ, அங்கெல்லாம் வேலை பார்த்துக்கொண்டு அரசியல் ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தார். நான்கிங் பல்கலைக் கழகத்திலே எம். ஏ. பட்டம்பெற்ற சௌ, பிரான்ஸ் நாட்டிலே ஹோட்டல் தொழிலாளியாக இருக்க நேர்ந்தது, அவருடைய நாட்டுப்பற்றையும் அதற்கு அவர் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கத் தயாராகி விட்டதையும் தெளிவுப்படுத்துகிறது.

தீவிரமான சிந்தனைக்குப்பிறகு 1921'ல் பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் சீனர்கள் கிளைக்கு தலைவரானார் சௌ! அதே ஆண்டில்தான் சைனாவிலும் மோ-சு-துங் "சைனா கம்யூனிஸ்ட்கட்சி"யை ஆரம்பித்தார். பாரிஸில் ஆரம்பித்த முயற்சி லண்டன், பெர்லின், மார்ஸெய்ன்ஸ் எங்கும் வெற்றி கொடுத்தது, திரும்பவும் சைனா சென்றவுடன் புரட்சி நடத்த தகுதியான வாலிபர்களையும் சேகரித்துக் கொண்டிருந்தார், சௌ. அப்படி முயற்சி செய்துகொண்டிருக்கும் போது வந்து சேர்ந்தவர்தான் இன்று செஞ்சேனையின் தலைமைப் பீடத்திலிருக்கும் சௌ-டெவ்.

கோமிங்டாங் பட்டாளத்திலே தளபதியாக இருந்து, பீகிங் அரசாங்கத்தின் லஞ்ச ஊழலையும், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயல்களையும் கண்டு சகிக்காமல் நாட்டை விட்டு வெளியேறியவர் சௌ-டெவ். ஜெர்மனியிலே ராணுவ ஆசிரியர் ஒருவரிடம் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த சௌ-டெவ்-ஐ கண்ட மாத்திரத்திலேயே தனக்கு ஏற்ற தோழர் இவர் என்பதை சௌ-இன்-லாய் கண்டு கொண்டார். அவரை முதல் தடவையாக சந்தித்த போதே கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினராக அவரைச் சேர்த்துக்கொண்டார், சௌ. அந்தக் காலங்களில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராவது மிகவும் கடினம், ஒருவருடைய பரம்பரைகூட ஆராயப்பட்ட பின்தான் உறுப்பினர் அனுமதிச்சீட்டு அளிக்கப்படும், சௌ-டெவ் ஒரு நேரத்தில் கோமிங்டாங் தொடர்பு கொண்டவர் என்ற ஒன்றே அவரை கம்யூனிஸ்ட்க் கட்சி உறுப்பினராகாமல் செய்யப் போதுமான காரணமாகும். ஆனால் சௌ-இன்-லாய் மிகவும் கெட்டிக்காரர். பார்த்தவுடன் ஆளை எடை போடும் திறன் வாய்ந்தவர். பின்னால் நடந்த சம்பவங்கள் அவர் கொண்ட நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை நன்கு காட்டிற்று. பல ஆண்டுகளுக்கு தான் கம்யூனிஸ்டு என்பதை யாருமறியா வண்ணம் இருந்துகொண்டு பெரும் பெரும் சாதனைகளைச் செய்து சௌ இன்-லாயின் புகழுக்கு வழி தேடிக் கொடுத்தார் சௌ-டெவ். சியாங்கை தோற்கடித்து பார்மோசாவிற்குத் துரத்தின 50 லட்சம் சீனப் பட்டாளமும் சௌ-டெவ்வின் ராணுவ அறிவிலேயே முன்னேறின.

மாஸ்கோவில் லெனினுடைய சாதனைகள் மகத்தான பலனைத் தருவதைக் கண்டு உற்சாகமடைந்த சௌ, சர்வதேசீய கம்யூனிஸ்டுகள் சங்கத்திற்கு விஜயம் செய்து அங்கிருந்த கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் இன்றைக்கு உலக கம்யூனிஸ்ட் தலைவர்கள் எல்லோரையும் விட சௌ-இன்-லாயிக்கே மாஸ்கோவில் முதலிடம் தரப்படுகிறது என்றால் 1923லிருந்து சௌவுக்கும் மாஸ்கோ தலைவர்களுக்கும் இருந்த நெருங்கிய தொடர்புதான் அதற்குக் காரணம்,

1924-ல் சௌ நாடு திரும்பியவுடன் சியாங்கே-ஷேக்கோடு கூட உடன்படிக்கை செய்து கொண்டனர் கம்யூனிஸ்டுகள். ஜப்பானியரை எதிர்க்கப் போர் வீரர்களை உற்பத்தி செய்த "வாம்போ அகடமி"க்கு சியாங்-கே-ஷேக் தலைவர். சௌ-இன்-லாய் துணைத் தலைவர். மோ-சு-துங் விவசாயிகள் சங்கத் தலைவர்,

சைனாவின் பல்லாயிரக் கணக்கான இளைஞர்களை போர் வீரர்களாக மாற்றினர், சௌ-இன்-லாய். சியாங்கோடு சேர்ந்திருந்த போதிலும், கம்யூனிஸ்ட் கட்சியை பலப்படுத்துவதில் கண்ணுங் கருத்தாக இருந்து வந்தார், சௌ. அதே மாதிரி கம்யூனிஸ்டுகளை ஒழிக்க சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தார் சியாங்-கே-ஷேக். 1927-ல் ஷாங்கை நகர் சம்பவம் அந்தப் பகையின் பலனை மிகக் கோரமாக வெளியாக்கிற்று.

இருகட்சிகளும் சேர்ந்து செய்த முடிவுப்படி, ஷாங்கை நகரின் 60 லட்சம் தொழிலாளரை வேலை நிறுத்தம் செய்யச் செய்தார், சௌ-இன்-லாய்; வேலை நிறுத்தம் வெற்றிகரமாகி, ராணுவத்தின் வரவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர், சௌவும் தொழிலாளர்களும். பட்டாளம் வந்தது. ஆனால் அது நாட்டு விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட பட்டாளமில்லை. சௌ-இன்-லாயையும் மற்ற ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளையும் எதிர்க்கும் பட்டாளமாகியது. சியாங்கின் பட்டாளம், கிட்டத்தட்ட ஐயாயிரம் கம்யூனிஸ்ட் இளைஞர்களைப்பிடித்து கொலை செய்தது. ஷாங்கை நகர் பூராவும் ரத்தம் ஆறாக ஓடியது. கைதியாக்கப்பட்ட சௌ புழுங்கிய மனதோடு தூக்கு மேடை ஏறினார். அந்தக் கடைசி நிமிஷத்திலே, அவரிடம்

கேள்வி:- இந்தியாவில் மிகப் பெரிய பணக்காரர்கள் யார்?

பதில்:- இந்தியாவின் பணக்காரர்கள் இருவர். ஒருவர் டாக்டர் சிவபெருமான். மற்றவர் மிஸ்டர் நாராயணமூர்த்தி.

*

கேள்வி:- இலங்கை இந்தியப் பிரச்சினை எப்போது தீரும்.

பதில்:- நேருவுக்குப்பின் இந்தியாவுக்கு இன்னொரு பிரதமர் கிடைக்கும் போது.

ராணுவமுறை பயின்ற சியாங்கின் தளபதி அவரை தப்பித்தோடும்படி செய்திராவிட்டால், சைனுவின் சரித்திரமே இன்று மாறி இருக்கும். சௌ-இன்-லாயும், மோ-சு-துங்கும் வடக்கே காட்டிற்குள் ஓடினர். சௌ-டெங் அவர் களைப் பின் தொடர்ந்தார்.

மலைக்குகைகளிலும், காடுகளுக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருந்த மோ-சு-துங் பல ஆண்டுகள் தரையிலேயே படுத்துறங்க வேண்டியிருந்தது. இரவு பூராவும் கண் விழிக்கும் பழக்கமுள்ள மோ, அதிகமாக சிகரெட்டும், திராட்சை ரசமும் குடிப்பாராம். வெளிநாடுகளிலே சுற்றி வரும் சௌவிடம் மணிக்கணக்காக கம்யூனிச தத்துவங் களைப் பற்றி விளக்கிக்கொண்டிருப்பாராம்!

சௌவின் அரசியலில் இருக்கப்பட்ட டெங்-யெங்-சோவோ அவருடைய மனைவியாகி அனுபவித்த சுகம் பல ஆண்டுகள் குகைகளிலும், காடுகளிலும் வாழ்ந்ததுதான். "எனக்கு யெங்-சோவோவைப் போல் அறிவும் குணமும் வாய்ந்த மனைவி வேண்டும்" என்று இன்றைய சைனுவின் வாலிபர்கள் கூறுமளவுக்கு உயர்ந்து நிற்கும் யெங் சோவோ, சௌ-இன்-லாயைப்போல மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்தான். சிறுவயதிலேயே ஆங்கில படிப்பு படித்த சோவோ விரைவில் சைனுவிலே பெண்களுக்கு கொடுக்கப் படும் அடிமை ஸ்தானத்தையும், அவர்களுடைய பரிதாப நிலையையும் உணர்ந்தாள். இந்த அவல நிலையை மாற்ற என்னுலானதை செய்வேன் என்று புறப்பட்ட யெங் சோவோ. சௌ-இன்-லாயிடம் அடிமையானுர்! அவருக்கு உற்ற துணையாக பெரும் புரட்சியிலே குதித்த சோவோ வின் வாழ்க்கையின் முதல் இருபது ஆண்டுகளுக்குமேல் காடுகளிலும் குகைகளிலும் கழிந்தது. தன் திருமண இன்பத்தை, நாட்டிற்கு அர்ப்பணித்த மங்கையை நாடு போற்றுவதில் அர்த்தமில்லாமலில்லை.

பெண்வேஷமிட்டுக் கொண்டு நாட்டியமாடுவதிலும், மாற்றுர் இடுப்பு வலிக்குமளவு சிரிக்க வைக்கும் வாக்குத் திறனும் கொண்டவராம் சௌ-இன்-லாய்.

1927-லிருந்து 1936 வரை சியாங்குடன் போராடி வந்தனர் கம்யூனிஸ்டு தலைவர்கள். 1936-ல் மறுபடியும் ஜப்பானியரின் படையெடுப்பு ஆரம்பித்தது. வெளி நாட் டான் படையெடுக்கும்போது ஒற்றுமை முக்கியம் என்று முடிவு செய்த சௌவும் மோவும் சியாங்குடன் மறுபடியும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்தத் தடவை ஜப்பானியர் ஆங்கிலோ-அமெரிக்க வல்லரசுகளை எதிர்த்துப் போர் புரிந்ததால், இந்தக் கூட்டை எல்லோ ரும் ஆதரித்தனர். பீகிங் நகரிலே சியாங்கின் பங்களா விலேயே தங்கி, சுமார் பத்து ஆண்டுகள் ஜப்பானிய ஏகாதிபத்திய விஸ்தரிப்பைத் தடுக்க ஆவன செய்தா மோவும் சௌ-டெவ்வும் வடக்குச் சைனுவிலிருந்து கொண்டு பட்டாளங்களை தயாரித்து அனுப்பிக்கொண் டிருந்தனர். ஆனுல் அப்பொழுது இரு கட்சிகளுக்கும் ஒரு உண்மை மட்டும் தெரியும். உலகப்போர் முடிந்த பிறகு பழையபடி கோமிண்டாங்-கம்யூனிஸ்ட் போர் நடந்துதானுக வேண்டும் என்பது. அந்தளவு அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் சியாங்கே-ஷேக் சென்று கொண்டிருந்தார். பீகிங்கிலேயே இருந்த சௌ-இன்-லாய் இதை நன்ருக உணர்ந்து, அதற்கேற்றவண்ணம் வருங்கால திட்டங்களைத்தீட்டிக்கொண்டிருந்தார். ஹீரோ ஷீமாவில் குண்டு விழுந்த மறுதினமே இந்தப் போருக்கு மணி அடித்தது. ஜப்பான் சரணுகதி அடைந்தவுடன் பழையடி சியாங்—மோ-சு-துங் போர் ஆரம்பமாகியது. அது ஆரம்பித்த சில நாட்களுக்குள்ளேயே சௌ எவ்வளவு முன்யோசனையோடு திட்டங்கள் போட்டிருக் கிருர் என்று தெரிந்தது. கிட்டத்தட்ட இரண்டாண்டு களில் சியாங் சைனுவை விட்டு ஓடி, பார்மோசாவில் குடியேறும்படியான நிலைமை ஏற்பட்டது.

முப்பது ஆண்டுகளுக்குமேல் போரிட்டு, லட்சக் கணக்கான வீரர்களை பலி கொடுத்த போதும் கலங் காமல், வெள்ளிக்கொடி ஏந்தி பாட்டாளிகள் அரசு நிறுவிய மோ-சு-துங்கும் சௌ-இன்-லாயும்' சௌ-டெவும் பீகிங் நகருக்குள் நுழைந்தபோது ஆசிய சரித்திரத்தின் வரலாறே மாறிவிட்டது.

பதவியைப் பிடித்த மறுநாளே சோஷியலிச முறை யில் சைனு முன்னேறும் என்று அறிவித்த சௌ-இன் லாய், தன்னுடைய கிராமத்திலே, தன் நிலங்களையோ, தன் சொந்தக்காரர்கள் நிலங்களையோ பங்கிட்டு விவ சாயிகளுக்குக் கொடுப்பதற்கோ தயங்கவில்லை.

ஆங்கிலம், பெரஞ்சு, ரஷ்யன் ஜெர்மன் முதலிய மொழிகளைத் தெரிந்த சௌ-இன்-லாய் ஐரோப்பிய வல்லரசுகளின் ராஜதந்திரத்தை அறியாதவரல்ல. சமீ பத்தில் நடந்த பாண்டுங் மகாநாட்டிலும், அதற்கு முன் நடந்த ஜெனீவா மாநாட்டிலும் சௌ எவ்வளவு கெட்டிக்கார ராஜதந்திரி என்பது விளங்கிற்று. இப் பேர்ப்பட்டவரை பிரதமராகக் கொண்ட மோ-சு-துங் சைனுவின் 40 கோடி விவசாயிகளின் இருதய சுத்தி யான அன்பைப் பெற்றிருக்கிருர். மோ, சௌ' சௌ-டெவ் கூட்டாட்சி சைனுவை சமதர்ம நாடாக்கு கிறது. ஆண்டானும் அடிமையும் அற்ற சோஷியலிச சமுதாயம் நிறைந்த மாநிலமாக மாறுகிறது சைனு.

★

மானசிங்

அவன் பெயர் மான் சிங்—ஆனுல் அவன் தன் மானத்துக்காகவே, கொள்ளைக்காரனுனுன், என்று கூறுகிருர்கள்.

இந்த நூற்ருண்டிலே பிரமாதமான போக்கு வரத்து முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கும் இக் காலத்திலே ஒரு தனிப்பட்ட மனிதன் சுமார் 30 வருடங்களாக ஆங்கிலேயஅரசாங்கத்தாருக்கும்,பின் சுதந்திர அரசாங்கத்தாருக்கும் பிடிபடாமல் திரிந் தான் என்ருல் மக்கள் அவனை ஒரு தனிச் சிறப் புடைய மனிதன் என்று கருதாமல் எப்படியிருக்க முடியும். மான் சிங்கை மக்கள் வெறுக்கவில்லை. அவனிடம் பெரும் மதிப்பு வைத்திருந்தனர். இல் லாவிட்டால் மான்சிங் என்ருே பிடிபட்டிருப்பான்.

மான்சிங் சுமார் 62 ஆண்டுகளுக்கு முன் உத் தரப் பிரதேசத்தில் ராத்தோர்கோ என்ற இடத் தில் பிரபுக்கள் வம்சத்தில் உதித்தவன். அவனு டைய வாழ்க்கையில் 35 வயது வரையில் ஒன்றும் நடக்கவில்லை ஆனுல் அப்பொழுது மான்சிங் குடும் பப் பூசாரியான துல்பிராம் என்ற பிராமணருடன் ஏற்பட்ட சண்டையே அவனைப் பிரபல திருடனுக வும், கொலைகாரனுகவும் கேடியாகவும் மாற்றியது. துல்பிராமுனுடைய குடும்பத்தை வேருடன் அறுக்க வடநாட்டில் மான்சிங் போகாத இடம் கிடையாதாம் அன்று வீட்டை விட்டுக் கிளம்பியவன் சுடப்பட்டுச் சாகும் வரை அவன் மக்களுடன் வாழ முடி யாமல் போய்விட்டது. ★

அலக்சாண்டர்

சுரதா

அந்திக்குப் பின்வந்த இரவும்; நல்ல
அழகுநில வும்சேர்ந்து பழகும் நேரம்!
சிந்தையிலே ஆனந்த உணர்ச்சி பொங்கச்
சிங்காரி கம்பாஸ்பி, கிரேக்க நாட்டுச்
சந்தத்தில் சிந்தொன்று பாடிக் கொண்டு
தனியாக நின்றிருந்த போது; அங்கே
வந்தொருத்தி, அம்மங்கை இடத்தில், கொஞ்சும்
மாவீரன் வருகைதனை உரைத்துச் சென்றாள்.

கண்ணுக்குள் கருங்கடலின் வண்ணங் காட்டும்
கட்டழகி கம்பாஸ்பி, அதனைக் கேட்டு;
வண்ணத்தை வாயிதழில் மீண்டும் சேர்த்தாள்.
மதுரசத்தில், இதழ்நிழலைப் பார்த்தாள் பின்னர்,
வெண்புகையைப் போன்றதொரு ஆடை யாலே
மேனிதனை மறைத்துக்கொண் டிருந்த போது,
மண்ணுலகை அரசாண்டு வந்த, க்ரேக்க
மகுடபதி அலெக்சாண்டர், வந்தான்.

முத்தத்தால் வரவேற்றாள் அவனை! அந்த
முடியரசனோ, தினமும், தொட்டுத் தூக்கும்
சித்திரத்தின் ஒற்றடத்தைப் பெற்று, மேனி
சிலிர்த்திட்டான் அழகியையும் சிலிர்க்க வைத்
பத்துநிமி டம்இதுபோல்! அதற்குப் பின்னர் [தான்
பனிஇரவில், மதுக்கோப்பை தாகம் தீர்த்து,
எத்தனையோ உடல்உறவுக் கதைகள் பேசி
இனித்தபடி தனிமையிலே இருந்து வந்தார்!

"உன்கன்ன மோ, பாத ரசக்கண் ணாடி!
உயர்வானி லேமிதக்கும் வெண்ணி லாவின்,
சின்னமுக பிம்பத்தைக் காட்டு கின்ற
தெளிவான நதிநீர், ஓ டுங்கண் ணாடி!
அன்றன்று புதுமூச்சு விடுதல் போல;
அன்றன்று புதுஇன்பம் காண வேண்டும்.
பொன்னுக்கு அடுத்தபடி யாயி ருக்கும்
புதுவெள்ளிச் சிங்காரச் சிலையே!" என்றான்.

"நித்திரைக்கு முன்உள்ள 'விழிப்பு' மின்னும்
நீலவிழி காட்டும்நிர் வாணம்" என்றான்.
"சத்தமிடும் முத்தங்கள்; வாய்ஒப் பந்தச்
சம்மதத்தின் பரிபாஷை!" என்றாள் மங்கை.
"சித்திரமே!" என்றிட்டான், "சித்தி ரங்கள்
தீட்டுகின்ற திறன்உண்டா உங்கட்" கென்று
கத்திவிழி கம்பாஸ்பி கேட்க; "அந்தக்
கலைப்பயிற்சி எனக்கில்லை" என்றான் வேந்தன்.

என் நண்பன் அப்பெல்லஸ், ஓவி யங்கள்
எழுதுவதி லேமிகவும் நிபுணன்! உன்னை,
"அன்னவனின் கலைக்கூடம் அழைத்துச் சென்றால்
அப்படியே படம்பிடித்து விடுவான்" என்றான்.
"என்றைக்குச் சென்றிடலாம்" என்றாள். "நாளை
எழுந்திருக்கட் டும்கிழக்கே நெருப்பு வெய்யில்
என்றிட்டான், முத்தங்கள் இட்டு இட்டு,
இரவினிலே அவளோடு இனிக்கும் மன்னன்.

வெண்புகையை வெல்லுகின்ற ஆடை யாலே,
மேனிதனை மறைத்துக்கொண் டிருந்த, அந்தப்
பெண்ணழகி அங்கத்தை உற்றுப் பார்த்துப்
பேரரசன் சிரித்திட்டான்! சிரிப்புக்குப் பின்;
கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து மூடும்
கல்நகையா, தெரியாமல் போகும்? என்றான்!
அண்டையிலே; இதழ்மயக்கத் தோடு நின்ற
அவ்வழகி அதன்பொருளைப்புரிந்துகொண்டாள்.

நடமாடும் சிங்காரி; அரசன் முன்னால்
நாணத்தை வெளிக்காட்டி; அங்கி ருந்த,
சுடர்விளக்கு தனைஅணைத்து, அறையி ருட்டைத்
துணியாக்கிக் கொண்டுவிடத் தீர்மா னித்து;
உடல்மீது பால்நுரைபோல் வெண்மை யான
உடையிருந்தும், உடல்மறைக்க, ஒளி அணைத்
கடகடெனச் சிரித்திட்டான் மன்னன்; மாது [தாள்
கனிஉதட்டால் அறைவிளக்கை அணைத்தபோது

"சிந்தையிலே வெறியேற்றி விட்டு; ஏதோ
சிறுபகுதிச் சுவைதந்து, திடுதிப் பென்று,
இந்தவிதம் துடிக்கவிடல் ஏனோ? எந்தன்
இதழ்நீரால் குளிராகும் மலரே!" என்று,
உந்துகின்ற உணர்ச்சியொடு, காலி னாலே,
ஓடைக்குள் வழிதடவி நடத்தல் போல,
அந்தஇருட் டறைக்குள்ளே, அழகி தன்னை
அலெக்சாண்டர் தேடுவதில் ஈடு பட்டான்!

"எங்கேநீ இருக்கின்றாய், என்மேல் ஒட்டும்
ஈரநில வே!"என்றான் மன்னன். அந்த
மங்கையவள், இருட்டில்உடை மாற்றிக் கொண்டே
மௌனத்தைக் கையாண்டாள் அறையில். பாயும்
சிங்கத்தைப் போன்றஅவன், நடந்து சென்று,
சிலையொன்றைக் கரத்தாலே தொட்டு "ஓகோ,
இங்கேயா இருக்கின்றாய் கம்பாஸ்" என்று,
இச்சென்றான்! சிலையைத்தான் முத்த மிட்டான்.

கற்சிலைக்கு முத்தமிட்ட சத்தங் கேட்டுக்
'களுக்'கென்று சிரித்திட்டாள் அச்சிங் காரி
சுற்றுகின்ற கொடிபோன்ற அவள்'க ளுக்கு'த்
தொனிகேட்டுப், பூனை நடை போட்டுச் சென்று
சிற்றிடையாள் தனைத்தொட்டுப் பிடித்தான். பின்
தேன்மொழியாள் தீபத்தைஅங்கு ஏற்ற [னர்த்
உற்சாகம் உண்டாக்கும் மாதின் மீது,
ஒளிவீசும் புர்தாடை இருக்கக் கண்டான்!

''இருள்செய்தாய் இவ்விடத்தைச் சற்று முன்னே!
இப்போதோ, புதியஅலங் காரம்! ஆமாம்!
எரிந்தசுடர் தீபத்தை ஏன் அணைத்தாய்?''
எனக்கேட்டான், அலெக்சாண்டர். அதற்கு எந்
''நிருவாணம் தெரியாமல் இருப்ப தற்கே [தன்
நீண்டசுடர்விளக்கணைத்துச்இருட்டுசெய்தேன்!
திரும்பவும்ஏன் புதுமறைப்பு? என்றால்; நீங்கள்
சிரிக்காமல் இருக்கத்தான் முன்போல்'' என்றாள்.

சித்திரங்கள், சுடர்விளக்கு; மலர்கள்; போன்ற
சிங்காரப் பொருள்திறந்தே இருத்தல் வேண்டும்
இத்தனைக்கும் திரையிட்டு மறைத்து விட்டால்,
இவை, இருந்தும் பயனில்லை பாரில்! கண்கள்,
நித்திரையி லேயிருக்கு மானால்; வான
நீலநிறம், பார்வைக்கு எதற்கு? இந்தச்
சத்தான கருத்தினை நீ அறிந்தி ருந்தால்,
சரீரத்தை மறைத்திருக்க மாட்டாய்!'' என்றான்.

* * *

அப்பெல்லஸ் கலைமனைக்கு வந்தான், வீர
அலெக்சாண்டர், மறுபகலில் மங்கை யோடு!
ஒப்பில்லா அழகுடைய அவளைப் புற்றி,
உயிர்நண்ப னிடம்புகழ்ந்து உரைக்க லுற்றான்.
''சிப்பத்தில் தேர்ந்தெடுத்த முத்து; இந்தச்
சிங்காரி! ஆட்டத்தில் கெட்டிக் காரி!
உப்பு இவள்! அப்பெல்லஸ்'' என்றான். ''உந்தன்
உணவுக்கா?'' என்றவனைக் கலைஞன்கேட்டான்.

புன்சிரிப்பு முகங்காட்டி, ',ஆம்! ஆம்!'' என்றான்,
புவிமெச்சும் புகழ்பெற்ற பிலிப்பின் மைந்தன்.
இன்னொன்று; இப்போது; என்ன வென்றால்;
இவளுருவை, ஓவியத்தில் வரைதல் வேண்டும்
என்றைக்கு ''நீமுடித்துக் கொடுப்பாய்'' என்றான்
''ஏழெட்டு நாட்களுக்குள்'' என்றான் நண்பன்
உன்திறமை முழுவதையும் காட்டி, மேலும்
உன்புகழை ''உயர்த்திடுக'' என்றான் மன்னன்!

எதிர்ப்புறத்தி லே,மங்கை தனை நி றுத்தி,
எடுத்திட்டான் தூரிகையை; வரைவ தற்கு!
முதன்முதலில், உடலுக்கே தலைமை யான
முகத்தின்மேல் தன்விழியை நிறுத்தி; நன்கு
பதித்துக்கொண் டான்நெஞ்சில், நிலவைப்போன்று
பளிச்சென்று ஒளிவீசும் அவள்மு கத்தை
சதிராடும் கம்பாஸ்பி, சிலைபோல் நிற்கச்,
சாயத்தின் கலவையினால் ''முகம்''மு டித்தான்.

இரண்டாம்நாள்! சனிக்கிழமை! இரத்த வெய்யில்
இருந்திட்ட அதிகாலை! அணங்கு வந்தாள்!
உரிக்காத கனியோடு, மௌனத் தோடு!
உபயோகித் தாள்இரண்டு சொற்கள். வெள்ளைச்
சிரிப்புக்கும் பஞ்சந்தான்! கலைஞன், மீண்டும்
சித்திரக்கைத் தொழில்தன்னைத் தொடர்ச்சி
தரைமீது நடமாடும் நிலவு, அந்தி [செய்தான்
சாய்ந்திட்ட நேரத்தில், திரும்ப லுற்றாள்.

ஆரம்ப தினத்தன்று, நடன மாது
அப்பெல்லஸ் கலைமனைக்கு வந்த போது
ஓரவிழி யால், அவனை நோக்க வில்லை
உதட்டாலும் சிறு அசைவு காட்ட வில்லை.
சாரத்தைத் தருகின்ற இதழ்த்து டிப்பும்
சல்லாபம் வேண்டுகின்ற கண்கு றிப்பும்
ஈரநிலா வளைவுள்ள மூன்றும் நாள்தான்
ஏற்பட்ட னஅவர்கள் இருவ ருக்கும்!

இதழிருந்தும் பேசாமல், விழிக ளைத்தான்
இருவருமே பேசும்நா வாக்கிக் கொண்டார்
கதையுண்டு, கண்பேச்சில்! முத்துப் பற்கள்
காட்டுகின்ற நிலைஉண்டு அதிக மாக.
இதற்காகத் தனிநேரம் ஒதுக்கு வார்கள்
ஏந்திழையா ளும்அவனும், கலைக்கூ டத்தில்!
இதுமட்டு மாசேட்டை, இரண்டு பேரும்
ஈராயி ரந்தடவைத் தொட்டுக் கொள்வர்.

இச்சையுண்டு இருவர்க்கும், சுவைகொ டுக்கும்
இதழ்மாற்றிக் கொள்வதற்கு இருந்துங் கூட
அச்சடித்துக் கொள்ளவில்லை, ஆசை முத்தம்
அலெக்சாண்ட ரிடமுள்ள பயத்தால்; இன்றேல்
கச்சிதமாய் அக்கலையை வளர்ப்ப தற்கா
காலதாம தப்படுத்திக் கொண்டிருப்பர்
பச்சைமரத் தருகினிலே கொடியி ருந்தும்
பயனென்ன, அதைச்சுற்றிப் படரா விட்டால்?

* * *

ஓவியத்தைக் குறையின்றி முடித்து விட்டான்
உயிர்நண்பன் ஏழாம்நாள் படத்தைப் பார்த்து,
''ஆவியில்லை என்றகுறை தவிர, மற்ற
அத்தனையும் அப்படியே!'' என்று, அந்த
ஓவியனைப் புகழ்ந்திட்டான் வேந்தன் நெஞ்சில்
உற்சாகம் இழந்தபடி இருந்த நண்பன்,
''ஆவிவைத்து நான்வாழ வேண்டும் நண்பா
அதற்காக கம்பாஸ்பி எனக்கு வேண்டும்.''

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்சாண்டர் தன்னிடத்தில், உணர்ச்சியோடு!
''அப்படியா' அப்பெல்லஸ்!'' என்று, வேந்தன்,
....

★ வேந்தன் யாது செய்யவேண்டுமென்று எண்ணுகிறீர்கள்?
எண்ணத்தைக் கவிதையாக்கி அனுப்புக.

(ஆசிரியர்)

> மனிதனுக்கு எவ்வளவு நிலம் தேவை? — அகிலமெலாம் கட்டியாளினும் அந்த ஆசைக்கோர் அளவுமுண்டோ, என்பார்கள், நிலப்பிரபுக்கள். அவர்களுக்குத்தான் சொல்கிருர், பதில், ரஷ்ய நூலாசிரியரான டால்ஸ்டாய்' அவருடைய சிறுகதை யொன்றின்' கடைசிப் பகுதி, இது.

விலைக்கு ஏதாவது நிலம் கிடைக்குமா என்று பகோம் தேடலானன். நாலு பேரைப்போல, என்றென்றைக்கும் குடியானவனுகவும், குத்தகைக்காரனுகவும் இருப்பதற்குப் பதில், தனக்கும் ஒரு பண்ணையிருந்தால் எவ்வளவு நன்ருகயிருக்குமென்று ஆசைப்படலானன்! இந்தச் சமயத்தில், தற்செயலாக ஒரு வியாபாரியின் தொடர்பேற்பட்டது பகோமுக்கு. தான் பஷ்கீர் பிரதேசத்திலிருந்து வருவதாகவும், அங்கே குறைந்த விலைக்கு நிறைய நிலம் விற்பதாகவும் தெரிவித்தான்.

"அவர்களெல்லாம் சூது வாதறியாதவர்கள். நிலத்தின் மதிப்பே அவர்களுக்குத் தெரியாது. கொஞ்சம் பக்குவமாக நடந்துகொண்டால் போதும். பெரிய பண்ணைக்காரனுகி விடலாம்," என்று தெரிவித்தான். பகோமுக்கு, ஆனந்தத்துக்கு அளவில்லை! தானும் ஒரு பண்ணைக்காரனுகி விடலாம்— பல பேர் தனக்குக் கீழ்ப்படிந்து இருப்பார்கள் — மிகவும் மகிழ்ச்சியோடு வாழலாம் என்று கனவு கண்டான். அதனுல், அந்த வியாபாரியிடம் விபரம் விசாரித்துக்கொண்டு, போகும் வழியில் அந்தப் பஷ்கீர் தேசத்து மக்களுக்காகச் சிறிது மதுபானம்— தேயிலை—முதலியவைகளை வாங்கிக்கொண்டான்! ஒரே ஒரு வேலைக்காரனுடன், வெகு ஆனந்தத்தோடு கிளம்பினன்; வீட்டை விட்டு.

பஷ்கீரிகள், நாகரீகத்தின் வாடை படியாதவர்கள். இறைச்சியும், பாலுமே அவர்கள் உணவு. பாலிலிருந்தே சகலவிதமான பண்டங்களையும் தயாரிப்பார்கள். உலக விவகாரங்கள் அவர்களுக்குத் தெரியாது. கவலையற்ற வானம்பாடிகளாய்க் கிடந்தார்கள். அவர்களுக்கென்று "தேவைகள்" அதிகமில்லை! ஆகவே, சண்டையும் சச்சரவும் ஏற்பட வழியில்லை — அமைதியாகவும் ஆனந்தத்தோடும், அவர்கள் காலம் ஓடிக்கொண்டிருந்தது. அன்புதான், அவர்கள் சொத்து! அப்படிப்பட்டோர், பகோம் வருவதைக் கண்டார்கள். தத்தம் கூடாரத்திலிருந்து ஓடிப்போய், அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். வெளிநாட்டிலிருந்து வந்துள்ளான் என்று தெரிந்ததும் அவனை அழைத்துப்போய், சகல மரியாதைகளையும் செய்தனர். பகோமும், தான் கொண்டுவந்த பொருள்களை அவர்களுக்குப் பகிர்ந்தளித்தான். அதைக் கண்ட அவர்கள் "ஐயா! உங்களது அன்புக்குப் பதிலாக, நாங்கள் ஏதாவது கைம்மாறு செய்ய விரும்புகிருேம். விருந்தினரின் விருப்பத்தை யேற்று அதை நிறைவேற்றிவைப்பது, எங்களுடைய பரம்பரைப் பண்பு, வந்தாரை உபசரிக்கத் தயங்கோம். எங்களிடமிருந்து, எதை விரும்புகிறீர்கள். சொல்லுங்கள்," என்று கேட்டார்கள்.

"உங்களிடம் இருக்கும் பொருள்களில் என் மனதைக் கவர்ந்தது, இந்த நிலபுலன்கள்தான். எங்கள் பூமியில், மக்கள் பெருகிவிட்டார்கள்; வளமும், குறைந்து வருகிறது. இங்கோ, நிறைய நிலம் வளத்தோடு இருக்கிறது."

"இதுதான பிரமாதம்! நீங்கள் கொண்டு வந்த பரிசுகளுக்கு ஈடாக எவ்வளவு நிலம் வேண்டுமானலும் தருவதற்குச் சித்தமாயிருக்கிருேம். எவ்வளவு வேண்டுமென்று நீங்கள் சுட்டிக்காட்டுகிறீர்களோ, அந்தப் பகுதி முழுவதும் உங்களுக்கு அளிக்கப்படும்."

அவர்கள் சொன்ன பதிலைக் கேட்டதும் பகோமுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. தன்னுடைய ஊரிலிருக்கும் ஏனைய நிலப்பிரபுக்களையெல்லாம்விடத் தான் பெரிய பிரபுவாகப் போவதை எண்ணி இறுமாந்தான். தனக்குக் கீழ், இவ்வளவு நிலமும் வந்து விட்டால், தான் எப்படிவாழலாம், தனக்குக்கீழ் எத்தனை பேர் அடி பணிந்துகிடப்பார்கள்-என்றெல்லாம்எண்ணியெண்ணிமகிழலானன். அவன் உள்ளத்தில் அனைத்தையும் தான் கட்டி ஆள வேண்டுமெனும், பேராசையே, பெரும் சப்தமிட்டது

அண்ணல்

பஷ்கிரிகளின் தலைவன், "எந்த நிலம் வேண்டும். சொல்," என்றான்.

நாகரீக வாடை படிந்தவனல்லவா?—அதனால் அவனுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. "எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வைத்துக்கொள் என்கிறீர்கள். ரொம்பச் சரி. எனக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் நிலம்தான். ஆனால், அது எந்தளவு என்பதைத் திட்டவட்டமாக முடிவு செய்துகொள்ள விரும்புகிறேன். அதைப்பற்றி நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும். ஏனெனில், நாளையதினம், என்ன நேருமென்று யாருக்கும் தெரியாது. நல்ல உள்ளத்தோடு நீங்கள் இன்று எனக்கு நிலம் தருகிறீர்கள். நாளை, உங்கள் மக்கள், இந்த நிலம் தங்களுடையதென வாதாடலாமல்லவா? அதனால், ஒரு பத்திரம் எழுதிக் கொள்வோம்," என்றான், சாதுர்யமாக. பத்திரம் எழுதி, ஒரு இடத்துக்கு உரிமை கொண்டாடும் நாகரீக மனிதனாயிற்றே, அவன்! அதனால், அப்படிச் சொன்னான்!!

அவர்கள், அவன் சொல்லுவது கேட்டுச் சிரித்தார்கள்—இப்படி மண்ணுக்கு ஆசைப்படுகிறானே, என்று! அலட்சியத்தோடு, "சரி! எங்களில் ஒருவனுக்கு எழுதத் தெரியும். அவனைக் கொண்டு எழுதச் செய்து, பக்கத்திலுள்ள நகருக்குப் போய் பத்திரம் செய்துவிட்டால் போகிறது," என்றான் தலைவன்.

"விலை, என்னவென்று சொல்லவில்லையே!"

"விலையா? இங்கு, ஒரே விலைதான்! நாளொன்றுக்கு ஆயிரம் ரூபிள்!!"

"நாளொன்றுக்கா! இதென்ன கூத்து? நிலம் எவ்வளவு ஏக்கர்......"

"ஏக்கர் கணக்கெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நாள் கணக்கிலேதான், நாங்கள் விற்போம். ஒரு நாளில் எவ்வளவு நிலத்தை நீ சுற்றி வருகிறாயோ, அவ்வளவும் உனக்குச் சொந்தம்தான். அந்த ஒரு நாளுக்கு மட்டும், ரூபிள் ஆயிரம் விலை."

வியப்பும், திகைப்பும் சூழ்ந்தது பகோமை. ஒரு **நாளில்! எவ்வளவு சுற்றி வந்தாலும்!!**—என்று எண்ணும் போதே, அவனுக்குப் பேரானந்தமாயிருந்தது.

தலைவன் சொன்னான், "ஆனால் ஒரு நிபந்தனை; அதே நாளைக்குள் புறப்பட்ட இடத்துக்கே மீண்டும் வந்துவிட வேண்டும். இல்லையானால், பணம் பறிபோய்விடும்."

"எந்தெந்த வழியில் போனேன் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?"

"எந்தப் பகுதி உனக்குப் பிடிக்கிறதோ, அந்தப் பகுதிக்கு நாம் யாவரும் போவோம். ஒரு மண்வெட்டியுடன், நீ மட்டும் புறப்படு. உனக்குத் தேவையென்று கருதுகிற இடத்திலெல்லாம் மண்வெட்டியால் அடையாளம் செய்துகொள். திரும்புகிற இடத்திலெல்லாம் ஒரு குழி தோண்டி மண்ணைக் குவித்து வை. நீ திரும்பி வந்ததும் நாங்கள் ஒரு ஆளை அனுப்பி நீ தோண்டிய குழிகளோடு குழி சேர்த்து எல்லைக்கோடு போட்டதுபோல உழுது விடுகிறோம். நீ சுற்றிவிட்டு சூரியாஸ்தமனத்துக்குள், திரும்பிவிட வேண்டும்."

*

இரவெல்லாம் இன்பக் கனவுகளால் அலைக்கழிக்கப்பட்ட பகோம், எப்போது விடியும் விடியுமென்று காத்துக் கிடந்தான். கீழ்வானம் வெளுத்தது! தன் வேலையாளை எழுப்பிக்கொண்டு, பஷ்கீரத் தலைவனின் கூடாரத்துக்குப் போனான்.

"இன்னும் கிளம்பவில்லையா? ஊம்! ஊம்!! நேரமாய்விடும்," என்று பகோம் அவசரப்படுத்தினான்.

தலைவன், தன் சகாக்களுடன் புறப்பட ஆயத்தமானான். மரியாதையாக பகோமுக்குச் சிறிது சுவைநீர் அளித்தார்கள்; அதைக் குடித்தால் எங்கே நேரமாகி விடுமோ என்று பகோம் அவசரப்படுத்தினான்.

குறிப்பிடப்பட்ட மேட்டுக்கு எல்லோரும் வந்து சேர்ந்தனர். எதிரே, ஆகாயத்தைப் போலப் பரந்து கிடந்த நிலத்தைக் கண்டதும் பகோமுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை! அந்த இடமெல்லாம் கழனிகளாகி விட்டது போலவும், கோதுமைக் காடாக மாறிவிட்டது போன்றும், பணம் வந்து தன் மடியில் கொட்டுவது போலவும் இருந்தது, அவனுடைய கண்களுக்கு.

தலைவன் தன்னுடைய குல்லாயை எடுத்து தரையில் வைத்து, "இதுதான் அடையாளம். இங்கிருந்து புறப்பட்டுச் சுற்றி மீண்டும் இங்கே வந்துவிட வேண்டும்," என்றான். பகோம், பணத்தை எடுத்து அந்தக் குல்லாய்க்குள் போட்டுவிட்டு, ஒரு பையில் ரொட்டியும், ஒரு சுரப்பியில் தண்ணீரும் எடுத்துக் கொண்டான். வேலைக்காரனிடமிருந்த மண்வெட்டியை வாங்கிக்கொண்டு வேகவேகமாகக் கிளம்பினான். எந்தப் பக்கமாகப் போகலாம், என்பதில் பிரமிப்புத் தட்டிற்று. கிழக்கு நோக்கிக் கிளம்பினான். கீழ்வானில் கதிரவனும் கிளம்பினான்! வெகுதூரம் சென்றபின், திரும்பிப் பார்த்தான். மேட்டுப்பாறை தெரிந்தது. அங்கே நின்றுகொண்டிருந்த பஷ்கீரிகள் எறும்புகளைப் போலத் தென்பட்டார்கள். மூன்று மைல் வந்திருப்போம்! — என்று மனதுக்குள் கணக்குப் போட்டுக்கொண்டான். "இந்த இடம் மிகவும் அருமையாக இருக்கிறது. இதைவிடக்கூடாது. இன்னும் ஒரு மூன்று மைல் தூரம் போகவேண்டும். பிறகு, இடதுபக்கம் திரும்பவேண்டும்," என்று சொல்லிக்கொண்டான்.

வெயில் உறைக்க ஆரம்பித்தது, மேலும் திரும்பிப்பார்த்தான், இப்போது. பாறை தெரிந்ததே ஒழிய, அதில் நின்றவர்கள், கண்ணுக்குத் தென்படவில்லை. "சரி! இனி திரும்பவேண்டியதுதான்" என்று கருதிக்கொண்டு, அந்த இடத்தில் ஒரு குழி தோண்டினான். தான் கொண்டுவந்திருந்த ஜாடியைத் திறந்து கொஞ்சம் நீர் பருகிவிட்டு, இடப்பக்கம் திரும்பி வேக வேகமாக நடக்கலானான்; பகோமுக்குப் பசியெடுத்தது—கதிரவனைப் பார்த்தான்; நடுப்பகலாகிவிட்டது என்று தெரிந்தது. கீழே அமர்ந்து, கொண்டுவந்திருந்த ரொட்டியில் சிறிது உண்டு நீர் பருகினான். 'படுத்தால் எங்கே அயர்ந்து விடுவோமோ?; என்று அஞ்சியவனாக, உடனே எழுந்தான். கடுமையான வெயில்! உண்டகளைப்புவேறு!!- என்றாலும் பகோம், சளைக்கவில்லை. எவ்வளவு நிலம் கிடைக்கப்போகிறது?—என்று எண்ணி மனதைத் தேற்றிக்கொண்டவனாக, நடந்தான். நெடுந்தொலைவு நடந்தான். இடது பக்கம் மீண்டும் திரும்பலாமென நினைத்தபோது அங்கே வளமான நிலப்பகுதி தென்பட்டது, "அடடா! இதை விட்டு விடலாமா? இதுவும் இருந்தால்தானே நமக்குப் பெருமை! சணல் போட்டால், இங்கே நன்றாக வளரும்", என்று

எண்ணினன். மேலும், அத்திசையில் நடந்து அந்த வளமான பகுதியையும் தாண்டினன், பிறகு, மண் வெட்டியால் அடையாளம் செய்து விட்டு, இடப் பக்கமாகத் திரும்பினன். கடுமையான வெயில்! கற்பாறையெல்லாம், பூச்சி பறப்பது போலிருந்தது; அவ்வளவு கோரமான வெயில்—அசதிக்கு ஆளாகி, உடல் சுகத்தைக் கருதி விட்டால் என்ன ஆவது? சொத்து அல்லவோ; பெரிது! "இரண்டு பக்கங்களி லேயே இவ்வளவு நேரத்தைக் கடத்தி விட்டேனே. இந்த மூன்றாவதுதிசையில், சிறிது தூரம் போனாலே போதும்", என்று நினைத்தபடி கொஞ்சம் விரைவாக நடையைக் கட்டினன், பொழுது சாய ஆரம்பித்தது—மூன்றாவது திசையில் இரண்டு மைல் கூட இன்னும் ஆக வில்லை. குறைந்தது, பத்து மைலாவது சென்றால் தான் பாறைக்குப் போய்ச்சேர முடியும். "நிலம் கோணலாக இருந்தாலும் சரி—பரவாயில்லை. நேராக இப்படியே பாறையை நோக்கி நடக்க வேண் டியதுதான்," என்ற எண்ணம் மனதைக்குடையவே, அவசர அவசரமாக அடையாளத்துக்கு ஒரு பள்ளம் தோண்டி விட்டு, பாறையின் பக்கம் வேகமாக நடக்கலானன்.

* * *

களைப்பு தாக்கிற்று; அவனை! எதிர் வெய்யில் வேறு!! பூட்சு போட்டிருப்பது நடக்கக் கஷ்டமாயிருக் கிறதென்பதால், அதை வீசியெறிந்து விட்டான். வெறும் கால்கள், ஒன்றோடொன்று பின்னிக் கொள்ளலாயின. கொஞ்ச நேரம், ஓய்வெடுத்தால் தேவலாம் போலிருந்தது. உள்ளத்துப் பேராசையோ, "அட, முட்டாளே! அவசரமாக நட, நட" என்று பதைக்கச் செய்தது, குன்றத்தைப் பார்த்தான்—நெடுந்தொலைவு இருந்தது. சூரியனைப் பார்த்தான்; அடிவானம் நோக்கி நெருங்கிக்கொண்டிருந்து.

பகோம், தன் வசமிருந்த கோட்டு, குல்லாய் எல்லாவற்றையும் தூக்கி யெறிந்து விட்டு, ஓட ஆரம் பித்தான்." "ஐயோ! பேராசையால் படுமோசம் போனேனே? அஸ்தமனத்துக்கு முன் போய்ச்சேர முடியாது போலத் தோன்றுகிறதே!", என்று கலங்கினன்.

பதைப்பும் கலக்கமும், அவனைத் திணறடித்தது. வேகமாக ஓடினன். வியர்வை வெள்ளமாயிற்று. நெஞ்சு, அடித்துக்கொண்டது. என்றாலும் ஓடினன். எப்படியாவது, பாறையை அடைந்துவிட வேண்டு மென ஓடினன். குறிப்பிட்ட இடத்தையும் நெருங்கி விட்டான்; பாறையின் மீது பஷ்கிரர்கள் தெரிந்தனர். சூரியன், அஸ்தமனமாகும் நேரம் நெருங்கவே, அவனை நோக்கி "ஓடிவா! ஓடிவா!!", என்று கூவினர். அவர் களின் குரல், அவனை இன்னும் வேகமாக ஓடச் செய் தது. "எங்கே மூச்சு நின்று விடுமோ?" என்கிற அச்சம் ஒரு பக்கம் அடித்துக்கொண்டாலும் கூட அவனால், ஆசையை அடக்கமுடியவில்லை. அடி வானத்துக்குள், ஆதவன் புதையப் போகிறான். அந்த நிறம், இரத்தமயமாகயிருந்தது; இன்னும் சற்று நேரத்துக்குள் சூரியனின் ஒரு நாள் வாழ்வு முடிந்து விடப் போகிறது. பகோம், விலாவைப் பிடித்துக் கொண்டு ஓடிவந்தான். பாதையின் அடிவாரத்துக்கு வந்துவிட்டான்; அந்தோ! இருள் சூழ்ந்துவிட்டது, அண்ணாந்து பார்த்தான். ஐயோ!—என்றலறினன். அவன், குன்றின் அடிப்பாகத்திலிருந்ததால், அஸ்த மனமாகி விட்டதாகத் தெரிந்ததேயொழிய பாறையின் உச்சியிலிருந்தவர்களுக்கு, இன்னும் சூரியன் சரியாக மறையவில்லை, அதனால் அவர்கள், "வா! வா! ஓடி வா!" என்று கூவினர். பெருமூச்சுவிட்டபடியே, செங்குத்தான அந்தப் பாறையின் மீது ஏறினன்—ஓடி ஓடி ஏறினன். அதோ, தெரிகிறது குல்லாய்—அதைத் தொட்டுவிட வேண்டியதுதான். ஐயோ! அவன் கால்கள் இப்படித் தடுமாறி விட்டனவே?—எனினும், நிற்கவில்லை. கரங்களை நீட்டுகிறான்! அப்பாடா, அவன் கைகள் குல்லாயைத் தொட்டு விட்டன.

"சபாஷ்! மிகவும் கெட்டிக்காரன், நீ. எவ்வளவு நிலத்துக்கு அதிபதியாகிவிட்டாய்" என்றான் பஷ்கிரர் களின் தலைவன், தன் வியப்பை வெளிக் காட்டிய வண்ணம்.

கீழே விழுந்த தன் எஜமானரைத் தூக்க, வேலைக் காரன் ஓடிவந்தான். ஒரே இரத்தம்! மூச்சுப் பேச்சில்லை. எந்த உயிர் இருந்தால், உலக வாழ்வை அனுபவிக்க முடியுமோ, அந்த உயிரை பரிதாபத்துக்குரிய பகோம் இழந்துவிட்டான்! அவன் உடலைவிட்டு, அணு அணு வாக, தன் உயிரை அன்று வெளியேற்றி விட்டான்!

நாகரீகமில்லாத அந்த மக்கள், "ஐயோ, பாவம்!" என்று அனுதாபம் காட்டினர்.

வேலைக்காரன், தன் எஜமானனை அடக்கம் செய்ய, குழிதோண்டினன்; புதைத்துவிட்டான்.

பகோமுக்குத் தேவையாயிருந்ததெல்லாம் ஆறே ஆறடி நிலம்தான். உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் அளந்தாலும் அவனுக்கு ஆறடி நிலம் தான் தேவையாயிருந்தது.

★

கொழந்தகளா! ஒரு கதை சொல்றேன், கேளுங்கோ!

ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தான்-பெரிய அறிவாளி — நல்லவன்— ஆனா ஜனங்களுக்கு எது நல்லதுன்னு அவனுக்குத் தோன்றதோ அதைச் செய்வான் — யாருடைய தயவு தாட்சண்யம் கிடை யாது. பயமும் கிடையாது.

இப்படி அவன் இருக்கச்சே அவனுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது.

அதை மூட்டிவிட்டவன், எப்படியோ 'ஜனங்களை' ஏமாற்றி பழய ராஜாவை கவிழ்த்துவிட்டான். போனா போறதுன்னு, அந்தப் பழய ராஜா, எனக்கு இந்த ராஜா வேலையே வேண்டாம்னு—சொல்லிட்டு 'ராஜா' வேலையை விட்டுட்டான்.

எதிர்ப்பு மூட்டினனே அவனே ராஜாவாயிட் டான்!

பகவானுக்கும் பொறுக்குமோ? நல்ல ராஜாவை நாசமாக்கினனே இந்த மகாபாவின்னு கோபம் கோபமா வந்தது பகவானுக்கு.

'புது ராஜா'வுக்காகப் பழயராஜாவைக் கவிழ்த்த காரியத்துக்கு ஒத்தாசையாக இருந்த ஜனங்களுக்கு, புத்தி கத்துத்தரவேணும்னு, தோன்றிச்சு—உடனே பிரம்மாண்டமான புயலை உண்டாக்கி — ஊரையே அழித்துவிட்டு வான்னு அனுப்பிவைத்தார்.......

இப்ப அடிச்சுதே புயல், அது இதுபோலத் தானன்னு கேட்டுடாதிங்க. காலம் ரொம்பக் கெடடுப் போயிருக்கு.......

புதிய பொலிவு

"அம்மாடியேயோ...! நான் மாட்டேன். யாராச்சும் பார்த்துட்டா...?

சாமி சாட்சியாச் சொல்றேன்...

பெத்தவங்க பெரியவங்களைக் கேட்டு முடிப்பயா, எங்கிட்ட வந்து 'கெக்கெபிக்கே'ன்னு கொஞ்சிகிட்டு இருந்தா...?

நானென்ன மாடப்புருவா, நீ சீட்டி அடிச்சதும் ஓடியாந்து, உன் தோளிலே தொத்திக்கிட...

சினிமா பார்த்துப்பார்த்து, நீ வேண விளையாட்டு கத்துகிட்டே...இதொபாரு...எனக்கு அதெல்லாம் பிடிக்காது... சொல்லிட்டேன்......

ஆமா, நீ இதுவரையிலே என்னிடம் சொல்லவேயில்லையே, உனக்குப் பொரிவிளங்கா உருண்டைன்னு, ரொம்பப் பிரியமாமே...இந்தா, இரண்டுதான் மிச்சமாச்சி...

உன் கண்ணுக்கு நான் அழகுன்னு, ஊரார் அவ்வளவு பேருமா, என்னை அழகின்னு சொல்லுவாங்க; குப்பி பாட்டி என்னை என்னு சொல்லும் தெரியுமா?

போடிபோடி கோணவகுடுக்காரி, எப்பப் பார்த்தாலும் இளிச்சிகிட்டுக் கிடக்கறயே, பொண்களுக்கு இதுவா இலட்சணம்னு சொல்லும்...

அப்பப்பா! போதும்போதும்னு ஆயிடுது உன்னண்டெ சிக்கிவிட்டா...இது என்ன கன்னமா, பச்சரிசி மாங்காயா...? நகத்தைப்பாரு சாமியாரு மாதிரி......! தா! ரொம்ப விளையாடாதே, வெட்கமா இருக்கு...சிரிப்பு பகீல்னு வருது...... அதோ அந்தாபக்கம் சோளக் கொல்லையிலேதான் சொக்கப்பன் இருக்கருன்......அவன் காதிலே நான் சிரிக்கிறது விழுந்திச்சி, அவ்வளவுதான், வீட்டுக்கு வந்து கலகத்தை மூட்டிவிட்டுத்தான் தூங்கப்போவான்......

உன்னை நம்பாமெ நான் வேறே யாரை நம்புவேன்· என் மனசிலே அந்த நம்பிக்கை இல்லையானு, இப்படி உங்கூடப் பழகுவனு. பேசுவனு...ஆனு, 'எதுக்கும், ஆகவேண்டிய காரியத்தை காலகாலத்திலே முடிச்சுட வேணும்டி, ஆம்பிள்ளைக மனசு ஒரு வேளைபோல மறுவேளை இருக்காது...... எந்தப் பாவிமகனுவது, கதைகட்டி ஊரிலே உபத்திரவத்தை மூட்டாத முன்னமேயே, மூனுமுடி போட்டுகிடறதுதான் நல்லது'ன்னு இஞ்சிக் கொல்லையார் மக இருக்கா பாரு பருவதம். அவ சொல்ரு......

இப்படித்தான் பேசத்தெரிந்தது அந்த வஞ்சிக்கொடியாளுக்கு. கிராமத்துக் கட்டழகி, எனவே அவளுக்கு, அன்பே! ஆருயிரே! இன்பமே! இன்னமுதே! இதய ஜோதி! என்ற முறையில் பேசத் தெரியாது. கண்ணாளா! தங்களைக் கண்டதும், கதிரவனைக் கண்ட கமலம் மலருவதுபோல என் அகமும் முகமும் ஒருசேர மலருகிறது; வீணையின் நரம்புகளை இசைவல்லான் தொட்டுத் தடவி இனிய கானத்தைப் பிறந்திடச் செய்வதுபோல, என்னைத் தொட்டிழுத்து முத்தமிட்டதும், எனக்கு வாழ்வின் கீதம் வசிகரமாகக் கேட்கிறது, என்றெல்லாம் 'வசனம்' பேசத் தெரியாது; அவள் அப்படிப்பட்ட வசனங்களைச் சினிமாவில் இரண்டோர் முறை கேட்டதுண்டு—அப்போதுகூட அவள், எப்படி வெட்கத்தைவிட்டு இப்படியெல்லாம் பேசிக்கொள்கிருர்கள் என்று எண்ணிக்கொள்வாள். அவள் கல்லூரிப்பெண்ணல்ல, காதலுக்காகச் சாம்ராஜ்யங்களை இழக்கத் துணிந்தவர்கள், வாள் முனையை எதிர்த்தவர்கள், ஊர்ப்பகையை ஏற்றுக் கொண்டவர்கள், உருமாறிப் போனவர்கள், உன்மத்தரானவர்கள் ஆகியோர் பற்றிய கதைகளைப் படித்ததில்லை. அவள் கேட்ட இரண்டொரு கதைகளிலே துக்கப்படவும் கஷ்டப்படவும்தான் பெண் ஜென்மம் இருக்கிறது என்றுதான் தெரிந்துகொண்டிருந்தாள். மல்லிகையின் மணம், ஆகா! மனதுக்கு அளிக்கும் இன்பத்துக்கு ஈடானது வேறேதுமில்லை என்று, காகித மலரினை முகர்ந்து கொண்டே, பேசிடும் நாடகக்காரர்போல அல்லாமலும்

★ ஒரு ★

கிராமீயக் காவியம்



காதலைப்பெற்று இன்புற்று அனுபவம் பெருமலேயே, வீட்டில் காட்டுக் கூச்சலின்றி வேறு கேளாத குடும்ப வாழ்க்கையில் இருந்துகொண்டே, காதலின் மணம், மாண்பு, மதுரம் ஆகியவைபற்றிப் பேசிடுவோர் போல அல்லாமலும், செல்லி காதலைப்பற்றிய பேச்சோ பாட்டோ தெரிந்துகொள்ளாமலேயே, உண்மைக் காதலைப்பெற்று மகிழ்ந்தாள்— அவளுக்கு அந்த இன்பத்தை அளித்த வேலப்பன், 'வசனம்' கேட்டிருக்கிருனே தவிர, மனப்பாடம் செய்துகொண்டு பேசுபவனல்ல, சில சமயங்களிலே ஒரு அடி இரண்டு அடி, காதல் பாட்டுப் பாடுவான், தலைப்பு ஒன்று முடிவு மற்றென்ருக இருக்கும்!! கொடி அறியாமலே, மணம்கொண்ட மல்லிகை மலர்ந்திருப்பதுபோல, செல்லியின் உள்ளத்தில் காதல் பூத்து, மணம் பரப்பிற்று. கிராமம், எனவே யாரும் அறியார்கள் என்று இவர்கள் எண்ணிக்கொண்டிருந்தபோதே, செல்லாயி, வேலப்பன், விஷயம் வெகுவாகவும் வேகமாகவும் பரவிக்கொண்டிருந்தது. வம்பு தும்புக்குப் போகாதவன், வருவாய் அறிந்து செலவு செய்பவன், பெரியவர்களிடம் மரியாதை காட்டுப்வன், பொருளுக்காக அலையமாட்டான், இல்லை என்று எவரிடமும் கை ஏந்தவும்மாட்டான், உழைப்பான், நத்திப் பிழைக்கமாட்டான் — ஊருக்கு உபகாரம் செய்வான், பெரியதனக்காரனுகி மிரட்டமாட்டான் — என்று, வேலப்பன் குணம் கிராமத்தாரால் பாராட்டப்பட்டது.

அம்மை நோய் கடுமையாகப் பரவி, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கிராமத்திலே பாதிப் பேர்களைப் பலி வாங்கிவிட்டது — அந்தச் சமயத்தில் தான், வேலப்பனுடைய தாயும் தந்தையும் இறந்து போயினர்—ஒண்டிக் கட்டையானுன் வேலப்பன்.

"இனி அவனுக்கு ஒரு கால்கட்டு ஏற்பட்டு, அதன் வயித்திலே ஒரு பூவோ பிஞ்சோ முளைத்து, பிறகுதான், வேலப்பனுக்கு ஒரு குடும்பம் அமைய வேண்டும்" என்று கிராமத்துக் கிழவர்கள் பேசிக் கொள்வார்கள்.

"அவனுக்குமட்டும் தெரியாதா? தெரிஞ்சுதான், வேலப்பன், நம்ம சடையாண்டி மக இருக்காளே, செல்லி, அவளைச் சுத்திச்சுத்தி வட்டமிட்டுக்கிட்டு வாரான்..." என்று குறும்புத்தனமானவர்கள் பேசுவார்கள்.

'அடச்சே! இவனைப் பாரு! வயசுக் காலத்திலே இதெல்லாம் நடை பெறத்தானே செய்யும். எல்லோருமேவா, இவனைப்போல சுடுமூஞ்சிச் சுப்பனுக இருப்பானுக...ஒவ்வொருத்தரும், அந்தப் பருவத்திலே, ஓடி ஆடிப் பாடிகிட்டுத்தான் இருப்பாங்க... பய, தப்புதண்டா பேர்வழி இல்லா, செல்லி இருக்காளே அவளும், சூதுவாதில்லாமே பேசிச் சிரிப்பாளே தவிர, பழி பாவத்துக்குப் பயந்த பொண்ணு; அடே அப்பா! சடையாண்டி என்ன இலேசுப் பட்டவனு? துளி சந்தேகம் வந்தாலும்போதும், சீவிடுவான் தலையைச் சீவி!" என்று அனுபவமிக்க பெரியவர் கூறுவார்.

செல்லி—வேலப்பன், காதலில்கடும்புயல் ஏதும் வீசவில்லை. மூன்ருவது 'ஆசாமி' யாரும் குறுக்கிட்டு அமளிமூட்டவில்லை. சடையாண்டியும் தடை கூற வில்லை. கலியாணத்தைச் சுருக்காக முடித்துவிட வேண்டும், என்று வேலப்பனிடம் சடையாண்டி 'ஜாடைமாடை'யாகச் சொல்லியும் விட்டான். கிராமத்துக்கு ஒரு நல்ல விருந்து விசேஷம் நடத்துகிற அளவுக்குக் கொஞ்சம் 'காசு' சேரட்டும் என்று வேலப்பன் காத்துக் கொண்டிருந்தான். அதற்காக அவன் பல மாதிரி யோசனைகள் செய்வதுண்டு. செல்லாயிக்கு, வெள்ளைக்கல்லிலே கம்மலும், சிகப்புக்கல்லிலே மூக்குத்தியும், காலுக்கு வெள்ளியிலே கொலுசும், கழுத்துக்கு ஏதாச்சும், செய்துபோட்டு, கிராமத்தாருக் கெல்லாரும் 'ஒரு வேளை சோறு' போட்டு, கலியாணத்தை 'சம்பிரமாக'ச் செய்யவேண்டும் என்பது வேலப்பன் ஆசை..

"வேலப்போய்! உன் கண்ணுலத்திலே ஊர்கோலம் உண்டா டோய்!" என்று கேலி செய்வார்கள், ஒத்த

வயதினர்; "ஆமாம்டா! செய்தா என்னடா! ஆனே மேலே அம்பாரி, குதிரை மேலே மேளதாளம், பொய்க் கால் குதிரை கூத்தாட்டம், எல்லாம்தான் நடக்கப் போவுது. பவுன், பவுனுய் விளேயுது, என் கொல்லே யிலே......நீங்களெல்லாம்தான், பழையமாதிரியாகவே, காரும் சிறுமணியும் விதைத்துவிட்டு கிடக்கறிங்க, நான் 'குச்சிக்கிழங்கு' போட்டிருக்கறேன்...... தங்க மாட்டம் விலேபோகுது, குச்சிக்கிழங்கு தெரியுமா...... தூரத்துச் சீமைக்கெல்லாம் வண்டி வண்டியாப் போகுது...... அதிலே கிடைக்கப்போற காசைத் தான் நம்பிகிட்டு இருக்கறேன்...குச்சிக்கிழங்கு காசு ஆனதும் நாள் பார்க்க வேண்டியதுதான்." என்று வேலப்பன் உற்சாகத்துடன் கூறுவான்.

நகரத்திலே ஒரு வேலேயாக வேலப்பன் போயிருந்தபோது 'குச்சிக்கிழங்கு' பயிரிடுவதாலே கிடைக்கும் இலாபத்தைக் குறித்து கடைவீதியிலே பேசிக்கொண்டதைக் கேட்டு, பிறகு பல பேரிடம் அதைப்பற்றிய விவரம் கேட்டுத் தெரிந்துகொண்டான். பிறகு குச்சிக் கிழங்கு பயிர்வைத்தான்...... யாரோ வியாபாரிகூட, பயிர் வளமாக வந்தபோது பார்த்துவிட்டு, 'மாசூல்' முழுவதும் பணம் கொடுத்து வாங்கிக்கொள்ளுவதாக வாக்களித்தார்; வேலப்பனுக்கு அதனுலே அதிக நம்பிக்கை ஏற்பட்டது

செல்லாயியை அவன் சந்திப்பதென்பது, மாலே வேளேகளில் யாருமறியாமல், என்கிற விதத்தில் அல்ல.

கழனிப்பக்கம் இருவருக்குமே வேலே இருக்கும்—தோப்பு துரவுக்கு இருவருமே போகவேண்டிய அவசியம் நேரிடும், அப்போதெல்லாம் சந்திப்புதான்.

"தா! செல்லாயி! வாயேன், அதோ அந்தாலே இருக்கிற திருக்குளத்தண்டே, பூ பறிச்சுத்தாரேன், தாமரைப் பூ. அழகா இருக்கும்,......" என்று அவன் சில வேளேகளில் அழைப்பான். அவன் கண்கள் வேறு ஏதேதோ பேசும். செல்லாயிக்கு சிரிப்பு வரும், கோபமும் பயமும் வந்தவள்போலாகி "அம்மாடியோ...! நான் மாட்டேன்...... யாராச்சும் பார்த்தூட்டா......?" என்று கேட்டுவிட்டு, ஓடிவிடுவாள்.

"பயங்காளிப் புள்ளே! சுத்த பயந்தாங் கொள்ளி!......" என்று கேலியாகக் கூறுவான் வேலப்பன்; கூறிக்கொண்டே சுற்று முற்றும் பார்த்துக் கொள்வான், யார் கண்ணிலாவது பட்டு விட்டோமோ என்ற பயத்தால்!!

"சாமி சாட்சியாச் சொல்றேன், அப்பாரு பேசி கிட்டு இருந்ததை நான் என் காதாலே கேட்டேன், உனக்குத்தான் என்னேக் கட்டிவைக்கப் போருங்க..." என்று செல்லாயி ஒரு நாள், அவனுக்குத் தைரிய மளிப்பாள்; பிறகோர் நாள், அவளே பயந்த நிலேயில், 'மூணுமுடி' போட்டாத்தான் நல்லது என்று யாராரோ சொல்கிருர்கள் என்று கவன மூட்டுவாள்!

இதற்கிடையிலே, பொரிவிளங்காய் உருண்டைகள் அவனுக்குக் கிடைக்கும், நகக்குறி இவளுக்கு!! உரம் அதிகம் தேவைப்படாமலே, எல்லாப் பயிரும் செழிப்பாக வளரும் கிராமமல்லவா, காதல் மட்டும் என்ன விதிவிலக்கா! கவர்ச்சிகரமாக வளர்ந்து வந்தது.

* * *

குச்சிக் கிழங்குதான் இனி ஆகவேண்டிய காரியத்தை ஆகும்படிச் செய்யவேண்டும்...அது ஓங்கி வளர்ந்து, உருவம் பெறுவதற்கான உழைப்பினே, தட்டாமல் தயங்காமல் வேலப்பன் கொட்டினன்—பயிரும் அருமையாக வந்தது — கிழங்கும் தரம்தான் என்று தெரிந்தது—ஆனல் 'பலன்' எதிர்பார்த்தபடி கிடைக்கவில்லே.

குச்சிக் கிழங்கு மூலம் தயாரான 'சவ்வரசி' வங்காள நாட்டுக்கு ஏராளமாகச் சென்றுகொண்

டிருந்தது—அதனாலேயே நல்ல கிராக்கி இருந்தது—விலையும் சூடு பிடித்து இருந்தது — அதனால் குச்சிக் கிழங்கு பயிர் செய்தால் கணிசமான இலாபம் கிடைத்தது.

குச்சிக்கிழங்குகொண்டு செய்யப்படும் 'சவ்வரசி' சத்தற்றது, உடலைக் கெடுக்கக்கூடியது, இனி வங்காளத்தில் அதனைக் கொண்டுவரக் கூடாது என்று, புதிதாக ஓர் உத்தரவு கிளம்பிவிட்டதாகச் சொல்லி, வியாபாரிகள், குச்சிக்கிழங்கு வாங்குவதைக் குறைத்துக்கொண்டார்கள் — பத்து மாதம் பாடுபல கொடுத்து, பிரசவத்தின்போது ஆபத்தையே உண்டாக்கி கடைசியில், வைத்தியர் உதவிபெற்று, வெளியே வந்த குழந்தை, 'ஊமை' என்று தெரிந்தால், தாயின் மனம் என்ன பாடுபடும்! வேலப்பன் நிலைமை அப்படியாகிவிட்டது. கண் எதிரே குழந்தை இருக்கிறது, கருவில் உருவாகியது, மெத்தக் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தது, வாரி அணைத்து, உச்சி மோந்து முத்தமிட்டு பட்ட கஷ்டம் அத்தனையும் பஞ்சாகப் பறந்ததடா பாலகனே, என்று கொஞ்சிக் குலவிய தாய், தான் பெற்ற செல்வம், 'ஊமை' என்று அறிந்தால், துடிதுடிக்காதிருக்க முடியுமா? வேலப்பன், குச்சுக்கிழங்கு பாங்காக வளர வளர, அதை வெற்றியுடனும் பெருமையுடனும் பார்த்துப்பார்த்துப் பூரித்துக் கிடந்தான். அவனைப் பார்த்து வேறுசிலரும் அந்தக் கிராமத்திலும் சுற்று வட்டாரத்திலும் அதே பயிர் வைத்தார்கள்—என்றாலும் வேலப்பன் கொல்லையிலே இருந்ததுதான் முதல்தரமானது என்று எல்லோருமே சொன்னார்கள்.

"விவரம் புரியாமெ, நாம எப்பவும் நெல்லு நெல்லுன்னு கட்டிக்கிட்டு அழறோம். 'போட்டா நெல்லு போடாட்டி புல்லு'ன்னு இருந்துவிடறோம். அண்ணேன்! நெல்லிலே கிடைக்கறதைவிட, வாழை கரும்பிலே அதிகம். வெற்றிலைக் கொடிக்காலிலே நல்ல இலாபம் கிடைக்குதாம். அதுக்கெல்லாம் பாடு அதிகம்—பலனும் அதிகம்—குச்சு கிழங்குக்கு பலன் அதிகம், பாடு அதிகம் தேவையில்லை" என்று வேலப்பன் விவரித்தபோது, "இதெல்லாம் நமக்கு எதுக்குடா? இம்மாம் காலமா நெற்பயிர் பண்ணி பிழைச்சு வந்தமா, கிழங்கு தோண்டிகிட்டுக் கிடந்தமா?;' என்று முதியவர்கள் பேசினர் — என்றாலும் அவர்கள்கூட கொல்லையில் குச்சுக் கிழங்கு பயிர் நிமிர்ந்து நின்றபோது, வேலப்பனைப் புகழ்ந்தார்கள். "பய, கெட்டிக்காரன் தான். பாரேன் பயிரை; மூக்கணாங் கயிறு போடாத காளை முறைச்சிகிட்டு நிற்குமே அதுபோல இருக்கு" என்று கூறினர்.

வேலப்பன், இந்தப் பேச்சை எல்லாம் கேட்டு, மேலும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கொண்டான். கொல்லையைச் சுற்றிப் பார்க்கும்போதெல்லாம், வேலப்பனுக்குக் கலியாணப் பந்தலே தெரிந்தது.

இவ்விதம் இன்பக் கனவு கண்டுகொண்டிருந்தவனுக்குப் பேரிடி விழுந்தது. 'மார்க்கட் நிலவரம்'—குச்சிக் கிழங்குக்குக் 'கிராக்கி' இல்லை, வாங்குவார் இல்லை என்ற செய்தி அவனைச் செந்தேள்போல் கொட்டிற்று. முதலிலே, இது யாரோ வேண்டுமென்றே பொறாமையாலே கட்டிவிட்டது என்று எண்ணினான்; விவரம் அறிந்துவர நகரம் சென்று திரும்பியபிறகுதான், அவனுக்கு மனமே உடைந்துவிட்டது. அங்கு தெளிவாகவே சொன்னார்கள்; பல கிராமங்களிலே இந்தச் செய்தி தெரிந்து, விவசாயிகள் தலைமேலே கைவைத்துக்கொண்டு கிடக்கிறார்கள் என்று கூறினர். குச்சிக் கிழங்கு, உள்நாட்டிலே செலவாகக்கூடிய பண்டம் என்ற எண்ணத்திலே, விவசாயிகள் அதைப் பயிர் செய்யவில்லை; எனவே வெளிநாட்டுக்குக் கிழங்கு தேவையில்லையாம் என்று கூறப்பட்டது கேட்டு மெத்தக் கலங்கிப்போயினர்.

"பைத்யக்காரப் பய! யாரோ பட்டணத்துக்காரனுக பேச்சைக் கேட்டு இவனும் கெட்டான், மத்தவங்களையும் கெடுத்துப்பூட்டான். இவன் பேச்சை நம்பி, குச்சிக் கிழங்கு பயிர்வைத்தவனெல்லாம் 'கோ'ன்னு கதறிக்கிட்டு கிடக்கிறானுங்க—இவனுக்கு என்ன ஒண்டிக் கட்டை—மற்றவங்க பலபேரு சிறுசும் பெரிசுமா டஜன் கணக்கிலே வைத்துக்கொண்டு கஷ்டப்படறாங்க. இப்ப, இவன், எல்லாரோட கிழங்கையும் வாங்கிக்கொள்ளப்போறான்" என்று சிலர் பேசினர்; வேலப்பனுக்கு ஆத்திரம் வந்தது. நானே மனம் வேதனைப்பட்டுக் கிடக்கிறேன், இந்தப் பாவிகள் வேறு என்னை வாட்டி எடுக்கிறார்களே. செச்சே, என்ன ஜென்மங்களய்யா இதுகள் என்று முணுமுணுத்தான்.

செல்லாயி, நிலைமை அறிந்து, சிரித்துப் பேசினால்! வேலப்பனுக்குக் கோபமாக இருக்கும் என்பதை எண்ணி, முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டாள். சலிப்பும் சோகமும் கொண்டாள். ஒவ்வோர் நாளும் உச்சிப் போதுக்குள் மடுவில் இறங்கிக் குளித்துவிடுவாள், தலையைக் கோதிக் கட்டிக்கொள்வாள், 'கிழிசல்' தெரியாமல், சேலையைப் பக்குவமாகக் கட்டிக்கொள்வாள், தலைக்கு காட்டுப் பூவாவது பறித்துச் சூட்டிக்கொள்வாள், கலகலவென்று சிரித்துப் பேசுவாள்.

கால் பூமியிலே 'பாவுதா' பார்டா அந்தக் குட்டிக்கு. நடக்கறபோதே இவளை என்னமோ இந்தப் பூமி தூக்கித் தூக்கிக் குலுக்கிவிடறதுபோலல்லவா நடைபோடறா...நாட்டியக்காரியாட்டமா......" என்று கேலியாகப் பேசுவார்கள் செல்லாயியை; கிழங்குக்குக் கிராக்கி இல்லை என்பதாலே, வேலப்பன் விசாரப்பட்டான்—அதைக் கண்ட செல்லாயி, நாலு குழந்தைக்குத் தாயாகி, நாத்தி மாமி கொடுமையாலே நசுக்குண்டுபோனவள்போலானாள்.

"அது ஒண்ணுத்தான் குறைச்சல். ஆமாமாம்' எல்லாரும் நல்லவங்கதான்... அவங்க அவங்க பாடு அவங்களோடே..." என்று எதற்கும் எரிச்சலுடன் பதில் பேசுவாள். உடம்பு 'கசகச'வென்றாகிவிட்டதே, கழுவித் தொலைப்போம் என்றுதான் மடுவில் இறங்குவாள்—முன்புபோல மகிழ்ச்சியுடன் அல்ல.

அவளுக்கு வேலப்பனைப் பார்க்கவே பயமாக இருந்தது.

என்ன வேதனைப்படுகிறானோ, எவ்வளவு கோபமாக இருக்கிறானோ, இந்த நேரத்திலே போய்ப் பேசினால், அவனுக்கு மேலும் வேதனைதான் கிளம்பும்; மேலும் என்னவென்றுதான் பேசுவது; போனா போவுது, கிழங்கு விலை போகாவிட்டா என்ன, கரும்பு இல்லையா, புகையிலையிலே பணம் வராதா, என்று தைரியம் பேசமுடியும். அதையே அல்லவா அவன் நம்பிக்கொண்டிருந்தான். வேறு வழி ஏது? அந்த வேதனையை மாற்றமுடியுமா? என்று எண்ணினாள், இந்தச் சமயம் அடிக்கடி சென்று வேலப்பனைப் பார்ப்பதுகூடச் சரியல்லவென்று எண்ணிக்கொண்டாள்

"நான் இருக்கிற இருப்புக்கு இப்ப கண்ணாலம் ஒண்ணுதான் குறைச்சல். எது எப்படிப் போனாலும் என்ன, என் பின்னோடு சுத்திகிட்டுத்திரி என்கிறயா? தா! புள்ளே! என் எதிரே நின்னுகிட்டு இப்படி பல்லைக் காட்டாதே. நான் இருக்கற ஆத்திரத்திலே எனக்கு அரிவா மேலேதான் கவனம் போவுது. அடி அம்மா! மவராசி! கொஞ்சம் உன்னோட அலுக்கு குலுக்கை யெல்லாம் அடக்கி வைச்சிரு..." என்று ஏதாவது கோபத்திலே ஏசுவான் என்ற பயம் செல்லாயிக்கு. அதனாலே, அவனை அடிக்கடி சந்திப்பதைக் குறைத்துக்கொண்டாள்; பார்க்க நேரிடும்போதும், பழகாதவள் போல கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறிவிட்டு வந்துவிடுவாள்.

"எல்லாம் இருக்கிறவரையிலே தான் மக்கமனஷாள், சுற்றம் உறவு எல்லாம். பாரேன், இந்த செல்லாயியை; நாளைக்கு நாலு தடவையாவது ஓடியாந்து நச்சரிப்பா, இப்ப என்னடான்னா, பார்த்தும் பார்க்காத மாதிரியாப்போறா, பழகாதவ மாதிரியா நடந்துக்கொள்றா; பவுன் நகை இனி கிடைக்காது என்கிறதாலே, வேண்டா வெறுப்பாப்பேசறா. இவ்வளவுதான் இதுகளோட சுபாவம். நம்ம போறாத வேளை, இதுவும் நடக்கும் இதுக்கு மேலேயும் நடக்கும்' என்று வேலப்பன் எண்ணிக் கொண்டான், வேதனை மேலும் வளர்ந்தது.

ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசிக் கொள்ளாததாலேயே, சந்தேகமும் சஞ்சலமும் இருவருக்கும் வளர்ந்தது. அதிக நாட்கள் இதை நீடிக்க விடக்கூடாது, ஒரு நாளைக்கு அவளை வெட்டு ஒண்ணு துண்டு இரண்டாகக் கேட்டுவிட வேண்டியதுதான் என்று வேலப்பன் முடிவு செய்து, நாளைக்கு அந்த வேலைதான் முதலில் என்று எண்ணினான்; அவனை அந்த வேலையைச் செய்யவிடாமல் தடுத்திட, வேறோர் அவசரவேலை குறிக்கிட்டது.

* * *

'ஓட்டு' கேட்கறபோது, தினுசு தினுசான மோட்டாரிலே, இங்கே வந்து, கெஞ்சிக் கூத்தாடினானுங்களே, பெரிய மனஷனுக, இப்ப பார்த்தாயா, கழனி காஞ்சி போனாலும், குளம் வத்திப்போனாலும், எந்தக் கஷ்டம் வந்தாலும், என்னடாப்பா கஷ்டத்துக்குக் காரணம்? நான் என்னா செய்யணும், சொல்லு? அப்படின்னு கேட்க ஒருத்தன் வந்தானா பார்த்தயா? எல்லாம், 'ஓட்டு'வரைக்கும்தான், இவனுங்களோட ஓட்டு உறவு" என்று துவக்கினான் ஒருவன்—வேலப்பன் குடிசையில்.

"ஆமாம், அப்பொ, ஆயிரத்தெட்டு சிபாரிசு பேசினானுக...கவுண்டரே கவனிச்சிக்கங்க ... கோனாரே, கை போட்டுக்கொடுங்க, தேவரே, என்னை உங்களுக்கு இருவது வருஷமாத் தெரியுமே, என்றெல்லாம் சொந்தம் பேசினானுங்க..."

"ஆமாண்டா, விடுடா! நமக்கும் அப்ப, உச்சி குளுந்துப் போச்சு. இவ்வளவு பெரிய மனஷனுங்க, நம்மைத் தேடிகிட்டு வரானுகன்னு, நாமும் அவனுங்களுக்காக ஓடி ஆடி வேலை செய்தோம்...'ஓட்டு' போட்டா, ஊர் க்ஷேமமா இருக்கப் பாடுபடுவீங்களா, எப்படிச் செய்யப் போறிங்கன்னு ஒரு பேச்சு கேட்டமா? நம்ம ஜாதிக்காரன், நம்ம பக்கத்துக்காரன், என்று எதை எதையோ நம்பினமே தவிர, நாணயமானவனா, யோக்கியமானவனா, நல்லபடி உழைச்சி ஊருக்கு உபகாரம் செய்யப் போறவனா என்கிற எதைப்பற்றியும் யோசிக்கலே. மவாத்துமா தெரியுமேலேன்னு கேட்டான், ஆமா அவரு என்னங்க, கடவுளோட அவதாரம்னு கைகூப்பினோம், மத்த எதையும் யோசிக்கலே..."

"ஏன், யோசிக்கலை! நம்மகாளியாத்தா கோயில் கோபுரத்துக்குக் கலசம் வேணுமுன்னுகேட்டமே..."

"அட, அது ஒரு பிரமாதமா...ஐம்பதோ நூறோ ஆகப்போவுது...அவனுக, என்னதான் வேணும், சொல்லுங்க, இதிலே என்ன தப்புங்க, என்னாலானதை நான் செய்யணும்னு எனக்கு ஒரு ஆசை, வேறே ஒண்ணுமில்லே, அப்படி இப்படின்னு சொல்லவே, சரி, எதையோ ஒண்ணு கேட்டுவைப்பமேன்னு, 'கலசம்' வேணும்னு கேட்டம்......இது ஒரு பெரிய தப்பா?"

"வீண் விவகாரத்தை விட்டுத் தொலைங்கப்பா. தும்பை விட்டுப்போட்டு, வாலை பிடிக்கறது நம்ம பழக்கமாப் போயிட்டுது. அவனுங்க, சமயத்திலே காலைப் பிடி, தீர்ந்துபோனதும் தலையைப் பிடி என்கிற வித்தையிலே கைதேர்ந்தவங்க. அது கிடக்கட்டும். இப்ப என்ன செய்யறது, சொல்லுங்க. குச்சிக்கிழங்கு விலைபோகலேன்னா, நம்ம பக்கத்திலே வேணகுடி பாழாயிடும்...இதை என்ன செய்யறது, சொல்லுங்க'

"அழுகிற புள்ளைக்குத்தானே பால் கிடைக்கும் ...."

"அட அதான் கேட்கறேன், எங்கே போயி அழுகறது, என்னா சொல்லி அழுகறதுன்னு......"

"மந்திரிகிட்டப் போகலாம் என்கிருங்க..."

"யாரு? நாமா? மந்திரிகிட்டவா? மடைப்பய மகன்! அவனுங்க மந்திரியாவதற்கு முன்னே போனல் பார்த்திருக்க முடியும்—இப்பத்தான் மந்திரி ஆயிட்டாங்களே, இப்ப எப்படிப் பார்க்கமுடியும்?"

"அழைச்சி கிட்டுப் போறேன், ஊருக்கு ஒருத்தர் இரண்டுபேரா, சேர்ந்து, ஒரு கமிட்டி போட்டா, போய்ப்பார்க்கலாம்னு......"

"யாரு நம்ம கொடிமரத்தான் சொல்ருன...?";

"ஆமாம். அவன் அடிக்கடி போய்ப் பார்க்கருனே மந்திரியை"

"சரி. அதுக்கு என்ன செய்யணுமாம்?"

"அட, இதெப்போயி, கொடிமரத்தானையேதான். கேக்கறதா? நமக்குப் புரியலியா? நாம என்ன அவனுடை கஷ்டத்துக்கு, எதாச்சும் நம்மாலே ஆகிற சகாயத்தைச் செய்யவா, மாட்டோம்..."

"இப்ப, எல்லா மந்திரிகளும், கவர்னர் கூட, ஒரு பெரிய திருவிழாவுக்குக்கூடப் போருங்களாம் அங்கேயே போய்ப் பார்த்துடலாம்னு, கொடிமரத்தான் யோசனை சொல்ருன்......அவனும் நாம ஒரு நாலுபேருமாப்போய் வாரசெலவுக்கு, மகாநாட்டுக்கு டிக்கட்டு, சாப்பாடுச் செலவு, மாலை மரியாதைச் செலவு, எல்லாம் சேர்ந்து நூறு நூத்திஐம்பதுக்கு மேலே பிடிக்காது என்கிருன். இதல்லாமபடிக்கு நாமெல்லாம் ஆளுக்கு கீழுக்கு ஒண்ணு மேலுக்கு ஒண்ணு கதர் துணி வாங்கிக்கிடணுமாம்—மந்திரிகளோட மகாநாட்டிலே கதரோட போனதான் நம்ம பேச்சை, காதுகொடுத்துக் கேட்பாங்களாம்..."

"கொடிமரத்தான் சொல்ருன?"

"ஆமாம்"

* * *

கொடிமரத்தான் வேலப்பன் தலைமையிலே கிளம்பிய 'கமிட்டி'யைக் கோவைக்கு அழைத்துச் சென்ருன், எல்லா மந்திரிகளையும் காட்டினன், நூறு கெஜ தூரத்தில் இவர்களை நிறுத்திவைத்து.

"என்னை 'நீராகாரம்' இருந்தாக்கொடு கவுண்டரய்யா! என்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டவர் தாம்பா, அதோ, மேசையை அடித்துப் பேசருரே அந்த மந்திரி என்று கமிட்டியில் ஒருவர் சொன்னர்.

"இம்மாந் தொலைவிலே இருந்து இவங்களை 'தரிசனம்' செய்தாட்டுப் போகவா, கொள்ளைப் பணத்துக்கு வேட்டு வைச்சிருக்கான் கொடிமரத்தான்" என்று கமிட்டியிலே இருந்த ஒரு கோபக்காரர் கேட்டார்.

மந்திரி பேசிக்கொண்டிருந்தார்—பேச்சு என்று கூறுவது பொறுத்தமல்ல—மிரட்டிக் கொண்டிருந்தார்.

"நம்முடைய ஜனங்களுக்கே ஒரு கெட்ட சுபாவம்; எப்போதும் ஏதாவது ஒரு குறையை எடுத்துக் கூறிக்கொண்டு, மூக்காலேயே அழுது கொண்டு கிடப்பார்கள். ' அது இல்லை இது இல்லை; இதைக் கொடு, அதைக் கொடு; என்று கேட்டுக் கேட்டு, ஆட்சியிலே இருப்பவர்களைத் தொல்லைப் படுத்தியபடி இருக்கிருர்கள். இது பாரதத்தின் பண்பு அல்ல... இதை நம்முடைய தலைவர்கள் பல தடவை எடுத்துச் சொல்லியும் வருகிருர்கள். வெற்றிலை கொடிக்காலிலே பூச்சி வந்து விட்டது, சாமி! எங்களைக் காப்பாற்ற வேணும் என்று போனவாரத்திலே ஒரு பத்து பேர் என்னை வந்து கேட்டார்கள் (சிரிப்பு) சிரிக்காதீர்கள். நாடு எவ்வளவு கெட்டுவருகிறது, நம்முடைய ஜனங்களுடைய புத்தி எப்படி மட்டமாகிக் கொண்டு போகிறது என்பதை எண்ணிப் பாருங்கள். இப்படிப்பட்டவர்களைப் பற்றித்தான் நமது தேசிய மகா கவி, சுப்ரமணிய பாரதியார் "நெஞ்சு பொறுக்குதில்லையே! இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால், நெஞ்சு பொறுக்குதில்லையே; என்று பாடினர். எனக்கு பாடத் தெரியாது. மாலையிலே அருமையாகப் பாடப் போகிருர்கள் ஸ்ரீமதி பட்டம்மாள். கேளுங்கள். பூச்சி வந்துவிட்டது, காப்பாற்றுங்கள் என்று என்னிடம்வந்து அழுதால் நான் என்ன செய்வது? நீங்களே சொல்லுங்கள்? (மீண்டும் சிரிப்பு) பூச்சிகளை ஒன்றுவிடாமல் பிடித்து நசுக்கிப் போடவா! (பலத்த சிரிப்பு) மந்திரியின் வேலை இதுதானு?... கரும்பு காய்ந்து போகிறது, கடலைக்கொட்டை கெட்டுப் போகிறது, இரும்பு கிடைக்கவில்லை, நெசவு நடக்கவில்லை, வாழை சரிந்து விட்டது வரகரசி முளைக்கவில்லை, என்று எதையாவது சொல்லிக்கொண்டேஇருக்கிருர்கள். இப்படி மூக்கால் அழுது கொண்டிருந்தால், நாட்டிலே சந்தோஷம் எப்படி ஏற்படும்? இப்படித் தொல்லை கொடுத்தால், நாங்கள் ஆட்சியை நடத்த நேரம் எப்படிக் கிடைக்கும். (ஒரு சீட்டு தரப்படுகிறது. அதைப் படித்துவிட்டு) இதோ பார்த்தீர்களா, புதிதாக ஒரு அழுகுரல். குச்சிக் கிழங்குகளுக்கு மார்க்கட் இல்லையாம்! (சிரிப்பு) உடனே நிவாரணம் அளிக்கவும் என்று எழுதி இருக்கிருர், ஒரு அன்பர். என்ன நிவாரணம் அளிக்கச் சொல்கிருரோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்!! குச்சிக்கிழங்குக்கு மார்க்கட் இல்லை என்ருல், நான்



என்ன செய்யவேண்டும் என்கிருர்? கூடையிலே வைத்துக்கொண்டு, தெருத் தெருவாகச் சென்று குச்சுக்கிழங்கோ! குச்சுக்கிழங்கு! என்று விற்கச் சொல்கிருரா? (பலத்த கை தட்டல்; சிரிப்பு.)...''

"அடச் சே! எழுந்திருங்கடா, போவோம். மகாப் பெரிய மனஷனுங்க..." என்று கோபமாகக் கூறிக் கொண்டே பெரியவர் எழுந்தார்; 'கமிட்டி' அவ்வளவும் கொட்டகையைவிட்டு வெளியேறிவிட்டது; கொடி மரத்தான் பின்னேடு ஓடிவந்தான்.

"ஏன்? ஏன்? எங்கே கிளம்பிவிட்டிங்க?"

"எங்கேயா? கூடை வாங்கிகிட்டு வந்து, உன்னேட தலைவன் தலையிலே கவிழ்க்க. வெட்கமில்லாமெ எங்களண்டை பேச வேறே வந்தூட்டயா...?"

"என்னங்க இது, எதுக்கு இவ்வளவு கோவம்?"

"கோவம் வரலாமா, பாவம்! அங்கே வாரி வாரிக் கொட்டருனே ஒரு புத்திசாலி, கருணையை; அதைப் பார்த்துமா கோவம் வரலாமான்னு கேட்கறே! ஆக வேண்டிய காரியம் ஆயிடிச்சி, இனி நாம அடிச்சவரை யிலே இலாபம்னு எண்ணிகிட்டு, அந்த மனஷன், ஆகாசத்துக்கும் பூமிக்குமா, குதிச்சுக் குதிச்சுப் பேசருனே—ஜனங்க மூக்காலே அழருங்கன்னு...இவனுக நாட்டை நடத்தற நடப்புக்கு, ஜனங்க அழாமெ, இவனுங்க எதிரே வந்து டான்சு ஆடுவாங்க, டான்சு...... என்ன எடுத்தேன் கவிழ்த்தேன்னு பேசருன் அந்த மனஷன். கஷ்டப்படறம், அதைச் சொல்லி, ஐயா! அப்பான்னு! வேண்டிக்கொள்ளரும்...அதைக் கேக்கப் பொறுக்கலியாமே இவருக்கு. குச்சிக் கிழங்குக்கு மார்க்கட்டு இல்லையானு, நான் என்ன செய்ய, கூடையிலே வைச்சிகிட்டு விற்கவான்னு கேட்கருனே, இது வாய்யா ஒரு மந்திரி பேசற மரியாதையான பேச்சு. குத்தல் பேச்சு இல்லியா அது. அவனவன் கும்பி காயுதேன்னு கஷ்டப்பட்டுகிட்டு, இவனுங்ககிட்டத் தானே அதிகாரம் இருக்குது, போயி நம்மோட குறையைச் சொல்லுவோம்னு வந்தா, கூடையிலே வைச்சிகிட்டு விற்கவான்னு கேலி பேசருரு...பெரிய குபேரரு! வித்தா என்னவாம்! தலையிலே கூடையைத் தூக்கி வைச்சா, பூமி பொளந்துடுமா, இல்லை, இவரோட மண்டை வெடிச்சுடுமா...பேசருன் பார், மகா பெரிய மேதாவின்னு நினைச்சிகிட்டு. போன வருஷம் நான் என் கண்ணுலே பார்த்தனே, நெசவுக்காரனுக கஷ்டப்படருங்கன்னு சொல்லி, கைத்தறித் துணி மூட்டையைத் தூக்கித் தோளிலே போட்டுக்கிட்டு தெருத்தெருவா போய் வித்தானுகளே, இந்தக் கழகத் துக்காரனுக.....கௌரவமா போயிடிச்சி.....மக்களோட கஷ்டத்தை உணர்ந்த மகாராஜனுகன்னு ஏழை எளியவங்க வரவேத்தானுங்க...இவர் என்னடான்னு, கிண்டல் பேசருரு, கிண்டல்! கூடையைத் தூக்கினதே இல்லை......பொறக்கறப்பவே ஓட்டுப் பொட்டியோட பொறந்தவரு..."

"இதோ பாருங்க...இந்த மந்திரி இப்படித்தான் எப்பவும் வம்பும்தும்பும் பேசறவரு......இவர்போலவா மத்தவங்க...போகாதிங்க...இருங்க...மத்த மந்திரிகள் பேசறதைக் கேளுங்க..."

"ஏன், இந்த ஒருமந்திரி அபிஷேகம் பண்ணினது போதாது, மத்தவர்களோட அர்ச்சனையையும் கேட்டுட்டுப் போகலாம் என்கிறயா? அடெ அப்பா! கொடி மரம், போதும்டா, எங்களுக்கு வேணுங்கிறது கிடைச்சுப் போச்சு. உனக்கு வேணுங்கிறதையும் நாங்க கொடுத்தாச்சி. எங்களை இத்தோடு விட்டுடு...மானமாவது தக்கட்டும்...''



கமிட்டியினர் கடுங்கோபத்துடன் செல்வது கண்டு கொடிமரத்தான் பயந்துபோனுன் — திரும்பி அதே கிராமத்திலே நடமாடவேண்டுமே!

* * *

வேலப்பனுக்குத்தான் இதனுல் அதிகச் செலவு; கிழங்கு 'கால்வாசி' விலைக்குக் கூடப் போகவில்லை, 'முட்டுவழி' கட்டி வரவில்லை, கிழங்குப் பிரச்னையைத் தீர்த்துவைக்க எடுத்துக்கொண்ட முயற்சியால் கடன் வேறு; வேலப்பன் கலியாணத்தைப் பற்றிய எண்ணத்தையே விரட்டி அடித்தான்; செல்லாயியால் கண்ணீர் சுரப்பதைத் தடுக்க முடியவில்லை; கன்னம் அந்த முத்துக்களைத் தாங்கிக்கொள்ள மனமின்றி, நெஞ்சிலிருந்து கிளம்பியவை அங்கேயே போய்ச் சேரட்டும் என்று அனுப்பிவிட்டது.

"வேலப்பா! ஏண்டாப்பா! இதுக்கெல்லாமா, மனசைத்தளர விட்டுவிடறது. இதுவரையிலே நான் இதுபோல எத்தனை கஷ்டத்தைத் தாங்கிகிட்டேன், காஞ்சிருக்கும், மழையாப் பொழிஞ்சி அழிச்சி இருக்கும், மாடுகண்ணு 'கோமாரி'யிலே செத்திருக்கும், மனஷாளுகளே மாண்டு போயிருக்காங்க பலமாதிரி நோயாலே...அதுக்காக இப்படியா, மனசு ஒடிஞ்சி போயிட்டேன். பைத்யக்காரப்புள்ளே! போயி, காரியத்தைப்பாரு. இந்தத் தடவைஇல்லாட்டா, அடுத்த வருஷம் நல்லது ஏற்படுது, என்ன இப்ப? உனக்கு என்னடா குறைச்சல்! எனக்கு இந்தத் தடவை 'சோளம்' நல்லபடி இருக்குது—போதுமே நமக்கு" —என்று சடையாண்டி பலமுறை ஆறுதல் கூறியும், வேலப்பனுக்குத் திருப்தி ஏற்படவில்லை; விசாரம் அவனை வாட்டியபடி இருந்தது. காரணமின்றிக் கோபம் வரும்; கண்டவருடன் வம்புக்குப் போகத்தோன்றும்; மாடு கன்றுகள் கூட அவன் கோபத்தைத் தாங்கிக் கொள்ளவேண்டி வந்தது. செல்லிக்கு அவனைப் பார்க்கும்போது நடுக்கமே ஏற்படும்—சுட்டுத்தள்ளிவிடுவது போலப்பார்க்கிருன்!!

"சுத்தமாக் கழுவிடனும், தெரியுதா...துளிசேறு இருக்கப்படாது..."என்று கூறி, மோட்டார் ஓட்டிக் கொண்டுவந்தவன் எட்டணவைக் கொடுத்தான், பொடிப்பயலிடம்; அவன் அந்த மோடாரை மிகச் சுத்தமாகக் கழுவித்துடைத்துக் கொண்டிருந்தான். அலுப்பினலே, மரத்தடியில் துண்டு விரித்துப் படுத்துத் தூங்கிவிட்டான், மோட்டார் ஓட்டிக் கொண்டுவந்தவன். அவன் விழித்தெழுந்ததும், சொல்லிவிட்டுப் போகலாம் என்று, பொடிப் பயல் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வேலப்பன் அந்தப்பக்கம் வந்தவன், காருக்குப் பக்கத்தில் சிறுவன் இருப்பதைக்கண்டு, "ஏண்டா! ராத்திரிகூடச் சாப்பிடலயே, காலையிலே எங்கே, சுத்த வந்துாட்டே, கஞ்சி கொடுக்கத் தேடினேன், காணமே ...ஆமா, இது என்ன, மோடாரு...இவருயாரு, துரை, சொகமாத்தூங்கருரு?" என்று கேட்டான்.

"பார்த்தயாண்ணேன், எட்டணு...எருமைமாடு மூணு தேச்சிக் கழுவறமாதிரிதான், இருந்திச்சி— இந்த மோடாரைக் கழுவிவிட. எட்டணு கிடைச்சுது! மந்தை எருமையை மேய்ச்சி தேய்ச்சி குளிப்பாட்டிவிட்டாக் [கூட, கால்காசு கிடைக்காது, இங்கே. பாரு, எட்டணு?" என்று சிறுவன் பெருமையாகச் சொன்னுன்.

"ஆமாம்டா, இனி இப்படித்தான், மோடாரு கழுவி நீ புழைக்க வேண்டியதுதான், நானும், ஏதாவது ரயில் துடைக்கப் போகவேண்டியதுதான். வேறே புழைப்பு? அப்படியாப்பட்ட குச்சிக்கிழங்கு போட்டே கட்டிவராமே கஷ்டம் வந்துடுச்சின்ன, இனி இங்கே எதை நம்பிகிட்டுக் கிடக்கறது" என்ருன் வேலப்பன்.

மரத்தடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தவன் விழித்துக் கொண்டான்.

"டிரைவரு! உனக்கு என்ன சம்பளம் கொடுக்கருங்க?" என்று கேட்டான் வேலப்பன்.

"மோடார் கார் ஓட்டுபவனுக்கு நாற்பது ஐம்பது ரூபா சம்பளம் கிடைக்கும்" என்ருன், அவன்.

"பாரேண்டா, இவரு பேசற தினுசை. உனக்கு உங்க எஜமான் எம்மாஞ் சம்பளம் கொடுக்கருர் சொல்லய்யான்ன..."

"அதுவா? எனக்கு எஜமான் இல்லையே; நான் டிரைவர் இல்லா...என்னுடை 'கார்'தான் இது..." என்ருன் அவன்.

"என்னது...?விளையாடறிங்களா..."

"இல்லேப்பா! விளையாட்டு என்ன இதிலே? கார் என்னுடையதுதான்..."

"அப்படியா...நானு...நீங்க...மரத்தடியிலே படுத்துத் தூங்கிகிட்டு இருக்கவே, டிரைவருன்னு..."

"மரத்தடி! மாந்தோப்பு! மணம்! ஏர் உழவர் பாடல்! ஏத்தப் பாட்டு! நாத்து நடும் பெண்கள்! எங்கும் பசுமை! எங்கும் புதுமணம்!..." என்று உற்சாகத்துடன் கூறிக்கொண்டே அந்த ஆசாமி, சுற்றிலும் இருந்த காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். வேலப்பனுக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை. வாழ்க்கை குன்றுகிறது, இனிக் கிராமத்திலே இருந்துகொண்டு காலந் தள்ளுவது முடியாது கிராமத்தைப் பார்த்துப் பார்த்து வெறிச்சென்று கிடக்கிறது, உழைப்பது தவிர வேறென்றும் காணுமே, பட்ட பாட்டுக்குப் பலன் கிடைக்கவில்லையே, இதைவிட்டுத் தொலைந்தால் போதும் என்று எண்ணிக்கொண்டிருக்கிருன். இங்கே ஒருவர்—அவரும் இளைஞராகத்தான் இருக்கிருர்— வாழ்க்கையில் வசதி உள்ளவர்—மலரே! மணமே! மதுவே! மாடே! ஏரே! எழிலே! என்று ஏதேதோ கூறி மகிழ்கிருர்!!

வேலப்பன் பெருமூச்செறிந்தான்...!



"கிராமத்துக் கவர்ச்சி, புகை கப்பிக்கொண்டு சந்தடி அதிகமாகிக்கிடக்கும் நகரத்திலே ஏது!"

"பணம் நிறைய இருக்கு அங்கே......"

"பணமா? ஆமாம்; அது இருக்கிறது, ஆனால் பண்பு இங்கே தானப்பா இருக்கிறது......"-

"என்னமோ போங்க, வேடிக்கையாகப் பேசறிங்க! உங்களிடம் இருக்கிறது எங்களிடம் இல்லையேன்னு நாங்க கிராமத்துக்காரரு கஷ்டப்படறோம், நீங்க வேறே எதுவோ ஒண்ணு எங்களண்டைஇருக்குன்னு சொல்லிப் புகழ்ந்து பேசறிங்க..."

"கண் இருக்கவேண்டியதுதானப்பா, ஆனா கண்ணாலே பார்க்க, நல்ல பொருள் இருக்கவேண்டுமல்லவா? பார்க்க, பாம்பும் தேளும், படுகுழியும் நெருப்புக்குண்டமும்தான் இருக்கிறது என்றால், கண் இருந்துதான் என்ன பயன்?"

"அது சரிங்க, ஆனா, பவுன் பவுனா கொட்டி இருக்கு, தினுசு தினுசா பண்டமிருக்கு, வகை வகையா அருமையான சாமான் இருக்கு, ஆனா இதை எதையும் பார்க்கக் கண் இல்லேன்னா, என்னாங்க, பிரயோஜனம்?"

"ஆஹா! ஈரேன், இதையே அங்கே படிப்பு இருக்கிறது புளியேப்பம் வருமளவுக்கு, ஆனால் இதோ இப்போது நீ பேசினயே, அந்தப் பக்குவம் அந்த நகைச்சுவை, அந்த அறிவு இருப்பதில்லையே..."

"நீங்க யாருங்க..."

"பைத்யக்காரன் இல்லேப்பா. இப்படிப் பேசினதாலே, உனக்கு இப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கும். நான் பைத்யம்பிடித்தவனல்ல, கிராமத்திடம் எனக்கு அவ்வளவு பாசம், மதிப்பு, மோகம் என்று கூடச் சொல்லலாம். பத்து நாளைக்கு ஒருதடவை யாவது, ஏதாவது ஒரு கிராமம் சென்று, அங்கே உள்ள காட்சிகளைப் பார்த்தால்தான் என்மனதிலே, ஆயாசம், அலுப்பு எல்லாம் போகும், ஒரு புதுத் தெம்பு, ஏற்படும்"

"அப்படி ஒரு பழக்கமா உங்களுக்கு...எங்களுக்கு ஒரு ஆறுமாசத்துக்கு ஒரு தடவையாவது, 'டவுன்' பக்கம் போயி, பளபளா விளக்கு, பலவர்ண ஜொலிப்பு சினிமா, பஜாரு, இதை எல்லாம் பார்த்தாத்தான், ஒரு மாதிரி தெம்பு...ஆனா, அதுக்குக் கொஞ்சம் காசு செலவாகும்...அதுதானே இங்கே கிடைக்கறதில்லே...ஆசையிலே மண் விழுந்துடுது அப்போதைக்கப்போ..."

* * *

மோடார் புறப்பட்டுவிட்டது—வேலப்பனுடைய மனம் அந்த 'மோடாருடன்' சென்றுவிட்டது; உடல் மட்டும்தான் கிராமத்தில் உலவிக்கொண்டிருந்தது.

அதுவும் கொஞ்சநாள்தான். வேலப்பன், 'டவுன்' வாசியாகிவிட்டான்—நிலத்தை யாருக்கோ கொடுத்துவிட்டு, கடனைக் கட்டிவிட்டு, கையில் கொஞ்சம் பணம் எடுத்துக்கொண்டு சென்றான். இதை வைத்து ஏதாவது தொழில் செய்யவேண்டும், வியாபாரம் நடத்தவேண்டும் என்று பலமாதிரி திட்டங்கள் மனதில். நிலம் கைமாற முடிந்தது, செல்லத்தின் மனம்? படாத பாடுபட்டது.

மடியிலே நாலு நூறு ரூபாயுடன் டவுனில் நடமாடியபோது, வேலப்பனுக்கு எப்போதும் ஏற்படாத ஒரு தெம்பும் தைரியமும் வந்தது; கடை வீதியிலே உலவும்போது அவன் கண்களிலே நம்பிக்கை ஒளிவிடும். சின்னக் கடையாக ஆரம்பித்து, சாமார்த்தியமாக வியாபாரத்தை நடத்தித்தானே, இவர்களிலே பலர், பெரிய கடைகள் வைத்துக்கொண்டு பணம் சேர்க்க முடிந்தது. நாம் ஏன் இப்படிச் செய்யக் கூடாது? ஏன் நம்மாலே முடியாது? என்று எண்ணிக் கொள்வான். அவன் உள்ளத்தில் ஓராயிரம் யோசனைகள் தோன்றித் தோன்றி ஒன்றோடொன்று மோதுவதாலே சில நொருங்கிப்போயின, யோசனைகள் குழம்பி விட்டன; யாராவது தக்கபடி யோசனைச் சொன்னால் மட்டுமே நல்லது, என்று எண்ணிக் கொண்டான்.

'டவுன்' இதற்கா, ஆளை வைத்துக்கொண்டில்லை? இதையே பெரிய தொழிலாகக் கொண்டவர்களை, அவன் தெரிந்து கொண்டதில்லை—அவனாலே கண்டு பிடிக்க முடியவில்லை — இவனைக் கண்டுகொள்ளவா அவர்களால் முடியாது. முதலில் மோப்பம் பிடித்தவன், முத்தையன்—மூலைக் கடை முத்தையன் — என்பது அவனுக்குப் பட்டப் பெயர்! ஆனால், அவனுக்குக் 'கடை' கிடையாது; மூலைக் கடை, மூசா ராவுத்தருடையது; அங்கு எப்போதும் வட்டமிட்டபடி இருப்பான்; அதனால், அந்த வட்டாரத்தினர், அவனுக்கு மூலைக் கடை முத்தையன் என்று பெயரிட்டனர்.

முத்தையன் வழக்கப்படி நாலு நட்சத்திர பீடியைப் பற்றவைத்துக்கொண்டு, புதுவியாபாரத் திட்டமொன்றை, மூசாராவுத்தருக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

"பத்து இருக்குமேல்லோ ராவுத்தரே வருஷம் நீ இங்கே வந்து? என்ன செய்திருக்கே? இது வரையிலே! பத்துப் பவுனிலே நகை செய்தாயே, அதுதானே .."

"அதுமட்டும் இப்ப இருக்குதா? பள்ளிக்கூடம் படிக்குது..."

"ஆமாம் மறந்துட்டேன்...இந்த ஆணைமார்க் அல்வாப் பொட்டலம் வாங்கி, எல்லாம் நாத்தமடிச்சி போயி, சாக்கடையிலே வாரிகொட்டிவிட்டயே, அதிலே வந்த நஷ்டத்துக்குப் போய்விட்டதில்லே, மறந்துட்டேன். உனக்கு எங்கேய்யா, நம்ம பேச்சு ஏறுது? எந்தெந்தப் பயலோ புழைக்கிறான், நான் சொல்ற ஏற்பாட்டைக் கச்சிதமாச் செய்து, நமக்கு வேண்டிய மனஷராச்சேன்னு நான், உன்கிட்டே ஒவ்வொரு பிளானையும் சொல்லிகிட்டுத்தான் வர்ரேன், கேட்டாத்தானே."

"ஏம்பா! நீ சொல்கிறபோது 'ஜோரா'த்தான் இருக்கு, திட்டம்

பிற்பாடு யோசிக்கறப்போ, பயம் ஏற்படுதே, புதுவெள்ளம் வந்து பழையவெள்ளத்தை அடிச்சிக்கிட்டுப் போவுது என்பார்களே, அதுபோல, புதுசா எதாச்சும் செய்ய ஆரம்பிச்சி உள்ளதும் போயிட்டா என்ன செய்யறது என்கிற திகில்தான்...”

“உனக்கு கொடுத்து வைக்கலேன்னுசொல்லு. கோழி அடைக்காக்கற மாதிரியா, உனக்கு இந்தப் பெஞ்சிலே உட்கார்ந்து, உட்கார்ந்து பழக்கமாயிட்டுது...வேறே யோசனை உதிக்கறதில்லே...”

வேலப்பன்,தன்வேட்டியும் சட்டையும் அழுக்காகி விட்டதால்; வெளுக்க, ‘சோப்’ வாங்குவதற்காக வந்தான்; அவன் இலவசமாகத் தங்கியிருந்த இருளப்பன் மில்லில் தொழிலாளி, ஆறு குடித்தனத்துக்கு நடுவில் இருந்து வந்தான் — குளிக்க, துணி துவைக்க பொதுக் குழாய்தான் வேலப்பனுக்கு.

“சோப்புக் கட்டி ஒண்ணு”

“யாரடா, தம்பி! புதுசா இருக்கே? நீ, ஒரு சோப்புக் கட்டி கேட்கிறபோதே எனக்குப் புரிஞ்சுப் போச்சு நீ டவுனுக்குப் புதுசு என்பது. எந்த ஊரு” என்று மூசா அல்ல, முத்தையன் கேட்டான் — கேட்டுவிட்டு, மூணுகட்டி கொண்ட பாகட்டு நாலணா விலை— ஒரு கட்டியா வாங்கினா ஒண்ணரை அணா ஆகுது, பாகட்டா வாங்கினா இலாபமாச்சே—அது கூடத் தெரியாதவனா இருப்பதைப் பார்த்துத்தான் நீ டவுனுக்கு புதுசுன்னு தெரிஞ்சி கிட்டேன்” என்று முத்தையன் விளக்கம் கொடுத்தான்—மூசா ஒரு பாக்கட் கொடுத்தார் — பணம் கொடுத்தான் வேலப்பன். புத்தியை முத்தையனிடம் பறி கொடுத்தான்.

மாதம் மூன்று ஆவதற்குள் ஆறுவகையான ‘தொழில்’ செய்தாகிவிட்டது—அத்தர் வியாபாரத்தில் தொடங்கி வத்தல் வியாபாரம் வரையிலே நடந்தது— பணம் மிச்சம் பத்துப்பதினைந்து என்ற அளவு வந்த பிறகுதான், மறுபடி மூசாராவுத்தருக்கு யோசனை கூறிக்கொண்டு நாலுநட்சத்திர பீடி பிடிக்க மீண்டும் சென்றான் முத்தையன்

* * *

அதிர்ஷ்டம்னு ஒண்ணு இருந்தா இப்படி ஏன் அலைந்து திரியவேண்டி இருக்குது... இதோ பார் வேலப்பா! நானும் டவுனுக்கு வந்த புதுசிலே, மில்லுக்கு போக மனம் வரவில்லை—பல்பொடி வியாபாரம் பால் வியாபாரம் எல்லாம் ஒரு மூச்சுப் பார்த்து விட்டு பிறகுதான், வயித்துக்கு கிடைச்சாப் போதும்னு, மில்லுக்குப் போனேன். நீ இன்னமும், ‘கனா’ கண்டுகிட்டே இருக்கறே. எப்படி மாறிப் போயிருக்கறே தெரியுமா? துரும்பா இளைச்சிப் போயிருக்கறே. எங்கே சாப்பிடறயோ, எப்போ சாப்படறயோ இப்படி இளைச்சிப் போயிட்டே...”

“அதெல்லாம் ஒண்ணுமில்லே. நமக்கு, எதைச் செய்தா பணம் கிடைக்கும்னு கண்டறியற புத்தி இல்லே......பணம் சம்பாதிக்கிறாங்கன்னா, அவங்களுக்குச் சூட்சமபுத்தி இருக்கு, சுறு சுறுப்பு இருக்கு...நம்ம புத்தியைச் சொல்லு, ஒரே மந்தம்...”

“போடா, போ! எங்க மில்லுக்கு ஒருத்தன் வர்ரான், முதலாளிகிட்டப் பேசறதுக்கு, எப்பவாவது. பெரிய பொதியன்—முகத்தைப் பார்த்தாலே முழு மூடம்னு தெரியும் — அவன் எவ்வளவு இலட்சம் சம்பாரிச்சு இருக்கான் தெரியுமா? ஐஞ்சாறு இலட்சம் இருக்கும்னு சொல்றாங்க......எல்லாம் பிராந்தி உஸ்கி வித்துத்தான்......இதிலே புத்திசாலித்தனம் என்ன தேவைப்படுதாம்! குடிக்கிறவனுங்க, கண்ணு மண்ணு தெரியாமெ விலை கொடுக்கறானுங்க: போதை, வெறி. இதனாலே, இலாபம் மத்த வியாபாரத்தைக் காட்டிலும் அதிகமா வருது, குவியுது. மத்தவனோட முட்டாத் தனத்தாலே இலாபம் வந்ததே தவிர, இவனோட புத்திசாலித்தனத்தாலே என்ன இருக்குதாம். அவனைப் பள்ளிக்கூடத்திலே, சுத்த மக்குன்னு சொல்லியே துரத்திவிட்டாராம், வாத்தியாரு...... இப்ப இவனோட வாடகைக் கணக்கு எழுதிப்பிழைக்கறாரு—பெரிய அறிவாளின்னு சொல்றாங்க அந்த ஆசாமியை......”

“அதுசரி, இப்பத்தான் மதுவிலக்கு இருக்கே...”

“ஆமாம், மதுவிலக்கு இருக்குது, கடைவச்சி விற்கக்கூடாது, அவ்வளவுதானே......”

“அப்படின்னா......?”

“இப்ப ‘கடை’க்கு மனஷாள் போறதில்லே, ‘கடை’ மனஷாளைத்தேடிக்கிட்டுப் போகுது!! திருட்டு வியாபாரம் நடக்குது. முன்னாலே பகிரங்கமா வியாபாரம் செய்தான், இப்ப, அதுவே, இரகசியமா நடக்குது, இப்பத்தான் முன்னையைப்போல மூணு மடங்கு இலாபம். எங்க மில்காரன்கிட்ட அவன் வாரானே, எதுக்கு? எல்லாம் இதுதான்!”

“அப்படியா சமாசாரம். ஆனா அதெல்லாம்பெரிய இடத்திலே...தலைகாஞ்சதுக எங்கேயிருந்து வாங்கப் போகுதுங்க......அவங்களைப் பொறுத்தவரையிலே மதுவிலக்கு நிஜமாத்தான் இருக்கு......”

“அதுவும்தப்புதான், அவங்கமட்டும் என்னவாம்! பொதியன் பாட்டில் சரக்கு விற்கிறான், மத்தவன் மட்டம் விற்கறான்......”

“மட்டம்......?”

“காச்சினதுடா! இப்ப அந்த வியாபாரம் தான் கனஜோர்.........நானே மாசத்திலே ஒரு அஞ்சு பத்து அதுக்குத் தொலைக்கறேன்......”

“அடப்பாவி!...”

* * *

“என்ன நய்னா கவனிக்காமலே போறே? என்னதான் வாழ்வுஒசந்தாட்டாலும் இப்படி நட்டுப் பொட்டிட்டுக்கக் கூடாது......” என்று ஆரம்பித்த மூலைக்கடை முத்தையன், “அதுக்கென்ன அண்ணேன்! ஆசாமி ‘டாப்’ திறந்துட்டேன்.......நம்மைச் சரியாவே கவனிக்கிறதில்லே...என்னடா எஜமானுக்குத்தான் உன் மேலே உசிராமேன்னு நம்ம ஜந்தக்காரானுங்க பேசரானுங்க, இங்கே

சரிவர நம்மைக் கவனிக்க ஆள் கிடையாது. எவ்வளவு கண்ணுங்கருத்துமா நான் கவனிக்கிறேன், ஒரு காக்கா குருவிக்குத் தெரியுமா ரகசியம்? அப்படி எல்லாம் பாடுபடறேன், ஏழைமேலே இரக்கம் காட்டாம இருந்தா நல்லதா சொல்லுங்க'' என்று கெஞ்சிக் கூத்தாடிப் பேசி, தாக சாந்திக்கு உதவி கேட்டுப் பெறும் அளவுக்கு, வேலப்பனுடைய நிலைமை ஒரு ஆறே மாதத்தில் உயர்ந்துவிட்டது. ஆசாமியின் நடை உடை பாவனையே மாறிவிட்டது...தொழில் அவனைப் புது ஆளாக்கிவிட்டது. சுருள் மீசை—சந்தனப் பொட்டு—விரலிலே சிகரட் டின்—இப்படி, கோலமே மாறிவிட்டது. வேலப்பன், கள்ளச்சாராய விற்பனையில் கை தேர்ந்தவனாகி விட்டான்; அவன் மட்டும் 'காச்சினது' சாப்பிடமாட்டான், நாற்பதோ ஐம்பதோ, வீசி எறிந்தால், 'அசல்' கிடைக்கும், விஸ்கியோ, பிராந்தியோ, அதைத்தான் சாப்பிடுவான். மட்டம், இந்தப் பசங்களுக்கு! அதைச் சாப்பிட்டுவிட்டு குடல் வெந்து சிலது சாகும் — குளறிக் கூத்தாடி சிலது போலீசிலே சிக்கிக்கொள்ளும் — வேலப்பனுக்கு புதிய அந்தஸ்த்தே ஏற்பட்டு விட்டது, அந்த உலகத்தில்.

முதல் 'சில்க்' சட்டை தைத்துப் போட்டுக் கொண்டபோது, அவனுக்கு செல்லிமீது நினைவு சென்றது. அவள் கன்னமும் இந்தச் சட்டையும் உராய்ந்தால் எப்படியிருக்கும் ஆனந்தம் என்று எண்ணிப்பார்த்தான், விதவிதமானபட்டுச் சேலைகள், புது தினுசு ஜாக்கட்டுகள், பவுன் நகைகள் இவைகளை எல்லாம் வாங்கிக்கொடுத்து, செல்லி இவைகளால் தன்னை அலங்கரித்துக்கொண்டு எதிரே நின்றுகொண்டு சிரித்துப் பேசுவாள்-கனவில்!!

பணம் சேரச் சேர, அவனுக்கு செல்லி என்ன நினைப்பாள், இது ஒரு பொழைப்பா என்று கேவலமாகப் பேசுவாளோ, எந்தச் சமயத்திலே போலீசிலே சிக்கிக்கொண்டு கம்பி எண்ணவேண்டிவருமோ அடிமடியிலே நெருப்பைக் கட்டிக்கொண்டு வாழ்வது ஒரு வாழ்வா, என்று வெறுப்போடு கேட்பாளோ என்றெல்லாம் எண்ணம் சென்றது. மொத்தமாக ஒரு ஆயிரம் சேர்ந்ததும், போதும், இத்தோடு கிராமம் போய்விடுவோம், கலியாணம் செய்துகொண்டு செல்லியுடன் ஆனந்தமாக வாழலாம் என்று தோன்றிற்று. மறுபடியும், சே! விற்றுவிட்டு வந்த நிலத்தை திருப்பி வாங்காமலா அந்தக் கிராமத்திலே காலடி எடுத்துவைப்பது என்று தோன்றிற்று, இன்னும் கொஞ்சகாலம் என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். மூன்று நாலு ஏக்கர் அயன் நஞ்சை வாங்கக்கூடிய அந்தஸ்து வந்தது, போய்விடலாம் என்று எண்ணம் வந்தது; அங்கே போய், ஏரும் எருதும் துணை என்று, மறுபடியும் முழங்காலுக்கு மேலே துணியைக் கட்டிக்கொண்டு, முண்டாசு கட்டிக்கொண்டு, உழுது கொண்டு கிடக்கவேண்டியது தானா, இனி ஏன் அந்தப் பிழைப்பு, இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்துக்கொண்டு, வேறு ஒரு 'டவுன்' போகலாம், அங்கு நல்ல வியாபாரம் ஆரம்பித்து, நாலுபேர் மதிக்கத்தக்க மனிதனாகலாம் என்று ஆசை பிறந்தது. இப்படி ஒவ்வோர் தடவை ஆசை பிறக்கும்போதும், வேலப்பன், தன்னுடன்தான் அழைத்துக்கொண்டுசென்றான் செல்லியை-கற்பனை இரதத்தில்! செல்லியை இவன் தாராசங்கம் தமயந்தியின் நேசம் ஏற்படுகிறவரையில் மறக்கவில்லை. தாராசங்கம் தமயந்தியுடன் 'தொழில்' முறையிலேதான் அவனுக்கு முதல் தொடர்பு ஏற்பட்டது. வாடிக்கையாக 'சரக்கு' வாங்கி வந்ததில் இருநூறு ரூபாய் அளவுக்குப் பாக்கி ஏறிவிட்டது — பணம் வருவதாகக் காணோம். மூலைக் கடை முத்தையன் இதற்குள் வேலப்பனை,'எஜமான்' ஆக்கிக்கொண்டிருந்தான்.

"எஜமான் சும்மாவிடக் கூடாதுங்கோ அவளை. ஆமா, பணத்தை எப்படியும் வாங்கியாகணும் நாங்க இவ்வளவுபேரு எதுக்கு இருக்கிறோம்உங்க உப்பை தின்னுவிட்டு,இந்த வேலை கூடச் செய்யாவிட்டா மனுஷ ஜென்மமா நாங்க. ஒரு உத்தரவு கொடுங்க, அவ வீட்டிலே பூந்து கலாட்டா செய்து பணத்தைக் கறந்துகிட்டு வந்து கொடுக்கிறோம்"

"முத்தையா! அவளை நீ கண்டதுண்டமா வெட்டிப் போட்டாக்கூட, பணம் கிடைக்காது. போவுதுபோ, விட்டுத் தொலை. இனி 'சரக்கு' கெடுக்காதே, அவ்வளவுதான்.''

"எஜமான், இது எனக்குப் பிடிக்கலே. நீங்களா பார்த்து எத்தனையோ தான தர்மம் செய்றிங்க, அதுசரி. சிவராத்ரி உற்சவம் சிறப்பாச் செய்திங்க, ஊர்ஜனங்களெல்லாம், 'ஐயாவோட' தருமகுணத்தைப் பாராட்டினாங்க, அது நமக்குச் சந்தோஷம் கொடுக்குது. ஆனா, பணத்தை வாங்க முடியாமெ ஏமாந்துவிட்டுப் போட்டாங்கன்னு ஒரு சின்ன சொல்லு கேக்கப்படாதுங்க—அது நமக்குப் பிடிக்கல்லே. சரி அவளை நாயேன்னவேணும், பேயேன்ன வாணும், மிரட்டிக் கேக்கவேணும், வேறு வகையிலே அந்தப்பணம் வந்துசேர வழிசெய்யலாமேல்லோ."

"வேறே வழி என்ன கண்டுபிடிச்சிருக்கே..."

"சரின்னு சொல்லுங்க எஜமான், அவளை உழைச்சி பணம் சம்பாரிக்கவைச்சிக் கடனைத் திருப்பிக் கட்டுடின்னு கேக்கறேன்..."

"அப்படின்னா...?''

"அவளை 'டிராமா' ஆடச் சொல்றது, அதிலே பணம் வருதில்லே, நம்ம கடனை எடுத்துக்கொள்றது"

"அவ 'டிராமா' நடந்தாத்தானே!"

"நாம நடத்தறது"

* * *

வேலப்பன், 'டிராமா' கண்ட்ராக்டராளுன்—கடனை வசூலிக்கத்தான். முதல் நாடகத்திலே ஏற்பட்ட நஷ்டத்துக்கு ஈடுகட்ட மூன்று நாடகம் தேவைப்பட்டது. நாலாவது நாடகத்தின்போது, தமயந்தி "ஏதோ உங்களோட தயவு..." என்று கொஞ்சிப் பேசி, தாராசசாங்க நாடகத்திலே அவன் கண்ட அருவருப்பை ஆனந்தமாக்கிவிட்டாள்! செல்வி விடைபெற்றுக்கொண்டாள்; தமயந்தி முத்தையனுக்கு 'அண்ணி' ஆகிவிட்டாள்; வியாபாரஸ்தலமே தமயந்தியின்வீடு என்ருகிவிட்டது. வேலப்பன், ஒரு காலத்தில் கிராமத்தில் இருந்தவன் என்ற அறிகுறியே மறைந்துவிட்டது எப்போதும் கண்சிவந்து கிடக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தமயந்தி "அவர் வேண்டாமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்:" என்று டிராமா காண்ட்ராக்டர்களுக்குக் கூறி, புதிய அந்தஸ்துக்குச் சென்றுவிட்டாள். ஊர்மக்களிடம் தான் அவள் முன்புபோல, தாராசசாங்கம், சாரங்கதாரா, அல்லி அர்ஜுனு, சந்திரமதி ஆகியவைகளை நடித்துக்காட்டவில்லையே தவிர, வீட்டில், எல்லாம் தான்!!

ஆறுபவுனும்!—என்று கூறி அலட்சியமாகச் செயினைத் தமயந்தியிடம் தருவான், வேலப்பன், ஆறோ, நூறோ உங்கள் அன்புதான் எனக்குப்பெரிது, இந்த நகை யாருக்கு வேண்டும்... என்று நாடக மாடாக்குறையை ஓரளவுக்கு நீக்கிக்கொள்ளும் முறையில் பேசுவாள். அட, அட, அதென்ன அப்படிப் பார்க்கறே!—என்று வேலப்பன் கேட்கவேண்டிய கட்டம் நடக்கும்—உஹ்ூம் என்பாள்—அடி அம்மா!—என்பாள், இப்படி நவரச நாடகம் நடைபெற்றபடி இருக்கும்.

தமயந்தி, நாடக வாய்ப்பும் கிடைக்காமல், நல்ல ஒரு சம்பந்தமும் கிடைக்காமல் திண்டாடியபோது, அவளை ஏறெடுத்துப் பாராமல் இருந்தவர்களும், ஏளனம் பேசியவர்களும், வேலப்பனுடன் அவளுக்குத் தொடர்பு ஏற்பட்ட பிறகு, அவளிடம் 'ஆசை' கொள்ள ஆரம்பித்தார்கள்.

நல்லாத்தான் இருக்காடா! நாற்பது வயசுன்னு நாம நையாண்டி செய்தா போதுமா, நேத்து சாயரட்சை அவ, நவக்கிரகம் சுத்தறதுக்கு வந்தா கோயிலுக்கு; எப்படி இருக்கிரு தெரியுமா? இருவது இருவத்தைஞ்சிதான் மதிப்புப் போடுவாங்க வயசு—ஐம்பது அறுபதுன்னு கேட்டாலும் ஆகட்டும்னு சொல்லிப் போடுவாங்க, அப்படி இருந்தா—என்று கூறி ரசிக்க ஆரம்பித்தார்கள்.

நாடகக் காண்ட்ராக்டுகள் எடுத்து எடுத்து நொடித்துப் போனவர், **பாலு வாத்தியார்:** பல ஆயிரக்கணக்கிலே பணத்தை நாடகக் காண்ட்ராக்ட்டிலே பாழாக்கிவிட்ட பிறகு அவருக்குக் கிடைத்த பட்டம் அந்த **வாத்தியார்** என்பது.

நாட்டிலே கீர்த்தியுடன் உள்ள நடிகர்கள் ஒவ்வொருவரும், பாலு வாத்தியாரால்தான், முதலில் கைதூக்கி விடப்பட்டவர்கள் என்று பெயர் உண்டு. அவர் அந்தப் பழைய சம்பவங்களைக் கதை கதையாகச் சொல்லுவார். தன்னலே முன்னுக்கு வந்தவன் பிறகு தன்னை மதிக்காமல் நடந்துகொண்டால், உடனே வேறு ஒரு ஆளைத் தயார்செய்து, அவனுக்கு நிறைய விளம்பரம் கொடுத்து, மெடல் கொடுத்து, மாலை கொடுத்து, போட்டிக்குக் கிளப்புவதிலிருந்து, மற்றும் கொட்டகை கிடைக்காமலிருக்கும்போது, எப்படித் தந்திரம் செய்து கொட்டகையைப் பெறுவது என்பது வரையிலே அவர் சுவைபட எடுத்துக்கூறுவார். இடையிடையே இருமல் வரும், அதைமட்டும் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

தமயந்திக்கும் வாத்தியாரிடம் மதிப்பு உண்டு.

தமயந்திக்கு, வேலப்பனிடம் தொடர்பு ஏற்பட்டதாலே ஒரு புது 'மவுசு' வந்திருப்பது தெரிந்து, தனக்காக ஒரே ஒரு ஸ்பெஷல் டிராமாவுக்குமட்டும் தமயந்தி ஒத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

"வாத்தியாரே! அதென்ன எனக்கு நீங்க இவ்வளவு சொல்லணுமா? முதமுதலிலே நான் மாதவி வேஷம் போட்டனே, அன்னக்கி, என் காலுக்கு உங்க கையாலே தானே 'சதங்கை' கட்டி ஆசீர்வாதம் செய்திங்க. அதை எல்லாம் நான் எப்படி மறந்துடுவேன்"

"செய்த நன்றியை மறக்காதவர்களைத்தான் மனஷாள்னே சொல்லியிருக்கு தமயந்தி. உனக்கும் தெரியுமே. ஓரடி வீராசாமி பாடுவானே ஒரு பாட்டு கவனமில்லே, தோடியிலே,

> நன்றி செய்தாரை என்றும்
> மறவாதே
> நாயினும் கேடுகெட்டு
> நாசமாகாதேன்னு......"

"ஆமாம். ரொம்ப நல்லாப் பாடுமே வீராசாமி இப்ப எங்கே பேரே காணோம்?"

"எப்படிப் பேர் நிலைக்கும். பாட்டுத்தான், செய்த நன்றியை மறக்காதேன்னு, செய்கை அப்படி இல்லையே. அதனாலே ஆசாமி ரொம்ப 'டல்'லாயிட்டான். இப்பத்தான் மறுபடியும் புத்தி வந்து, காலிலே வந்து விழுந்தான், செய்ததை மறந்துடுங்கன்னு, இப்ப, நான் உன்னை ஒரு ஸ்பெஷலுக்கு வற்புறுத்திக் கூப்பிடுவதுக்கு இதுவும் ஒரு காரணம். அந்தப் பயதான் ராஜபார்ட், தெரியுதா அவனை ஒரு மடக்கு மடக்கோணும்—ஆசாமி, அசந்து நிற்கணும்......அப்படி கன ஜோரா இருக்கணும்..."

"உங்க ஆசீர்வாதம். ஆனா அவன் 'தோடி' பாடி ஜனங்களை ஏமாத்திப்போடுவான்..."

"அட, நீ, மோகனத்திலே பிடி......பய, சுருண்டு கீழே விழருன் பாரு...உனக்கு இந்த இரகசியம் தெரிஞ்சி இருக்கட்டும்—பயலுக்கு இப்ப குளறுவாயாயிட்டுது — ள வெல்லாம் ல தான்...ழாவே நுழையாது..."

"எனக்கு எப்பவுமே பயம் கிடையாதே. அப்பேர்ப்பட்ட ஆர்ப்பாட்ட ராஜபார்ட் அய்யாகுட்டியோட தூக்குத் தூக்கி போட்டு யாராலும் சமாளிக்கவே முடியாதுன்னு சொன்னுங்களே, கவனமிருக்கா வாத்தியாரே! காட்பாடியிலே சுருளிமலை மேலே உருளும் இருளனவன்...என்கிற பாட்டுப் பாடி, 'கள்ள பார்ட்' செய்தனே..."

"பய, மூஞ்சி செத்துப் போச்சே"

"அதனாலே, ஏனக்கு இந்த ஓரடி, ஒன்பதடி எல்லாம் பத்திக் கவலையில்லே......இது இருக்கே, என்

ளுடை வீட்டுக்காரு, உசிரு என்மேலே. அது வந்ததிலிருந்து நான் அய்யனர் சாட்சியா, மனசாலேகூடத் தப்பா நடந்ததில்லே. அது, டிராமாவுக்குக்கூடப் போகப்படாது—தலே இறக்கமா இருக்குதுன்னு, ஒரே பிடிவாதம் பிடிக்குது. அதைமட்டும் சரிப்படுத்தி விட்டாப் போதும், ஒரு நாலு நாளைக்குச் சாதகம், மூனுநாள் ஒத்திகை இருந்தாப் போதும்..."

"கொளுத்திபிடலாம் போ"

*   *   *

சரிப்படுத்த முடியவில்லே! ஸ்பெஷல் நடக்கவில்லே. வாத்தியார் விரோதியானர்; போலிஸ் 'துப்பு' கிடைக்கப்பெற்று சுறுசுறுப்பாயிற்று. வேலப்பனுக்கு ஒரு வருஷம்; தமயந்திக்கு ஆயிரம் ரூபாய் அபராதம்!! வாத்தியார் பழி தீர்த்துக்கொண்டார்.

"தீந்துது வாணவேடிக்கை" என்று கேலி பேசினர் ஜதைகள். திக்காலொருவராக ஓடினர் எடுபிடிகள். அவனவனிடம் அகப்பட்டதை அவனவன் சுருட்டிக் கொண்டான். கிராமத்திலே செய்தி பரவி, செல்லாளைச் செந்தேளாய்க் கொட்டிற்று— மற்றவர்களும் வருந்தினர்கள்.

சிறையிலே வேலப்பன், வெளியே சென்ற பிறகு, மீண்டும் எப்படி வாழ்க்கையைத் துவக்குவது, என்பதுபற்றியே எண்ண மனம் இடம் தரவில்லே என்றால், அவன், செல்லியைத் திருமணம் செய்து கொள்வதுபற்றி எண்ணத்தான் முடியுமா!

செல்லியின் உலகத்திலிருந்து வேறு உலகம் வந்தாகிவிட்டது— சேற்றிலே விழுந்து விட்டாலும் பரவாயில்லே, மணியை எடுத்துக் கழுவிச் சுத்தமாக்கி விடலாம், மலக்குழியில் வீழ்ந்துவிட்டால்!! வேலப்பன் மலக்குழியில் வீழ்ந்துவிட்டவனாக மட்டும் தன்னே எண்ணிக் கொள்ளவில்லே, தானே மலமாகி விட்டதாக கூறிக்கொண்டான். எல்லா நல்லவைகளேயும் பெற்றிருந்தேன், இப்போது, எல்லாக் குப்பை கூளமும் சேறு சகதியும் நிரம்பிய நாற்றப்பாண்டமாகி விட்டேன். செல்லியின் உலகம் வேறு— என்ற தீர்மானமான முடிவுக்கு, 'ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனே' என்ற தீர்ப்பு கிடைத்த அன்றே வந்து விட்டான்.

செல்லிக்கு, 'பைத்யம்' பிடிக்கவில்லே— அதுதான் ஆச்சரியம். அவளுடைய மனதுக்கு இந்தச் சேதி எவ்வளவு பெரிய பேரிடி என்பதை அந்தக் கிராமம் அறியும். வேலப்பன் வேகமாகக் கெட்டு வருகிறன் என்ற செய்தி, கிடைத்த ஒவ்வோர் தடவையும், செல்லி, செத்துச் செத்துப் பிழைத்து வந்தாள்— ஒரு வருஷம் கடுங்காவல் என்று கேள்விப்பட்டபோது, அவளால் எதையும் சாகடிக்க முடியவில்லே— ஏற்கனவே எல்லாம் செத்துக்கிடந்த நிலே.

சடையாண்டியும், செல்லியின் திருமணம் என்பது, இனிச் செய்து தீரவேண்டிய ஒரு கடமை, சடங்கு, ஊர் உலகத்துக்காகச் செய்தாக வேண்டிய ஏற்பாடு என்றுதான் கருத முடிந்தது. காய்ச்சல் வந்தவனுக்குத் தெரியும், வாய்க்கசப்பு இருப்பதும், எதைச் சாப்பிட்டாலும், பிடிக்காது என்பதும், என்றாலும், கஞ்சி குடித்துத்தீரவேண்டி இருக்கிறதல்லவா! செல்லிக்கும் ஒரு கலியாணம் செய்துதானே ஆகவேண்டும் என்று சடையாண்டி எண்ணியது, அதே முறையிலேதான்.

அவனுக்கா? எனக்கு இஷ்டமில்லே.

எனக்கு அவன் ஏற்றவனல்ல; அவனேடு என்னாலே குடித்தனம் செய்ய முடியாது.— என்று கூறி, பெற்றோரை எதிர்த்துப் போராடியாவது, தன் மனதுக்கு இசைந்தவனே, தன்னே உண்மையாகக் காதலிப்பவனேத் திருமணம் செய்துகொண்டாக வேண்டும் என்று கூறும் நிலேயில் செல்லி இல்லே.

எனக்கு அவர்தான் வேண்டும்— என்று வேலப்பன் இருந்தால்தானே போரிட! வேலப்பன் எங்கே இருக்கிறன்? சிறையிலிருந்தாலும் பரவாயில்லே, ஏதோ காலக்கோளாறு— கயவர் சூது— ஆத்திரத்தால் அறிவு இழந்த நிலே— இப்படி ஏதேனும் ஒரு சமாதானம் செய்துகொள்ள முடியும்— அவன்தான் வேண்டும் என்று வாதாட முடியும். வேலப்பன் சிறையில் இருப்பவன்மட்டுமல்ல— எல்லா நற்குணங்களும் சிதைந்துபோய்உள்ள நிலேயில் அல்லவா இருக்கிறன்; சாரு போய்விட்டது, சக்கை தானே மிச்சம்!!

தன்னே மணம் செய்துகொண்டு, 'வாழ்வு' நடத்த முடியாத அளவுக்கு, நற்குணங்கள் யாவற்றினேயும், நல்ல நினேப்பினேக்கூட நாசமாக்கிக் கொண்டுவிட்டவன், வேலப்பன். எனவே, இனி அவனே எதிர்பார்ப்பதும் வீண்— அவனுக்காக ஏங்கித் தவிப்பதும் அவசியமற்ற செயல்! உள்ளத்தில் புகுந்து எதிர்காலம் பற்றி ஏதேதோ இன்பக் கனவுகளேக் கூறி நம்பிக்கை தந்துவந்த வேலப்பன், திரும்பி வரவே போவதில்லே. ஏமாற்றம், திகைப்பு, துடிப்பு, வறுமை, ஏக்கம், பேராசை, சூது, மோசடி, காமக்களியாட்டம், எனும் பல காட்டுமிருகங்கள் அவனேத் தாக்கித் தாக்கி, பிய்த்துக் கடித்து மென்று தின்று, கீழே துப்பி விட்டன. இனி அவன் யாருக்கும் பலன் இல்லே— அவன் இனி அவனாகவே இருக்க முடியாது!!

செல்லி, இனி எதற்காகவும் எதிர்பார்த்தும் காத்துக்கொண்டுமிருக்கவேண்டியதில்லே. எது கிடைத்தாலும் சரி—மூன்றும் தாரம், நாலாம் தாரமாக இருந்தாலும் சரி—மூட்டை சுமக்கும் கூலிக்காரனுக்கு மனேவியாக வேண்டியதானாலும் சரி, தயாராகி விட்டாள். சமூகம் ஆண்—பெண் கூட்டுறவு ஒரு குறிப்பிட்ட ஏற்பாட்டிலே இருக்கவேண்டும் என்று கட்டளேயிடுகிறது, அதை மீறுவானேன் என்ற

எண்ணத்தால், திருமணம் செய்துகொள்ள வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தாள் செல்வி.

கண்ணைத் திறக்கிறு, கலம் தண்ணி விடுகிறு! அவன் வானத்தைப் பார்க்கிறுன், வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்ளுகிறுன். அந்தக் குடும்பம் படுகிறபாடு, கல்நெஞ்சக்காரனையும் கதறவைத்து விடும்டாப்பா — என்று கிராமத்தார் பேசிக்கொண்டனர்,

* * *

ஓவிய நிபுணர் வடிவேலன், வழக்கப்படி பல கிராமீயக் காட்சிகளைத் தீட்டிவந்ததுபோலவே, அங்கும் வந்தான்—ஒரு மரத்தடியில், உட்கார்த்து கொண்டு, சற்றுத் தொலைவிலே ஆடுகள் மேய்ந்து கொண்டு இருப்பதை ஒப்புக்கு அவ்வப்போது கவனித்துக்கொண்டிருந்த செல்வியைக் கண்டான், அவனுடைய கருத்து மலர்ந்தது, கவர்ச்சிகரமான கிராமீயச் சூழ்நிலையில், கட்டழகுவாய்ந்த அந்தக் குமாரி, கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்த காட்சி, முதல்தரமாக அமைந்திருந்தது. உடனே எடுத்தான் திரையையும் தீட்டுக்கோலையும், ஓவியம் உருவெடுத்தது. ஓவியக்காரனுக்காகவே உட்கார்ந்திருப்பதுபோல செல்வியின் நிலைமை இருந்தது; அதைச் சாதகமாக்கிக்கொண்டு, வேகமாக மேல்வாரியான படம் தீட்டிவிட்டான்; இனி அதற்கு உயிரூட்டும் வகையில், வேலை செய்ய வேண்டும்.

இரவு பகலென்று பாராமல், வேலைசெய்தான்—ஓவியம் மிக அருமையாக அமைந்துவிட்டது. நண்பர்கள் திறமையைப் பாராட்டினர்; அவனே, உண்மை உருவத்தை எண்ணிப் பூரித்துக்கொண்டிருந்தான்.

மேகங்கள் அலைவதுகூட அப்படியே தெரிகிறது பார், என்று ஓவியத்தைச் சுட்டிக் காட்டிப் பேசுவர் நிபுணர்கள்.

அவனே, அந்தக் கண்களிலே கப்பிக்கொண்டிருக்கும் துக்கத்துக்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து கொண்டிருந்தான்—கவலையுடன்.

அட, இந்த ஆட்டுக்குட்டி, கிராமத்திலே நல்ல மேய்ச்சல் கிடைப்பதால் எவ்வளவு கொழுகொழு என்று இருக்கிறதுபார், என்று பாராட்டிவிட்டு, இதோ இந்தக் குட்டிக்கு மட்டுமென்ன, வெய்யில் என்றும் மழை என்றும் பாராமல், கால் கடுக்குமே கைவலிக்குமே என்று கவலைப்படாமல், ஓடி ஆடிப் பாடு பலபடுவதாலே, உடற்கட்டு வளமாக இருக்கிறது — இளமையும் எழிலும் சேர்ந்தஉடன், சிற்பி செதுக்கிய செம்புச்சிலை



போலத் தெரிகிறது, என்று மற்றவர்கள் புகழும்போது, ஓவியனுக்கு, ஓவியத்தின் பிடியிலும் அகப்படாதிருந்த கவர்ச்சி கண்முன் தோன்றிற்று. எல்லோரும் ஓவியத்தைப் பார்த்து இவன் திறமையைப் பாராட்டிக்கொண்டிருந்தனர், அவனே அவளையே எண்ணிக்கொண்டிருந்தான்.

கிராமங்கள் பலவற்றுக்குச் சென்று அவன் தன் கருத்திலே மகிழ்வூட்டிய எத்தனையோ காட்சிகளைக் கொண்டு வந்திருக்கிறுன்—பச்சைக்கிளிகள் பறந்து செல்லும் காட்சி, பால் சுவைக்கும் கன்றினை அன்புடன் தாய்ப்பசு நாவினல் தடவிக் கொடுத்திடும் காட்சி, உழவுத் தொழிலிலே உள்ள பல்வேறு வகையான காட்சிகள் கிராமீயப் பெண்களின் குறும்புப் பார்வை, உழவனின் உடற்கட்டு, வெள்ளை உள்ளம் கொண்டவன், புதுமைப் பொருளை விறைத்து விறைத்துப் பார்ப்பது, ஆகிய பல காட்சிகள் அவனிடம் சிக்கி, ஓவியமாயின—ஆனல் இந்தக் கட்டழகி —திரையில்மட்டும் தீட்டி வைக்கப்படவேண்டியவளல்ல, உள்ளத்திலே தங்கிவிடவேண்டியவள் என்று வடிவேலன் தீர்மானித்தான்.

வடிவேலன் வசதியான குடும்பத்தினன்—வயதான தாயாருடன், தன் பூர்வீகச் சொத்தைப் பாழாக்கிக் கொள்ளாமல் ஆடம்பரமின்றி வாழ்ந்து வந்தான். ஓவியத்திலே அவனுக்கு நிரம்ப ஆர்வம்; அதற்காக அவன் கிராமீயக் காட்சிகளில் மனம் செலுத்தத் தொடங்கி, கிராமத்தினிடமே கவர்ச்சி பெற்று, இப்போது கிராமக் கட்டழகியிடம் மனதைப் பறிகொடுத்தான்.

வடிவேலனுடைய தாயாருக்கு, தன் மகன் ஒரு நாகரீக நாரிமணியை மணம் செய்துகொண்டு, பார்ப்

பவர்கள் பாராட்டத்தக்க விதமாக வாழவேண்டும் என்றுதான் விரும்பினர்கள். அதற்கான முயற்சிகள் பலதடவை செய்தார்கள்—எல்லாம் ஏமாற்றத்திலே தான் முடிந்தது—காரணம், அந்த அம்மையார் மீது நெடுங்காலத்துக்கு முன்னலே ஏற்றிவைக்கப்பட்ட கறைதான். எனவே, வடிவேலன், கிராமத்துக் கட்டழகியைப் பெற விரும்புகிருன் என்று தெரிந்து, முதலிலே, இதுதானு என்மகனுக்கு என்று வருத்தப் பட்டபோதிலும், ஏதோ, இதுவாவது மங்களகரமாக முடியட்டும் என்று எண்ணிக்கொண்டார்கள்; பெண் பார்த்துவரவும், ஏற்பாடுகள் செய்யவும் தானே கிளம்பினர்கள்.

இவ்வளவு வேதனையை அனுபவிக்கிருள், பாவம்' இந்த இடம் பச்சென்று இருக்கிறது, பளபளப்பாகவும் இருக்கிறது, பணம் படைத்தவனுகவும் இருக்கிருன், கிழவனல்ல, அழகாகவும் இருக்கிருன், என்ருலும் பட்டணத்துப் படாடோபம் இல்லை, இந்த இடத்தில் வாழ்க்கைப்பட்டு சீமாட்டிபோல வாழ்ந்தாலாவது, செல்வி இழந்துவிட்ட சந்தோஷம் ஓரளவுக்குத் திரும்பி வரக்கூடும் என்ற எண்ணத்திலே, சடையாண்டி, திருமணத்துக்குச் சம்மதமளித்தான்.

ஊரார் பார்த்துப்பரிதாபப்பட வேண்டிய நிலைமையில் அப்பா நம்மாலே ஆக்கப்பட்டுவிட்டார், என் கதி என்ன ஆகுமோ என்ற ஏக்கமே அவரை வாட்டி வதைக்கிறது, பெரிய இடத்திலே நான் வாழ்க்கைப் படுவதைக் கண்டபிறகாவது அவருடைய மனதுக்கு ஒரு சந்தோஷமும், பெருமையும் கிடைக்கட்டும், என் மருமகன் சாமான்யமானவனல்ல, இந்தக் கிராமத்தையே விலைக்கு வாங்கிவிடக்கூடிய அளவுபணம் இருக்கு, படித்திருக்கிருன், நல்ல மனம, பட்டணத்திலே அவனுக்குக் கோட்டைபோல வீடு இருக்கு, மோடார் கார் இருக்கு, இப்படிப்பட்ட இடம் கிடைச்சிருக்கு என் மகளுக்கு! அவளோட அழகுக்கும் குணத்துக்கும் இப்படிப்பட்ட அருமையான இடம்தான் வந்து வாய்க்கும். பாடுபட்டு வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி என் மகளை நல்லபடியாக வளர்த்தேன்—அவ தங்கக்கட்டி குணத்திலே! அவளுக்கு இப்படிப்பட்ட இடம்தான் கிடைக்கும்!! என்று பேசிப்பேசி ஆனந்தப்படுவார், பலகாலமாக மனதை அரித்துக் கொண்டிருந்த துக்கம் தொலையும், கடைசி காலத்திலே கண்களிலே களிப்பு இருக்கும் என்று எண்ணித்தான் செல்வி, திருமணத்துக்கு, ஆர்வத்துடன் சம்மதமளித்தாள்.

* * *

செல்லி! செல்லி! செல்லி! என்று பல வகையான, ஆனல் அன்புச் சுருதி குறையாமல், ஓயாமல் கூப்பிடுவான் வடிவேலன். திருமணத்துக்குப் பிறகு, முன்னலே அவன் கண்டதைவிட அதிகக் கவர்ச்சி அவளிடம் இருப்பதைக் கண்டான், களிப்புற்ருன்.

அவன், எத்தனையோ முறை, தன் நண்பர்களிடம் வாதாடி இருக்கிருன், கிராமத்திலே இருக்கிற கவர்ச்சி இங்கே, நகரத்திலே கிடையாது, செடி கொடியிலே இருந்து, மாடு கன்றும் சரி, மக்களும் சரி, அங்கே தான் ஒரு விதமான இயற்கை எழிலுடனும் வளத்துடனும் இருக்க முடிகிறது, 'டவுனில்' எல்லாம் பூச்சுத்தான், எதிலும் இயற்கை எழில் தங்கி இருப்பதில்லை. பாரேன், வேடிக்கையை, தோட்டத்தில் மலர்ச் செடி வைத்து அழகைக் காணவேண்டும் என்று இல்லாமல், வீட்டின் கூடத்தில், மேடையின் பேரில் கண்ணுடிப் பாத்திரத்தில், காகிதப் பூங்கொத்தைச் செருகிவைத்து அழகுபார்க்கிற ரசிகர்கள் தானே நாமெல்லாம், நகரத்தில். அங்கே போய்ப் பாரடா, மலர்க் குவியலை. பச்சைப்பட்டின்மீது நவரத்தினங்களைத் தூவி இருப்பதுபோலிருக்கும்! மலர் தூவுவார்கள், ராஜ குமாரிகள் நடந்துசெல்லும் பாதையில் என்று கதைபடிக்கிருேம், கிராமத்துப் பெண்களுக்கு, மலர்ப்பாதை தானுகவே அமைந்திருக்கிறது. அழகுக்கேற்ற ஆற்றல் கிராமத்து பெண்களிடம் இருக்கிறது; இங்கே, ஏழெட்டுக் கடைக்காரர் தயவு கிடைத்தால்தானே, ஒரு எழில் மங்கையைக் காணமுடியும். தையற்காரர்களின் தயவு இல்லாமல், பாதிப் பெண்கள், உருவாகவே தெரிய முடியாதே! பவுடர்காரன், எவ்வளவு 'அகோரங்களை' 'அனுமதிக்கத்தக்கதுகள்' ஆக்கிவிடுகிருன்!! இப்படித்தான் இங்கே அழகிகள் தயாரிக்கப்படுகிருர்கள். அங்கு அப்பழுக்கற்ற அழகு தானுக மலர்ந்துவிடுகிறது—காலையிலே நீராகாரம், நடுப்பகல் உணவு, இரவு, காலையிலே இருந்ததில் கொஞ்சம் — இடையிடையே மாம்பிஞ்சோ புளியம்பழமோ, பச்சரிசி மாங்காயோ பழுக்காத கொய்யாவோ, எதுவும் இல்லையானல் கதிரைக் கசக்கிப் புடைத்தெடுத்த, பால்ததும்பும் மணியோ, எதையோ ஒன்று வாயில் போட்டுக் குதப்பிக்கொண்டு, குதூகலமாகத்தான் இருக்கிருர்கள். அவர்களின் குதூகலப் பேச்சும் குறும்பான ஆடல் பாடலும், கண்டால் தானே தெரியும். இங்கே நாட்டிய ராணிகள் தங்களுக்குத் தெரிந்த தளுக்கு, குலுக்கு, மினுக்கு, வெட்டு, எல்லாவற்றையும் காட்டிப் பார்க்கிருர்கள், பாம்பாக நெளிகிருர்கள், பச்சை மயில் போல ஆடுகிருர்கள், என்ன செய்தாலும், கவர்ச்சி கனியாது என்பதைத் தெரிந்துகொண்டு, இப்போது, கிராமீய நடனம் ஆடுகிருர்கள், பார்த்தாயா!

'திராவிட நாடு' துணை ஆசிரியர்
அரங்கண்ணல்
வழங்கும்
அற்புதச் சரிதக் கதை!
★ வெண்ணிலா ★
புத்தம் புதியது! தித்திக்கும் தமிழில்!!
★
வெளிவந்துவிட்டது
தாயக ஓவியம்! ஆராய்ச்சிக் கருத்துக்கள்!!
புழுதிமேடு
[அரங்கண்ணல்]
விலை ரூ 1-4-0 :: கழிவு 25 %
அன்பு பதிப்பகம்,
பொறையார், தஞ்சை Dt.

நாடோடிப் பாடல்— கிராமீய நடனம் என்பதன்மீது இன்று அக்கரை சென்றதற்குக் காரணம், நகரத்து நாட்டியத்தையும், பட்டணத்து பாணிஉள்ள பாட்டையும் மட்டும் கொண்டு நகரமக்களே, திருப்தி சொள்ள வில்லை என்பது புரிந்துவிட்டது; ஆகவேதான், கிராமீய மகிமையைக் காட்டுகிறார்கள்! எந்தக் கிராமத்திலாவது, நகரத்து நாட்டியம், பட்டணத்துப் பாட்டு நடைபெறுகிறதா? இல்லையல்லவா?— என்று ஆர்வம் பொங்கப் பொங்கப் பேசுவான்.

"ஏண்டா வடிவேல்! பொதிபொதியாகக் கொட் காட்டணும்—சுருக்கமாகச் சொல்லவேணும்னு கிராமத்துக் கட்டழகியைக் கலியாணம் செய்துக்கொள்ளவும் நான் தயார்னு சொல்லேன்" எனது நண்பர்கள் கேலி பேசுவர்.

தயார்...! என்று தயாவிஷயமாகப் பேசுவானேன். கிராமத்துப் பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்ளப்போகிறேன் இதுஉறுதி!" என்று திட்ட வட்டமாகக் கூறிவந்தான்.

"சொன்னபடியே செய்தே காட்டிவிட்டானே! செல்லி அழகான பெண்தான், ஆனா அசல் பட்டிக்காடு! முகத்திலேயே அந்த முத்திரை விழுந்திருக்கு" என்று கலியாணத்துக்குப்பிறகு கூறினர். பெருமையுடன் தன் நண்பர்களிடம், "டேய்! பார்த்தாயா, சொன்னபடி நடத்திக் காட்டினேன்" என்று பேசுவான்; "என்னமோடப்பா, நீ சந்தோஷமாக இருந்தாப் போதும்" என்று கூறினர்.

செல்லியைப் பொறுத்தமட்டில், பணிவிடை செய்வதன் மூலம் வடிவேலனை மகிழ்விக்க வேண்டும் என்பதிலே அக்கரையே இருந்தது. வேலப்பனிடம் கொண்டிருந்த 'பிரேமை' இனி மீண்டும் எழாது—வேறோர் திசையில் செல்லாது—ஆனால் வடிவேலனிடம் நல்ல மதிப்பு இருந்தது—சிலவேளைகளிலே பரிதாபமாகக்கூட இருந்தது. நாமோ பட்டிக்காடு—இவரோ படித்தவர் பட்டணத்துக்காரர்—பணக்காரர். இவர் ஏன், இந்த பட்டணத்திலே எத்தனையோ பேர் ராணிபோல் இருந்தும், என்னைத் தேடிக் கண்டுபிடித்தார், என் தரித்திரத்தைக் கண்டு பாசம் பிறக்குமா வேடிக்கையாக அல்லவா இருக்கிறது, இங்கே உள்ளவர்களின் நடை உடை பாவனையிலே உள்ள நாகரீகத்துக்கும், என் போக்குக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதே. எதைத் தொட்டாலும், சோப்புப் போட்டுக் கை கழுவி, உடனே ஈரம் போகத் துணியால் துடைத்துக்கொள்கிறார்கள். எத்தனையோ தடவை, கீழே எண்ணெய் கொட்டிவிட்டால் எடுத்துத் தலையில் தடவிக்கொள்ளுவேன், பிறகு முந்தானையில் துடைத்துக்கொள்ளுவேன்—நான் இங்கே, இவருக்குவந்து வாய்ப்பதுஎன்றால், எனக்கு என்னசொல்வதுஎன்றே புரியவில்லை. களத்து மேட்டுக்கு ஓடுவதும், முழங்காலளவு சேற்றிலே இறங்கி நடப்பதும், மரத்தில் ஏறிக் காய் பறிப்பதும், மடுவில் நீந்திக் குளிப்பதுமாக இருந்து வந்த என்னை, இங்கே, காலிலே ஜாண் உயரத்தில் பூட்சும், கையிலே ஒரு அலங்காரப் பையும், கண்ணுக்குத் தங்கக் கம்பி போட்ட கண்ணாடியும் போட்டுக்கொண்டு, முக்கால் சிரிப்பும் கால் பேச்சும் கலந்தளித்துவரும் நாகரீகப் பெண்களின் நடுவில் கொண்டுவந்து ஏன் நிறுத்தினார் என்றே தெரியவில்லை. அவர் மேஜைமீது அடுக்கடுக்காகப் புத்தகங்கள்—ஒரு வரியும் எனக்குப் புரியாது......ஆனால் என்னிடம் அவர் காட்டும் அன்பைக் கண்டாலோ, அவருடைய காலைத் தொட்டுக் கும்பிடவேண்டும் போலத் தோன்றுகிறது. கதை ஒன்று கேட்டிருக்கிறேன் சின்ன வயசில், வேண்டுமென்றே ஒரு ராஜா, தன் நாட்டிலே இருந்த பிச்சைக்காரனுக்கு ஒருநாள் ராஜா வேலைகொடுத்து, அதை அவன்எப்படி எப்படி உபயோகப்படுத்துகிறான் என்று வேடிக்கைபார்த்தானாம் — அதுபோல இது ஒரு வேடிக்கையோ என்னவோ என்று எண்ணிக்கொண்டு, அதற்கு ஏற்றபடியே நடந்துகொண்டு வந்தாள்.

* * *

கிராமத்துக் கட்டழகியின் கவர்ச்சி, நகரத்துச் சூழ்நிலையில் மெள்ள மெள்ளத் தானாகவே மாறிக்கொண்டு வரலாயிற்று; ஒருவரும் கவனிக்கக்கூட முடியவில்லை. பசுமைக்குப் பக்கத்திலே இந்த 'இளமை' உலாவிக் கொண்டிருந்த காட்சிக்கும், பங்களாவில், ஆள்நடமாட்டம் இல்லாமல், அந்தஸ்த்தைக் காட்டும் பொருள்களுக்கு மத்தியில் செல்வி இருந்த காட்சிக்கும் வித்தியாசம் காணப்பட்டது. அதைக் கவனித்தறிய வடிவேலனால் முதலிலே முடியாமற் போனதற்குக் காரணம், அவன் அவளிடம் சொக்கிக் கிடந்ததுதான்! மடுவிலே இறங்கி, மகிழ்ச்சியுடன் நீந்தி விளையாடுவாள், கிராமத்தில்; வேறு பெண்களும் குளிக்க வருவார்கள்—விளையாட்டுப் பலமாகிவிடும், தண்ணீரை வாரி வாரி இறைத்துக்கொள்வார்கள். யார் முதலிலே வெளியே தலையைத் தூக்குகிறார்களோ அவர்களுக்கு மூணு குட்டு தலையிலே என்று பந்தயம் கட்டிக்கொண்டு, தண்ணீருக்குள் மூழ்கிக் கிடப்பார்கள்—உலர்ந்ததும் உலராததுமாகவே கூந்தலைக் கோதி முடிந்து கொள்வார்கள்—இவை

களாலே அவர்களிடம் உள்ளத்திலே ஒரு சுறுசுறுப்பும், உடலிலே ஒரு மினுமினுப்பும் ஏற்பட்டது—எழிலூட்டிற்று. இங்கே, வெந்நீர்! விதவிதமான சோப்புக் கட்டிகள்! பேசாமல் சிரிக்காமல், குளித்துவிட்டு, வர வேண்டும். குளிப்பது கிராமத்திலே, விளையாட்டிலே ஒன்று. இங்கு, கடமைகளில் ஒன்று! கிராமத்திலே, கண்களுக்கு விருந்தளிக்கப் பல காட்சிகள்—கிளி பழத்தைக் கொத்தித் தின்னும், காடை கௌதாரி கீழே சிதறிக் கிடக்கும் மணிகளைப் பொறுக்கித் தின்னும், வயலோரத்து நீரோடையில் வாத்துகள், பல இடங்களில் மரம்குத்திப் பறவைகள், மடுவிலே விதவிதமான மீன்கள், பட்டுப்பூச்சிகள்எங்குபார்த்தாலும் வர்ணத்தை அள்ளித் தெளித்ததுபோல, ஆட்டுக் குட்டிகள் துள்ளுவதும், கயிறு அறுத்துக் கொண்டு ஓடிவரும் காளையைப் பிடிக்க உழவர்கள் கூச்சலிடுவதும், பெண்கள் பயந்து ஒதுங்குவதும், இப்படிப் பல காட்சிகள் கண்டு, அதனாலே உள்ளத்துக்கு உற்சாகம் கிடைத்தபடி இருந்தது. முயற்சி—வெற்றி—இந்த இரு கட்டங்கள் தானே, மனித உள்ளத்துக்கு எழிலும் உரமும் தருவன; அந்த நிலை, கிராமத்திலே விநாடிக்கு விநாடி ஏற்பட்டு வந்தது. ஒவ்வொரு காரியமும் வெற்றி அளிக்கும் போது களிப்பூட்டும். இங்கு, கடிகாரத்தின் முட்கள். பிறருக்காக, ஒழுங்காக வேலைசெய்து கொண்டிருப்பது போல, வாழ்க்கை அமைந்திருந்தது' கடிகாரம் மணி அடிப்பது போல, இங்கு சில நேரம் பேச்சு—சிரிப்பு—மற்ற நேரத்தில், ஒழுங்கான, நிதானமான, அளவிடப்பட்ட ஓட்டம்!! செல்லியின் வாழ்க்கை இது போல இருந்ததில்லையே.

அவளுக்கு ஆச்சரியமாகவே இருந்தது எண்ணிப் பார்க்கும் போது. அவள் காதிலே அவள் குதூகலமான குரலொலிபட்டு, நாட்கள் பலவாகிவிட்டன. கிராமத்திலே, ஒருநாளைக்கு நூறு தடவை, அவள் கூவுவாள், பெரியப்பா! அண்ணேன்! பாட்டி! அப்போய்! அட, உன்னைத்தான்! கூனுக்கிழவா! கொண்டைக்காரி! சண்டைக்காரி—இப்படி ஒவ்வொருவருக்கு ஒரு பெயரிட்டு, உரத்த குரலில் கூப்பிடுவாள், ஓடிச்சென்று சிலரைத் தடுத்து நிறுத்துவாள், சிலர் கரத்தைப் பிடித்திழுத்து விளையாடுவாள்—எல்லாம் பழங்கதையாகிவிட்டது. உரத்த குரலில் பேச வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. எப்போதும் கண்பார்வையில் பட்டபடி இருக்கிறாள் வேலைக்காரி! மாமி, எதிரிலேயே சோபாவில் உட்கார்ந்து கொண்டு 'பாரதம்' படிக்கிறார். அவரோ, வந்ததும் ஓவியம் எழுதுகிறார்—அது முடிந்ததும், எப்படி கண்ணழகு? உன்னோடு போட்டி போடுதா உனக்கும் இவளுக்கும் போட்டி, யார் ஜெயிப்பீர்கள்? என்று, கொஞ்சுவார்! வேறே பேசவேண்டிய நிலைமையே வருவதில்லை. வாயடைத்துக் கொண்டல்லவா இருந்திருக்கிறோம் இவ்வளவு நாட்களாக, என்று எண்ணி, தனக்குத் தானே ஆச்சரியப்பட்டாள்.

பெரிய இடத்துக்கு வாழ்க்கைப்பட வந்தவள் என்பதாலே, செல்லியிடம், உபசாரம் பேச, நாகரீகம் பெண்கள் வருவதுண்டு.

வாங்க...என்று மரியாதையாகத்தான் அழைப்பாள், ஆனால் மறுகணமே, அவர்களுக்கும் நமக்கும்

தபால் பெட்டி 555 மதராஸ்

N. V. S.

டெலிபோன் 4671 மதராஸ்

தந்தி விலாசம்; மூக்குத்தூள், மதராஸ்.

ஆதிக்கம் மிகுந்த நாசிச் சூரணம்

மகத்தான புகையிலையை மணம் மாரு வருத்து
மண் சட்டிதன்னில் மரத்தடி கொண்டரைத்து
புத்துருக்கு நெய்யில் சிப்பி கண்ணம் சேர்த்து
பக்குவமாகச் செய்யும் கை முறையின் பாகம்

சென்னையில் முன்னணியில் நிற்கும் நன்னயம் வாய்ந்தது
சென்ற இடமெல்லாம் சீர்சிறப்பு செல்வாக்கும் பெற்றது
அன்பர்கள் தினம் தென்புடன் பெறும் அருமை வாய்ந்தது
உத்தமப் பெரியோர்களால் உவந்து பாராட்டப்பெற்றது
உத்தியோக பதவியாளர்கள் அத்தியாவசியமாக பெறுவது
கலைவல்லோர் கவிவாணர் கரமிருக்குப் கவுரவமுடையது
ஆன்ற அறிவுடையோர்களால் போற்றிப் புகழ்ப்பெற்றது
தென்னிந்திய திலகங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றது

என். வி. எஸ். பட்டணம் பொடி ஒன்றே!

தயாரிப்பாளர்,
என். வி. ஷண்முகம் கம்பெனியார், மதராஸ்-21.

ஒட்டிவராது என்று பயம் தோன்றும்—மாமியுடன் பேசிவிட்டுப் போகட்டும் என்று இருந்து விடுவாள், இவளுக்கென்ன இவ்வளவு கர்வம் என்று எண்ணிக் கொள்வார்களோ என்ற பயத்தால் சில நாட்களில் வந்த பெண்களுடன் பேசுவாள்; அவர்கள் கேலி செய்யும் விதமாக இருக்கும், அவளுடைய கேள்வி பதில் இரண்டுமே!!

பட்டிக்காடுன்னாலும், சுத்தமாகச் சுட்டெடுத்தது—என்றாள், ஒருவள் — வேகமாக நடந்தால், காற்று அடித்துக்கொண்டு போய்விடத்தக்க ஒத்தை நாடிக் காரி! அவளுடைய மனதில், தானோர் பூங்கொடி என்று எண்ணம்—கொடிபோல உடல் இருந்தது! பூபோல எதுவும் கிடையாது.

"நம்மோடு பேசுவதற்கே இவள் இவ்வளவு திண்டாடுகிறாளே, வடிவேலன் ஒரே கலை விஷமமாகப் பேசுவானே, என்ன பேசுவாள் இவள்" என்று கேட்பாள் ஒரு குறும்புக்காரி, மற்றொருத்தி, "போடி பேசுவது மட்டும்தானா, புருஷன் பெண்ஜாதிகளுக்குள் இருக்கும் வேலை. பேசத்தெரியாவிட்டால் என்னவாம்!!" என்று வேறோர் வம்புக்காரி பேசுவாள்.

"நாட்டுக் கட்டை என்று கேலியாகச் சொல்லுவா, எனக்கு அதனுடைய பொருள் முன்னாலே தெரியறதில்லே, இப்ப, இவளைப் பார்த்தபிறகு, புரிஞ்சுது..." என்பாள் அவலட்சணத்தை மறைக்க நாளெல்லாம் பல வகையால் பாடுபட்டுக்கொண்டு வந்த ஒரு நோஞ்சான்.

கண் இருக்கு காதுவரையிலே! ஆனா, மிரளமிரள அல்லவா விழிக்கிறாள்!

புருவத்திலே பார்த்தயாடி, எவ்வளவு கத்தை கத்தையா இருக்கு மயிர்—ஆனா, அதை ஒழுங்காக மை தடவி, வைத்திருக்கத் தெரியலையே...

அதிக உயரமில்லே, ஒட்டகைச்சிவிங்கை மாதிரி! குள்ளவாத்து மாதிரியுமில்லே, சரியான அமைப்புத்தான் இருக்கு, ஆனா, அந்த உடற்கட்டுக்குத் தகுந்த உடை உடுத்தத் தெரியறதோ! காளி சிலைக்கு போர்த்திவைத்திருக்கறதுபோல, சேலையைச் சுத்திண்டு கிடக்கறா—பார்க்கச் சகிக்கல்லே......

கூல்டிரிங் கேட்டுட்டு, தான் படாதபாடுபட்டனே, ஒரு நாள்—பத்துத்தடவை, புரியறது மாதிரியா—பிறகு கொண்டுவந்து கொடுத்தா. ஒரு இழவும் புரியல்லே...

கிளப்புக்குப் போவமான்னு நான் ஒரு நாள் கேட்டேன், "ஏன், ஏன் இன்னக்கி வீட்டிலே என்ன? சமயல் கிடையாதான்னு கேட்டாளே! முண்டம், கிளப்புண்ணு ஒட்டல்னு எண்ணிக்கொண்டா, பிறகு அவளிடம் கிளிப்பிள்ளைக்குப் பாடம் சொல்றது போலச் சொல்லி, வெகுபாடுபட்டு மெம்பராக்கினேன்...

வடிவேலன், வெசுவயஸ்படம்எழுதியிருக்கான்டி, ரொம்ப நன்னா இருக்கு. பார்க்கும் போது, நெருப்பு நம்ம மேலேயே வந்து விழுந்துடுமோன்னு தோணும், அவ்வளவு தத்ரூபமா எழுதியிருக்கான்......இவ சொல்றா, இது என்ன படம், நெருப்பைப் போயி படமா எழுதவேணுமான்னு கேட்கிறா? இப்படி என்னைக் கேட்ட மாதிரி, அவனைக் கேட்டிருந்தா, தலை தலைன்னு அடித்துக்கொண்டு சன்யாசம் வாங்கிக் கொண்டுவிடமாட்டானோ வடிவேலன்.

இப்படி எல்லாம் பேசுவார்கள் நாகரீக நங்கைகள்—சில வேளைகளில் செல்லத்தின் செவியில் படும்படிகூடப் பேசுவார்கள். கோபமாக இருந்தது. இருந்து? பொறுத்துக்கொண்டாள். நாம் இங்கு வந்திருப்பது, இதுகளிடம் நல்ல பெயர் வாங்க அல்ல, அவருக்கு அன்பு தர—அதை நாம் வஞ்சனையின்றிச் செய்து வருகிறோம்—அவர் நம்மிடம் ஒரு குறையும் காணவில்லை, எப்போதும் போலத்தான் பிரியமாகப் பேசுகிறார், அது போதும் நமக்கு, என்று திருப்தி அடைந்தாள்.

பிரியமாகப் பேசுகிறார் என்று அவள் எண்ணிக் கொண்டதிலே தவறு இல்லை. ஆனால் எப்போதும் போல அல்ல! அதை அவளாலே அவ்வளவு எளிதாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

* * *

"ஏன் செல்லா! பீச்சுக்கு வருவதிலே உனக்கு என்ன சங்கடம்? அந்த இடம் என்ன, புலி கரடி உலவுகிற இடமா என்ன?" என்று ஆரம்பமாயிற்று, அதிர்ப்திப் படலம். எதுவரையில் சென்றது என்றால் "நான் போயிட்டு வருகிறேன் பீச்சுக்கு; ஊர்மிளா வந்தால் சொல்லு, நான் பீச்சிலே இருப்பேன் என்று" சொல்லிவிட்டுத் தனியாகக் கடற்கரை செல்லும் அளவுக்குச் சென்றது.

ஊர்மிளா, வடிவேலனைப் பெறவேண்டுமென்பதற்காகவே, வெளியே கிளம்பும் போதெல்லாம், குறைந்தது ஒரு மணி நேரம், கண்ணாடியும் கையுமாக ஒரு வருடம் இருந்தவள். கல்லூரியில் 'ஆங்கில டான்சு'க்கு அவளுக்குத்தான் மெடல் கிடைத்தது. அவளிடம் வடிவேலனுக்குக் காதலோ என்று சந்தேகம் பிறந்தது, செல்லிக்கு; கோபமாகக்கூட இருந்தது. பிறகோ அவர் எது செய்தாலும் பொறுத்துக்கொள்வேன்; தெரியாமல் என்னைக் கலியாணம் செய்து கொண்டார், அவருடைய மனைவியாக இருக்கும் வகையில், என் நடைநொடி பாவனை இல்லை; என்னால் மாறவும் சுலபத்திலே முடியவில்லை. அவர் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டார், பாவம். ஊர்மிளா உல்லாசமாகப் பேசுகிறாள், அதிலே அவருக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சி. அதையாவது அவர் பெறட்டும்—என்று நினைத்துக் கொள்வாள்—கோபம்கூட மறையும்.

அடுத்த கட்டம் ஆரம்பமாயிற்று! மாமி அதைத் துவக்கி வைத்தாள். "செல்லி! ஒரு படித்த புருஷன் நாலுபேருடன் மதிப்பாக பழகி வருகிறவன், நாகரீக மானவன், அவனோட மனசு சந்தோஷப்படுகிற மாதிரி யாக இருக்க வேண்டும் என்கிற அறிவு இருக்க வேணுமாம்மா! கழுத்திலே தாலியைக் கட்டி விட்ட பிறகு, மனைவியுடன் புருஷன் ஆசையா இருந்து தானே தீரணும்னு, எண்ணிக்கொண்டா போதுமா? அவனுக்கு மனம் குளிரும்படியா, நாகரீகமாக உடுத்திக்கொண்டு, நல்ல இன்பமாகப் பேசிக்கொண்டு, பொழுது போக்காக இருந்தால்தானே, அவன் உன்னை எப்போதும் அன்பாக நடத்துவான். எண்ணெய் வடிந்து நெற்றியிலே வழியுது—அதைக் கூடத் தெரிந்துகொள்ளாமலிருக்கறே, அதே கோலத்திலே, பலபெண்கள் உன்னைப்பார்க்கிறாங்க,பின்னாலே போயி, எவ்வளவு கேலியாகப் பேசுறாங்க தெரியுமா? செச்சே! இப்படியா இடிச்சுவைச்ச புளியாட்டம் இருக்கிறது." என்று புத்தி சொல்லி வந்தார்கள்; புதிய கோலம் பெறுவதற்கான வழிகளை, வேலைக்காரி மூலம் சொல்லிக் கொடுத்தார்கள். செல்லியும், நாகரீகக் கோலத்தை—உதட்டுச் சாயம் உட்பட—கொள்ள ஆரம்பித்தாள், சகிக்க முடியாத கோரம் அவளிடம் குடி புகவந்தது.

கூந்தலை அள்ளிச் செருகிவிட்டு, சிறுமலர்ச் செண்டு வைத்திருந்தபோது, இருந்த எழில், முன் பக்கம் கொம்புபோலக் கூந்தலைச் சுருட்டிவிட்டு, பின் பக்கம் இரண்டு சாட்டைகளைத் தொங்கவிட்டு, தலையிலே ஒரு பூக் கூடையைச் சுமந்து கொண்டு செல்லி காட்சிதந்த போது வடிவேலன், வெட்கப்படும் வடிவம் காட்டிற்று!

ஊர்மிளாவை இதே கோலத்தில் பார்த்தவர்கள், கிளியோபாட்ரா என்பார்கள்! செல்லிக்கு அதே அலங்காரம், ஆபாசமாக இருந்தது. இவ்விதமே, நாகரீக நங்கையாக வேண்டும் என்பதற்காக, செல்வி எடுத்துக் கொண்ட ஒவ்வொரு முயற்சியும் அவளுடைய இயற்கை எழிலைப் பாழாக்கிவிட்டது. செல்லிக்கும் வடிவேலனுக்கும் இடையிலே இருந்த தொலைவு அதிகரித்தது; ஊர்மிளாதான் வடிவேலனுக்கு, ஓவியக்கலைக்கே ஆதாரமானாள். புன்னகையுடன் ஊர்மிளா! புல்லை வாயில் தடவியபடி ஊர்மிளா படுத்த நிலையில் ஊர்மிளா! பந்தாடும் ஊர்மிளா! என்று இப்படியே ஓவியங்கள் கூடத்தை அலங்கரித்தன. செல்லியின் ஓவியத்தை அகற்றி விடவில்லை; அந்த இடம் ஊர்மிளாவின் ஓவியக் காட்சிக் கூடமாகவே மாறிவிட்டது.

எழும்பி எழும்பித் தானாக அடங்கிடும் கோபம், ஏமாற்றம், வெட்கம், துக்கம் எல்லாம்கூடிச்செல்லியின் மீது படை எடுத்தன. அவள் 'இளமை' ஓரளவுக்குக் கவசமாக நின்று தடுத்தது, என்றாலும் நீண்ட நாளைக்கு இந்தக் கவசம் பயன்படாது என்பதும் புரியும் நிலை வந்தது. செல்லியின் முகம், சோகபிம்பமாகிவிட்டது.

"ஏனம்மா! உலகத்தையே பறிகொடுத்தவபோல உம்முனு இருக்காளே, செல்லி, என்னவாம்? உடம்புக்கு ஏதாவது தொல்லையா? சொல்லித் தொலைச்சாத்தானே, ஏதாவது செய்யலாம்..."

"அவளுக்கு உடம்புக்கு என்னடா? வேளா வேளைக்குச் சாப்பிடறா, விடியிற வரையிலே தூங்கறா, விசனம் என்ன இருக்கு, உடம்புகெட, சிலதுகளோட முகம் அப்படி. பதினெட்டிலே பால் வடியறது போல இருக்கும், இருவதிலே அழுது வடியும், அதுக்கு என்ன மருந்து இருக்கு, டாக்டரிடம்"

"ஊர் ஞாபகம் வந்திருக்கோ, என்னமோ? போகிறதா இருந்தா, அனுப்பிவையேன்..."

"நானே, அவ அப்பனுக்கு கடிதம் போட்டுக்

கூப்பிடணுமா? ஏண்டா, அதுவா நியாயம்? அவ ளப்பாவா வந்து அழைச்சி இருக்கணும்...”

“நடவு வேலேயோ, நாத்து வேலேயோ, யார் கண்டா?”

“இல்லேயானு தாசில் வேலேயா இருக்கு! எந்த வேலேயையும் இரண்டு நாளேக்கு ஒதுக்கி வைத்து விட்டு, வந்து மகாராஜனு அழச்சிக்கிட்டுப் போகட்டும் நானு தடுக்கறேன்”

* * *

செல்லிக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது! அன்பு குறைந்தே போய் விட்டது. அவசரப்பட்டு இந்தக் கலியாணத்தைச் செய்து கொண்டோம் என்கிற எண்ணமே வடிவேலனுக்கு வந்துவிட்டது என்பது தெரிந்து விட்டது.

தெரிந்து? உரிமைக்காக போராடுவேன் என்று நினேத்தாளா? அல்லது, அவனுடைய மனதைத்தன் வசம் மீண்டும் கொண்டு வரத்தக்க வழி என்ன என்று ஆராய்ந்தாளா? இல்லே. அவள்வடிவேலனைத் தேடிக்கொண்ட மனேவி — அவள் அவனேக் கழனி யோரத்தில் கண்டு சிரித்ததில்லே, களத்துமேட்டில் கை கோர்த்து விளேயாடியதில்லே, கை அடித்து சத்தியம் செய்து கொடுத்ததில்லே, பொரி விளங்காய் உருண்டை கொடுத்துவிட்டு, நகக்குறியைப் பரிசாக பெற்றதில்லே! அவள் அவனேக் கணவனைப் பெற்றுள்—அது கூட இல்லே, அவன் அவளே மனேவி யாகக் கொண்டிருக்கிறுன். அது தானே தொடர் பின் பொருள்? அது, மாறும், மறையும், அதற்காக என்ன செய்ய முடியும்? வந்ததை அனுபவிக்க வேண்டியதுதான், என்று கருதிக் கொண்டாள்.

கிராமச் சூழ்நிலே இல்லாமற் போனதாலேயே குலேந்து வந்த அவளுடைய கவர்ச்சி, கணவனின் மனம் மாறிவிட்டதால் ஏற்பட்ட வேதனேயால், மேலும் கெட்டு விட்டது. காச்சல் அதிகமானவனுக்கு, அம்மையும் வந்தால் என்ன ஆகும், அதுபோல!!

* * *

“அவசரப்பட்டு மாட்டிக் கொள்வானேன்— இப்போது அவதிப் படுவானேன்” என்று ஊர்மிளா கேட்கிருள்.

“என்னேச் சித்திரவதை செய்யாதே, எனக்கு ஒரு மாதிரி மனமயக்கம். கிராமத்துமீது மோகம், அந்த நிலேயில், செல்லி என் கண்ணுக்குத் தங்கப் பதுமைபோலத் தெரிந்தாள்......”

“இப்பமட்டும் என்னவாம்? நல்ல உடற்கட்டு! உழைப்புக்கு ஏற்றவள்”

“போதும், ஊர்மிளா! நான்தான் பெருந்தவறு செய்துவிட்டேன் என்பதை ஒப்புக்கொள்கிறேனே. இனி என்ன செய்யமுடியும்? சனியனே விரட்ட முடியுமா? ஊருக்குப் போய்த் தொலே என்று சொன்னுலும், நகர மறுக்கிறது......”

“எப்படிப் போவாள்? அவள் என்ன இலேசுப் பட்டவளா? அங்கேபோனுல், வெல்வெட்டுமெத்தையா போட்டு வைத்திருக்கு, வைக்கோற்போர் தானே...”

அதற்குமேல், பேச்சு கேட்கவில்லே. வளேயல்கள் ஒலித்தன! நாற்காலிகள் மோதின! ஊர்மிளா சிரித்தாள்! செல்லி கண்களேத் துடைத்துக்கொண்டு, சமயற்கட்டுப்பக்கம் சென்றுவிட்டாள். ஒரு மணி நேரம் கழித்து, வடிவேலன், குளிக்கச் சென்றுன், புதிதாக வந்த சினிமாவில் காதலர்கள் பாடும் பாட்டை மெல்லிய குரலில் பாடியபடி.

பெரிய இடத்திலே பெண்ணேக் கொடுத்துவிட்டோம், அடிக்கடி அங்கு போனுல், பெண்ணின் மீதுள்ள ஆசையால் வருவதாக ஊரார் எண்ணிக் கொள்ள மாட்டர்கள், பசையும் ருசியும் உள்ள இடத்துக்குப்போய், கிழவன் ஒட்டிக்கொண்டான் என்று தான் ஏசுவார்கள் என்ற எண்ணத்தால், சடையாண்டி மகளேப்பார்க்க வருவதில்லே ஏதாவது ‘விசேஷம்’ நடக்கும்போது போய்ப் பார்க்கலாம் என்று இருந்துவிட்டான்.

கிராமத்தின் கவர்ச்சியை அடிக்கடி சென்று ‘ரசித்துவந்த’ வடிவேலன், கலியாணமான புதிதில் வந்துகொண்டிருந்தான் — பிறகு அந்தப் பழக்கம் நின்றுவிட்டது.

ஊர்மிளா, கிராமத்தைப்பற்றி அருவருப்புக் கொள்ளும்படி கூடச் சொல்லிவிட்டாள்.

“என்ன இருக்குது கிராமத்திலே! ஒரே பொட்டல்காடு! பொந்துகளில் நரிகள் இருக்கும்! புதர்களிலும் புற்றுகளிலும் பாம்பு இருக்கும். வயலிலே நண்டு

திருக்குறள்

மணக்குடவர் உரை

வள்ளுவன் குறள் ஓர் அறிவுச் சுரங்கம்; அதன் வளத்தைக் கல்லி எடுத்து வழங்குகிறவர் மணக்குடவர்.

அவர் உரையிலே தெளிவு, விளக்கம், எளிமை, இனிமை ஒவ்வொன்றும் அணிபெற அமைந்து விளங்குகின்றன.

பரிமேலழகரின் செப்பமும் திட்பமும் நிறைந்த உரை புலவர்க்கு விருந்து எனக்கூறுவர். இதனேத் தமிழ் மரபினர்க்குச் சுவை கனிந்த அறிவு விருந்தளிப்பது என்று கூறலாம்.

அனேவரும் எளிதில் கற்று உணர்தற்கு ஏற்ற வகையில் சொற்களின் சீர்கள் பிரிக்கப்பட்டுக் கவர்ச்சியான முறையிலே இப் பதிப்பு வெளி வந்துள்ளது. விலே மிகவும் குறைவு.

யாவர்க்கும் மகிழ்வளிக்கும் வண்ணம் வனப்புடன் வளமும் மலிந்த இவ்வெளியீடு இந் நூலின் புதிய பதிப்பு.

வள்ளுவரின் உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் கண்டு உணர்ந்து பயன்பெற விரும்பும் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

காலிக்காக் கட்டடம், அழகிய பதிப்பு

விலே ரூ. 4—0—0

மலர் நிலேயம்,

133, பிராட்வே, :: சென்னே-1.

இருக்கும். குளத்திலே முதலைஇருக்கும், காளிகோயில் இருக்கும், கூளிகோயில் இருக்கும், இதன் நடுவே தலை ஒருவேஷமும் துணி ஒரு மோசமுமாக ஜனங்கள் இருப்பார்கள், மாடு ஆடு ஓட்டிக்கொண்டு, அல்லது சேறு சகதியிலே புரண்டுகொண்டு! ஓவியமாகப் பார்க்கும்போது, கண்ணுக்கு அழகுதான், ஆனா, கிராமத்திலே வாழ்ந்துகொண்டு, கிராமத்து வேலையைச்செய்துகொண்டு, கிராமத்தார்போலவே இருந்துவிட முடியுமா? சொல்லுங்க பார்ப்போம்? பொழுது போக்குக்கு என்ன இருக்கு? கிளி கொஞ்சும், சோலையிலே என்று சொல்லுவீர்—சரி—இராத்திரி வேளையிலே, நரி ஊளையிடும், ஆந்தை கத்தும், வெறிநாய் குலைக்கும், பயமற்றுத் தெருவிலே நடக்கமுடியுமா? கிராமம், உலகம் தெரியாதவர்கள்,படிப்பு அறியாதவர்கள், உழைத்து பிழைக்கறதுக்காக உள்ள இடமே தவிர, நமக்கு ஏற்ற இடமா? செச்சே! என்னாலே ஒரு நாளைக்குமேலே தங்கி இருக்க முடியாது. பத்துப் பதினைந்து சினேகிதாளோட 'வன போஜனம்' செய்யப்போகலாம்; டார்ச்லைட் மட்டும் இருந்தாக்கூடப் போதாது, பெட்ரமாக்ஸ் இருக்கவேணும், கிராமபோன் அவசியம் வேணும், சீட்டுக்கட்டு இருக்கணும். இவ்வளவு பக்கமேளம் இருந்தாத்தான் ஒரு பொழுதை ஓட்டமுடியும், கிராமத்திலே..." என்றாள். ஆமாம் என்று ஆமோதித்தது மட்டுமல்ல, வனபோஜனத்துக்கு ஏற்பாடு செய்தான் வடிவேலன்; ஊர்மிளா சொன்ன முறைப்படி! ஒரே ஒரு மாறுதலுடன். பத்துப் பதினைந்து நண்பர்களை அழைத்துக் கொண்டுபோகவில்லை — இருவர் மட்டும் சென்றனர்.

*　　*　　*

கிராமத்துத் தோப்பில் மருமகப் பிள்ளை 'கூடாரம்' அடித்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு, சடையாண்டி ஓடோடிச் சென்றார்.

"மருமவப் பிள்ளே! இது நல்லா இருக்குதுங்களா? கல்லுப்போல நானொருத்தன் இருக்கறப்பொ, தோப்புலே வந்து தங்கிகிட்டிங்களே. வாங்க, நம்ம வீட்டுக்கு. இப்ப, புதுசா, முன்பக்கம் ஒரு கூடம்கூட போட்டு இருக்கு...... வசதியாகத்தான் இருக்கு" என்று அழைத்தார். வடிவேலன் வருவதற்கில்லை என்று கூறி அனுப்பி விட்டான். வருத்தம், வெட்கம், சடையாண்டிக்கு. அதிலும், தன் மகளை அழைத்து வராமல், ஏதோ ஒரு 'புடலங்காயை' அழைத்துக்கொண்டு வந்திருப்பதைப் பார்த்தபோது, வயிறு எரிந்தது.

இந்த வயிற்றெரிச்சலோடு வீடு சென்றால், வாசலில், வேலப்பன் நின்றுகொண்டிருந்தான்— உருமாறிப்போய்! அவனைப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது, சடையாண்டிக்கு துக்கம் கப்பிக்கொண்டது; எவ்வளவு அருமையாக வளர வேண்டியவன், அவனை மருமகனாக்கிக் கொள்ள மனம் எவ்வளவு துடித்தது, படுபாவி ஆடி அழிந்து, நமது ஆசையை அழித்துவிட்டு, இப்போது பட்டுப்போன மரம்போல வந்து நிற்கிறானே என்று ஆத்திரமாகக்கூட இருந்தது. அடக்கிக்கொண்டு, ஒப்புக்கு 'சேதி' விசாரித்தான். வேலப்பனும் சுருக்கமாகவே பதில் சொல்லிவிட்டு, சிலோனுக்குப் போக ஏற்பாடாகிவிட்டதாகவும் செலவுக்கு ஒரு ஐம்பது ரூபாய் வேண்டும் என்றும் கேட்டான்.

மனத் துணிச்சலைப் பாரு! என் மகளோட மனக்கோட்டையைத் தூளாக்கிவிட்டு, எனக்கும் மானம் போகிற விதமா நடந்துவிட்டு, குடித்துக் கூத்தாடி, ஜெயிலுக்குப் போய் வந்து, என்னையே பணமல்லவா கேட்கறான், பாவிப் பய—என்று கோபம்தான். ஆனால், வேலப்பனை ஏறிட்டுப் பார்த்தபோது, அவன் கண்களிலே இருந்த வேதனையைத் தெரிந்துகொண்டு சடையாண்டியால் அழுகையை வெகு சிரமப்பட்டுத்தான் நிறுத்திக்கொள்ள முடிந்தது.

"நாளை மறுநாள் பார்ப்போம். தோப்பிலே, மருமகப் பிள்ளை வந்திருக்காரு, வாழைத் தாரு இரண்டு,

"கலாராணி" பதிப்பகத்தின் முதல்வெளியீடு

நடிப்புப்புலவர்
K.R.ராமசாமியின்
மதிப்புரையுடன்

கோ. இறைமுடி மணி
("தளபதி" ஆசிரியர்)
தீட்டியது.

விலை 1 ரூபாய்

விற்பனைக்கு தயார் ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் தரப்படும்.

விபரங்களுக்கு......
நீலா நிலையம்
புத்தக வெளியிடுவோர் & விற்பனையாளர்
மவுண்ட்ரோட் சென்னை 6.

SOUTHERN ARTS.

பத்து இளநீர் பறிச்சிக்கொண்டு வா, கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வரலாம்"

"நான் வரமாட்டேன், அங்கே செல்லி வந்திருக்குமே...எப்படி அதோட முகத்திலே முழிக்கறது, வேண்டாம்..."

"செல்லி வரலே...அவரு வேறே ஒரு சிநேகிதர் கூடவந்திருக்காரு..."

"அப்படியா? வாரேன் அவரைப் பார்த்ததே இல்லே."

இருவரும் கிளம்பினர்; தோப்பிலே கிராமபோன் இசையில் இலயித்தபடி சாய்ந்துக்கொண்டிருந்தாள் ஊர்மிளா! வடிவேலன் 'ஸ்டவ்' பற்றவைத்து, 'காபி' போட்டுக்கொண்டிருந்தான்.

வடிவேலனைப் பார்த்ததும் வேலப்பனுக்கு அடையாளம் தெரிந்துவிட்டது.

மோடார் கழுவ பொடிப் பயலுக்கு எட்டணா கொடுத்தவர்!

"இவர்தானா? தங்கமானவர் தெரியுமே!" என்றான் வேலப்பன்.

"யார் இவன்?" என்று சடையாண்டியைக் கேட்டான் வடிவேலன்.

"நமக்கு வேண்டியவன்......பந்துதான்" என்றான் சடையாண்டி.

"செல்லியை நான்தானுங்க கட்டிக் கொள்ள இருந்தேன் — முன்னே..." என்று கபடமற்றுச் சொன்னான் வேலப்பன்; வடிவேலன், "இடியட்! ப்ரூட்! ராஸ்கல்! எவ்வளவு வாய்க்கொழுப்பு இப்படிப் பேச" என்று கூறிக் கோபித்துக்கொண்டான். ஊர்மிளா, குறும்புச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, பலமான சிந்தனையில் ஈடுபட்டாள்.

* * *

"எப்படி ஊர்மிளா, அவ்விதம் சொல்வது? எனக்கே அவமானமாக இருக்குமே..."

"இதிலென்ன அவமானம்? வேறு எந்த வழியிலேயும் அந்தப் பட்டி இந்த இடத்தை விட்டுப்போக மாட்டாள். சோரம் போனாள் என்று வழக்குப்போடுவதுதான் அவளை ஒழித்துக்கட்டும் வழி, எனக்குத் தெரிந்த வழி. இதற்கு உங்கள்மனம் இடங்கொடுக்கவில்லை என்றால், வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள், நான் கல்கத்தா போய்விடுகிறேன்"

"வேலப்பனுடன் செல்லி சோரத்தனமாக நடந்துகொண்டாள் என்று புகார் கூறினால், கோர்ட் நம்ப வேண்டுமே—எப்படி முடியும்?"

"அது என் பொறுப்பு. நான் வேலப்பனை இங்கு வரச்செய்கிறேன். இருவரும் சந்திப்பார்கள். பழைய காதலர்களாயிற்றே! பார்த்துப் பல நாள் ஆகிவிட்டது. பதைப்பு எவ்வளவு இருக்கும், பகலே இரவாகத் தெரியும்; பக்கத்தில் எதிரில் உள்ளவர்கள் கூடக் கண்ணுக்குத் தெரியாது"

"போதும, ஊர்மிளா! என் மனம் சரியாக இல்லை. எனக்கு வேதனையாகவே இருக்கிறது."

"அப்படியானால், ஏன் வீணாக, இரண்டும்கெட்டு அலைகிறீர்கள்? என்னை மறந்துவிட்டு அந்த அழகியோடு சல்லாபமாக வாழ்க்கையை நடத்துவதுதானே"

"உன்னைவிட்டுப் பிரியவே முடியாது, ஊர்மிளா! அவளை விரட்ட வேறு என்ன வழிவேண்டுமானாலும் சொல்லு, அவள் சோரம் போனவள் என்று சொல்லி வழக்குப்போடும் ஈனத்தனத்தைமட்டும் செய்யும்படி என்னைத் தூண்டாதே,"

"வழக்கு போடும்படி சொன்னது தவறு......அப்படித்தானே...சரி...அவர்கள் இருவரும் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று நெடுநாளாக ஆவலாக இருந்தார்கள், பழகி வந்தார்கள் என்று அந்தச் சடையாண்டியே சொன்னானே. அந்தக் காலத்திலே உத்தமியாகவா இருந்திருப்பாள், உங்களோட தர்ம பத்தினி?"

பளார்! பளார்! என்று அறை விழும் சத்தமும் ஐயோ! ஐயோ! என்ற அலறலும் கேட்டு, அதுவரை அந்த உரையாடலை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த செல்லி, என்ன செய்வதென்று தெரியாமல், உள்ளே புயல்போல நுழைந்தாள்; ஊர்மிளா, வேகமாக

வெளியே நடந்தாள்; அடியற்ற நெடும் பனைபோலக் கீழே விழுந்தாள், வடிவேலனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினாள்.

"கலியாணத்தின்போது நான் இந்தக் களிப்பு அடையவில்லை. என்னை இவ்வளவு செல்வத்திலே வைத்தபோதும் சந்தோஷப்படவில்லை. எவ்வளவுதான், என்மீது வெறுப்பு இருந்தாலும், என்மீது அபாண்டம் சுமத்த, என் பெயரைக் கெடுக்கமுடியாது, அது ஈனத்தனமான காரியம் என்று சொன்னீர்களே, அதுபோதும் எனக்கு, அந்த ஆனந்தம் எனக்கு வேறு எதிலும் கிடையாது. என்னை நீங்க, அவசரப்பட்டு ஆய்ந்து பார்க்காமத்தான் கலியாணம் செய்துகொண்டீங்க......ஆனா மேலே எரிகிறவன் சாட்சியாகச் சொல்கிறேன், நான் மாசு மருவற்றவள்—பழிபாவத்துக்கு பயந்து நடக்கறது, கிராமத்தாருக்கு பரம்பரை பரம்பரையாகப் பழக்கம். வேலப்பனை நான் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டது நிஜம்—தவம் கிடந்தேன்னு கூடச் சொல்லலாம்—ஆனா அவரு, தவறான பாதையிலே போயிட்டாரு, தன்னைத்தானே கெடுத்துகிட்டாரு......அப்போதே என் மனதிலே இருந்து போயிட்டாரு......ஒரு தப்பும் ஒரு நாளும் நடந்ததில்லிங்க. ஊர்மிளா இல்லாங்க நானு, ஊர் உலகத்துக்கு மட்டும் இல்லாங்க, உள்ளத்துக்குப் பயந்து நடக்கிறவ. பட்டிக்காட்டா, பட்டினத்திலே வந்ததாலே, உங்களுக்கு மனைவியாக வந்ததாலே பலமாதிரியான அவமானம் உங்களுக்கு வந்தது எனக்குத் தெரியும்......என்மேலே தப்பு இல்லிங்க, என்மேலே தப்பு இல்லே. இப்பவும், நான்உங்க

வாழ்க்கைக்குத் தடையா இருக்கவே மாட்டேன்—ஆனா, ஊர்மிளா வேண்டாமுங்க: உத்தமர்களோட அறிவை எல்லாம் கெடுத்துவிடுகிற காதகி வேண்டாமுங்க, நல்ல படிச்ச பெண்ணுபார்த்து, உங்களோட நாகரீகத்துக்கு ஏத்தவளாகப் பாத்துக் காலியாணம் செய்துகொண்டு வாழ்ந்துகிட்டு இருங்க—ஒரு நாலு மாதம் தவணை கொடுத்தா போதுமுங்க......கருவிலே சிசுவோடு தற்கொலை செய்துகொள்ள மனம்வரவில்லிங்க, இல்லையானா, நான் சின்னப் புள்ளையிலேயிருந்து விளையாடிக்கொண்டிருந்த மடுவிலே இப்பவும் தண்ணி இருக்குதுங்க, என்னாலே முடியும் உயிரை மாய்த்துக் கொள்ள........;'

'கோ'வெனக் கதறித்தலைதலை என்று அடித்துக் கொண்டு, அப்படியே வாரி எடுத்து செல்லியை மார்புற அணைத்துக்கொண்டு,

"செல்லி! செல்லி!" என்று மட்டுமே கூறிக் கொண்டு நின்றான், வடிவேலன்.

அவன் தீட்டிய ஓவியம் புதிய பொலிவு பெற்றது போலக் காட்சி அளித்தது.

★

★ டாலர் இறக்குமதி! ★

இவ்வளவு பெரிய மூட்டையுடன் எங்கே போகிறேன் தெரியுமா? இந்தியாவுக்குத்தான்! இந்த ரஷ்யத் தலைவர்கள் அங்கே சென்றதும் சென்றுர்கள்—என் கவலையும் திகிலும் பன்மடங்காகிவிட்டது. அதனுல்தான், மூட்டையைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிட்டேன். உள்ளே இருப்பது அத்தனையும் டாலர்! இப்போதுதான், மூட்டை கொண்டு போகிறேனே என்று எண்ணுதீர்கள் — இந்தியா சுதந்திரம் பெற்றது முதல், எதெதற்குப் பணம் கொடுத்தேன் தெரியுமா, அந்த நாட்டுக்கு? அணைக்கட்டுத் திட்டங்களுக்காக...என்றுர்கள். அள்ளி வீசினேன், 8,188,536 டாலர்களை! அணைகளைக் கட்ட ஆள் கூலி நிபுணர் கூலிக்கு இது போதும் — இயந்திர சாதனங்கள் வாங்க என்ன செய்வது என்றுர்கள். எடுத்தெறிந்தேன், 550,000 டாலர்களை'! அப்புறம், ரீகண்டு எனும் பள்ளத்தாக்கில் உலகமே வியக்கும்படியான ஒரு தேக்கம் அமைக்க உத்தேசம் என்றுர்கள்—'இந்தா' என்று 7,844,115 டாலர்களை அனுப்பினேன். "அது சரி! இப்படி கட்டப்படும் அணைக்கட்டுகளிலிருந்து தண்ணீரைக் கொண்டு செல்ல வாய்க்கால் வேண்டாமோ?"—அதற்காக 4,050,000 டாலர்கள் அளித்தேன். அதுமட்டுமா, நிலத்தின் செழிப்பை வளர்க்க, பல இடங்களில் குழாய்க்கிணறுகள் தோண்ட, வெட்டுக் கிளிகள், பூச்சிகள் வராமல் தடுக்க, இதற்கெல்லாம் பணம் கேட்டார்கள். தந்தேன், 27,191,000 டாலர்கள்! இப்படிக் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த நெல்லையும் கோதுமையையும்சேர்த்து வைக்கக் கிடங்குகள் தேவைப்படுமல்லவா? அதற்கும் கொட்டிக் கொடுத்தேன் 1,6539,000 தங்க டாலர்கள்! அதோடு, அடிக்கடி இந்தியாவில் வருகிறதல்லவா வெள்ளம்—அந்த விபத்துகளின் நிவாரணத்துக்காகவும் அளித்தேன் 563, 200 டாலர்!! தொழில் வளம் பெற வேண்டும், 'நெய்வேலி'யில் லிக்னைட் கிடைக்கிறது, இராசஸ்தானில் மின்சாரசக்தி உண்டாக்கவேண்டும், தொழில் நிபுணர்களை தயாரிக்க என்று இந்தியாவை தொழிற்சாலை நாடாக்க எவ்வளவு டாலர் கொடுத்திருக்கிறேன் தெரியுமா—3661500 டாலர்கள்! ஒரு டாலர் என்றுல் இந்தியா பணத்தில் ரூ 4-12-0 என்று கணக்கு!! திகைக்கிறீர்களா? இப்படி தொழில் வளர அள்ளித் தந்தது மட்டுமல்ல, தொழிலாளர் தம் வாழ்க்கையும் முன்னேற வேண்டும் பாருங்கள். அது பற்றி ஆராய்ச்சி செய்யப் போகிறேம் என்றுர்கள்—அந்த ஆராய்ச்சிக்காகவும் 8,300 டாலர் அனுப்பினேன்!!

அமெரிக்காவுக்கு வரும் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், சச்சிவோத்தம ராமசாமி அய்யர் போன்றவர்கள் சொல்லுவதுண்டு, "இந்தியாவே, உலகத்தில் எல்லாம் பெரிய தேசம். ஏனென்றுல் அங்குதான், இந்து மதம் இருக்கிறது. அது அடக்கி வைத்திருக்கும் தெய்வீக சக்தி மிகப்பெரிது" என்றெல்லாம். கல்விக்கு ஒரு கடவுள் உண்டாம்! நீருக்கு வருணபகவானும்! காற்றுக்கு வாயுவாம்! காக்க ஒரு கடவுளாம்! — இப்படி ஏராளமான கடவுள்கள், எல்லா-விஷயங்களுக்கும் வைத்துக் கொண்டிருக்கும் இந்தியக்காரர்களுக்கு அறிவுப் பஞ்சம் இராது! அதற்காகப் பணம் செலவழிக்க வேண்டிய அவசியம் உண்டாகாது என்று எண்ணினேன்!! — ஆனுல், ஆராய்ச்சிக் கல்லூரி, சமூக நலக் கல்வி, உடல் நலப்போதனை, வீட்டுக் கலைதரப் பள்ளிக்கூடம் அப்படிஇப்படியென்று அதற்காகவும் 7,4444,00 டாலர்கள் தந்திருக்கிறேன்!! இன்னும் வீடு கட்ட, தண்ணீர் குழாய் வைக்க, ஆடு மாடுகள் வளர்க்க, காடுகளைப் பாதுகாக்க, என்றெல்லாம் பணம் அனுப்பினேன். கேட்கக் கேட்க வேடிக்கையாயிருக்கும் உங்களுக்கு, சின்னஞ் சிறு நோய் நொடிகளைப் போக்கக்கூட எங்களிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டிருக்கிறர், பண்டிதநேரு! இவ்வளவு கொட்டிக் கொடுத்தும், இந்தியாவிலிருக்கும் மக்கள் என்ன செய்தார்கள் தெரியுமோ? எங்களை மறந்துவிட்டு, இந்த ரஷ்யத் தலைவர்களின் பின்னுல் லட்சம் லட்சமாக ஓடி, 'வாழ்க' வென்று வாழ்த்தினுர்களாம்! அதைக் கேட்டது முதல், என்னுடைய திகில் அதிகமாகிவிட்டது. அதனுல் இந்தப் பெரிய மூட்டையொன்றைத் தூக்கிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறேன், இந்தியாவுக்கு!!

[கூடிய விரைவில் அமெரிக்காவின் வெளிநாட்டு மந்திரி டல்லஸ், டில்லிக்கு வரப்போகிருராம்.

★



மேலதிகாரி

— பழநி —

"**கலெக்டர்** வேலைக்குப் போகப் போகிறவனைப் போல, 'டிப்டாப்பாக' உடுத்திண்டு ஊரைச் சுத்திண்டு வந்தயே, ஏண்டா அண்ணு! நோக்குக் கடைசியிலே, 'கிளர்க்' வேலையன்னு கிடைத்ததாம்!" என்று கேலி செய்தாள், 'கர்லை'ச் சரிப்படுத்திக் கொண்டிருந்த **காமினி**. "கொரங்கே! நேக்குக் கிளர்க்வேலை கிடைச்சுது போதும், உனக்கு எந்தக் 'கரண்டி' வந்து வாய்க்க றதோ, யார் கண்டா? என்னைக் கேலியா செய்கிறே?" என்று கோபமாக அல்ல, செல்லமாகப் பேசினன் **கச்சாபகேசன்**. "அவனுக்கேண்டா, 'கரண்டி'யும் 'சவுண்டி'யும்...... என் பொண்ணேடை இலட்சணத் துக்குக் கவர்னரன்னு கிடைக்கணும்" என்று கூறினள், காமினி, கச்சாபகேசன் எனும் இருவரைப் பெற்றெடுத்த **பெருந்தேவி**. "என்னமோபோடி இதாவது பகவத் கடாட்சத்தாலே கிடைச்சுதே, அதைச் சொல்லு" என்று கூறிக்கொண்டே மடிசஞ்சியைப் சரிபடுத்திக்கொண்டார், **மகாலிங்கக் குருக்கள்**.

உள்ளூர் தேவாலயத்திலே அவர்தான் அர்ச்சகர்.

"அப்பா! ஆபீசுக்கு இன்னக்கே வரச்சொல்லி யிருக்கா?" என்ருன் கச்சாபகேசன்,

"நாள் நல்லா இருக்கா பாருங்கோ" என்று கூறினள் பெருந்தேவி. "மனசு நல்லா இருந்தால், எல்லா நாளும் நல்ல நாள்தான். மேலும், ஆபீசிலே ஆர்டர் போட்டான பிறகு, நாள் நட்சத்திரம் பார்த் துண்டு இருக்கலாமோ! நல்ல சகுனமாகப் பார்த்து, அனுப்பிவை" என்று கூறிவிட்டு, கோயிலுக்குக் கிளம்பினர், குருக்கள்; கோயில் தோட்டத்திலே குலுங்கிக் கொண்டிருந்த 'கிச்சிலி'யைக் கொண்டுவர.

"ஏண்டா அண்ணு! கோபிக்காமச் சொல்லு. நோக்கு அங்கே என்ன வேலை?" என்று கேட்டாள் காமினி.

"ஏதாவது ஒரு செக்ஷனிலே கிளர்க் வேலை யிருக்கும்..." என்ருன் கச்சாபகேசன், யோசித்தபடி.

"தரப்படும் வேலை எதுவாக இருந்தால் என்ன—சமத்தா நடந்துண்டு, மேலதிகாரிகளோட தயவைச் சம்பாரிச்சுண்டா, தானு உத்யோகம் மளமள்ன்னு உயர்ரது. நேக்குத் தெரிஞ்சு, அனந்தாச்சாரியோட பெரிய மாப்பிள்ளை அடெண்டர் வேலைக்குத்தான் போனுன்—இப்போ மானேஜராகவே வேலையாம்... அதிர்ஷ்டம்னு ஒண்ணு இருக்கேன்னே!' என்று பெருந்தேவி கூறினள். "அதிர்ஷ்டமல்லடி அம்மா, அதிர்ஷ்டமல்ல. அவா ஆத்து ஆமவடை மோர் குழம்பு செய்த வேலை அது; அடெண்டரை மானேஜ ராக்கி இருக்கு" என்ருள் காமினி. "என்னடி அசடு உளறிண்டு..." என்று கண்டித்தான் கச்சாபகேசன். பெருந்தேவி அம்மையோ, "கச்சு! அவ சொல்றது நிஜம்தான். அந்த ஆபீசிலே மானேஜர் ஜெனரலா வேலை பார்த்துவந்த ஒரு தொரைக்கு, ஆமவடை மோர் குழம்புன்னு ரொம்ப பிடிக்குமாம். அனந்தாச் சாரி இலேசுப்பட்டவரோ! இதைத் தெரிஞ்சுண்டு, வாரம் தவருமே, தொரைக்கு, ஆமவடை மோர்குழம்பு சப்ளை செய்துண்டு வந்தார்—உத்தியோகம் மள மளன்னு உயர்ந்தது" என்று விளக்கமளித்தாள். "அதுபோல உனக்கு இருக்கிற மேலதிகாரிக்கு எதன் மேலே பிரியம்னு தெரிஞ்சுக்கோ—நாமும் அனந்தாச் சாரி ஆத்திலே செய்தது போலச் செய்வோம்;..." என்று காமினி கேலி செய்தாள். "என்னேடை மேலதி காரிக்கு உன்னேடமூக்கைக்கடித்துத்தின்னேணும்னு ஆசையாம்—ஏற்பாடு பண்ணட்டுமோ?" என்று பதிலுக்குக் கேலிசெய்தான் கச்சாபகேசன். 'போதும், போதும், விளையாட்டு, பொறப்படு... என்று பெருந் தேவித்தாயார் கூறி, சகுனம் பார்த்து, பிள்ளையை ஆபீசுக்கு அனுப்பினுர்கள்.

* * *

"**நம்ம** வியாபாரம் செழிப்பாக நடந்தபோது, என் கையாலே, இருநூறு ரூபாச் சம்பளம் கொடுத்தேன், எட்கிளார்க்குக்கு, இப்ப, என் மகனுக்கு நாற்பத்தி ஐந்து சம்பளம்..." என்று கூறிச் சங்கடப்பட்டார், **சகலகுண நாயுடு**—பலசரக்கு மண்டி வியாபாரியாக இருந்து நஷ்டப்பட்டு, பழைய பேப்பர் கடை நடத்திக் கொண்டுவந்தவர்.

"ஏதோ, கண்ணைக் கெடுத்த தெய்வம், கோலைக் கொடுத்தது போல, நமக்கு இவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்ட பிறகாவது, நமது மகனுக்கு, ஒரு ஆபீசிலே உத்யோகம் கிடைச்சுதேன்னு பகவானைப் பஜிக்கவேணுமுங்க. சம்பளம் குறைவா இருந்தா என்னங்க? கௌரவமான பிழைப்பு. நாலு பேர் கேட்டா, மதிப்பாத்தான் பேசுவாங்க. எதுவோ அவன் கொண்டு வருவதை வைத்துக்கொண்டு, ராமா! கிருஷ்ணு! கோவிந்தான்னு காலட்சேபம் செய்யலாமே" என்று சமாதானம் பேசினுள் அவர் மனைவி உமையாள். கோட்டுப்பொத்தான்களைச் சரிப் படுத்திக்கொண்டிருந்தான் கோதண்டபாணி B.A.

கச்சாபகேசன் B.A.; கோதண்டபாணி B.A. இருவருக்கும் ஒரே நாளில், ஒரே ஆபீசில், ஒரே அந்தஸ்தில், கிளார்க் வேலை கிடைத்தது. இருவரும் சென்றனர். ஒருவருக்கொருவர், கல்லூரியில் ஓரளவுக்கு அறிமுகமானவர்கள்தான். கோதண்ட பாணி அப்போது செல்வவான் வீட்டுமகன், எனவே குருக்கள் பிள்ளைக்குச் சினிமா, டிராமா, ஓட்டல் செலவு களுக்குத் தாராளமாகப்பணம் கொடுப்பதும் உண்டு.

"கோதண்டனு"

"கச்சாபி இங்கேதானு நீயும்"

"ஆமாம்! இந்த ஆபீசிலே உள்ளவா, நாம் இருவரும் பிராண ஸ்நேகிதா என்பதைத் தெரிந்து வேலை கொடுத்தா போலிருக்கு"

"ஏதோ இந்த வேலையாவது கிடைச்சுதே, அதைச் சொல்லு. எனக்கு, எங்காவது சிலோன், சிங்கப்பூர் ஓடிவிடலாமான்னு தோணினது உண்டு. நீயும் இவ்வளவு நாளா, வெட்டிச்சோறுதானு?

"நானு? ஏண்டா, நான் வெட்டிச்சோறு தின்னேனும். அப்பாவுக்கு உதவியா, கோயில் காரியத்தைக் கவனிச்சிண்டு இருந்தேன்.

இருவரும், இவ்வளவு பேசத்தான் நேரம் கிடைத்தது. இதற்குள் ஆபீஸ் தாழ்வாரத்தில் அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு, பேசாதே என்று உத்தரவும் போட்டுவிட்டான், கரன்சிங்—அகதியாக வந்ததால் அடெண்டரானவன்.

உள்ளே, உலகநாத முதலியார் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தார்—புதிதாகக் கிளார்க் வேலைக்கு வந்துள்ள இருவர்களில், யாரை எந்த செக்ஷனில் போடுவது என்பது அவர் தலைமீது விழுந்துவிட்டது.

இருந்ததோ, இரண்டு முக்கியமான செக்ஷன்கள்-ஒன்றில் இவர்தான் மானேஜர், மற்ருெர் செக்ஷனில் **மாதுர்பூதம்** மானேஜர்.

கச்சாபகேசன் B.A. பிராமணப் பையன்—அவனை மாதுர்பூதத்திடம் அனுப்பி விடுவதுதான் நல்லது என்று ஒரு விநாடி எண்ணினுர், மறு விநாடியோ, ஏன்யா! மிஸ்டர் முதலியார்! உமக்கென்ன பிராமணப் பூண்டே பிடிக்காதோ? என்று மாதுர்பூதம் கேட்டு விடுவார் என்று திகில். மாதுர்பூதம் அதுபோல வேடிக்கையாகப் பேசும் பாவனையிலேயே, விபரீதங் களைக் கொட்டுபவர். சரி! நம்ம செக்ஷனிலேயே வைத்துக்கொள்வோம் என்று எண்ணினுர்; மறு நிமிஷம், வாட்டம் சாட்டமா கிடைத்தான் பாப்பான்னு முதலியார் அங்கே போட்டுண்டார் போலிருக்கு என்று பேசுவார்; வம்புக்காரன் இந்த மாதுர்பூதம்.—என்பதை எண்ணிக் குழம்பினுர்.

கடைசியில், கோதண்டபாணியைத் தமது செக்ஷனிலேயே போட்டுவிட்டு, கச்சாபகேசனை, மாதுர் பூதத்துடன் அனுப்பினுர்.

பத்துநாள் வரையில், புதிய கிளர்க்குகள்பற்றி இரண்டு மேலதிகாரிகளும், கவனிப்பு செலுத்தவேண்டிய அவசியம் எழவில்லை.

மாதுர்பூதம், அடிக்கடி உலகநாதர் அறைக்குச் சென்று பேசுவார்—உலக விஷயம்பற்றி.

"அடெ, இதைக் கேளுமய்யா, என்னமோ, ஆபீசைத் தூக்கித் தலைமேலே வைச்சிண்டு ஆடறீர். இன்னைய இந்துவைப் பார்த்தீரோ?"

"இல்லையே...என்ன விசேஷம்..."

"அடடே! நான் மறந்தே போனேன், நீர்தான் 'இந்து'வைத் தொடமாட்டீரே..."

"ஏன் அப்படிச் சொல்கிறீர். எனக்கென்ன 'இந்துவிடம்' வெறுப்பு, கோபம். நேரம் கிடையாது, உம்மைப்போல சாவகாசமாக பேப்பர் படிக்க......"

"பார்த்தீரா, பார்த்தீரா! குத்தலாத்தானே பேசறீர். நீர்தான் ஆபீஸ் வேலையை அக்கறையோடு கவனிக்கிறீர்—நான் பேப்பர் படிச்சுண்டு, காலந் தள்ளிண்டு, வெட்டிச் சம்பளம் வாங்கிண்டிருக்கேன். ஏன்யா, முதலியார்! முதலியார்வாள்! அதுதானே உம்மோட நினைப்பு?"

"வக்கிலா போயிருக்க வேணுமய்யா நீர். ஒண்ணு சொன்ன ஒன்பத்தெட்டு அர்த்தம் செய்துண்டு, 'கிராஸ்' செய்கிறீர்......"

"போகட்டும்...... இன்று 'இந்து'விலே உம்மோட லீடர் பேச்சு வந்திருக்கு. அதனுல்தான் பார்த்தீரோன்னு கேட்டேன்......"

"அதென்னய்யா, புதுசா வெடிகுண்டு போடறீர்- என்னோட லீடர், உம்மோட லீடர்னு...... எனக்கு யார் லீடர்?"

"சர். ஏ. இராமஸ்வாமி முதலியார்......"

"அவர் ஏன், எனக்கு லீடர் ஆகிருர்...... அவர்களெல்லாம் அரசியல் வாதிகள்...... நமக்கும் அவர்களுக்கும் என்னய்யா சம்பந்தம்?"

"உமக்கு இருக்கோ இல்லையோ, சர். இராமசாமி அப்படி இருப்பதாகச் சொல்கிருர்......"

"என்னண்ணு? உலகநாதனுக்கு நான் லீடர்னு சொல்ருரா?"

"உலகநாதனுக்கு மட்டுமா, உத்தண்டன், கோதண்டன், கந்தன், காத்தான், காட்டேரி, காவேரி இப்படி உள்ளவாளுக்கெல்லாம், அதாவது பார்ப்பனரல்லாதருக்குக்கெல்லாம், அவர்தான் லீடராம்!"

"அதென்ன கர்மமோ! நமக்கேன் வீண்வம்பெல்லாம்"

"முதலியார்! மனதிலே இருக்கறதை மறைக்கறீர்...... நிஜமாச் சொல்லும், உம்மோட அபிப்பிராயத்தை, சர். இராமசாமி, பெரிய மேதாவி என்பது தானே உம்மோட எண்ணம்? நீரே அதுபோலச் சொல்லியிருக்கிறீர், என் காதாலே கேட்டிருக்கேன்..."

"ஏன்யா! அவரை மட்டுமா சொன்னேன். சர். சி. பி. இராமசாமி ஐயரைக் கூடத்தான் புகழ்ந்து பேசியிருக்கேன்...—"

"ஆப்டிண்டீர், முதலியாரவாள், தானு ஆப்டிண்டீர். என்ன சொன்னீர், என்ன சொன்னீர், இராமசாமி ஐயரைக் கூடத்தான் புகழ்கிறீரா? கூடத்தான் ......கூடத்தான்...... அதிலேயே தெரியறதே உம்ம மனசிலே, பிராமணுமேலே இருக்கற துவேஷம், விரோதம், வெறுப்பு, எல்லாம், ஸ்பஷ்டமா......"

"இப்படி வாயைக் கிளறி, வம்பான அர்த்தம் செய்து என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கொள்ளாதே. ஆபீஸ் விஷயமாகப் பேசு. ஆனந்தமா, உம்ம வீட்டிலே உள்ள க்ஷேம லாபம் பற்றிப் பேசுமே......... எதுக்காகய்யா, பாலிடிக்ஸ் பேசணும்......"

"எதையும், உள்ளுக்குள்ளே வைச்சிண்டு, கழுத்தறுக்கறதைவிட, வெளிப்படையாக பேசறது நல்லது என்பது என் கொள்கை. தெரியறதோ. மாதுர்பூதம் வம்புக்காரன் என்று பேசுவா......நீரே அப்படித்தான் பேசறதாக் கேள்விப்பட்டேன். கவலையில்லை... மனதிலே பட்டதைப் பேசுவது என் வாடிக்கை......"

"அது நல்லதுதான்......ஆனு நான் எதையும் மனதிலே ஒளியவைத்துக்கொண்டு இல்லை. எனக்கு பிராமணுள் — பிராமணரல்லாதார் எந்த பேதமும் கிடையாது, அது ஒரு பிரச்சினை என்ற எண்ணமும் ஏற்படவில்லை..."

"அப்படியானு, உமக்கு இருவரும் சமம். பிராமணுள் பிராமணரல்லாதார், இருவரையும் ஒரேவிதமாத்தான் பாவிக்கிறீர்?"

"ஆமாம்......எதற்காகப் பேதம்......விரோதம்... குரோதம்......?"

"சுருக்கமாச் சொல்லோணுமானு, ஏண்டா! பாப்பாரப் பசங்களா! நீங்கள் என்ன உசத்தியா? எல்லாம் ஒண்ணுதானேடா? என்று கேட்கிறீர்......இருவரையும் சமமாகப் பாவிக்கிறேன் என்று சொன்னு இதுதானே அர்த்தம்?"

"சிவ, சிவா! என்னு மூளையய்யா உனக்கு...... அர்த்தத்தை அனர்த்தமாக்கி......... இதோ பாரும், வீண் வெட்டிப் பேச்சு நமக்கு எதுக்கு? எந்த லீடராவது எதையாவதுசொல்லிக்கொண்டு போகட்டும்,நம்ம லீடர் இருக்கானே மேலே, அவன் இன்னும் இருபத்து நாலுமணி நேரத்திலே ஆறு மாதத்துக் கணக்கை ஒழுங்காக்கிக் கொண்டுவாடான்னு உத்தரவு போட்டிருக்கான், உயிர் போகுது அதை முடிக்க. நீர் வேறு தொல்லை செய்யாதீர்......"

"வாயாடி பாப்பான், வம்புக்காரப் பாப்பான், வேலையைக் கெடுக்கற பாப்பான் என்பதை, மறைபொருளாச் சொல்றீர்...... அதுதானே..."

"அட ராமா! ராமா! ஏன்யா உனக்கு, எதிலுமே நேரான அர்த்தம் கிடைக்காதா......"

இவ்விதம் இருக்கும் உரையாடல்.

முதல் தாக்குதல்

"பவித்திரமான பிரம்ம குலத்திலே ஜெனன மெடுத்து, கேவலம் சண்டாளனும் செய்யக் கூசும் மகா பாவ காரியத்தைச் செய்கிறாயே? நீசா! நீ ஏனடா எங்களுக்கு மகனாக வந்து பிறந்தாய்? நாங்கள் பூர்வ ஜென்மத்திலே செய்த தீவினைகளெல்லாம் திரண்டு வந்து, எங்களுக்கு மகனாக உதித்ததோ. புராதன மார்க்கமடா இந்துமதம்! புனித ஏடுகளடா, நமது வேதங்கள்-சாஸ்திரங்கள். அவைகளை, உலுத்தனே! உதாசீனம் செய்வோர் மீளா நரகமன்றோ சேருவர். சாஸ்திர விரோதமான காரியம் செய்பவனை, சமூகம்விட்டுவைக்குமா? பிரம்ம குலத்தானே வேத சாஸ்திராதிகளை மீறுவதென்றால், மற்ற மற்ற குலங்களெல்லாம், தத்தமது தருமத்தை எப்படி, காப்பாற்றும்? சர்வம் நாசமாகுமே.''

"அறியாமல் அச்சப்படுகிறீர்கள். நான் வேதநிந்தனல்ல. நான் செய்யும் காரியம் பாவமல்ல. வேதத்தின் உட்பொருளை உணராமல், கிணற்றுத் தவளைகள் கத்துவது போல, ஓதிக்கொண்டு இருந்து விடுவதாலேயே வேதம் புரிந்துவிடுமா! நான், தீர்க்கமாக யோசித்த பிறகே, 'சதி' என்பது வேதாகம சம்மதம் பெற்றதல்ல என்று உணர்ந்தேன். வேதத்தை ஐயந்திரிபற அறிந்ததாகப் பொய்யுரை கூறிடும் புரட்டர்களின் பேச்சை, மெய்ஞானம் என்று நம்புகிறீர்கள். மேதினியோர் கண்டு, எள்ளி நகையாடி, நம்மைக் காட்டு மிராண்டிகள், கொலைபாதகச் செயலைக் கூசாமல் செய்யும் மிலேச்சர்கள் என்று பேசுகின்றனர். நான் 'சதி' கூடாது என்கிறேன், சாஸ்திரத்தை அல்ல. இளம்விதவைகளை வெந்தழலில் தள்ளி வேகவைக்காதீர்கள் என்கிறேன், வேதத்தை மறுக்கவில்லை."

"நீ யாரடா, வேதத்துக்குப் புது வியாக்கியானம் கூற? வேத வேதாந்தசிரோமணிகள் இருக்கிறார்கள்! வியாகர்ணப் பண்டிதர்கள் இருக்கிறார்கள். சகல சாஸ்திர சம்பன்னர்கள் இருக்கிறார்கள், வியாக்யானம் கூற. நீ, பேசுவது விதண்டாவாதம், கேவலம் நிரீசுரவாதம்,''

"இல்லையே! நான் ஆண்டவனை மறுக்க வில்லை. ஆகமத்தை வெறுக்க வில்லை. யார் வேத சாஸ்திராதிகளுக்கான பொருள் கூறும் அருகதை உள்ளவர்கள் என்று நீங்கள் நம்பிப் பூஜிக்கிறீர்களோ, அவர்களிலே சிலர் புரட்டர்கள், பலர் உண்மை அறியாமல் உழன்று கிடப்பவர்கள்...''

"நீ பெரிய மேதாவி... எவ்வளவு மண்டைக் கர்வமடா உனக்கு. நமது பெரியோர்கள்; 'சதி' சாஸ்திர சம்மதமானது என்றுதானே ஏற்படுத்தினார்கள். அதைக் குறைகூற, கண்டிக்க, நிராகரிக்க, உனக்கு அதிகாரம் அளித்தவர்கள் யார்? ஆரிய தர்ம ரட்சகர்கள் அந்தணர். அந்தக்குலத்தில் பிறந்து கோடரிக் காம்பானாயே, உன்னை பூமாதாவே தாங்கிக் கொண்டிருக்கச் சம்திக்கமாட்டாளே, நாங்கள் எப்படி உன்னை ஏற்றுக்கொள்வோம். எமக்கு மகனல்ல நீ, மகாத்மீயம் பொருந்திய மதத்தை நாச மாக்கும் மகாபாவியைச் சுமந்திருந்த இந்த வயிறு பாபப்படு குழி...''

"வீண கோபம்—விளக்கம் பெருததால் கோபம்''

ராஜாராம் மோகன்ராயின் வாழ்க்கையில், மிகவும் நெருக்கடியான கட்டம், அவர் 'மகாபாவி' என்று கூறி, பெற்றோரும் குலப் பெரியவர்களும், அவரைப் 'பிரஷ்டம்' செய்யக் கிளம்பியதுதான்.

அவர், தன் குலத்தின் எதிர்ப்பையும், பெற்றோரின் வெறுப்பையும் தாங்கிக் கொண்டார்.

குடும்பத்தைவிட்டு விரட்டப்பட்டார்; குலத்தினரால் பழிக்கப்பட்டார். எனினும், அவர் கொண்ட கொள்கையைக் கைவிட இசையவில்லை. 'சதி' எனும் உடன் கட்டை ஏறுவதைத் தடுத்தேயாக வேண்டும் என்று, நாடெங்கும் சுற்றிச் சூறாவளிப் பிரசாரம் செய்தார்.

எந்த வேதங்களையும் சாஸ்திரங்களையும் கரைத்துக் குடித்ததாகப் பெருமைபேசிக்கொண்டு, கண் மூடித்தனமான கட்டளைகள் பிறப்பித்து அச்சமூட்டிப்பாமரரை ஆட்டிப்படைத்தனரோ, அந்தப் பண்டிதர்களுடன், வேதசாஸ்திரத்தையே ஆதாரமாக்கி, வாதிட அவர் தயங்கவில்லை.

இந்து மதத்தின் ஆதார ஏடுகளை மட்டுமல்ல—பிற மதக்கிரந்தங்களையும படித்தார்—உண்மையைத் துருவித் துருவி ஆராய்ந்தார்.

இந்திய பூபாகத்தோடு அவர் தமது அறிவுப் பிரசாரத்தை, அறப்போரை நிறுத்தி விடவில்லை—இங்கிலாந்து சென்று, வாதாடினார், போராடினார்.

மத விஷயத்திலே தலையிடுவது ஆபத்து—தமது ஆதிபத்தியத்துக்கு பெரும் எதிர்ப்பு மூண்டுவிடும் என்று அஞ்சி, ஆங்கிலர், இங்கு கண்ட அத்தனை மூட நம்பிக்கைகளையும், களைந்தெறியாமல், விட்டு வைத்தனர். உலகில் வேறு எங்கும், 'உடன்கட்டை ஏறுதல்' எனும் கொடுமை இல்லை; என்பதைத் தெரிந்திருந்தும்,ஆங்கிலேயர், இந்தியாவில் அந்தக் கொடுமை நிகழுவதைத் தடுக்காமலிருந்தனர்.

இது கொலைக்கு உடந்தையாக இருக்கும் அக்ரமம்—மடைமைக்கு மண்டியிடும் அநீதி—என்று பேசினார் ராஜாராம் மோகன்ராய்.

ஆங்கில நாட்டிலே, பல மன்றங்களிலே பேசினார்.

பிரிட்டிஷ் பாராளு மன்றத்திலே இந்தச் சீர்திருத்தச் செம்மலுடைய கருத்து பரவிற்று. 'சதி' சட்டபூர்வமாக தடைசெய்யப்பட்டது.

உடன்கட்டை ஏறும் கொடுமையைக் கண்ணால்கண்டு கதறிய ராஜாராம்மோகன்ராய், 'சதி' சட்டப்படி தடுக்கப்பட்ட பிறகே கண்களைத் துடைத்துக்கொண்டார்.

ராஜாராம் மோகன்ராய் தந்ததுதான், மூடநம்பிக்கை மலிந்துகிடக்கும் இந்து மார்க்கத்துக்கு, முதல் தாக்குதல், முதல் வெற்றியும் அதுதான்.

அவருக்குக் கிளம்பிய எதிர்ப்பு சாதாரணமானதல்ல, குடும்பத்தைவிட்டே வெளிஏறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர் அஞ்சினாரில்லை.

ராஜாராம் காலத்திலே, பண்டிதர்கள், உண்மையிலேயே மேதைகளாக இருந்தனர். வேதமும் வேள்வியும் பழங்கதையாகிப் போகவில்லை, கங்கைக்கரைப் 'பண்டாக்களின்' பேச்சே சமூகத்திலே அப்போது சட்டமாக இருந்தது. பகுத்தறிவு பரப்பும் பணி செய்வாரே கிடையாது. எனினும் துணிந்து தொண்டாற்றினார். நாத்தீகன் என்ற பழிச்சொல்லை ஏற்றுக்கொண்டார்; வெற்றிபெறவும் செய்தார்.

அவரை நாத்தீகரென்று சமூகம் பழித்தது—குடும்பம் பகைத்தது—குலத்தார் வெறுத்தனர். அவர் கிருஸ்தவப் பாதிரிகளின் தூண்டுதலால், இந்து மார்க்கத்தை அழிக்கும் பாபகாரியத்தில் ஈடுபடுகிறார் என்று பழி சுமத்தினர். எதற்கும் அஞ்சாமல், குருட்டுக் கோட்பாடுகள் நிறைந்த கோட்டையின்மீது அஞ்சாமல், முதல் தாக்குதலை நடத்தி வெற்றி கண்டார்.

★

மாதுர் பூதம் தாராளமாகவும், தீவிரமாகவும், அரசியல் பிரச்சினைகளை அலசுவார் — முதலியாரை வாதத்துக்கு இழுப்பார்—பெரிய தலைவர்களின் தவறுகளை அஞ்சாமல் கண்டிப்பார்—அதிலும் குறிப்பாக, பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்றால், அதைக் கண்டித்துப் பேசுவது அவருக்கு சித்திரா பௌர்ணமியில் சிங்கார ஆற்றுமணலில் உட்கார்ந்துகொண்டு சித்திரான்னம் சாப்பிடுவது போல! அவ்வளவு சுவை!!

எந்தப் பேச்சின்போது எதைச் சொல்லி, சிக்கிக் கொள்கிறோமோ, என்ற பயம் முதலியாருக்கு. இருவரும் ஒரே அந்தஸ்தான உத்யோகம்தான்—எனினும், நடுங்குவார் உலகநாதர், மாதுர் பூதம் அப்படியல்ல,

அவன் இடியட்
இது நான்சென்ஸ்
அவன் ஒரு பூல்!
இவனெல்லாம் நாக்குப் புழுத்துச் சாவன்!

என்றெல்லாம், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவார், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தினரை — அவர்கள் எவ்வளவு உயரிய இடத்தில் இருந்தாலும்.

சுடுமூஞ்சி — என்று உலகநாதருக்குப் பெயர் வந்தது.

அறிவாளி—என்று மாதுர் பூதத்துக்குப் பெயர்.

ரொம்ப மந்தம் — காலையிலே பத்து மணிக்கு வேலையை எடுத்தால், மாலை ஆறு மணிக்கும் முடியாது, எட்டு மணிகூட ஆகும், அவ்வளவு அசமந்தம் சார், உலகநாதர் என்பார்கள்.

எவ்வளவு சுறுசுறுப்பு தெரியுமோ, மாதுர் பூதம்? ஆபீஸ் வேலையை அரைமணி நேரத்தில், மளமளன்னு முடித்துவிடுவார், மாலையிலே ஒரு சங்கீதக் கச்சேரி, நாட்டியக் கச்சேரியை விடமாட்டார். வேலையிலே நிபுணன். கட்டைப் பார்த்ததும், புரிந்துகொள்வார். கனகச்சிதமாக, இரண்டே வரியில் எழுதுவார், எவ்வளவு பெரிய விஷயமானாலும் சரி, மனசைப் போட்டுக் குழப்பிக்கொள்ளமாட்டார்—சூக்ஷ்மம் அதிகம்—என்று மாதுர் பூதத்துக்குப் புகழ் கிடைக்கும்.

"எல்லாம் எனக்குத் தெரியும். எனக்குத் தெரியாத விஷயமே கிடையாதுன்னு, பிரதாபம் பேசறீரே, உம்மோட ஆபீஸ் விஷயத்திலேயே ஞான சூன்யமா இருக்கிறே, செச்சே! என்ன மனுஷத்தன்மை இது?" என்று படபடவென்று பேசினாள் பகவதி—மாதுர் பூதத்தின் பார்யாள்—இரண்டாந்தாரம்.

"என்னடி அம்மா, எனக்கு எதிலே ஞான சூன்யம்?" என்று கொஞ்சினார் மாதுர் பூதம்.

"போதும் பால்யம் திரும்பறதோ?" என்று கூறிக்கொண்டே, மாதுர் பூதத்தின் கைக்குத் தன் கன்னத்தில் இடமளித்தபடி, பகவதி கேட்டாள்.

"உம்ம ஆபீசிலே யாரார் வேலை செய்கிறான்னு கூட உமக்குத் தெரியறதில்லையா? இதைக்கூடத் தெரிந்துகொள்ளாமப்படிக்கு, என்ன வேலை பார்க்கிறீராம்"

"என்னடி, ஜெனரல் மானேஜர் வேலை பார்க்கறே· அவன் கூட என்னை இவ்வளவு தைரியமா கேட்க மாட்டான்."

"போறது. உம்ம செக்ஷனிலே புதுசா ஒரு பிள்ளையாண்டான் வேலைக்கு வந்திருக்கானே..."

"ஆமாம்...... பத்து நாளாறது...... கிணத்துத் தவளை போல இருக்கான்......"

"கிணத்துத் தவளையோ, குளத்து முதலையோ, கிடக்கட்டும். அவன் யாருன்னு தெரிஞ்சிண்டீரோ. பிராமணப் பையன் என்பதாவது தெரிஞ்சுதோ..."

"அதுகூடவாடி தெரியாது. அது தெரிஞ்சதாலேதான், அவனோட தப்பு இங்கிலீஷை எல்லாம், நானே திருத்தி, அவன் மானத்தை வாங்காம இருக்கேன்..."

"அவன் யார்னு, தெரியாதா?"

"யார் ஆத்துப் பையன்?"

"போன வருஷம், நம்ம ஆத்திலே நவராத்திரி கொலுவின்போது ஒரு பொண்ணு வந்து பாடினாளே—மாநிறமா—ஒல்லியா..."

"எத்தனையோ குட்டிகள் வந்தா, பாட, ஆட... யாருக்கு கவனமிருக்கு..."

"இவ, சுருட்டை மயிர்... ரொம்ப துடிப்பா பேசுவா... உம்மை ஒரு நூறு தடவை இருக்குமே, மாமா! மாமா!ன்னு கூப்பிட்டது..."

"ஆமா... இவளெல்லாம் என்னை மாமான்னு கூப்பிட்டு விட்டா, என்னோட மனசு மகிழ்ந்துவிடும் போலிருக்கு..."

"உம்மோடு மனசு மகிழ அதுபோதுமா? நேக்குன்னு அது தெரியும், கிடக்கு, அந்தப் பொண்ணு பேரு, காமினி... நமக்கு ரொம்ப வேண்டியவா... இந்தப் பையன், அவளோட அண்ணன், B. A."

"அப்படியா? அசட்டுப் பய, என்னண்டை நேரா நின்றுகூடப் பேசறதில்லை. வெட்கமானாலும் இப்படியா?"

* * *

"இப்படி வீட்டுக்கு வரக்கூடாதுங்க நாயுடுகார்! நீங்க பெரிய அந்தஸ்திலே இருந்தவர், உம்மோட

மனசு புண்படும்படி நான் பேசுவதாக எண்ணிக் கொள்ளக்கூடாது. பொதுவாகவே, காலம் இப்ப ரொம்பக் கெட்டுக்கிடக்குது. உம்ம மகன், என் செக்ஷனிலே இருக்கிறதாலே,என்னை வந்துபார்த்தா ஊர்உலகம் தப்பாகப்பேசும். நாயுடுவும் முதலியாரும் சினேகம்-ஏதோ கையை நீட்டியிருப்பார் முதலியார்—பையன் அவரண்டை தானே வேலை செய்கிறான் என்று பேசும், நமக்கு ஏன் இந்த வம்பு. ஆபத்தாகக்கூடமுடியும். அதனாலே தயவுசெய்து, இனிமேல், என்னிடம் வந்து பேசறவேலையை விட்டுவிடுங்க...நான் நித்ய கண்டம் பூர்ணாயுசுன்னு ஆபிசிலே காலந்தள்ளிக்கொண்டு வருகிறேன்...ஐந்து வருஷமிருக்கு, பென்ஷனுக்கு, அதன் வாயிலே மண்ணைப்போட்டுவிடாதிங்க. மேலும் பேசத்தான் என்ன இருக்கு? உங்க மகன் கோதண்டபாணிக்கு ஒரு அஞ்சோ பத்தோ சம்பளத்தை உயர்த்த அதிகாரம் எனக்கா இருக்கு...”

“முதலியார்வாள்! மன்னிச்சிடுங்கோ. நான் இப்படி நடக்கும்னு சொன்னேன், எங்க வீட்டுக்காரி வம்பு செய்ததாலே, வந்தேன். இனி வரமாட்டேன். பகவான் விட்ட வழிப்படி நடக்கும்,”

“பகவான் உமக்கு ஒரு குறையும் வைக்கமாட்டான், பிள்ளையாண்டானும் ஒழுங்கானவன்...அது எனக்குப் பரம திருப்தி......ஆனா அதை நான் வெளிப்படையாச் சொன்னாக்கூட விபரீதமான வியாக்யானம் செய்துவிடுவாங்க. இவர்களெல்லாம், பார்ப்பனரல்லாத சமூகம், ஒரே இனம், இனம் இனத்தோடசேருது, அப்படி இப்படின்னு சொல்லி, என் தலைக்குத் தீம்பு தேடுவாங்க”

“ராம! ராம! என்னாலே உங்களுக்கு அந்தக் கஷ்டம் வரவேணாமுங்க. நான் உங்களண்டை வந்ததே, பையனுக்கு உத்யோகம் உயரவேணும் என்கிறதுக்காக அல்லங்க, இந்தக் காலத்திலே அவங்கவங்க காரியத்தை அவங்கவங்க பார்த்துக் கொள்வதே பிரம்மப்பிரயத்தனமா இருக்குது. தெரியாதுங்களா? பலநாளா தெரிஞ்சவராயிருந்தும், ஒரு நாளாவது என்னை வந்து பார்த்தாரா நாயுடு, மகன் வேலையிலிருக்கிறான், பார்த்துக்கொள்ளுங்கன்னு வந்து சொன்னா இவனோட அந்தஸ்த்தா கெட்டுப்போகும்னு, நீங்க ஒரு காலத்திலே சொல்லக்கூடாதே என்பதற்காகத் தான் வந்தேன்—வேறே ஒண்ணுமில்லிங்க...”

“எனக்கு உங்களோட மட்டு மரியாதை, கௌரவம் அந்தஸ்த்து, இதெல்லாம் தெரியாதா நாயுடு. அபிமானம் இல்லாமலா போகும். எல்லாம் மனசுக்குள்ளே இருக்கு, வெளியே கொட்டினாத்தானா, இருதயத்திலே இருந்தாப் போதாதா...”

“அதுபோதுமுங்க, முதலியார், ஆயிரம் ரூபாச் சம்பளம் என் மகனுக்குக் கிடைச்சாக்கூட இந்த ஆனந்தம் ஏற்படாது. வரேனுங்க”

மாதுர் பூதத்திடம் இளையாள், கச்சாபகேசனைக் குறித்து கனிவாகச் சிபாரிசு செய்திட, சகலகுண நாயுடுவிடம் உலகநாத முதலியார், ஆபீஸ் விஷயமாகத் தன்னை வீட்டில் கண்டு பேசுவதே தவறு என்று அச்சத்துடன் கூறி அனுப்பிவிட்டார். அக்கறையோ நல்லெண்ணமோ காட்டுவது தன் வேலைக்கே ஆபத்தாகிவிடக்கூடும் என்ற அளவுக்கு அவருக்கு நடுக்கம். மாதுர் பூதத்துக்கு என்ன!! மறுநாளே இளையாளின் கனிமொழி பலன் தரலாயிற்று.

* * *

“டே, பூல்! இங்கே வாடா......”

“என்ன சார்!......”

“நீ, பிராமணன்தானே? ஏண்டா இடியட், பிராமணப் பையன்தானே......”

“என்ன சார்! இப்படிக் கேட்கிறீர்.........என்ன சந்தேகம் உமக்கு......பிராமணன் தான்......”

“பிராமணனா இருந்தும் ஏண்டா, புத்தி உனக்கு இவ்வளவு கட்டையா இருக்கு, இங்கே பத்து நாளாக வேலை பார்க்கறயே, நான் பிராமணன்னு சொல்லப் படாதோ.........என்னண்டை வந்து பேசியிருக்கலாமேண்ணே......ஏண்டா! எப்படிப் பிழைக்கப் போறே?”

“கொஞ்சம் கூச்சமாக இருந்தது......”

“கூச்சமா? எதுக்காகடா.........மண்டு! மண்டு! தோப்பனாருக்கு என்ன வேலை?”

“தோப்பனார்......அவர்......அவருக்கு......”

“என்னடா தயக்கம்? என்ன வேலை......?”

“கோயிலிலே......குருக்கள்......”

[88-ம் பக்கம் பார்க்க]

உழவனுக இருந்தாலும், தன் மகனை ஊர் மெச்சும், வழக்கறிஞனுக்க வேண்டும் என்றெண்ணி, சட்டப் படிப்புக்கு, செலவுபற்றிப் பாராமல், பணம் தந்துவந்தான், தகப்பன்.

மகன், வெட்டிப்பேச்சு, வீண்வேலை, இவைகளிலே ஈடுபடுபவனல்ல; மந்த மதியினனுமல்ல; ஆசிரியர்கள் கண்டு பாராட்டத்தக்க பண்புடையவன்; சட்டப் படிப்பும் திட்டப்படி நடைபெற்றுக் கொண்டுவந்தது.

பட்டி தொட்டிகளிலே உழலத் தேவையில்லை, பட்டிணம் சென்று, என் மகன், வழக்கறிஞனுவான்; வணிகனும் அதிகாரியும், சீமானும் சீமாட்டியும் என் மகனைத் தேடிவருவார்கள்; வருவாய் வளமாக இருக்கும்; அந்தஸ்த்தும் உயரும் என்று எண்ணிப் பூரித்துவந்தான் தகப்பன்.

ஆனல்...?

உள்ளுணர்ச்சி என்கிறர்கள், மனக்குழப்பம் என்கிறர்கள், மருள் என்கிறர்கள்—காரணம் எதுவாகவேணும் இருக்கட்டும் — வழக்கறிஞன் ஆவதற்காகப் படித்துக் கொண்டுவந்த அந்த இளைஞன், திடீரென்று, ஆண்டியாகிவிடத் தீர்மானித்தான். மடாலயத்தில் சேர்ந்துவிட்டான்.

நண்பர்கள் திகைத்தனர்; மடாலயத்தினரும், அவனைக் கேள்விகள் குறுக்குக் கேள்விகள் கேட்டு, அதன் பிறகே சேர்த்துக்கொண்டனர்.

வழக்கறிஞனுகி இருந்தால், மாளிகையில் இருக்கலாம்; அழகிய புரவிகள் பூட்டப்பட்ட வண்டியில் செல்லலாம்; சிங்காரியோ சீமாட்டியோ கிடைத்திருப்பாள் துணைவியாக; செல்வமும் செல்வாக்கும் பெற்று, பெரிய புள்ளியாகி இருக்கலாம்.

மன்றம் பலவற்றிலே 'மணி'யாகித் திகழ்ந்திருக்கலாம்; மதுவும் மன்னர் அவையில் இடமும் கிடைத்திருக்கக்கூடும்.

மடாலயம், தருவது என்ன? கட்டுப்பாடு மிக்க வாழ்க்கை, கடுமையான விரதம், விதவிதமான நோன்புகள், ஓயாத பூஜை!!

பிரம்மச்சாரியாக இருக்கவேண்டும். ஆசாபாசங்களை அடக்கவேண்டும்; ஆண்டிக் கோலத்தில் இருக்கவேண்டும்.

பாபம் புரியாதீர்கள், பரமனை மறவாதீர்கள், பரகதி இழக்காதீர்கள்—என்று பாமரருக்கு உபதேசம் செய்யவேண்டும். அந்த இளைஞன், இந்த வாழ்க்கையை மேற்கொண்டான்.

முறைப்படி பயிற்சிகள் பெற்றன்—ஆசிரியர்களாக அமர்ந்திருந்த பெரிய சாமியார்கள், பரிதாபப்படும் அளவுக்கு, 'பரமன் அருள் பெறுவதற்காக'—தன்னைத்தானே வாட்டிக்கொண்டான்.

அதற்கான காலமும் கடுமையான பயிற்சியும் முடிந்ததும், 'சாமியார்' ஆவதற்காக 'மங்களநாள்' குறிக்கப்பட்டது.

வழக்குமன்றத்திலே, தன்மகன் வல்லவனுக விளங்குவதைக் காண வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த, தகப்பனுருக்கு இது சஞ்சலம் தந்தது, என்றுலும், 'சாமியார்' ஆகும் அந்த 'சன்மார்க்க விழா'வைக் காணச் செல்வது, முறையாயிற்றே என்பதற்காக, தம் நண்பர்களுடன் வந்துசேர்ந்தார்.

விழா நடைபெற்றது! விழா என்றல் களிப்பும் குதூகலமும் கூத்தாடும் வகையினது அல்ல!

கடவுள் சன்னிதானத்தில் காலடி எடுத்துவைப்பதற்கான 'தூய வாழ்க்கை'—புனிதப் பயணம்—துவக்கமாகிறது என்பதுதான் அந்த விழாவின் பொருள்.

எனவே, ஆடலும் பாடலும், பாராட்டுதலும் பரிசு வழங்குவதுமல்ல — பரமன் புகழ்பாடுவது, பரிபக்குவம் அடைவதுபற்றிய உபதேசம் தருவது, இவை.

இவைகளில் ஈடுபாடு மிகுதியும்கொண்ட, 'இளந்துறவி, தன் தந்தையின் முகத்தில் சோகம், திகைப்பு, ஏமாற்றம், இவையே இருப்பது கண்டான். பரிதாபப்பட்டான். தந்தை, தயாபரனின் தொண்டனுகும் இந்தப் பெரும்பேறு, எவ்வளவு சிலாக்கியமானது என்பதை அறியாமலிருக்கிறரே, என்னே இவர் தம் பாமரத்தன்மை,என்றெண்ணி, மகன், பரிதாபப்பட்டு, தகப்பனுருக்கு நல்லுரை கூற எண்ணினன்.

"தந்தையே! என் செயல்கண்டு தங்களுக்குக் கோபமோ?" என்று கேட்டான்.

"இல்லையடா மகனே! இல்லை! இறைவனுடைய புகழைப் பரப்பி, அனைவரையும் வேத நெறியில் நடத்திடச் செய்யும் புனிதமான தொண்டுபுரியும் செயலில் ஈடுபடும் உன்னைக்கண்டு, நான் பெருமைப்படுகிறேன். வணிகன், போர்வீரன், வழக்கறிஞன்—இப்படி உள்ளவைகள் அனைத்தும், கேவலம் மனிதர்களுக்காகச் செய்யும் ஊழியம்—ஊதியம் ஏராளமாகக் கிடைக்கக்கூடும், எனினும் தேவனுக்குத் தொண்டு செய்வதால் கிடைக்கும் பெருமை, இவைகளிலே ஏது! மகனே! நான் மந்த மதியினன், உன்னை வழக்கறிஞனுக்கி உலகத்தில் உழலவைக்க எண்ணினேன். நீ, அறிவாளி அருளைத் தேடிச்செல்கிருய்! சென்றுவா, வென்றுவா!" என்று தகப்பனர் ஒப்புக்காவது அந்த இடம் பல பெரிய 'சாமியார்களின்' கொலு மண்டபம் என்பதை எண்ணியாவது, அன்று புனிதம் நிறைந்த நாள் என்பதற்காகவாவது, கூறுவார் என்று மகன் எண்ணினன்.

ஆனல்...!

அதுவரை, மிகச் சிரமப்பட்டு, அடக்கிவைக்கப்பட்டிருந்த ஆத்திரம், அழுகுரலாக வெளிவந்தது, தகப்பனுக்கு.

"கேள்வி வேறு கேட்கிருயா, கற்றறிமூடனே! பெற்றேரின் மனதை வேகவைத்தவனே! என் ஆசைகளை அழித்தொழித்தவனே!, உன்னை ஆண்டியாக்கவா, வாயைக்கட்டி வயிற்றைக்கட்டிப் பணம் சேர்த்து, செலவுக்கு அனுப்பினேன். வழக்கறிஞனுவேன் என்று என்னிடம் வாக்களித்து, நம்பவைத்து, இங்குதுறவியானேன், பார் என் திறமையை என்று கேட்கிருயே. தந்தைசொல் மிக்க மந்திரமில்லை, என்ற சத்திய வாக்கை நாசம்செய்து

விட்டு, மோசம் செய்துவிட்டு, "சாமியார்" ஆகிறேன் என்கிருயே! நீ, இங்கு படித்த 'சுவிசேஷம்' பெற்றேருக்குத் துரோகம் இழைப்பது, பாபம் என்ற பால பாடத்தைக் கூடவா உனக்கு அளிக்கவில்லை.!!" என்று சரமாரியாகக் கண்டனக் கணைகளை வீசினர்.

மகன், புன்னகை புரிந்தான்; வேறென்ன செய்வான்.

மடாலயத்தில் சேர்ந்து மகத்தான சேவையை, மனித குலத்தின் உய்வுக்காக ஆற்ற இருக்கிருேம் என்பதை காடு கழனி சுற்றி, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றெண்ணிக் கிடக்கும் இந்தப் பாமரன், எப்படி அறிய முடியும்! என்று மனதில் எண்ணிக்கொண்டான்.

மகன், வழக்கறிஞுவான், என்று நம்பிய தந்தை ஏமாந்து போனர்! அதிலே ஆச்சரியமில்லை. மடாலயத்தில், மகேசனுடைய அருளைப் பெறலாம் என்றெண்ணிய மகனும், பிறகு, ஏமாந்தான்!

அதுதான் ஆச்சரியம்! மடாலயம், மக்களை மடைமையில் ஆழ்த்தி, மமதையாளனிடம் சிக்கவைக்கும் கொடுமைக் கூடம் என்று இந்தச் சாமியார் உணரக் காலம் பிடித்தது.

உணர்ந்ததும், ஊருக்கு உரைத்திட அஞ்சவில்லை.

மடாலயத்தை விட்டு வெளி ஏற மனத் துணிவு பிறக்காமல் போகவில்லை.

வழக்கறிஞன், துறவியானர்.

பிறகு அந்தத் துறவி, துறவறத்தைத் துறந்தார்! அவர்தான் மார்ட்டின்லூதர். துறவறத்தைத் துறந்திடும் கட்டம் வந்தபோது, மார்ட்டின்லூதருக்கு தான் 'சாமியார்'ஆன நாளன்று, தன் தகப்பனர், பொறிபறக்கப் பேசியது நினைவிற்கு வந்தது, புனல் துளிர்த்தது கண்களில்.

★

போய்யா. போ! மகாப் பெரிய மனுஷன்தான்! மாசம் ஒன்பது ஆகுது, மந்திரியிடம் பேசி எப்படியும் காரியத்தை முடித்துத் தருவதாக மார்தட்டிப் பேசி! உன் பேச்சை நம்பி, வெங்கடாசலபதிக்கு போடுகிற மாதிரியான பெரிய மாலையா தூக்கிக்கிட்டு, வருகிற மந்திரிகளுக்கெல்லாம் போட்டேன்–தீ, கேட்கிறபோதெல்லாம் தட்டாமல் தயங்காமல் பணம் கொடுத்தேன். என் பேச்சை மந்திரி தட்டமாட்டாரு—பாருங்க—எண்ணி பத்தாம் நாள் உங்க வீடு தேடி ஆர்டர் வரும்னு சொல்லி ஆசை காட்டினயே—என்ன ஆச்சு உன் பேச்செல்லாம். செச்சே! ஏன்யா, கையாலாகாத மனஷனு இருந்துகிட்டு, அதைச் சாதிக்கிறேன். இதைச் சாதிக்கிறேன்னு சொல்லி, புளுகிக்கிட்டுத் திரியறே. தொப்பியை மாட்டிக்கிட்டு, இப்ப எங்கே கிளம்பிவிட்டே? யார் தலையிலே கை வைக்க? போய்யா, போ!

[86-ம் பக்கத் தொடர்ச்சி]

'அட அசடே! அதைச் சொல்றதிலே வெட்கம் ஏன்? ஏண்டா, வெள்ளைக்காரன், தன்னை பிஷப், பாதிரின்னு சொல்லிக்கொள்ள வெட்கப்படுவனே! நாம் ஏன், அர்ச்சகர் வேலையைச் சொல்லிக்கொள்ள வெட்கப்படணும்......"

"இந்தக் காலத்திலே மதிப்பு கிடையாதேன்னு தான்......"

"மதிப்பு உண்டாக்கணுமடா மண்டு! உண்டாக்கணும். இலட்ச இலட்சமாச் சம்பாதிக்கிற சீமானு இருந்தாலும், நூற்றுக்கணக்கானவர்களுக்கு எஜமானுகி ஆயிரக்கணக்கிலே சம்பளம் வாங்கிண்டு அதிகாரம் செலுத்துபவனு இருந்தாலும் உன்னுடை தோப்பனுரோட தயவை நாடித்தானே தீரணும்—பிறகுதானே தரிசனமே கிடைக்கறது. ஏனடா! அப்படிப்பட்ட உத்தமமான 'சேவை'யிலே இருக்கார், அதைப் பெருமையோட சொல்றதா, வெட்கத்தோடு முணுமுணுக்கறதா? உன்னைப் போன்றதுகளைப் பார்த்துத்தான், அவனெல்லாம், மடிசஞ்சி, உஞ்சி விருத்தி, உச்சிக்குடுமி என்றெல்லாம் கேலி பேசருன். இனி, தோப்பனுரோட வேலையைத் தாழ்வானதுன்னு எண்ணிண்டு திரியாதே."

"இப்படிப்பட்ட மேதா விலாசம் பல பேருக்கு இல்லையே, சார்! கேவலமான்னு பேசரு......"

"பேசுவா, பேசுவா! இந்த ராஜாஜி மட்டும் அனுவசியமா ஒரு கல்வித் திட்டம்னு கொண்டுவந்து வம்பை விலைக்கு வாங்காமப்படிக்கு, இன்னும் ஒரு பத்து வருஷம் ராஜ்யத்தை ஆண்டிருந்தாரானு தெரிஞ்சிருக்கும், பிராமணத் துவேஷிகள் பாடு! உம்! என்ன செய்யறது? மகா ஞானஸ்தர்தான், ராஜாஜி! முன்யோசனையில்லாமல் நடந்துண்டார். மூலையிலே கிடக்க வேண்டியதுகள் முடிசூட்டிண்டு கிளம்பிட்டதுகள்."

"ஆமாம், சார்! நம்மவா ரொம்பப்பேர் சோகமாகத் தான் இருக்கா, ராஜாஜி விலகினதும்..."

"ஆமாம்... சரி... இப்ப உனக்கு நான் என்ன செய்ய முடியும்..."

"எனக்கு ஒரு குறையும் இல்லை சார்..."

"குறை இல்லேன்னு போதுமா? அங்கே பரதேவதை கொறடா போடருளே! நம்ம காமுவோட அண்ணன் வேலையிலே இருக்கான், கவனியுங்கோன்னு சொல்ரு... ஆர்டர் போட்டாச்சே..."

"ரொம்பச் சந்தோஷம், சார்... நான் பார்த்தது கூட இல்லே..."

"என் வயசுதான் இருக்கும் அவனுக்குன்னு சொன்னு... உன்னை அவ பாத்திருப்பாபோலிருக்கு... சரி உனக்கு நான் ஏதாவது செய்ய வேணுமானு, முதலிலே, உன்னை என் செக்ஷனைவிட்டுக் 'கல்தா' கொடுத்தாகணும்..."

'ஐயயோ! என்ன சார் இது, உதவின்னு சொல்லி விட்டு, 'கல்தா' கொடுக்கணும் என்கிறீர்.

'ஆமாம்டா! என்னண்டை உன்னை வைத்திண்டு உனக்குச் சலுகை காட்டினு, பாப்பானுக்குப் பாப்பான் உதவி செய்துண்டான்னு பழிச்சுப் பேசுவா. இப்பத்தான் சூரப்புலிகள் பிராமணனை ஒழிக்க இயக்கம் நடத்தருளே...! அதனுலே, நாளையிலே

யிருந்து, நீ, உலகநாத முதலி செக்ஷனிலே வேலை செய்யவேணும்—ஏற்பாடு செய்துடறேன்..."

"அவர் சுடுமுஞ்சின்னு எல்லோரும் பேசிக் கொள்ளு..."

"அவனோட மூஞ்சியைப்பத்தி நீ ஏண்டா கவலைப் படறே...அவன் ரொம்பப் பயந்த பேர்வழி... பிராமணன்னு பெரு பயம்...அதனாலே உன்னண்டை வாலாட்டவே துணிவு வராது. நீ அவன் செக்ஷனிலே வேலை பார்த்துண்டிருக்கும்போது, சமயமறிந்து, நான் அவனைக்கொண்டே, சிபார்சு செய்யச் சொல்கிறேன்."

"சரி சார்!..."

"என்னடா இது, அடிக்கொரு தடவை சார்! போடறே. காமினி, எப்படி, வாய்நிறைய, மாமா மாமான்னு கூப்பிடறு தெரியுமோ...?

'சரி, மாமா...!"

"சபாஷ்டா, மருமானே! ஆனால் ஒண்ணுக்கு இரண்டு கலியாணம் செய்தும், குழந்தைதான் கிடையாது...சும்மா மருமான் தான்...பெண் கிடைக் கும்னு எண்ணிண்டு, மாமான்னு கூப்பிடாதே..."

* * *

"உலகநாத முதலியார், இதுபோல, இனிமையாகப்பேசி மகிழவுமில்லை, கோதண்டனை மகிழ்விக்கவுமில்லை. சகலகுண நாயுடுவின் மகன் என்ற ஒரே காரணத்தாலேயே, கோதண்டனைப் பார்த்துப் பேசுவதே கூட ஆபீஸ் முறைக்கு ஒழுங்கல்ல, ஆபத்தை, வதந்தியை, கெட்ட பெயரைக் கிளப்பிவிடும் என்று அஞ்சினார். எனவே, கோதண்டனைக் கலந்து பேசக் கூட இல்லை, மறுநாளே, மாதுர்பூதம் செக்ஷனில் வேலை செய்யும்படி உத்தரவு பிறப்பித்துவிட்டு, ஒரு ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டோம் என் றெண்ணிக்கொண்டார்.

மறுநாள், கோதண்டன் மாதுர்பூதத்தின் மேற் பார்வையில் வந்து சேர்ந்தான்; கச்சாபகேசன் உலகநாத முதலியாரைக் கண்காணித்துவரத் தொடங்கினான்.

"மிஸ்டர் கச்சி!..."

"சார்! கொச்சையாக அழைத்தால் எனக்குப் பிடிப்பதில்லை. கச்சாபகேசன் என்றே கூப்பிடுங்கள்."

"ஆகட்டும்...லெட்ஜர் பழக்கமாகி விட்டதா?"

"இல்லையே...எனக்கு அதிலே டேஸ்ட்டே கிடையாது...கரஸ்பாண்டென்சுதான் எனக்குத் தகுந்த வேலை என்று மாதுர்பூதமே சொல்லியிருக்கிறார்."

"அப்படியா? அவருக்கு யாருக்கு என்னென்ன வேலை தர வேண்டும் என்பது சட்டென்று தெரிந்துவிடும், மகா சூட்சமப்புத்திக்காரர்..."

"நீங்கள் கூட, சற்று சுறுசுறுப்பாகவும், தைரியமாகவும் வேலை செய்தால், ஆபீசின் தரமே உயரும் என்று மாதுர்பூதம் அடிக்கடி சொல்வார், சார்!"

"அப்படியா? சரி, சரி வேலையைக் கவனி..."

இப்படி, உலகநாதர் கச்சாபகேசன் தொடர்பு துவக்கப்பட்டது.

* * *

உன்னோட சாமர்த்தியம், வேறே யாருக்குடா வரும்னு என்னைப் பலபேர், வேண்டியவா, புகழ்ச்சியா சொல்லிண்டிருப்பா, என்னோட கடைகோட்டி குட்டி இருக்காளே, காமாட்சி, அவளோட சமத்து எப்படிப்பட்டதுன்னு பார்க்கும்போது, என்னோட சாமர்த்தியம் எள்ளுப்பிரமாணம்னு தோணறது. அட அடா! என்ன சமத்து, என்ன சமத்து! நான் அவளை நன்னாத் தெரிஞ்சுக்கொள்ளாமப்படிக்கு சில வேளைகளிலே எரிஞ்சு விழுந்துகூட இருக்கேன். ஏண்டி! காமு! இதென்னடி வயசு காலத்திலே இப்படி ஊர் சுத்திண்டு, கண்டவாளோட கூடிண்டு திரியறயே இப்படி நடந்துண்டா, இது சுத்தப் பட்டிமாடுன்னு எல்லாப் பயலும் எண்ணிண்டுவானேன்னு சொன்னேன். போப்பா! நோக்கு என்ன தெரியும்? சுத்தக் கர்நாடகம்னு என்னைப் பேசுவ. இப்ப என்னடான்னா, மாசம் இவளிடம் மூவாயிரம் தரப்போரு, சர்க்கார்லே, கிராம சேவைக்கு—கோலாட்டம், கும்மி! இதுகளை எல்லாம், கிராமத்து ஜனங்க பழகறதுக்கு இவதான் ஆபீசர்! கவர்னரன்ன, தலைமை வகிச்சார்!! ரொம்பப் புகழ்ந்து பேசினார், காமு, கவர்னர் பக்கத்திலே, சரி சமமா உட்கார்ந்துண்டு, காபி சாப்பிட்டபோது, பார்த்தேன், பிரம்மானந்தமான்னு இருந்தது. இதைப் பார்த்து பிரமிச்சிப்போய், ராவ்பகதூர் சாமா, தம்மோட மகனுக்குக் காமுவை எப்படியும் முடிச்சுத் தரணும்னு ஆராவமுதனோட ஆத்துக்கு நடையா நடக்கரூராம்! காமுவோட, சாமர்த்தியம் இப்பன்னா நேக்குப் புரியறது!!

"கோதண்டன்...? யாரடாப்பா அது? நீயா? ஆமாம், கோதண்டன் என்றால், என்ன கோனாரா செட்டியாரா, முதலியாரா, ரெட்டியாரா; ஒரு இழவும் போடக் காணுமே..."

"நாயுடு, சார்..."

"ஓஹோ! நாயுடுகாரா? அடடே! ராஜ்யமாண்ட பரம்பரை ஆச்சே! நீ எப்படி என்னிடம் அடங்கி ஒடுங்கி வேலை செய்யப்போகிறே?"

"அப்படியெல்லாம் இல்லை சார்! உலகநாதர் செக்ஷனிலே விசாரித்தால் தெரியும்..."

"உலகநாதர், உங்களவர் அப்பா...நான் பிராமணன்......, பாப்பானுச்சே! என்னண்டை அடங்கி ஒடுங்கி வேலை பார்த்தா சுயமரியாதை கெட்டுப் போகும்..."

[91-ம் பக்கம் பார்க்க]

ஆளியானார்

மாபாவியின் மண்டை ஆயிரம் சுக்கலாகிவிடும்-பார்—பார்—இதோ ஒரு விநாடியில்.

பூமி வெடித்து இந்தப் பாவியை அப்படியே விழுங்கி விடப்போகிறது பார்.

கடல் பொங்கி எழும், கடும் சூறாவளி கிளம்பும்—காதலனை ஒழிப்பதுடன் விடாது, இவனை அனுமதித்துக் கொண்டுள்ள இந்த நாட்டையே நாசமாக்கிவிடும்.

* * *

முதியவர்கள் முணுமுணுத்தனர்; பெண்கள் சபித்தனர்—இளைஞர்கள் வாய்பிளந்து நின்றனர்-அனைவரும் அந்த வாலிபனையும், அவனாலே மூளியாக்கப்பட்ட 'கடவுள்' சிலையையும் மாறி மாறிப் பார்த்தனர்—பலருக்குப் பெரும் பீதி.

பூஜித்துவந்தனர் அந்தச் 'சிலை'யை—அதை இந்த வாலிபன், ஓங்கி அடித்து, பக்தர்கள் கண் எதிரிலேயே மூளியாக்கினான்.

உருவாரங்களைப் பார், உபயோகமற்ற இந்த உருவாரங்களை! கடவுளா இந்தக் கற்சிலை! கசடர்காள். உங்களைக் காப்பாற்றும் கடவுளா இந்தக் கல்லுருவம்? உங்களைக் காப்பாற்றுவது பிறகு இருக்கட்டும், இதோ முதலில், தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளட்டும் இந்தக் கடவுள், என்று முழக்கமிட்டான், மக்கள் மருட்சியுடன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே சந்தைச் சதுக்கத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருந்த விந்தைக் கடவுளை, உடைத்து மூளியாக்கினான்—உடைபட்டுப்போன சிலையையும் கண்டனர், உற்பாதம் ஏதும் ஏற்படாததையும் பார்த்தனர், சண்டாளத்தனமான செயல் புரிந்த அந்த வாலிபன், சற்றேனும் அஞ்சாது, சந்தைச் சதுக்கத்திலே நின்றுகொண்டு, அந்த விந்தைக் கடவுளர் பற்றிய கண்டன மொழிகளைக் கொட்டிடக் கண்டனர்.

தலைமுறை தலைமுறையாக, எந்தக் கடவுளரைப்பூஜை செய்து வருகின்றனரோ, அந்தக் கடவுள் இதோ மூளியாக்கப்பட்டிருக்கிறார்; காண்கிறார்கள் கலக்கத்துடன்.

அவனோ, கலகலவெனச் சிரிக்கிறான்; கையால் ஆகாத கடவுள்! கண் மூடித்தனமாகக் கரம்கூப்பித் தொழுது வருகிறீர்களே, கண்டீர்களா அது மூளியாகிப்போனதை... என்று ஏளனமொழி பேசுகிறான்.

எண்ணற்ற கடவுள்களை ஏத்தித் ஏத்தித் தொழுது வந்தால்தான், ஜென்மம் சாபல்யமாகும்; பொழுது விடிவதும் சாய்வதும், கடல் பொங்காது இருப்பதும் வானம் இடிந்து கீழே விழாமல் இருப்பதும்; பூமி வெடித்துப் பெருநெருப்பு கிளம்பி அனைத்தையும் அழிக்காதிருப்பதும், அனைத்தும், 'அவன்' செயல்; அது மட்டுமல்ல, அன்றாடம் பூஜை செய்து வந்தால் மட்டுமே 'அவன்' இந்த ஆயுளைப் பாலிப்பான், என்று நம்பி வந்தனர் பாமரர்—படித்தவர்கள் இதற்கு ஆதார ஏடுகள் தீட்டித்தந்து 'மேதைகள்' ஆயினர்.

சன்-யாட்-சென் இந்த மூடத்தனத்தை வெறுத்தான்—காலம் கிளம்பிய கருத்துகளும், தீவிரமான சிந்தனையும், கிருஸ்தவப் பாதிரிமார் போதனையும், எல்லாம் சேர்ந்து, சன்-யாட்-சென் உள்ளத்தை உருவாக்கிக்கொண்டு வந்தது.

அஞ்சி அஞ்சிச் சாகும் தன் நாட்டு மக்களிடம், அவர்கள் நம்பிப் போற்றிவந்த 'ஆஸ்தீகம்' அர்த்தமற்ற ஓர் ஆபாசக் களஞ்சியம் என்று எடுத்துரைத்தான்; தடுத்து நிறுத்தினர்.

ஒருநாள், சந்தைச் சதுக்கம் சென்றான், அங்கு, சீனமக்கள் வழக்கம்போல், விந்தைத் தெய்வத்துக்கு வந்தனை வழிபாடு செய்துகொண்டிருக்கக் கண்டான், தன்னையும் காத்துகொள்ளத் திறனற்றுக் கிடக்கும் இந்தக் கல்லுருவம், உங்களைக் காப்பாற்றுமோ? என்று கேட்டான்—சிலையை உடைத்து மூளி யாக்கினான்—அன்று சந்தைச் சதுக்கத் தேவனுக்குத் திருவிழா! எனவே பக்தர்கள் ஏராளம்! பூஜாரிகள்பாடு கொண்டாட்டம்; இந்நிலையில் சிலையை மூளியாக்கினான்—சன்-யாட்-சென்.

அப்போது வயது அவனுக்குப் பதினாறு. 1982-ல் சன்-யாட்-சென், வைதீகக் குடும்பத்திலே தான் பிறந்தான்—வீட்டில் எல்லாச் சீனர்கள் இல்லங்களிலும் நடப்பது போன்றே பூஜை, விரதம், நோன்பு, சகலமும். சன்-யாட்-சென் இதை மூடத்தனம் என்றான், இந்த வாலிபன் ஓர் கிறுக்கன் என்றனர் வைதீகர்கள்.

அன்று சிலையை மூளியாக்கியது கண்டு கலங்கிய சீன மக்கள்; இன்று சந்தைச் சதுக்கத்து விந்தைக் கடவுளரை விட்டொழித்துவிட்டு, டாக்டர் சன்-யாட்-சென் சீன நாட்டுக்குப் புத்தறிவுப் புரட்சி தந்த முதல்வர் என்று கொண்டாடுகிறார்கள்.

டாக்டர் சன்-யாட்-சென் வாழ்க்கை, நெஞ்சை அள்ளும் பல சம்பவங்கள் கொண்டது- சிலை உடைத்த சம்பவம்—அந்த நாள்—மிகவும் எழுச்சியூட்டுவதாக அமைந்தது.

"மக்களாட்சி ஏற்பட வேண்டும்; வேற்று நாட்டானின் ஆதிக்கம் அறவே ஒழிக்கப்பட வேண்டும்; நம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும்!"

1911-ல் பூத்த புரட்சியில் வெற்றி கண்ட சீனத் தலைவர் டாக்டர் சன்-யாட்-சென் கொண்டிருந்த மூன்று கொள்கைகள் இவை.

அவர் மேற்கொண்ட வேலையோ மகத்தானது. "பூஞ்சோலைகளும், பாதமி மரங்களும் நிறைந்த இந்த நாட்டின் சிற்றிடையார்கள் உலகத்திலே மிக அழகானவர்கள். வர்ண ஜாலங்கள் நிறைந்த மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும் இந்த நாட்டின் சிங்கார வல்லிகளைச் சோபிக்க செய்யும் பட்டாடைகளையும் நான் என்றுமே மறக்கமுடியாது!" என்று எழுதினான், 13-வது, நூற்றாண்டிலே கால் நடையாகவே சீனா சென்று திரும்பிய இத்தாலி நாட்டு பிரயாணி மார்க்கபோலோ. ஆனால் சன்-யட்-சென் பார்த்த சீனாவோ, துயரத்தின் இருப்பிடமாய், துன்பத்தின் கேணியாய் இருந்தது. நாற்பது கோடிக்குமேல் ஜனத்தொகை கொண்ட சைனாவில் முப்பது கோடிக்கு மேல் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வந்தனர். நதிகளோ வெள்ளத்தைக் கொட்டின; இல்லையேல் மணலை பரப்பின.

மழை அதிகம்; இல்லையேல் வரட்சி. நாட்டிலே ஏதாவது ஒரு பக்கத்திலே எப்போதும் பஞ்சம் தலைவிரித்தாடியது. விளைந்த பயிரை அறுவடை செய்ய முடியாதவாறு வெட்டுக் கிளிகள் தொல்லை வேறு. பஞ்சத்தால் ஆண்டுதோறும் லட்சக்கணக்கில் மக்கள் மடிந்து கொண்டிருந்தனர். பிணியால் பாரைவிட்டு அகன்றோர், இதைவிட அதிகம்.

இந்த நிலையிலிருந்த நாட்டுக்கு ஏற்பட்ட அரசாங்கமோ, கொடுமைக்கு இலக்கணம் கற்பித்தது. அதைப் பலப்படுத்திய நிலச் சுவான்தார்கள், சுரண்டல் தன்மைக்கு சின்னமாக இருந்தனர்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் சைனாவையே சூறையாடின ஐரோப்பிய வல்லரசுகள். சைனாவின் இயற்கை உற்பத்திகளான பட்டையும், டீத் தூள்களையும், களிமண்ணிலிருந்து செய்யப்பட்ட பீங்கான்பாத்திரங்களையும் கப்பல் கப்பல்களாக ஏற்றிக்கொண்டு சென்றனர், ஐரோப்பியர். அதற்கும் பதிலாக அவர்கள் இந்த மக்களுக்குக் கொடுத்தது 'ஓப்பியம்'—கஞ்சா.

சன்-யாட்-சென்கள் விழிப்புற்று எழுந்த காலத்திலே சைனா கஞ்சாக் குடியர்களின் காலனியாக இருந்தது. இரட்டைச்சடையை நீட்டமாகப்போட்டுக்கொண்டு,கஞ்சா விலேயே உலகத்தை மறந்து கிடந்தான், சீனன். அவன் உழைப்பால் கிடைத்த லாபத்தில் புன்னகையோடு புரண்டான், வெள்ளையன். இதற்கு இணங்கி அதனால் இன்பம் அனுபவித்தனர் சைனா நாட்டு அரச பரம்பரையும், நிலச்சுவான்தார்களும்.

சன் யாட் சென் ஆரம்பித்த புரட்சி, நாட்டிலிருந்த அரச பரம்பரையை ஒழித்தது, மக்களாட்சி மலர்ந்தது. ஆனால் அடுத்த கட்டம் வருவதற்கு வெள்ளை ஏகாதிபத்தியங்கள் விடவில்லை.

சென்ற மகா யுத்தம் முடிந்தவுடனே, ஜப்பானை சைனாவுக்குஎதிராக தூண்டிவிட்டன, மேற்கத்திய நாடுகள். சைனாவுக்குஉரிய பூபாகங்களை ஜப்பானுக்கு குரங்குச் சமாதானமாக வழங்கின. பிரான்சும், இங்கிலாந்தும் தங்களுக்கும் சிலபகுதிகளைத் தேடிக்கொண்டன. இதற்கு சாதகமாக, சைனாவின் பிரபுக்கள் பரம்பரையையே தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டன. உள் நாட்டிலே மக்களாட்சி மாற்றானுக்கு நாட்டை காட்டிக் கொடுக்கும் ஆட்சியாக மாறுவதைக்கண்ட சன்யாட்சென் மாகாணம், மாகாணமாகப் போய் வெள்ளையரின் பிரித்தாளும் சூழ்ச்சியையும், சுரண்டல் தன்மையையும் விளக்கினார். அவருடைய ஒற்றுமை முயற்சி பலன் தரும் முன்னமேயே 1925ல் மரணமடைந்தார்.

கேள்வியும் - பதிலும்

கேள்வி:— கோயில் என்பது என்ன? பிரார்த்தனை என்றால் என்ன?

பதில்:— கோயில் என்பது கடவுளின் படுக்கையறை. அங்கு பக்தர்கள் கூடி நின்று தூங்கும் கடவுளை துயிலெழுப்புவதே பிரார்த்தனையாகும்.

★

கேள்வி:— பெண்ணின் அதரத்தில் தோன்றும் புன்னகைக்கும் மேகத்தில் தோன்றும் மின்னலுக்கும் வித்தியாசமென்ன?

பதில்:— மின்னலுக்குப்பின், மழை மேகத்திலிருந்து வருகிறது. புன்னகைக்குப் பின், மழை கண்களிலிருந்து வருகிறது.

[89-ம் பக்கத் தொடர்ச்சி]

"அப்படிப்பட்ட எண்ணமெல்லாம் எனக்குக் கிடையாது சார்!..."

"உனக்குக் கிடையாது ...சரி...ஆனா, அப்படிப் பட்ட எண்ணம் இப்ப, நாட்டிலே பேசப்பட்டு வர்ரது தெரியுமேன்னோ?"

"தெரியும், சார்!"

"தெரியுமா? எப்படி? ஏண்டாப்பா, கோதண்டம், நீ அந்தக் கூட்டத்தோடு தொடர்பு வைத்துக்கொண்டிருப்பவனோ?"

"இல்லை சார், எனக்கு யாரையும் தெரியாது..."

"அதுவரையில் க்ஷேமம்......இதோ பார், நான் எப்பவும் சிரித்துப் பேசிண்டு இருப்பேன்......ஆனா, துளியாவது உன்னண்டை அந்தச் சுயமரியாதை கியமரியாதை என்கிறது தெரிந்ததோ, தொலைத்து விடுவேன் தொலைத்து, ஆமாம்...... என்ன பேப்பர் படிக்கிறே?"

"யார் சார், நானா?"

"உங்க அப்பன்? சுத்த முட்டாளா இருக்கறயே, உன்னைத்தானே கேட்பேன், என்ன பேப்பர் படிக்கிறேன்...னா..."

"ஒண்ணும் இல்லை, சார்!"

"ஏன், எல்லா ஞானமும் பி. ஏ. வோட கிடைத்துவிட்டதா! பேப்பர்கூட படிக்கறதில்லையா?..."

"எதிர் வீட்டிலே, இந்து வரும், படிப்பேன் சார், சனி, ஞாயிறு......"

"எதிர் வீட்டிலே, யார் இருக்கா?"

"என். வி. நடராஜன்னு ஒருத்தர்......"

"யார்,அந்த அரட்டையா? ஆரியன் திராவிடன்னு பேசுவானே, அவனா?"

"ஆமாம், சார்!"

"அப்போ, ஆரியன் திராவிடன் என்கிற விஷம் உனக்கும் ஏறி இருக்குன்னு சொல்லு..."

"இல்லே, சார்! நான் அவரண்டை அதை எல்லாம் பேசறதில்லை"

"ஏனாம்?"

"அவர்களெல்லாம் நிறைய விஷயம் தெரிந்தவர்கள், நான் என்ன பேசமுடியும்?"

"அவர்களெல்லாம் நிறைய விஷயம் தெரிந்தவர்களா? அல்லாடியா? அல்லது டி. டி. கே.யா? திமிரைப் பார், திமிரை அவர்களெல்லாம், நிறைய விஷயம் தெரிந்தவர்களாம்! என்னடா தெரியும் அந்தப் பயல்களுக்கு? ஆரியன்—திராவிடன்—பார்ப்பன சூழ்ச்சி—வடநாட்டு ஆதிக்கம்—இப்படி வரட்டுக்கூச்சல்போடத் தெரியும்—வேறென்ன தெரியும்—சரித்திரம், பூகோளம், ஞானம், விஞ்ஞானம், என்ன தெரியும்?"

"ஆமாம், சார்..."

"அவர்களுக்கு இதெல்லாம் தெரியாது என்பது உனக்குத் தெரியுமே, அவர்களைக் கண்டித்திருக்கிறாயோ—எப்போதாவது?"

'திராவிட நாடு'
ஏட்டில் படித்துச் சுவைத்த ஒப்பற்ற நாவல்

குடிகாரம்

தீட்டியது: -அரங்கண்ணல்

★

'தம்பி' இதழாசிரியர்
தில்லை. வில்லாளன் M.A. தரும்
தீஞ்சுவை ஓவியம்

பட்டமரம்

வெளிவந்துவிட்டது! விற்பனையாளர் எழுதுக!!

எழில் நிலையம்

பெண்ணாடம் • தெ. ஆ. மாவட்டம்

"இல்லை, சார்!...'

"ஏன், கண்டிக்கப்போறே! இரத்தபாசம்—!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை சார். எனக்கு அரசியலே தெரியாது......தெரிந்துகொள்ளும் ஆசையும் கிடையாது"

"நீ ஆரியனா, திராவிடனா சொல்லு?''

"சார்...''

"என்னடா, பேந்தப் பேந்த விழிக்கறே? நீ ஆரியனா, திராவிடனா?"

"நான் ஆரியனுமில்லே திராவிடனுமில்லை"

"இரண்டும் இல்லையா? அப்படியானா, நீ என்ன, மண்ணுங்கட்டியா? மடையா! ஆரியனா, திராவிடனா? அதற்குப் பதில் சொல்லடா...''

"தெரியலே... சார்..."

"தெரியலையா? ஆரியன் திராவிடன் என்ற பேச்சு அர்த்தமற்ற, விஷமத்தனமானது, என்று சொல்லத் தெரியவில்லையா... அல்லது இஷ்டமில்லையா! ஆரியன்—திராவிடன் என்று பேதம் பேசுவது தப்பு என்று சொல்ல மனம் வரவில்லையே, உனக்கு. ஆரியர் ஆரியராக இருக்கட்டும், திராவிடர் திராவிடராக இருககட்டும், எந்த இழவு எப்படி இருந்தாலும், நாமெல்லாம் மனிதர்—முதலிலும் முடிவிலும் மனிதர் என்று சொல்லத் தெரியவில்லையா..."

"எனக்கெப்படி சார்! இதெல்லாம் தெரியும்..."

"பப்பா! ஒண்ணும் தெரியாது! சரி,சரி, போ, போ! நீ எவனோடாவது பேசி நாசமாகப்போ, எனக்கொன்றும் கவலையில்லை. ஆனால் ஆபீசில் ஏதாவது வாலாட்டினா, தீர்ந்தது தொலைத்துவிடுவேன், தொலைத்து-ஆமாம்..."

முதல் தாக்குதலே மும்முரமாக இருந்தது. அதைத் தொடர்ந்து, அடிக்கடி, மாதுர் பூதம், கோதண்டனை அழைக்கும்போதே, வம்புக்கு வழி கோலுவார்.

"டே அப்பா! திராவிடா! வீரத்திராவிடா! இங்கே வாடா அப்பா! தெருவிலே மோடாரிலே, ரங்கூன் துடைப்பம் வைத்திருக்கு, அதை எடுத்துக்கொண்டு வா. அடடே! இரு இரு, ஆரியனுக்குத் தாசனாக மாட்டேன் என்று முழக்கமிடப்போகிறாய், வாசலில் வேலைக்காரத் திராவிடன் இருப்பான், அவனை எடுத்துக்கொண்டு வரச்சொல்லு.

இதென்ன, கோதண்டபாணி நாயுடுகாரு சிகப்பும் கருப்பும் துணியில்! ஓஹோ! கழகமா? டேஅப்பா! கழகம்! இந்த ஆரியனிடம் நீ கைகட்டிச் சேவகம் செய்வது, உன் தலைவர்களுக்கெல்லாம் தலை இறக்கமாகுமே, ஏன் இன்னும் இங்கு இருக்கிறாய்?

இப்படி அன்றாடம் குத்தலானார், மாதுர் பூதம் முகத்திலே கடுகடுப்பு இராது—வார்த்தைகள் ஒவ்வொன்றும், நாராசமாக இருக்கும். வேலையோ, சகலமும் கோதண்டன் தலைமீதுதான்.

சார்! லெட்ஜர், லட்சுமணன் பார்ப்பதாகச் சொன்னார்.

"ஏனும், நாயுடுகார், என்ன செய்யப்போகிறாராம். தர்பார் நடத்தப்போகிறாரா! சிச்சி! லெட்ஜர் நீதான் கவனிக்கவேண்டும்...''

"கடிதங்கள்...?"

"அதுவும் நீதான்! நேரம் போதவில்லை என்று மூக்கால் அழாதே. உன் வயதிலே நான், இதைப் போல மூன்று மடங்கு அதி வேலை செய்வேன்,

ஓய், தெரியுமா விஷயம்?

என்ன, பிரமாதம், கொண்டுவந்திருக்கீர்......?

'நம்ம ராஜாஜி'க்கு கவர்னர்வேலை வரப்போறது.

என்னங்காணும், கனவு கண்டீரா?

இல்லை ஓய், பட்டாபி சீதாராமய்யா சொல்லி இருக்கார், ராஜாஜிக்கு ஏதாவது 'வேலை'கொடுத்தா உடம்பு சொஸ்தமாயிடும்னு......

இதைத்தான் சொல்றீரா? பட்டாபி சொன்னதாலே கவர்னர் வேலை தரப்போறான்னு அர்த்தம் செய்துண்டீர். எதுக்காக இன்னும் புதுசா ஒரு வேலை தரப்போறா? இப்பத்தான் 'ஒண்ணு' கொடுத்திருக்காளே?

அதென்ன ஓய், நேக்குத் தெரியாதே, என்ன வேலை?

ரேடியோவிலே குட்டிக் கதைகள் சொல்ற வேலை.

தெரியுமா? சும்மா, ஆரியன், ஆரியன் என்று அங்கலாய்த்தால் போதுமா? புத்தி இருக்க வேணுமடா, புத்தி; போ, போ, வேண்டுமானல், சில கட்டுகளை வீட்டிலே எடுத்துக்கொண்டு போய், வேலையை முடித்துக் கொண்டுவா. என்னடா பாப்பான், கழுதையின் பேரில் பொதிசுமத்துவது போல வேலையைச் சுமத்துகிருனே என்று யோசனையா? இப்படி எல்லாம் கஷ்டபட்டால் தான், நாளைக்கு முன்னுக்கு வர முடியும், தெரிகிறதா?"

"சரி சார்..."

கோதண்டனின் இளமைக்குப் பெரும் சோதனை, பொறுமையும் நாளுக்கு நாள் முறிந்து கொண்டு வரலாயிற்று. பெற்ருேர்களோ, "அழ அழச் சொல்பவர்கள் தானப்பா நல்லவர்கள்—ஐயர் உன்னை நல்ல திறமைசாலியாக்குவதற்குத்தான், இப்படி வேலை வாங்குகிருர்—தவருக எண்ணிக்கொள்ளாதே" என்று புத்திமதி கூறினர். நெஞ்சம் குமுறிற்று நிலைமையோ அவனை நெருப்பையும் தாங்கிக்கொண்டாக வேண்டும் என்று வற்புறுத்திற்று.

அங்கு, உலகநாதரோ, கச்சாபகேசன் செய்ய வேண்டிய வேலைகளையும் சேர்த்துத் தானே செய்து கொண்டு வந்தார். அதிக வேலை வைத்து விடுகிருன் என்று தன்மீது கச்சாபகேசன் எங்காவது புகார் செய்து விட்டால், ஆபத்தாயிற்றே என்ற அச்சம் அவருக்கு. அவனுக, அதைச் செய்யட்டுமா, இதைக், கவனிக்கட்டுமா என்று கூடக்கேட்டுப்பார்ப்பான், வேண்டாம் மிஸ்டர்! நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று கூறிவிடுவார்—கச்சாபகேசன் மனம் கோணுமலிருக்க வேண்டும் என்பதற்காக. கச்சாபகேசன் வீட்டாரோ, இதற்காக முதலியாரை வாழ்த்தவில்லை "அந்த முதலிக்கு அவ்வளவு கெட்ட நினைப்பு, கச்சாபகேசனிடம் வேலைகளைக் கொடுத்தால், திறமை பெற்றுவிடுவான், என்ற பயம் அவன், ஒரு வேலைக்கும் இலாயகில்லை, எல்லாம் நானே தான் செய்து வந்திருக்கிறேன், என்று என்றைக்காவாது பழி சுமத்துவதற்காகவே, இந்தச் சூது செயகிருன்" என்று தான் சபித்துக்கொட்டினர்.

* * *

இளைஞனுகவும், பட்டதாரியாகவும், சுறுசுறுப்பானவனுகவும் ஒரு காரியதரிசி தேவை, என்று கேட்டார் ஜெனரல் மானேஜர்—சம்பளம் 150 என்ருர் —ஜெனரல் மானேஜருடன் வெளியூர்கள் செல்லும் போது, தனி 'அலவன்சு' உண்டு; வேறு பல சலுகைகளும் உண்டு. யாருக்குக் கிடைக்கும்? கோதண்டனுக்கா? மாதுர் பூதம், உலக நாதரைக் கண்டு பேசினர்.

"முதலியார்! உம்முடைய நெடுநாள் பேச்சு, உதட்டளவா, இதய பூர்வமானதா என்பதைச் சோதிக்க ஜெனரல் மானேஜர் ஒரு பரீட்சை வைத்திருக்கிருரே தெரியுமா?"

"அதென்னய்யா, புதிய ஆபத்து?"

"என்னைக் கேட்டார், தனக்கு ஒரு காரியதரிசி வேண்டும் என்று; நான் யாரைச் சிபாரிசு செய்தேன் சொல்லும் பார்ப்போம்"

"சுந்தரத்தையா?"

"அவனென்ன மகா சூரப்புலியா? ஏனய்யா, அவன் பி. எல். என்பதால் அப்படிக் கேட்கிறீரா?"

ஆத்துக்காரர்:—சித்தெ, என்னண்டெ படிச்சுக் காட்டேண்டி, கமலி; உன்னேட காதலனேடே, என்ன பேசப்போறே என்கிறதை.........

சகதர்மிணி:—வெட்கமாக இருக்கும்.........

ஆத்:—டிராமா எப்படி ஆடப்போறே, இப்படி வெட்கம் இருக்குமுனு.........

சக:—நேக்கு அல்ல, நோக்கு.........

"தாமோதரத்துக்கு என்ன குறை?"

"அவனுக்கு ஒரு குறையும் கிடையாது. ஆனல் அவனேடு பேச, ஜெனரல் மானேஜருக்குச் சக்தி கிடையாதே. அவ்வளவு செவிடனுயிற்றே, தாமோதரம்"

"அப்படியானல், யாரைத்தான் சிபாரிசு செய்தீர்?"

"நானு? ஒருவரையும் சிபாரிசு செய்யவில்லை! ஆனல், அது சம்பந்தமாக முடிவுகாணும் பொறுப்பை உம்மிடம் விட்டுவிடலாம் என்று சிபாரிசு செய்துவிட்டேன்—அவரும் ஒத்துக்கொண்டுவிட்டார்,"

"ஏனய்யா எனக்கு அந்த வம்பு? நான், யாரைச் சிபாரிசு செய்வது? ஏன் வீணுகப் பலபேருடைய பொல்லாப்பு?"

"பொறுப்பு மிகுந்தவர் என்று உம்மைச் சிபாரிசு செய்வதிலே எனக்கு எப்போதும் விருப்பமாயிற்றே!! ஏன், சிரமப்படுகிறீர்? கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவது போல! அதுதான், இந்த ஆறுமாதமாக அந்தப் பயலை, கச்சாபகேசனைத் தயார் செய்து வைத்திருக்கிறீரே, அவனைச் சிபாரிசு செய்துவிடும்..."

"கச்சாபகேசனையா...?"

"ஆமாம்! ஏன், அவனுக்கு என்ன? ஓஹோ மறந்துவிட்டேனே, அவன் பார்ப்பனன்!! அதனுலே அவனுக்குத் தகுதியும் திறமையும் இருந்தாலும், சிபாரிசு செய்யக்கூடாது......அது தானே......"

"இது என்னய்யா, விஷமத்தனமான பேச்சு. நான் எப்போதாவது அப்படிச்சொல்லி இருக்கிறேனு?

ஊரிலே ஆயிரம் பேசுகிறுர்கள், அதற்கெல்லாம் நானு பொறுப்பாளி!"

"பார்ப்போமே! நீரும் அந்த நாசகாரக் கும்பலில் ஒருவரா, அல்லது நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்ட நாணயஸ்தரா என்பது, இதிலே தெரிந்து விடுகிறது, பார்ப்போம்.!"

கச்சாபகேசன் B.A., ஜெனரல் மானேஜரின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டான்—காமினி, 'மாமா'விடம் சென்று, ஆயிரங்கோடி நமஸ்காரம் தெரிவித்தாள்—உம்!

"வயசாகிவிட்டது, இல்லையானுல், இந்த ஆயிரம் கோடி நமஸ்காரமும் எனக்குத் தேவையில்லை, ஒரே ஒரு முத்தம் கொடு என்று கேட்டிருப்பேன்" என்றுர் மாதுர் பூதம்.

"ஆசையைப் பாரடி அக்கா!" என்று காமினி கூறிவிட்டு, ஒரு அர்த்தம் ததும்பும் புன்னகையை மாதுர் பூதத்துக்கு அளித்துவிட்டுச் சென்றுள். அந்தக் கிழமை முழுவதும், அவரை அந்தப் பொல்லாத புன்னகை வெகுபாடு படுத்திற்று.

"மாமா! இதைப் ர்த்திரா?" என்று, சொந்தம் கொண்டாடிக் கொண்டே, K. கேசவன், B.A., ஒரு ஆங்கிலப் பத்திரிகையைக் கொடுத்தான் மாதுர் பூதத்திடம். அதிலே, **ஜாதீயமும் பாரதீயமும்** என்ற கட்டுரையைக் கச்சாபகேசன் தீட்டியிருந்தான், ஜாதி, ஜாதி என்று சதா பேசுவதும் தவறு, ஜாதியை ஆதரித்துப் பேசுவதும் தவறு, ஜாதி இன்னமும் இருக்கத்தான் வேண்டும் என்பதும் மடைமை, ஜாதி என்பது மடைமை, கொடுமை என்று கண்டிப்பது அறிவுடைமை அல்ல; ஜாதியைப் பெரியவர்கள், பாரதசிரேஷ்டர்கள் தகுந்த காரணத்துக்காகவே சிருஷ்டித்தார்கள் — அதனுல் பல நல்ல பலன் விளைந்தது—அதிலே சிறந்த பலனே பாரதியம் பாழாகாத முறையில் ஜாதியத்தை அகற்றுவதே பண்பாளர் செயலாகும்.

இவ்வண்ணம் சுருளும், அலையும், பசையும் குழம்பியதாக ஓர் கட்டுரை.

படித்த மாதுர் பூதம் பரவசப்பட்டார்!

பலே! பலே! மகா புத்திசாலிடா நீ! ஏதோ, ஆபீசில் வேலை பார்த்தாலும், கிணற்றுத் தவளையாகிப் போகாமல், நாட்டிலே உள்ள பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ச்சியே நடத்திவந்திருக்கிறுய். நமது ஜெனரல் மானேஜருக்கு ஜாதி ஒழிப்பு என்றுல் உயிர்! அவர் பெரிய சீர்திருத்தக்காரர் — பார்சியைக் கலியாணம் செய்து கொண்டிருக்கிறுர்—மூத்த பெண் இந்தோசைனுக்காரனைத் திருமணம் செய்துகொண்டார்—இவர் கனேஜ் நாட்டுப் பிராமணர். உன் கட்டுரையைக் கண்டால் பிரம்மானந்தப்படுவார் — என்று வெகுவாகப் பாராட்டினுர்.

பார்த்தார்! படித்தார்! பாராட்டினுர்! அத்துடன் மனிதகுலப் பண்பாட்டு ஆராய்ச்சி மாநாட்டுக்குச் சென்றுவர அனுமதியும் அளித்தார் — 'அறுநூறு ரூபாய் செக்குடன்" என்றுன், கச்சாபகேசன்.

"முன்பே சொன்னேன், அதேதான் இப்போதும் —உன்னை உண்மையிலேயே மருமானுக்கிக்கொள்ள நான் கொடுத்துவைக்கவில்லை. தீர்க்காயுசாக இரு;' என்று ஆசீர்வதித்தார் மாதுர்பூதம்.

* * *

"அற்பாயுசு! அற்பாயுசு! ஜாதி என்பது ஆரியரின் சூழ்ச்சியாம்—திராவிடச் சமுதாயத்தைச் சீரழிக்கும் திட்டமாம்! பெரிய ஆராய்ச்சியாளன்! மடைப்பயல்! பிழைக்கத் தெரியாதவன்! மண்டைக்கர்வி!—என்று கோபமாகக் கூறினுர், மாதுர்பூதம், மூன்று மாதங்களுக்குப் பிறகு—கோதண்டம் ஒருவார இதழில் தீட்டிய கட்டுரையைக் கண்டதும்.

கேள்வி:— உலகில் உங்களுக்குப் புரியாத அதிசயமென்ன?

பதில்:— சிறிய மீனை விழுங்கியே பெரிய மீன் உயிர் வாழவேண்டியிருக்கையில் கடவுள் காருண்யமுடையவர் என்று கூறப்படும் பேச்சே எனக்குப் புரியாத புதிராக இருந்து வருகிறது.

★

கேள்வி:— இப்போது ஆண்டவன் என்ன செய்து கொண்டிருக்கிறுர்?

பதில்:— ஆண்டவனுகாயமதில் தூங்குகின்றுரே என்ற பாட்டு உங்கள் காதில் விழவில்லையா?

★

கேள்வி:— பெண்கள் அதரத்தில் செஞ்சாயந் தடவுவதேன்?

பதில்:— அந்த இடத்திலிருந்துதான் அபாயம் ஆரம்பித்திருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக.

பிழைப்பிலே மண்



சாமியார்:- என்னய்யா இது, சிவன் கோயிலிலே, சிறுத்தொண்ட புராண காலட்சேபம் செய்தீராமே?

மற்றவர்:- ஆமாம், ஏதோ என் சிற் சிற்றறிவுக்கு எட்டிய மட்டும்...

சாமியார்:- சனியனுப்போச்சு, போ! சிற்றறிவாவது பேரறிவாது, நாங்கள் வெகு காலமாக அதை நம்பிப் பிழைத்து வருகிறேம்—எங்கள் பிழைப்பிலே மண்ணைப் போடுகிறீரே?

மற்றவர்;- அவ்விதமான கெட்ட எண்ணம் எனக்குக் கிடையாது, ஸ்வாமி! எனக்கும் இப்போது சரியானபடி 'வருமானம்' இல்லை. சொற்ப சம்பளம் ஆபீசில்...அதனுல் இப்படி......

பார்ப்பனச் சூழ்ச்சி ஒழிக! ஆரிய ஆதிக்கம் ஒழிக! ஜாதி ஒழிக! சமதர்மம் வாழ்க!'' என்ற முடிவுரையைப் படித்தார், பேனாவை எடுத்தார், மடமட வென ஜெனரல் மானேஜருக்கு ஒரு அறிக்கை எழுதினார்.

(1) கோதண்டன் என்ற கிளர்க், வேலையில் ஒழுங்காக இல்லை.

(2) எப்போதும் தாமதித்து வருகிறான்,

(3) எதிர்த்துப் பேசுகிறான்.

(4) ஆபீஸ் பைல்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று துர்விநியோகம் செய்கிறான்,

(5) ஆபீஸ் சட்டதிட்டத்துக்கு விரோதமாக, வகுப்புவாத அரசியல் கட்சியில் சேர்ந்திருக்கிறான்.

(7) சமதர்மம்வேண்டும் என்று முழக்கமிட்டு, அந்தச் சாக்கில் பொதுஉடைமைக் கட்சியை ஆதரிக்கிறான்.

இப்படி ஒரு பட்டியல் தயாரித்தார்—ஒவ்வொன்றுக்கும் ஆதாரங்களையும் உண்டாக்கி இணைத்தார்.

கட்டுரை வெளிவந்த பத்திரிகையின் மேலட்டை சிகப்பு.

உள்ளே லெனின் படம் இருந்தது. இந்த இரண்டும் போதும் என்றார் ஜெனரல் மானேஜர். கோதண்டன் வேலையினின்றும் நீக்கப்பட்டதாக உத்தரவு பிறப்பித்தார்.

கோதண்டன் வருத்தப்பட்டான்; கோபமுற்றான்—ஆனால் வெட்கம் விநாடியிலே கோபத்தைக்கூட விரட்டிவிட்டது.

செச்சே! எவ்வளவு கோழைத்தனமாக நடந்து வந்தோம், கேவலம் ஒரு 'கிளர்க்' வேலையைக் காப்பாற்றிக்கொள்ள.

எவ்வளவு 'ரோஷமற்று' இருந்துவந்தோம்,

மனதுக்குச் சரியென்று பட்டதைக்கூடக் கூற முடியாமல், பயந்து பயந்து, வாய்மூடிக் கிடந்தோம்.

பார்ப்பன அதிகாரியிடம் பக்குவமாகப் பழக வேண்டும், நமக்குத் திராவிட இன உணர்ச்சி இருப்பதாக எள்ளளவும் தெரியவிடக்கூடாது, தெரிந்தால் தொலைத்துவிடுவான் என்றெண்ணி அடிபணிந்து கிடந்தோம்.

எத்தனைமுறை இழிவாகப் பேசினான், ஏசினான், திராவிட இயக்கத்தை—ஒருவார்த்தைகூட எதிர்த்துப் பேசினோமா?

வேலையைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் பார்ப்பன தாசனாக இருந்துவந்தோமே—கடைசியில் கண்ட பலன் என்ன? பாவி, கெடுத்தேவிட்டான்!

வேலை போயிற்று, பரவாயில்லை, இனியாவது மான ரோஷத்துடன், வாழும் வழி கண்டறியலாம், இன உணர்ச்சியுடன் நம்மாலானதைச் செய்யலாம்.

இத்தனை காலமும் இன உணர்ச்சியற்றுக் கிடந்ததற்கு இது தண்டனை! அவ்வளவுதான்!!

இவ்வாறெல்லாம் எண்ணியதுமட்டுமல்ல, உலகநாத முதலியாருக்கும், கோதண்டன் இன உணர்ச்சி எழவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தான்.

"சார்! இந்தப் பாப்பானுக காலைக் கழுவிக் குடிக்கிற புத்தி இருக்கிறவரைக்கும், நம்ம இனம் முன்னேறாது'' என்று கோதண்டன் சொன்னபோது உலகநாதர் பயந்தே போய்விட்டார்.

"வேலையிலே இருந்தா என்ன சார்! ஒழுங்காக, திறமையாக, இலஞ்ச இலாவணத்துக்கு ஆசைப்படாமே நடக்கவேண்டும், அவ்வளவுதானே — பார்ப்பன ஆபீசர் கால் செருப்பாகவா, நம்மவர்கள் ஆகிவிடணும்? ஈனத்தனமான பிழைப்பு, ஏன் சார்? பிழைக்க வழியா கிடைக்காது? பாடுபட வலிவா இல்லை'' என்று வீரமாகப் பேசினான் கோதண்டன்—புத்தறிவு பூத்த நிலையில்.

வேலையினின்றும் கோதண்டத்தை நீக்குவதற்கான 'ஆர்டர்' கச்சாபகேசனால்தான், 'டைப்' அடிக்கப்பட்டது.

நண்பன் என்பதைக் காட்டுவதற்காக, ஆபீஸ் பிரதி வருவதற்கு முன்னதாகவே, கச்சாபகேசன், கோதண்டனிடம் ஒரு பிரதியைக் கொடுத்தான்.

"மாமா, அந்த இடத்துக்கு யார்?'' என்று காமினி கேட்டாள். "யார், நீதான் சொல்லேன்?'' என்று கேட்டுக்கொண்டே, மாதுர்பூதம் அவள் கரங்களைப் பிடித்திழுத்து விளையாடினார்.

"வாலிபம் திரும்பறதோ! வாங்கோ காபி சாப்பிட'' என்று அழைத்து, சேட்டை ஏதும் நேரிடாதபடி தடுத்தாள், பகவதி.

வகுப்பறையில்!

[அரவரசு]

6-ம் வகுப்பு

ஆசிரியர்:- இந்தப் பீரியட் என்னடா பாடம்?

வகுப்புத் தலைவன்:- சமூகபாடம் சார். இன்று விடைத்தாள்களைத் தருவதாகச் சொன்னீர்கள், சார்.

ஆசி;- ஓ...அரை வருஷப் பரீட்க்ஷை எழுதனேளே அதுவா? நேக்கு ஞாபகமே இல்லே. ஆபீஸ் ரும்லே எட்மாஸ்டர் கிட்டே இருக்கு உங்க பேப்பர், போய் வாங்கிண்டு வாடா மண்டு.

[வகுப்பு மாணவத் தலைவன் சென்று விடைத்தாள் களைப் பெற்று வருதல்]

ஆசி:- (விடைத்தாள் கட்டை அவிழ்த்துக்கொண்டே) அடே பயல்களா ஒருவனாவது சரிவர எழுதியிருக்கப்போறேள். எல்லாம் சுத்த அபத்தம்.

ஒரு மாணவன்:- எல்லாரும் ரொம்ப நல்லாத்தானே எழுதினோம்,ஏன் சார் அப்படி.

ஆசி:- டேய் அவசர குடுக்கே. உட்காரு. பேப்பர்களை வரிசையாத் தர்ரேன். வந்து வாங்கிண்டு போங்க.

மாணவர்கள்:- சரி சார்.

ஆசி:- நெம்பர் 111 யாரடா அவன்? 11-மார்க்கு...டேய் இந்த மார்க்கெல்லாம் 50-க்குடா. இதை நூத்துக்கு கணக்கு பண்ணிக் கோங்கோ.

மாண்வன்:- சரி சார்.

ஆசி:- நெம்பர் 112–26 மார்க்கு-
நெம்பர் 113–22 மார்க்கு.
நெம்பர் 144–25 மார்க்கு.

[விடைத்தாள்கள் பூராவும் கொடுத்துவிட்டு]

எல்லார் பேப்பரும் வந்தாச்சேன்னே? எவனுக்காகிலும் மார்க்கீர்க் விட்டுப்போயிருந்தா பார்த்துகொண்டு வாங்க. கூட்டிப் போடறேன்.

[மாணவர்கள் விடைத் தாள்களைப் புரட்டிப் பார்த்தல்]

மாறன்:- சார் 6-வது கேள்வியிலே எனக்கு ஒரு மார்க்கு விட்டுப் போச்சு சார்.

ஆசி:- எந்தக் கேள்வியது? இங்கே கொண்டுவா.

மாறன்:- ஆருவது வினு சார், அதாவது ''சென்னை ராஜ்யத்தில் சிமெண்டுத் தொழிற்சாலைகள் எங்குள்ளன? ''என்ற கேள்விக்கு நான், ''திருச்சி ஜில்லாவில் கல்லக்குடி என்ற இடத்திலும் திருநெல்வேலி ஜில்லாவில் தாழையூத்து என்ற இடத்திலும் சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன'' என்று எழுதியிருக்கிறேன் சார். அதற்கு இரண்டு 'மார்க்கு' தரவேண்டும் சார். ஆனல் நீங்க ஒரு மார்க்குதான் சார் போட்டிருக்கிறீர்கள்......... பிச்சு மணிக்கு மட்டும் இரண்டு மார்க்கு கொடுத்திருக்கிறீர்கள் சார்!

ஆசி:- ஓஹோ...நீதாஞ அது...உன் பேர் என்ன?

மாறன்:- மாறன் சார்.

ஆசி:- 'மாறன்!'...பேரப்பாரு...இடத்திற்குபோ......'டால்மியாபுரம்'னு எழுதினல்தான் மார்க்கு......... ஏண்டா பிச்சுமணி நீ எப்படி எழுதினே!

பிச்சு:- நான் 'டால்மியாபுரம்'னுதான் சார் எழுதினேன். ஆனல் புஸ்தகத்திலே......

ஆசி:- உஸ் போதும். உட்கார் (மாறனை நோக்கி) டேய்! பெயரை மாற்றி எழுதினதால் உனக்கு ஒரு மார்க் போய்விட்டது இனியாகிலும் சரியா எழுது.

ஒரு மாணவன்:- இரண்டு பெயர்களில் எது எழுதினல் என்ன சார்?

ஆசி:- டேய் முந்திரிக்கொட்டை உட்கார். உன்னை கேட்கல்லே......

மாறன்:- சார் புத்தகத்திலே இரண்டு பெயர்களும் இருக்கின்றன சார். அவற்றில் எதை எழுதினல் என்ன சார்? விடை சரியாக இருந்தால் போதாதா?

ஆசி:- டேய், நான், நோக்குப் பாடம் நடத்தச்சே எப்படி சொன்னேன் 'டால்மியாபுரம்'னுதானே.

மாறன்:- ஆமாம் சார்.

ஆசி:- அப்போ அதுதான் சரி கண்டபடி இனி எழுதாதே.

மாறன்'- அப்போது புத்தகத்திலே இருப்பது தப்பாசார்?

ஆசி:- ஏதுவிடமாட்டே போலிருக்கே. எந்த 'எலவு' புத்தகத்திலேடா 'கல்லக்குடி'ன்னு போட்டிருக்கான்.

மாறன்:- நம்மவகுப்பு பாட புத்தகத்திலேயேதான் சார்.

ஆசி:- ஏதோ காட்டு பார்ப்போம்.

மாறன்:- (புத்தகத்தைக்கெண்டுவந்து காட்டுதல்) பாலர் சமூக வரலாறு (ஆரும் வகுப்பிற்குரியது) ஆசிரியர்கள் டி. கே. வெங்கட்ராமன்; சாமுவேல் ராஜாபாண்டியன் வெளியிடுபவர்:- ஜயம் கம்பெனி, சென்னை. (பக்கம் 15, வரி 2)

ஆசி:- சரி, தொலேஞ்சுபோ உன் பேப்பரைக் காட்டு (ஒரு மார்க்கை கூட்டிப்போட்டுவிட்டு) இந்த சு. ம. காரன்களே தேவலை போலிருக்கே.

ஒரு மாணவன்:- (குறுக்கிட்டு) 'டால்மியாபுரம்' என்கிற பெயரை மாற்றி 'கல்லக்குடி' என்றுதான் அழைக்கவேண்டும் என்று அரசாங்கத்திலேயேஉத்தரவுபோடப் பட்டதாச்சொல்லுகிருர்களேசார்.

ஆசி:- அதிகப்பிரசங்கி, பெஞ்சிமேலே ஏறு...நோக்கு அப்படியாருடா சொன்னுன்?

மாண:- எங்கப்பா சொன்னுர் சார்.

மச்ரெருரு மாணவன் (குறுக்கிட்டு):- இவங்க அப்பாகூட பெயரை மாற்றப்போராட்டம் நடத்தினுங்க சார்......ஜெயிலுக்குக் கூட போயிட்டு வந்துட்டாங்க சார்...

ஆசி:- சரிசரி, புஸ்தகத்தை எடுங்கோ இந்தப் பேச்செல்லாம்எங்கிட்டே வாண்டாம்.

(மணியடித்தல் ஆசிரியர் எட்டாம் வகுப்புக்குப் போதல்.)

★

பாவையின்
பயணம்

கலியாணமாகாத பெண்ணே!

செஞ்சுருட்டி ரூபகம்

கலியாண மாகாத பெண்ணே—சொல்வேன்
கருத்தோடு கேட்டு நடந்திடுவாயடி கண்ணே!

புலிநிகர் ஆளனைத் தேடு—பெற்றோர்
புகுந்திடை வந்தால் ஒப்பாதே சாடு
மலிந்த சரக்கல்ல பெண்கள்—நாட்டின்
வாழ்விற்கும் வளத்திற்கும் அவர்களே கண்கள்!

வீடும் வயலும் பொருளும் நெஞ்சில்
மூளும் உணர்வினை மாற்றுமோ நாளும்
கோடி இருந்தாலும் காதல் இல்லாக்
குடி செய்வதால் வந்து தீருமே நோதல்!

உன்நிலை உன்னுதல் நீயே! செற்றோர்
உறவினர் அல்லடி எதிர்காலத் தாயே!
அன்னையின் காதல் விளைவே நாட்டின்
அரணும் திருவாகும் மறந்திட வேண்டாம்!

—வாணிதாசன்.

இஃதோர் நாடகத் தொடர். ஒரே நாடகம்—ஆனால், பல நாடகங்களைக் கட்டங்களாக உள்ளடக்கியது.

நான்காம் கட்டத்தில் நாரீமணிகள் வந்துள்ள நிலையை எடுத்துக் காட்டுவது.

பாவையின் பயணம்-மாதரின்நிலை பல்வேறு கால கட்டங்களில் எவ்வண்ணம் உருவெடுத்தது என்பதை விளக்கும் நோக்கம்கொண்ட கற்பனை ஓவியம்.

துவக்கம், நான்காம் கட்டத்திலிருந்து.

வழக்கு மன்றத் தலைவர், வந்தனம் தம்மிடம் கொடுக்கப்பட்ட வாக்கு மூலங்கள், வாதங்கள், ஆதாரங்கள், கேள்விகள், குறுக்குக் கேள்விகள் மூலம் கிடைக்கப் பெற்ற தகவல்கள் ஆகிய வற்றினைக் கொண்டு, நாடக வடிவில் நாட்டுக்கு அளித்திருக்கிறார் என்ற முறையில் அமைந்துள்ளது.

நாலாவது கட்டம்

இடம்:— வழக்கு மன்றம் தனிக்கூடம்.

இருப்போர்:— வழக்கு மன்றத் தலைவர்
வனஜா, பி. ஏ.
தேவன், எம். பி. பி. எஸ்.

நிலைமை:— தன் கணவன், தேவன் எம். பி. பி. எஸ், தன்னை நிராகரித்து, துரோகம் இழைத்து, நர்சு நிம்மியுடன் காமக் களியாட்டம் நடத்திக்கொண்டும், குடித்துக் குடும்பச் சொத்தைப் பாழாக்கிக்கொண்டும் வருவதாக, வனஜா, பிராதுகொடுத்து, கல்யாணத்தை ரத்து செய்துவிடும்படி, தொடுத்திருக்கும் வழக்கினைப் பலரறியப் பொது மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வது அழகாக இல்லை என்ற காரணத்தால் வழக்கு மன்றத் தலைவர் வந்தனம் எம். ஏ, பி. எல். தனிக் கூடத்தில், வழக்கு விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்.

கோபமும் சோகமும் கப்பிக்கொண்டுள்ள நிலையில் வனஜாவும், அலட்சியம் வெளிப்படையாகத் தெரியும் நிலையில் தேவனும் காணப்படுகிறார்கள்.

வெறுப்புற்றுக் கிடப்பதால், வனஜா அலங்காரம் ஏதும் செய்துகொள்ளவில்லை; என்றாலும், இவ்வளவு இலட்சணமாக இவள் இருக்கும்போது, தேவன் ஏன் வழி தவறி நடக்கிறான் என்று வந்தனம், ஆச்சரியப்படும்படியான அளவு வசீகரமாகவே வனஜாவின் தோற்றம் இருக்கிறது.

விரும்பினால் 25-க்கும் குறைவான வயதினளாக வடிவம்கொள்ளத் தக்க நிலைதான்.

வழக்கு மன்றத்தில், 32-என்று வயது பதிவாகி இருக்கிறது.

நாற்பது வயது, தேவனுக்கு.

வழக்குமன்றத்துக்'கெடுபிடி'யைவிட,'வாஞ்சனை' மூலமே இந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று, வந்தனம், எண்ணுகிறார்—அதற்கேற்றவண்ணமே கேள்விகள் உள்ளன.

வந்தனம்:- இருவரும், நன்ருகப்படித்தவர்கள்; பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; ஊரில் நல்ல புகழ்; டாக்டரின் திறமையைப்பற்றிப் பாராட்டாதவர்கள் கிடையாது; உங்களுக்குள் இப்படி ஒரு தகராறு வந்திருக்கவே கூடாது...இதை எப்படியாவது சுமுகமாகத் தீர்த்து வைக்கவே நான் விரும்புகிறேன். ஏனம்மா, வனஜா! உன் அப்பா போல என்னை எண்ணிக்கொள். சங்கோசம் வேண்டாம். மிஸ்டர் தேவன் என்ன கொடுமை செய்து வருகிருர்—என்னிடம் சொல்லு—நான் கண்டிக்கிறேன்—திருத்துகிறேன்......

வனஜா:- நன்றி ஐயா! ஆனல் இப்போது, நிலைமை, கண்டிப்பதாலோ, திருத்துவதாலோ, சீர்படக் கூடியதாக இல்லை. என்னல் இனி ஒரு நாள் கூட அவருடன் குடித்தனம் செய்ய முடியாது......

வந்தனம்:- மனம் நொந்து பேசுவதைக் கேட்டீர்களா, மிஸ்டர்......

தேவன்:- கேளுங்கள், கேளுங்கள். நான் தான் இந்த முணுமுணுப்பை, மூன்று வருஷமாகக் கேட்டுக் கேட்டுச் சலித்தும் போய்விட்டதே. ஒரு நாளைக்கு நீங்களும் தான் கேளுங்களேன்......

வந்தனம்:- இப்படி அலட்சியமாகப் பதில் சொல்லக் கூடாது. எப்படிப்பட்ட நெருக்கடியான கட்டம், விளையாட்டுத் தனமாகப் பேசுகிறீரே! சேச்சே! ஒரு பொறுப்பு வாய்ந்த தொழிலில், ஈடுபட்டிருக்கிறீர். வயது நாற்பது—ஊருக்கெல்லாம் புத்தி சொல்ல வேண்டிய வயது—நாலுபேர் நடுவில் கௌரவமாக வாழவேண்டிய தகுதி இருக்கிறது...

தேவன்:- இதெல்லாம், உங்களுக்குத் தெரிகிறது—என் வயது — அந்தஸ்து — தொழிலிலே உள்ள கண்ணியம்—எல்லாம் தெரிகிறது—பாராட்டவும் செய்கிறீர் — அவளுக்குத் துளிகூட மதிப்பு கிடையாதே! ஆஸ்பிடலிலே இருந்து நான் வீட்டுக்கு வந்ததும், என்னை அவள் கேட்கிற முதல் கேள்வி, என்ன தெரியுமோ? டாக்டர்சார்! இன்றைக்கு எத்தனை பேரைச் சாகடிச்சீர் என்பதுதான்.

வந்தனம்:- (சிரித்தபடி) பைத்யமே! சின்னஞ்சிறுசு, வேடிக்கையாப் பேசாமலா இருக்க முடியும். உம்மோடு விளையாடாமல், வேறு யாரோடு விளையாடுவா...?

தேவன்:- யாரோடு வேணுமானுலும் விளையாடட்டும்....

வனஜா:- ஒழுக்கக் குறைவா நடந்துகொள்கிற கெட்ட புத்தி எங்க குடும்பத்திலேயே கிடையாது...... அளந்து பேசணும்......இங்கேயாவது...

வந்தனம்:- ஆமாம்! ரொம்ப அவசரக்காரரா இருக்கறது எனக்குக்கூடப் பிடிக்கல்லே. சரி? இந்த 'நர்சு' விஷயமா, வனஜா சொல்கிற புகார்...?

வனஜா:- புகார் இல்லைசார், ஆதாரத்தோடு பேசறேன்......

தேவன்:- என்ன பிரமாதமான ஆதாரம்? நானும் அந்த நர்சும், சேர்ந்து எடுத்துக்கொண்ட 'போட்டோ'வைக் காட்டுவா...

வந்தனம்:- சட்டப்படி அதிலே ஒன்றும் குற்றம் இல்லாமலிருக்கலாம்...என்ருலும் ஒரு அன்னிய ஸ்திரியோடு சேர்ந்து போட்டோ எடுத்துக் கொண்டால் மனைவிக்கு மனச் சங்கடம் இருக்கத்தானே செய்யும்..........ஏன் அப்படி தரக்குறைவா நடந்துக்கொள்ளணும்........? இந்த வயசுக்கு, இதை எல்லாமா சொல்லிக்கொடுக்க வேண்டும்......

தேவன்:- சார்! இதுமட்டும்தான் இவளோட புகார் என்று சொன்ஞ, நான், இனி எந்த அன்னியரோடும் போட்டோ எடுத்துக்கொள்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுக்கலாம்...ஆனு வனஜா, எனக்கும் நர்சு நிம்மிக்கும் 'தொடர்பு' உண்டு என்றே சொல்லும்போது...

வனஜா!:- சொல்லும்போது...என்று இழுப்பானேன்......நிச்சயமாகத் தொடர்பு உண்டு, நிம்மியோட அண்ணன் இவரைக் கண்டித்து எழுதிய கடிதம், கொடுத்திருக்கிறேன் தங்களிடம். அவளுக்காக இவர் பல கடைகளிலே சாமான்கள் வாங்கித் தந்ததற்கான கணக்கு விவரம் கொடுத்திருக்கிறேன்......சார்! என் கண்ணுலேயே பார்த்துமிருக்கிறேன். இரண்டுபேரும் குடித்துவிட்டுக் கூத்தாடினதை...கிராமத்திலே யாரோ ஒரு மிராசுதாரருக்கு வைத்தியம் செய்யப் போவதாகச் சொல்லிவிட்டு, இருவரும், ஓட்டலில் தங்கி 'ஜாலி'யாக இருந்திருக்கிருர்கள்; ஓட்டல் காரனைக்கேட்கலாம்...நான் எவ்வளவோ சகித்துக்கொண்டாயிற்று.........ராத்திரி எட்டு மணிக்கு டாக்டர் வருவதாகச் சொன்ஞர், எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது, பத்துமணிக்கு வரச் சொல்லுங்கள் என்று அந்தக் கழுதையே என்னிடம் தைரியமாக ஒருநாள் சொன்ஞள். மூன்று மாதமாகப் பங்களா வாடகை கொடுக்கவில்லை, பெட்ரோல் பங்கில் ஙாறு பாக்கி... மருந்துக் கடைகளில் ஆயிரக் கணக்கில்...

தேவன்:- சார்! ஏன் வீணன வம்பு. ஆண்டவனறிய நான் நபசிதமாக நடக்கவில்லை, ஆனு, நிம்மியுடன் நான் கொண்டிருக்கிற களங்கமில்லாத தொடர்பை நீக்கிவிடமட்டும் முடியாது......

வனஜா:- எப்படி முடியும்? மயக்கம் தலைக்கு ஏறிவிட்டது. அவள், மானத்தை வாங்கி விடுவாள் என்ற பயம் வேறு. இல்லாமலா போகும்? சார்! அவள் கர்ப்பிணி......கலியாணம் ஆகவில்லை...

வந்தனம்:- தேவன்?

தேவன்:- அப்படித்தான் கேள்வி

வந்தனம்:- உடனே, நர்சு நிம்மியை வேலையிலிருந்து நீக்கிவிடச் சம்மதிக்க முடியுமா,முடியாதா? நடந்ததெல்லாம், மறந்துவிடுவோம்......இனியாவது...

தேவன்:- தங்களுடைய வார்த்தையைத் தட்டி நடப்பதாக எண்ணிக்கொண்டு கோபித்துக் கொள்ளக் கூடாது......இவளுடைய மண்டைக் கர்வம்,

ஒண்ணுக்குப் பத்தாக வளரும், நர்சு நிம்மியை நான் வேலையிலிருந்து எடுத்துவிட்டால்......முடியாது சார்......

வந்தனம்:- உங்களுடைய மனைவிக்காக இது கூடவா செய்யக்கூடாது......

வனஜா:- மன்னிக்க வேண்டும்......அவளை நீக்கிவிடுவதால் என் குறை நீங்கிவிடாது.........எனக்கு விவாக விடுதலைதான் வேண்டும்......

வந்தனம்:- இரண்டு பேருமே இப்படிப் பிடிவாதம் செய்தால் நல்லதா...சட்டப்படி விசாரித்துத் தீர்ப்பு அளித்து விடுவது எனக்கும் சுலபம். ஆனால், நான் ஒரு குடும்பம் சிதறுவதுகூடாது எனபதற்காக இவ்வளவு சிரமப்படுகிறேன்.

வனஜா:- கருணை நிரம்பியஉள்ளம் தங்களுக்கு. ஆனால் எனக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமையைக் கூட அல்ல, பொதுவாக பெண்களுக்கு ஆடவரால் ஏற்படும் கொடுமையை, கருணையான முறையினால் மட்டும் நீக்கிவிட முடியாது. பெண்கள், திருமணத்தின் மூலம் வாழ்விலே ஒரு தோழமையை விரும்புகிறார்கள்—ஆனால் 'அடிமை'யாக இருக்கச் சம்மதித்தால் மட்டுமே, அவர்களுக்குக் குடும்பத்திலே இடம் கிடைக்கிறது. மற்ற எத்தனையோ பிரச்சினைகளிலே ஓரளவுக்கேனும், நீதி நேர்மையைக் கடைப் பிடிப்பவர்கள்கூட இந்த விஷயத்தில் மட்டும், அடக்கி ஆள்பவர்களாக, ஆளடிமை கொள்பவர்களாகவே இருக்கிறார்கள். தற்கொலை செய்துகொள்வது, தன் மானம் இழப்பது, தத்தளித்துக் கிடப்பது,—இப்படி ஏதேனும் ஓர் நிலையில்தான் பெண்கள் தள்ளப்படுகிறார்களே தவிர, அவர்களுக்கு வாழ்வில் இன்பம்—வாழ்வில் சமத்துவம்—உரிமை—தரப்படுவதில்லை—தருவதற்கான முறையில், நமது தர்மமோ, ஆட்சி முறையோ, சமுதாய அமைப்பு முறையோ இல்லை. பலகாலமாக இருந்து வருகிற நிலைமையைக் கூறுகிறேன். வாழ்வு தேடி, வாழ்வில் இன்பம் தேடி, பெண்கள் நீண்ட பயணம் நடத்தி இருக்கிறார்கள். பல கட்டங்களைக் கண்டிருக்கிறார்கள்—எல்லாக் கட்டத்திலும், கண்ணீரும் இரத்தமும் தான் கொட்டப்பட்டிருக்கிறது. இப்போது தான், ஒரு புதிய சட்டம் பிறந்திருக்கிறது கொடுமைப்படுத்தும் கட்டிலிருந்து விடுபட வழி வகுத்துத் தந்திருக்கிறார்கள். விவாக 'விடுதலை'க் கட்டம் வந்திருக்கிறது. நாலாவது கட்டம், சார்! இது நாலாவது கட்டம்!! எனக்குத் தெரிந்த அளவில் பாவையின் பயணத்தில் இது நாலாவது கட்டம்.........முதல் மூன்று கட்டங்களிலும், சட்டம் கிடையாது. பரிகாரம் அளிக்க—இழிவு துடைத்திட. கட்டாரி அல்லது கண்ணீர்! அடங்கிக் கிடப்பது அல்லது ஒழுக்கம் கெடுவது—இதுதான் இருந்தது. பாவை தன் பயணத்தில், பட்டுள்ள கஷ்டம் கொஞ்சமல்ல..........சார்! தங்களிடம் நான் அதைச் சொல்ல அனுமதி தருவீரா.....யாரிடமாவது சொன்னால்தான், என் நெஞ்சின் பாரம் சிறிதளவு குறையும், வாழ்வில் இன்பம் தேடிய வனிதையர், எப்படி எப்படி வாட்டி வதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை விளக்க, எனக்குத் தெரிந்த சில சம்பவங்களைக் கூறுகிறேன். எழுதியே வைத்திருக்கிறேன். அனுமதி அளித்தால்...வாழ...: விரும்பி, ஆடவரின் ஆதிக்க வெறியால், கெடு மதியால், கொடுமைக்கு ஆளான பெண்களைக் காட்டுகிறேன். இது 'வனஜா'வுக்குமட்டுந் தனியாக வந்துள்ள பிரச்சினை அல்ல. பெண் குலத்துக்கு நீண்ட காலமாக இருந்துவரும் பிரச்சினை கூறலாமா.

வந்தனம்:- சொல்லம்மா... சொல்லு...

வனஜா:- பெண்கள், இன்று நேற்றல்ல சார், டாக்டரும் என்ஜினியரும், வக்கீலும் கலெக்டரும், மோட்டாரும் விமானமும் உள்ள இந்த நாட்களிலே மட்டுமல்ல, அரண்மனையும் மாளிகையும், கோட்டை கொத்தளமும் கொலுமண்டபமும், ஆஸ்தான கவிஞர்களும் குல குருக்களும் இருந்து வந்த அந்தக் காலத்திலிருந்தே கொடுமைகளுக்கு ஆளாகிவந்திருக்கிறார்கள். கொடுமைகளிலே பலவகை இருந்திருக்கிறது—நான் கட்டம்—கட்டம் என்று கூறுவது அந்த வகைகளைத்தான்... அப்படிப் பார்க்கும்போது, இதுவரையில் நாலுவகை எனக்குத் தெரிகிறது-இப்போது உள்ள நிலைமை நாலாவது...முதல் கட்டம் என்று நான் குறிப்பிடுவது பழய நாட்களில், மனுநீதி மன்னர்கள் வாழ்ந்த காலத்திலே, இருந்த நிலைமை எப்படி இருந்தது என்பதைக் காட்டத் தங்களின் மேலான அனுமதி கிடைத்ததற்கு என் நன்றி. இதோ நாலாவது கட்டம்! இனி முதல் கட்டம் காணச்செல்வோம்.

முதல் கட்டம்

முதல் காட்சி

இடம்:— சிற்றரசர் சிங்காரக் கூடம்.

இருப்போர்:— சிற்றரசர் சிவதாசர்,
அவர் மனைவி மகாதேவி
(பிறகு) புரோகிதர் போதனுச்சாரியார்.

நிலைமை:— சிவதாசர், பல பேரரசுகளுக்குக் கப்பம் கட்டிக் கொண்டு காலந்தள்ளி வந்த சிற்றரசர். ஆற்றலால் அரசனானவரல்ல, அரசன் மகன் அரசன், அவ்வளவுதான்!

ஐம்பது வயது, ஆனால் ஆடி அலைந்ததால் அதனினும் முதியவராகத் தோற்றமிருந்தது. சூதாட்டத்தில் ஈடுபட்டு ஈடுபட்டு பெருத்த நஷ்டங்களுக்கு உள்ளாகிக் கவலைப் படுபவர். அமைச்சர்களின் அறிவுரையையும் மக்களின் கதறலையும் பொருட்படுத்தாமல், சூதாடிச் சூதாடி, வரிப்பணத்தையும் பாழாக்கி விட்டு, பிறகு அரசாங்கச் செலவுக்கும் பணமுடை ஏற்பட்டுவிடும்.

சீமான்கள், சிற்றரசர்கள், பேரரசர்களின் ஒற்றர்கள், வணிகர்கள் ஆகியோரிடமெல்லாம், கடன் கேட்டு வாங்குவதில் கூசுவதில்லை.

அரசி மகாதேவி, தன் கணவனின் கெடு மதிகண்டு கலங்கிக் கலங்கி செய்வதென்ன என்று தெரியாமல் திகைத்துக் கிடந்தார்கள். மூதாட்டிபோலாகி விட்டிருந்த மகாதேவி, முப்பத்தைந்து வயதும் நிரம்பப்பெருதவர். அ ர சி ள ங் கு ம ா ரி சித்திரப்பாவை 'பத்தரை மாற்றுப் பசும் பொன்மேனியள்' துள்ளி விளையாடும் அந்தப்புள்ளிமானின் அழகொளி ஒன்று தான், மகாதேவியின் சோகத்தை ஓரளவுக்கு விரட்டிட உதவிற்று.

உலக மறியாச் சிறுமி; பதினைந்தாண்டுப் பாவை.

கல்விகேள்விகள் அதிகம் கிடையாது.

புராண இதிகாசம் தெரியும், பாட ஆடத் தெரியும், எவரிடமும் அன்புடன் பழகவும் எளியோரிடம் இரக்கம் காட்டவும், மகாதேவியிடமிருந்து கற்றுக்கொண்டிருந்தாள், பாவை.

நீண்ட நாட்களாக, தன் அரசு முழுகிப் போய்விடும் அளவுக்கு ஏறிவிட்டிருந்த கடன் சுமைபற்றிய கவலையில் சிக்கிக்கிடந்த சிவதாசர் அன்று தெம்பும் தைரியமும் கொண்டவராகக் காணப்பட்டார்.

ஆண்டவன், எப்படியும் கஷ்டத்தைத் துடைப்பார் என்ற அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை; பேரரசர் அமலாதித்தியன், அரசிளங்குமரி சித்திரப் பாவையை மணமுடித்துக் கொள்ளத் தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு விரும்படி புரோகிதர் போதனுச்சாரியாரை அனுப்பி இருந்தார்.

இந்தச் சுபசேதிக்காக சிற்றரசர், ஆவலோடு தன் மனைவியுடன் காத்துக்கொண்டிருக்கிருர் சிங்காரக் கூடத்தில்.

மகாதேவிக்கு, மன்னன் அளவுக்கு மகிழ்ச்சி இல்லை; மனதில் ஏதோ ஒரு குமுறல் இருப்பதும், அதை அவர்கள் திறம்பட அடக்கி வைத்திருப்பதும், தோற்றத்தில் தெரிந்தது.

சிற்றரசர் சிவதாசர்:- தேவி! சிவராத்திரி மகிமை என்று கூறுகிறீர்களே, அதிலே தவறே கிடையாது. நிச்சயமாகச் சிவராத்திரி மகிமையான பண்டிகை தான். அன்று எவனொருவன், சிவநாம சங்கீர்த்தனம் செய்கிறானோ, அவனுடைய மனோ பீஷ்டம் நிச்சயமாக நிறைவேறத்தான் செய்கிறது......

மகாதேவி:- போதும், போதும், உமது புதிய ஞானோதயம். பாவைக்குக் கிடைக்கிற பேரரசனுடைய சம்பந்தம் உமக்குச் சிவபெருமான் அருளும் வரப்பிரசாதம் என்று எண்ணிப் பெருமைப்படுகிறீர். மக்களுக்கெல்லாம் நல்வழி காட்டவேண்டிய மன்னராகிய தாங்கள், மக்களிலே தரக்குறைவானவர்கள் ஈடுபடும், சூதாட்டில் ஈடுபட்டு, பொன்னையும் பொருளையும் பாழாக்கியதுடன், பெரும் கடன் சுமையையும் ஏற்றிக்கொண்டீர். நமதுநாடு முழுவதும் கேவலமாகப் பேசும் நிலைமை ஏற்பட்டது. வெளி நாடுகளிலே உள்ள வேந்தர்கள், கேலி பேசிக்கொண்டிருந்தது எனக்கும் தெரியும், பேரரசர் அமலாதித்தியரின் பேராதரவு இனி நமக்கு உண்டு என்பதால், இனி நம்மைக் குறித்துத் தாழ்வாகப் பேச எவருக்கும் துணிவு பிறவாது என்பதும், நமக்கு மருகராக வரும் மாமன்னருடைய பேராதரவு பெற்று, சீர்குலைந்து போயிருக்கும் நமது அரசாங்க நிதி நிலைமையைச் செப்பனிட்டுக்கொள்ளலாம் என்பதும் உண்மை தான். ஆனால், மன்னவா! உம்மை உயிரினும் மேலாக மதித்து நடந்து வரும் என் பேச்சை இனியேனும் சிறிதளவு மதிப்பளித்துக் கேளுங்கள், பேரரசரின் ஆதரவு கிடைத்துவிட்டது என்ற எண்ணத்தால் மீண்டும் பேயாட்டத்தில் ஈடுபடக் கிளம்பிவிடாதீர். போதும் நமக்கு வந்துற்ற இடர். இப்போது நமது செல்வமும் செல்வாக்கும் சீர் குலைந்து கிடப்பதால் மட்டுமே நான், என் கண்ணின்மணியாம் சித்திரப்பாவையை, அமலாதித்தியருக்குத் திருமணம் செய்துதரச் சம்மதித்தேன் என்பதையும் மறவாதீர்.

சிவதாசர்:- வேண்டாம், மகாதேவி! திருநாள் இன்று எனக்கு; வேதனைதரும் பேச்சு வேண்டவே வேண்டாம். குடியனும் கூத்திக் கள்ளனும், கொண்டவளைக் கூர்வாளால் வெட்டுபவனும், கோலாகலமாகக் கொலு வீற்றிருக்கத்தான் செய்கிறான்—காண்கிறாய்—என்னிடம் உள்ளதெல்லாம் ஒரே ஒரு குறை—சூதாட்டத்திலே எனக்குள்ள மயக்கம். வேறு குறை என்ன காண்கிறாய் மகாதேவி! மக்களை வாட்டி வதைத்து, சிறைக்கூடத்தில் தள்ளி இம்சிக்கும் கன்னெஞ்சக்காரனல்ல காவலனாக உள்ள உன் கணவன். தேவி! சூதாடுவது, என்வரையில் பெருத்த நஷ்டம் விளைவிப்பதால், நீயும் கண்டிக்கிறாய் நானும் அதை மறுக்கவில்லை. ஆனால், தேவி! பலரும் போற்றிடத்தக்க புகழ்பரப்பி ஆட்சி செய்துவரும் பல மண்டலங்களில், சூதாடும் மாளிகையே தனியாக இருக்கத்தான் செய்கிறது. எந்த மன்னன் சூதாடாமல் இருக்கிறான், தேவி! எவரும், என்னைப்போல 'அதிர்ஷ்டக்கட்டை'யாக இருப்பதில்லையே தவிர, அனைவருக்கும் உற்சாகமான பொழுது 'போக்'காக அமைந்திருப்பது, சூதாட்டம் தான். ஏன்! நமது மருகரின் பிரம்மாண்டமான அரண்மனையில் சூதாடும் பவனம் இருக்கிறது! ஒவ்வொர் பௌர்ணமியிலும், விழாவாம்!!

மகாதேவி:- போதும் மன்னவா, உமது பிரதாபம்! சூதாடாத மன்னர்களே கிடையாது என்கிறீர்—சரி என்றே வைத்துக்கொள்வோம் — அவர்களுக்கெல்லாம், சூதாடுவதுடன், வேறு பல காரியங்களைச் சாதிக்கவும் தெரிந்திருக்கிறதே—சூதாட மட்டுமா அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்!! ராஜதந்திரம் தெரிந்திருக்கிறது. நாட்டு வளத்தைப் பெருக்கும் வழி காணத் தெரிகிறது. அண்டை அயல் நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு ஆதாயம் தேடத் தெரிகிறது. அவர்களுக்குச் சூதாட மட்டுமா தெரிந்திருக்கிறது? வேறு எத்தனையோ துறைகளிலே ஆற்றல் காட்டுகிறார்களே... தங்களுக்கு சூதாட மட்டும் தானே தெரிந்திருக்கிறது... அதுவும் தோற்கும் அளவுக்கு...!

சிவதாசர்:- மகாதேவி, அமலாதித்தியர் சமஸ்தானப் புரோகிதர் வருகிற நேரம். கேலி செய்து என்னைக் கேவலப்படுத்தாதே, எனக்கும் பேசத்தெரியும் ...ஆமாம்...உன் பூஜை அறையில் பாரதம் இருக்கிறது...பாரதம்! மஹா புருஷனான தர்ம ராஜா கூடத்தான் சூதாடி ராஜ்யத்தையே இழந்திருக்கிறான். [நான் என்ன அவ்வளவு மோசமாகவா நடந்துகொண்டிருக்கிறேன். திரௌபதியையே பந்தயப்பொருளாக வைத்து ஆடினதாக, பாரதம் சொல்கிறது...

மகாதேவன்:- அதுபோல நான் செய்ய வில்லையே... என்கிறீரா? திரௌபதியைப் பந்தயப்பொருள் ஆக்கியதைப்போல் என்னைவைத்து ஆடவில்லை ...இதற்காக நான் உங்களைப் பாராட்டவேண்டும். அல்லவா? என்னைப் பந்தயப் பொருளாகவைத்து சூதாடமுடியாது, அதனால் ஆடவில்லை! இந்தக் காலத்தில் யார் ஏற்றுக்கொள்வார்கள்! ஊர் மக்களே கூடி அப்படிப்பட்டவர்களை ஒழித்துக் கட்டுவார்கள் என்ற அச்சம்; அதனால் நாங்கள் தப்பமுடிந்தது!...

சிவதாசர்:- சரி, சரி, மகாதேவி! இனி நான் சூதாட வில்லை......போ ...... சரிதானே...... ஆடினாலும் சும்மா பொழுது போக்குக்கு நண்பர்களுடன், பந்தயம் வைக்காமல் ஆடுவேன்......போதுமா... அடடா! அதோ வருகிறார்கள்...எள்ளும் கொள்ளும் வெடிக்கும் நிலையில் முகம் இருக்கிறதே, நான் என்ன செய்வேன்......

[புரோகிதர் போதனாச்சாரியார் வருகிறார்.

அவருக்கு முன்னால் இரு காவலாட்களும், பின்னால் நாலுபேரும் வருகிறார்கள். பின்னால் வரும் காவலாட்களில் இருவர், ஒரு பேழையைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள். புரோகிதர், காதுகளில் தங்கக் குண்டலங்கள் அணிந்துகொண்டு, கரத்தில், தங்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார், அவரைக் கண்டதும், சிற்றரசர் சிவதாசர், பய பக்தியுடன் ஆசனத்தை விட்டெழுந்து சென்று, எதிர்கொண்டழைத்து வருகிறார். ...மகாதேவியின் நமஸ்காரத்தை புரோகிதர் போதனாச்சாரியார் ஒரு 'மங்களானி பவந்து'வுடன் ஏற்றுக்கொள்கிறார். பேழையைக் கீழே வைத்துவிட்டு, போதனாச்சாரியாருக்கு 'நமஸ்காரம்' செய்துவிட்டுக் காவலாட்கள் போகிறார்கள்.

போதனாச்சாரியார்:- மன்னவா! என் நீண்ட நாள் மனோபீஷ்டம் பகவத் கடாட்சத்தாலே நிறைவேறுகிறது. அதை முன்னிருந்து நடத்தி வைக்கும் பாக்கியம் எனக்கே கிடைத்திருப்பதும், பகவத் சங்கற்பம் தான்......நமது பூர்வீகபுரிக்கும், கனகாபுரிக்கும் இப்படிப்பட்ட சம்பந்தம் ஏற்படவேண்டுமென்பது என் நீண்ட கால எண்ணம். பேரரசர் அமலாதித்தியரிடம் நான் இதை எடுத்துக் கூறினபோது, சிறிதளவு தயக்கம் காட்டினார். பல காரணங்கள் அதற்கு. முக்கியமான காரணம், அமலாதித்தியர், பரம பக்தசிகாமணி, சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு, வானப்பிரஸ்தாஸ்ரமம் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். மிகுந்த பிரயாசைக்குப் பிறகு, பேரரசர் இதற்குச் சம்மதித்தார்.

மகாதேவி:- ஸ்வாமீ! 'வானப்பிரஸ்தம்' என்று கூறினீரே......... அப்படியானால், அமலாதித்தியருக்கு வயது......

போதனா:- மிக அதிகமோ, எழுவதோ எண்பதோ என்று அச்சமோ, மகாதேவி! பயப்படாதீர். உமது மருகனாக வரப்போகும் அமலாதித்தியர் இப்போதும் யானை ஏற்றம், குதிரை ஏற்றம்; வாட்போர், மற்போர், ஆகியவற்றிலே ஈடுபடும்போது பார்த்தீர்களானால் முப்பது வயதுள்ளவர் என்று எண்ணிக் கொள்வீர்கள்—ஆடை அணிபூண்டு கொண்டு தர்பாரில் அமர்ந்திருக்கும்போது பார்த்தால், நாற்பதாவது வயதுக்கு, ராஜநடை போட்டுக்கொண்டு செல்லும் ஒரு கெம்பீரன் தெரிவான். மொத்தத்திலே, மகாதேவி! ஆடவரின் வயது, அவர்களுடைய உயிரோட்டத்தைப் பொறுத்ததே தவிர, 60, 70 என்ற அளவைப் பொறுத்ததல்லவா? அமலாதித்தியர், சித்திரப் பாவையின் மனம் கோணாமல் நடந்துகொள்ளும் பண்பாளர். பிணியாளரல்ல......கிழவர் என்று சாமான்யர்கள் பேசுவர்.........சாமான்யர்களிலே, வாலிபனுக்கு வயோதிகமல்லவா மேலிட்டுக் கிடக்கிறது!! மருத்துவ முறைப்படியே உணவு வகையைஉட்கொண்டு, திடகாத்திரராக விளங்குகிறார் அமலாதித்தியர்......

சிவதாசர்:- மூன்றாண்டுகளுக்கு முன்பு அவருக்குப் 'பெண்' கொடுத்த மூதூர் மன்னர், இப்படியா கேட்டுக்கொண்டிருந்தார்...?

மகாதேவி:- ஸ்வாமி! அவருக்கு இப்போது, உள்ள பத்தினிகள்...?

போதனா:- நமது சித்திரப்பாவையுடன் சேர்த்து, ஆறு......

சிவதாசர்:- மக்கட்பேறு இல்லை...... இன்னும்......

போதனா:- ஆமாம்...... அரசே! முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம். ஐவர் தேவிமார் உளர், ஆயினும் குழந்தை இல்லை... சித்திரப்பாவைக்கு மட்டும் அந்த 'யோகம்' இருந்தால்......

மகாதேவி:- யோகம்? அபாக்கியவதியான என் மகளுக்கா!! அவளுக்கு 'யோகம்' இருந்தால், இப்படியா நடக்கும்......?

[இதற்குள், பேழையைத் திறந்து காட்டுகிறார் போதனாச்சாரியார். அதிலே உள்ள விலையுயர்ந்த ஆபரணங்களைப்பார்த்துப் பூரித்துப் போகிறார், சிவதாசர்.

சிவதாசர்:- என் மகள் பாக்கியசாலி, அதிலென்ன சந்தேகம்! இதோ பார், மகாதேவி! இந்த இரத்தின மாலையைப் பார்...... இந்த முத்துமாலை...... மரகத மாலை...... பச்சை...... நீலம்...... அற்புதமான கோமேதகம்...... இவ்வளவும் என் மகளுக்கு. என் பொக்கிஷத்தில் இருந்த ஆபரணங்கள் போய்விட்டனவே, என் மகளுக்கு சேர வேண்டிய செல்வத்தை நான் தொலைத்துவிட்டேனே என்று துக்கித்துக் கிடந்தேன்... இதோ விதவிதமான ஆபரணங்கள்...... விலையுயர்ந்த ஆபரணங்கள்...... என் மகள் பாக்கியசாலி தான்! பாக்கியசாலிதான்! இவ்வளவும் என் மகளுக்கு......

போதனு:- (தமது மடியிலிருந்து ஒரு பட்டு முடிப்பினை எடுத்து மன்னர் கரத்தில் கொடுத்தபடி)

போதனு:- இது, மன்னு! தங்களுக்கு......

சிவதாசர்:- (பொட்டிலத்தைப் பரித்தபடி) எனக்கா! மாமன்னர் காணிக்கையா......

போதனு:- ஆமாம், உமது மருகரின் அன்புக்காணிக்கை...... தங்கத்தால் செய்யப்பட்ட சொக்கட்டான்கள்......!!

சிவதாசர்:- (தன் தேவியின் முகத்தைப் பார்க்க வெட்கப்பட்ட நிலையில், தங்கச் சொக்கட்டான்களைப் பார்த்தபடி) நன்றி......

இரண்டாம் காட்சி

இடம்:— பூம்பொழில்

இருப்போர்:— சித்திரப்பாவை
தோழிகள்.

நிலைமை:— பூம்பொழிலில் சித்திரப்பாவை விளையாடிக் கொண்டிருக்கிருள்.

தோழிகள், அவள் மனமகிழும் வண்ணம் விளையாடுகிருர்கள்.

தன் திருமண சம்பந்தமான முக்கியமான முடிவு எடுக்கப்படுவதுபற்றி அதிகமான அக்கரைகூடக் காட்டாமல் அரசகுமாரி ஆடிப்பாடிக் கொண்டிருக்கிருள்.

தோழிகளிலே, சிறிதளவு உலக அனுபவ முள்ளவர்கள், பாவை அறியா வண்ணம், தமக்குள் நிலைமையைப்பற்றிப் பேசிக்கொள்கிருர்கள்.

சித்திரப்பாவை ஒருபுறம் விளையாடிக் கொண்டிருக்கும் போது தோழிகள் இருவர் வேருேர்புறம் பேசிக்கொள் கின்றனர்.



ஒரு தோழி:- நிச்சயமாகிவிட்டதடி நாள் குறித்துக் கொண்டுபோக, போதனுச்சாரியார் வந்திருக்கிருர்.

மற்ற தோழி:- பாவம்! பாவைக்கு இந்தக் கதியாவரவேண்டும்......

தோழி:- அது தெரியாமல், விளையாடிக்கொண்டு இருக்கிருள். எல்லாம் அப்பாவுக்குத் தெரியாதா? அம்மாவுக்கு இல்லாத அக்கரை மற்றவர்களுக்கா? என்று பேசுகிருள்.

மற்ற தோழி:- ஒருவிதத்தில் நல்லதடி, இது. கிழவனுக்கா என்னை மணமுடிக்கத் திட்டமிடுகிறீர்கள்? நான் இதற்கு ஒரு போதும் சம்மதிக்கமாட்டேன் என்று பாவை எதிர்த்துப் பேசினுல், நிலைமை மேலும் மோசமாகிவிடும், வேறென்ன. பெண்ணின் கண்ணீருக்காகப் பயந்து, எந்தப் பெற்ருேர்கள் தங்கள் திட்டத்தை மாற்றிக் கொண்டிருக்கிருர்கள். தன்னைக் கலியாணம் செய்து கொள்ள முடியாது என்று பாவை போராடினுள் என்று அறிந்து அந்தக் கிழ மன்னன், கொடுமைப்படுத்தக்கூட ஆரம்பிப்பான். பாவைக்கு கஷ்டத்துமேல் கஷ்டம் தான் வரும்.

தோழி:- வயோதிகனே தவிர, அந்த மன்னன் நல்லவனுமடி, எல்லோரும் புகழ்கிருர்கள்.

மற்ற தோழி:- நல்லவராக இருக்கலாம்...ஆனல் பசுங்கிளியை மனைவியாக்கிக் கொள்வது பாதகம் என்பதைத் தெரிந்து கொண்டாரா? பெண்கள் விஷயத்தில் எல்லா ஆடவரும் ஒரே விதமாகத் தான் நடந்து கொள்கிருர்கள்.

வேறு தோழி:- எல்லாம் இந்த உருத்திராட்சப் பூனை, போதனுச்சாரியின் வேலை......

தோழி:- ஏண்டி, வீணுக அந்த வேதியனைக் கண்டிக்கிருய்? அரசன் மனதிலே ஆசை அலைமோதுவது தெரிந்து அவன் தந்திரமாக நடந்துகொண்டான்—வேறென்ன?

மற்ற தோழி:- ஆமாமடி! இராமாயணத்திலிருந்தே ஆதாரம் காட்டினுனும்......

தோழி:- எதற்கு?

மற்ற தோழி:- வயோதிகனுக்கு இளம் வனிதை வாழ்க்கைப் படுவது முறையற்ற காரியமல்ல என்பதற்கு: தசரதன் கைகேயியைக் கலியாணம் செய்துகொண்டாரல்லவா?

தோழி:- அடி, அடி! அதோ பாவை. பேச்சை, மாற்றிக் கொள். இருபத்தி ஐந்து நாள் விழாவாம்... எல்லா நாட்டு ஆஸ்தானவித்வான்களும் வருகிருர்களாம்...பணத்தை வாரி வாரி இறைக்கிருராம் மன்னர்......

பாவை:- யாரடி? எதற்காக?

தோழி:- போங்களம்மா, தெரியாதவர் போலக் கேட்கிறீரே! எல்லாம் தங்கள் திருமணத்துக்குத்தான்....

பாவை:- பொல்லாதவளடி நீ! ஏன் அடிக்கடி கலியாணப் பேச்சைப் பேசி என்னைக் கேலி செய்கிருய்?

தோழி:- எங்களுக்கெல்லாம் அவ்வளவு, ஆனந்தம்......

பொருந்தாத் திருமணததிறகு ஆளான பாவையும்—அமலாதித்தரும்.

பாவை:- எனக்கு வேதனையாக இருக்கிறதடி...... கலி யாணத்தைப் பற்றி எண்ணும் போதே......

தோழி:- வேதனை எதற்காக அரசகுமாரி? அவர் நல்ல சுந்தர புருஷர்தானாம்...... அவர் அளவுக்கு வாலிபர்கள் கூட வீரதீரமாக இருப்பதில்லையாம்!

பாவை:- யாரடி, உன்னை இதை எல்லாம் சொல்லச் சொன்னது......

தோழி:- ஏனம்மா! உண்மையைச் சொல்லு? உனக்கு, 'அவர்' எப்படி இருக்கிறார் என்று தெரிந்து கொள்ள ஆவலே இல்லையா......

பாவை:- இல்லையே......

தோழி:- ஐயோ, வேடிக்கையே! காலமெல்லாம் யாரு டன் கூடி வாழவேண்டுமோ அவர், எப்படிப் பட்டவர்? என்ன குணமுடையவர்? என்று தெரிந்து கொள்ளும் ஆவல் எப்படி இல்லாமற் போகும்?

பாவை:- அப்பா, எனக்கு விவரமாகச் சொன்னார். என்னைத் திருமணம் செய்துகொள்ள இருக்கும் மன்னர், சற்குண சம்பன்னராம்; அப்பாவுடைய கஷ்டத்தைப் போக்குவதாகக்கூட வாக்களித் திருக்கிறாராம்...

[ஒரு தோழி பேழையுடன் வருகிறாள் அரச குமாரியும் மற்றத் தோழி களும் பேழையைத் திறந்து ஆபர ணங்களைப் பார்க்கிறார்கள்.]

பாவை:- இந்த ஆபரணங்கள்...?

தோழி:- மாமன்னர் அனுப்பினார்! போதனாச்சாரியார் கொண்டுவந்தார்!! முகூர்த்தம்கூடக் குறித்து விட்டார்கள். அரசகுமாரி! பேரரசருக்குத் தேவியான பிறகு இந்த ஏழைகளை கவனிப்பீரோ, என்னவோ?

[தோழியின் காதைப்பிடித்துத் திருகி]

பாவை:- எத்தனை தடவை சொல்லியிருக்கி றேன் இந்த விளையாட்டு வேண்டா மென்று...

[தோழி ஓடுகிறாள் சிரித்துக் கொண்டே. பாவை அவளைத் துரத்திக் கொண்டுஓடுகிறாள்]

தோழி:- உலகமறியாத பெண்— கள்ளங்கபடமற்ற கன்னி... பாவம்...

மூன்றாம் காட்சி

இடம்:— கனகபுரி அரண்மனை கலியாண மண்டபம்.

இருப்போர்:— மணமக்கள் மன்றத் தினர்.

அமலாதித்தியர்திரு மணக் கோலத்தில், பாவையுடன் வீற்றி ருக்கிறார்.

மன்றத்தினர்மகிழ்ச் சியற்ற நிலையில். வாழ்த்து கூற, மாலை சூட்டுகிறார்.

அரண்மனையில் வேறோர்பக்கம்:- ஏண்டா அப்பனே, சொக்க லிங்கம். வாய் கிழியக் கூவினயே, கிழவனுக்குப் பெண் தரமாட்டார்கள்; அமலாதித்தியர் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும், தான் பெற்ற செல்வத்தை சிவதாசர் தரவே மாட்டார், —பஞ்சவர்ணக் கிளி அந்தப் பாவை; படுகிழம் இந்த மன்னர், என்றெல்லாம் சொன்னாயே...... கேட்கிறதா, கெட்டிமேளம்......

சொக்:- சோணாசலம்! என் காதைக் குடைகிறது இந்த மேளம். மண அறையில், அந்தச் சுந்தராங்கியைப் பார்த்தேன்—வயிறு பற்றி எரிகிறது. பூங் கொடியடா, பூங்கொடி! இவருடைய பேத்தி வயசு இருக்கலாம்......அந்தப் பருவம்......பால் வடியும் வதனம்...

சோணா:- இவருக்கு என்ன 'சீ' வடிகிறதா உடலில் என்று கேட்டார் சூதாடி சிவதாசர்......

சொக்:- மலைமலையாக இருக்கிறது இவர் படித்த ஏடு கள்......இந்தக் காரியம் செய்கிறார்......ஐந்து ஏற்கனவே......இதுவேறு இப்போது......அக்ர மத்துக்கு ஒரு அளவே இல்லையே.......செச்சே, சாமான்யர்கள் இதுபோலச் செய்துவிட்டால்! எவ்வளவு ஏசுவார்கள். இப்போது பார்......

சோணா:- சுப சோபனம் பாடுகிறார்கள்.

(சில நாளைக்குப் பிறகு)

[கவலையுடன் அமலாதித்தியர் உலாவு கிறார். உடனிருக்கிறார் போதனாச்சாரியார்.

அம:- இதுபோல, இந்த மங்கை நல்லாளுக்கு மயக்கம் வருவதுண்டோ?

போதனா:- நான் கேள்விப்பட்டதே இல்லையே...... சிவ தாசரும் சொல்கிறார். இதுபோல் எப்போதும்

நேரிட்டதில்லை என்று. மருத்துவர் என்னசொன்னார்......?

அம:- நோயொன்றுமில்லை......மனதிலே திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சி தான் காரணம் என்கிறார்.

போத:- அதிர்ச்சிக்குக் காரணம்......?

அம:- (சில விநாடிகள் கவலையுடன் உலவி விட்டு வெறுப்புணர்ச்சியைக்காட்டும்வகையில் நகைத்தபடி) அதிர்ச்சிக்குக் காரணம்.........நான்...... நானே தான்......என்னைக் கண்டதும் ஏற்பட்டது தான அந்த அதிர்ச்சி......

போத:- மன்னவா!......

அம:- அதிர்ச்சி ஏற்படாமலிருக்குமோ, ஆச்சார்ய ஸ்வாமிகளே! மண அறையில், என்னை அந்த மலர்க்கொடி கண்டவுடன் அதிர்ச்சி ஏற்படாமலா இருக்கும். கொடுமை, ஸ்வாமிகளே! கொடுமை! மிகக் கேவலமான காரியம் செய்து விட்டேன். வாழப் பிறந்தவளை, வதைத்து விட்டேன். தன்னை ஒத்த இளைஞனுடன், காதல் மொழி பேசிக் களிப்புக் கடலில் நீந்தி விளையாட வேண்டிய அந்தச் சுந்தரியை, நான் நடைப் பிணமாக்கும் நீச காரியமல்லவா, நடைபெற்ற திருமணம்......பாபம், பாவை என்னென்ன இன்பக் கனவுகள் கட்டி வந்தாளோ! கண்டதும் அவ்வளவும் பொடிப்பொடியாகி விட்டிருக்கும்! அவளுக்கு நானு, மணவாளன்! சருகு நான்; தளிர் அந்தத் தையல். நிலவு அவள்; கருமேகம் நான்! ஆச்சார்ய ஸ்வாமிகளே! பெருத்த அக்ரமம் செய்து விட்டேன்......

போத:- வீண் கவலை, மன்னவா! வீணாக மனதைக் குழப்பிக் கொள்கிறீர். திருமண ஏற்பாடுகள், பாவையின் உள்ளத்துக்கு தொல்லை தருவனவாக இருந்திருக்கும், வேறொன்றுமில்லை. ஆபரணச் சுமைகூட அந்த ஆரணங்குக்கு வேதனை கொடுத்திருக்கும்.........

அம:- ஓமப்புகை, கண்களைக் கெடுத்திருக்கும்........ ஓயாத வாழ்த்தொலி காதுகளைக் குடைந்திருக்கும், ஏன் போதனரே! அப்படித்தானே! வழக்கமாகக் கூறுவதுதான். உண்மையை என்னிடமிருந்து மறைக்க முடியாது......அந்த அரசிளங்குமரியின் மன அதிர்ச்சிக்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியும். அஞ்சுகமே! என்று நான் அவளுடன் மஞ்சமதில் கொஞ்சுவதற்காக ஐதீகப்படி அமைந்துவிட்ட கணவன், என்பது போதாதா, அதிர்ச்சி தர. எனக்கு, ஒரு எழில் மங்கையை மனைவியாக அடையலாம் என்ற சபலம் பிறந்ததே, இந்த வயோதிகப் பருவத்தில் என்று எண்ணும்போதே மங்கையின் மனதில் சம்மட்டி அடி அல்லவா விழுந்திருக்கும். போதனரே! நடந்தது நடந்துவிட்டது. ஐந்தோடு ஆறு. அக்ரமத்துக்குமேல் அக்கிரமம்!........... சரி......போய்வாரும்.

நான்காம் காட்சி

இடம்:— அரண்மனையில் புதிய அந்தப்புரம்.

இருப்போர்:— பாவை
சிவதாசர்
மகாதேவி
மருத்துவர்
தோழிகள்

நிலைமை,— (மருத்துவர், கவலை நீங்கிய நிலையில் இருக்கிறார்;

அவருடைய நிலைகண்டு, சிவதாசர் தைரியம் அடைகிறார்.

பாவை, படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாள்.

தோழிகள் பணிவிடை செய்து கொண்டிருக்கிறார்கள்.

மகாதேவி, பாவையின் பக்கம் இருந்து கொண்டு பணிவிடை செய்கிறார்.

மருத்:- மன்னவா! ஆபத்து ஏதும் இல்லை. மன அதிர்ச்சி தான, வேறொன்றுமில்லை. சந்தோஷமோ, சஞ்சலமோ திடீரென்று, அதிக அளவில் ஏற்பட்டால், இவ்விதம் அதிர்ச்சி ஏற்படுவது உண்டு......பயமே வேண்டாம்......இரண்டோர் நாட்களில் கவலையே போய்விடும்......

மகாதேவி:- எதற்கும், தாங்கள் இங்கு இருப்பது நல்லதல்லவா?

மருத்:- ஆமாம்........இங்குதானே இருக்கப் போகிறேன். பட்டமகிஷி மீண்டும் எழுந்து உலவும் வரையில் நான் அரண்மனையிலேயே இருக்க வேண்டுமென்று, மாமன்னர் கட்டளையிட்டு விட்டார்......

மகாதேவி:- நன்றி, மருத்துவரே! மிக்க நன்றி.

சிவ:- மருத்துவரே! பட்டமகிஷி என்று குறிப்பிட்டது......?

மருந்:- தங்கள் திருக்குமாரியைத் தான்......

சிவ:- அப்படியா! ஐவர்?

மரு:- மன்னரின் பத்தினிகள்—பாவையே பட்டத்தரசி என்று மன்னர் பிரகடனம் வெளியிட்டிருக்கிறார்.

(பாவை கண்திறக்கக்கண்டு)

சிவ:- கட்டிக் கரும்பே! பழரசம் பருகு, சிறிதளவு......

[பழரசம் பருகியதும் மீண்டும் களைத்துப் படுக்கிறாள் பாவை]

ஐந்தாம் காட்சி

இடம்:— கனகபுரி அரண்மனைப் பூங்கா.

இருப்போர்:— பாவை
தோழியர்

நிலைமை:— தோழிகள் மாலை தொடுத்துக்கொண்டுள்ளனர்.

பாவை, குணமடைந்து விட்டதற்காக ஆலயங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்து வருகிறார் மன்னர்.

பாவை, தன் நிலைமையைத் தெரிந்து கொண்டு, இனி துக்கித்துப் பயனில்லை, மன அமைதி பெற்று, உள்ளதைக்கொண்டு திருப்திப்படவேண்டும் என்று தீர்மானித்து அதன்படி நடந்துகொள்கிறாள்.

மகாதேவியிடம் செல்ல இருக்கும் தோழியிடம் தனிமையில், பாவை பேசுகிறாள்.)

பாவை:- மான்விழி! அம்மாளிடம் விளக்கமாகச் சொல்! இந்த ஆறுமாதமாக எனக்கு மயக்கம் வரவே

யில்லை என்று சொல். கவலைப்பட வேண்டாம் என்று சொல்லு. வயோதிகருக்கு என்னைத் திருமணம் செய்து வைத்தார்களே, என்று நான் கோபமோ, சோகமோ கொண்டிருப்பதாகத் தவறாக எண்ணிக்கொள்ளப் போகிறார்கள். திருமணத்தன்று, அவரைக் கண்டதும் எனக்கு மன அதிர்ச்சி ஏற்பட்டது—பிறகு நான் நிலைமையைத் தெரிந்துகொண்டேன்—தெளிவு பெற்றேன் என்பதைக் கூறு, மாமன்னர், வயோதிகர் தான் எனக்கு அவர் வாலிபராகத் தான் இருக்கிறார் என்பதைச் சொல்லு. நம்பமாட்டார்கள் அம்மா, ஆனால் நான் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறேன், என்னை மகிழ்விக்க ம்ன்னர் எவ்வளவு அன்பாக நடந்துகொள்கிறார் என்பதை எல்லாம் விவரமாகக் கூறினால் புரிந்துகொள்வார்கள். எனக்காக மன்னர் புதிதாக அமைத்துத்தந்திருக்கும் அழகிய அரண்மனையில் உள்ள பளிங்கு நீரோடையில் தவழ்ந்துகொண்டிருக்கும் அன்னங்களை மாலைவேளைகளில் நான்கண்டு மகிழ்கிறேன், தங்கக் கூண்டிலே உள்ள தத்தை. வெள்ளி வட்டில்களில் நீர்பருகி சிறகடித்து மகிழும் வெண்புரு, என்னோடு ஓடி வருவதில் சளைக்காத மான்குட்டி......இவைகளைப்பற்றி எல்லாம் எடுத்துக் கூற மறவாதே. மான்விழி! அங்குதான், விளையாட்டுச் சிறுமி...இங்கு விவரம் அறிந்தவளாகிவிட்டேன்......இப்போது நான், என் இளமையை எந்த அளவுக்கு மாற்றிக்கொள்ள முடியுமோ, அந்த அளவுக்கு மாற்றிக் கொள்கிறேனல்லவா! ஒரு வேடிக்கையை நீ கூடக் கவனித்திருப்பாயே, நீ தான் குறும்புக்காரியாயிற்றே. நான் நடுத்தர வயதினளாகக் கோலம் கொண்டால்தான், நாலுபேர் நடுவே, நானும் மன்னரும் செல்லும்போது சிறிதளவாவது பொருத்தமிருக்கும் என்றெண்ணி, என் இளமையை மாற்றிக் கொள்கிறேன், அவரோ, தமது முதுமையை மாற்றிக் கொண்டு, வாலிபக் கோலம் கொள்ள மெத்தச் சிரமப்படுகிறார். மருத்துவர்பாடு கஷ்டமாகி விடுகிறதாம். வேளைக்கோர் மருந்தாம்—விதவிதமான தைலங்களாம்—மன்னர் ஏன் இவைகளைச் செய்துகொள்ளுகிறார்—தானோர் வயோதிகர் என்பதால் நான் வருத்தப்படுவேன் என்று எண்ணி எனக்கு அந்த வருத்தத்தைத் தரக்கூடாது என்பதற்காகத்தான்! ஏறுநடை நடந்து காட்டுகிறாரடி மான்விழி, என் கணவர்......அதோ வருகிறார்........நீ புறப்படு........அப்பாவுக்கு என் அன்பு அம்மாவுக்கு என் அன்பு, அனைவருக்கும் என் நன்றி......சென்று வா,......

ஆறும் காட்சி

இடம்:— கனகபுரி அரண்மனைப் பூங்கா.

இருப்போர்:— பாவை
அமலாதித்தியர்.

நிலைமை:— அமலாதித்தியர் வருவது கண்டு, தோழிகள் வேறிடம் செல்கிறார்கள்.

பாவை, மன்னரை வணங்கி வரவேற்கிறாள்.

பாவையைக் கண்டதும் மன்னர் முகம் மலர்ச்சி அடைகிறது.

மன்னரின் நடை உடை பாவனைகள், வயோதிகக் கோலத்தைப் பெரிதும் மறைத்து வைத்திருக்கிறது.

அம:- பாவா! இன்று என்ன அன்னங்கள் சோர்ந்து காணப்படுகின்றன?

பாவை:- அன்னம் இருக்கட்டும், தாங்கள் ஏன் மிகவும் களைத்துக் காணப்படுகிறீர்,

அம:- இன்று, பாவா! அமைச்சருடைய முரட்டுக் குதிரையை யார் அடக்க முடியும் என்றோர் பந்தயம் வந்தது. நான் பந்தயத்தில் ஈடுபட்டேன்—குதிரை சுலபத்தில் அடங்கவில்லை—மிக்கச் சிரமப்பட்டு, குதிரையைக் கானாற்றம் பாதையிலே ஓடச்செய்து, அடக்கினேன்—நொப்பும் நுரையும் தள்ளிவிட்டது...

பாவை:- இந்த வயதிலா, தாங்கள் இத்தகைய விளையாட்டுகளில் ஈடுபடுவது? எத்தனை முறை சொன்னாலும் கேட்கமாட்டேனென்கிறீர்கள், வாலிபப் போர்வீரர்கள் செய்யவேண்டிய காரியம், முரட்டுக் குதிரையை அடக்குவது, சுருள் கத்தியைச் சுழற்றுவது போன்றவைகள் தங்களுக்கு ஏன் இவைகள்?

அம:- பாவா! நான் வாலிபனாகிவிட்டேனே...

பாவை:- மருத்துவர் சொல்கிறாரா?

அம:- இல்லை என் மனம் சொல்கிறது! உனக்கு ஏற்ற மணவாளனாகிவிடவேண்டும் என்று தீர்மானித்தேன்—உன் அன்பு எனக்குமா மருந்தாகிவிட்டது—இப்போது, கட்டுடல் படைத்த காளை மட்டுமே செய்யக் கூடிய கடினமான காரியம் என்று எதெதனைக் கூறுவரோ, அவைகளை, நான் அவர்களைவிடத் திறம்படச் செய்து முடிப்பேன்,

பாவை:- (புன்னகையுடன்) போதுமே! பாருங்கள், ஆர்வத்தோடு பேசியதால், முகத்தில் வியர்வை அரும்புவதை. பளிங்குக்குளம் போகலாம்.

அம:- பாவா! ஒரு பந்தயம்! நீயும் நானும், பளிங்குக் குளத்தில் 'குறுக்கும் நெடுக்குமாக' நீந்துவது... யார் அதிக வேகமாக நீந்த முடிகிறதோ பார்ப்போம்...என்ன பந்தயம்...?

பாவை:- பந்தயமா? எதுவாக இருந்தால் என்ன? வெற்றிபெறப்போவது தாங்கள் தானே!

அம:- எப்படிச் சொல்லிவிடமுடியும்!

பாவை:- ஏன் முடியாது? அன்று ஒரு நாள் பந்தயம் போட்டுக்கொண்டு பழம் பறித்தோமே, யார் வெற்றி பெற்றது? ஒவ்வோர் பந்தயத்திலும் தாங்கள் தானே வெற்றி பெறுகிறீர்கள்.

அம:- நீச்சல் போட்டியிலும் நானே தான் வெற்றி பெறுவேன் என்று கூறிவிட முடியுமா?

பாவை:- மன்னவா! எந்தப் போட்டியிலும், நான் தங்களைத் தோற்கவிடவே மாட்டேனே...

[அமலாதித்தியர் பாவையின் பேச்சின் உட்பொருளை உணர்ந்து ஒரு கணம், அவளையே உற்றுப் பார்க்கிறார். பிறகு பாவையின் கரங்களைப் பற்றிக்கொண்டு கண்களில்

ஒற்றிக் கொண்டபடி தழதழத்த குரலில்]

அம:- பெரும்பிழை செய்த இந்தப் பாவியிடம், பாவா! என்ன பரிவு காட்டுகிறாய், எவ்வளவு அன்பு கொட்டுகிறாய்.

பாவை:- போங்கள்! வரவர சிறு குழந்தைபோல...

அம:- பாவா! நான் வயோதிகன்; உன்னைத் திருமணம் செய்து கொண்டது பெரும்பாவம்; அதை நான் மண அறையில் அமர்ந்தபோதே உணர்ந்தேன். உணர்ந்து? உள்ளம் சுட்டது? புலம்பினேன் போதனரிடம்? ஆயினும் என்ன பயன்? உனக்குக் கேடு இழைத்துவிட்டேன்.

பாவை:- பார்த்தீர்களா, பார்த்தீர்களா? இப்படியெல்லாம் பேசக்கூடாது என்று நான் எத்தனை முறை கூறியிருக்கிறேன். எனக்கு ஒரு குறையும் இல்லை; தாங்கள் அறுபதாண்டுகளுக்கு முன்பு பிறந்தீரே தவிர வயோதிகம் உம்மிடம் ஒரு துளியும் கிடையாது என்று நான் கூறவில்லையா? நான் என்ன சிறுமியா? பாரும் என்னை? முப்பது வயது மாதுபோலில்லையா!

அம:- உன் பெருங்குணம் கண்டுதான், பாவா! நான் உனக்கு ஏற்றவனாவதற்காக என்னால் ஆனமட்டும் முயற்சிகள் எடுத்துக் கொள்கிறேன்...

பாவை:- வெற்றியும் பெற்றிருக்கிறீர். வேந்தே! ஏன் வீணாக விசாரப்படுகிறீர்.

அம:- அம்மம்மா! என்னென்ன தைல வகைகள்—எவ்வளவு மருத்துவமுறைகள்—கடும் பத்தியம்...

பகை முடித்தான் பிடியில் பதுமை

பாவா!...ஐயோ...மார்பு......ஏதோ ஓர் வித மயக்கம்......பா......வா...

[பாவை அலற தோழிகள் பதறி ஓடி மருத்துவரை அழைத்து வருகிறார்கள். அதற்குள், பாவையின் மடியில் சாய்ந்தபடியே மன்னர் உயிர் துறக்கிறார்.

மருத்துவர், நாடியைப் பார்த்துவிட்டு.]

மரு:- தீபம் அணைந்துவிட்டது, தேவீ!

பாவை:- ஆமாம்...மருத்துவரே! என் வாழ்வுக்கு ஒளி அளிக்கச் சுடர் விட்டுக்கொண்டிருந்த தீபம் அணைந்துவிட்டது...அணையப் போகிறது என்பது அறிந்தும் மருத்துவரே! மன்னரின் மனம்போன போக்கெல்லாம் சென்றீர்...

(கதறுகிறாள்)

ஏழாம் காட்சி

இடம்:— கனகபுரி அரண்மனை அருகே உள்ள சுடலை.

இருப்போர்:— சுடலையில் மன்னன் உடலம்.
பாவை
சிவதாசர்—மகாதேவி
மந்திரிப்பிரதானியர்.

பாவை:—பெற்றோரே! பேரன்பு காட்டிய கனகபுரிப் பெரியவர்களே! ஆருயிர்த்தோழிகாள்! எனக்கு விடை கொடுங்கள் என் பெற்றோர், வயோதிகருக்கு மணமுடித்துத்தருவது பெருந்தீங்கு என்று எண்ணாமலே என்னை இக்கதிக்கு ஆளாக்கினர். நான் அவர்களையும் குறை கூறவில்லை. பெண்களின் நிலைமையே இது. நான் அதற்கு விதிவிலக்கல்ல...அவர் போன பிறகு நான் இருந்து என்ன பயன்? நானும்......நானும்...... தடுக்காதீர்...அதோ கொழுந்து விட்டெரியும் பெருநெருப்புக்கு நான் விருந்தாகவேண்டும்......

[சிவதாசர் ஓடிவந்து தடுக்கிறார்]

அப்பா! என்னை விட்டுவிடும்... நெருப்பிலே, மகள் விழுந்து நீராவாளே என்று பதைக்கிறீர்...... பாவை செத்து நீண்ட நாளாகிவிட்டது... திருமணம் நடந்ததே அன்றே பாவை மாண்டாள் — இப்போது பேசுவது, பட்டத்தரசி!

[தடுக்க வந்தவர்களை மீறிக் கொண்டு ஓடோடிச்சென்று நெருப்புக் குண்டத்தில் இறங்கி விடுகிறாள். ஐயோ என்று அனைவரும் அலறுகிறார்கள்.]

எட்டாம் காட்சி

இடம்:— கனகபுரி அரண்மனை.

இருப்போர்:— சிவதாசர்
மகாதேவி
மருத்துவர்

மருத்துவர்:— உத்தமி, உடன்கட்டை ஏறினாள்...... அருமைத் திருக்குமாரியை இழந்தோமே என்று ஆண்டாண்டு அழுது புரண்டாலும் என்ன பயன். வாழப்பிறந்த பாவையை, நீவிர் வயோதிகருக்கு மணமுடித்தீர்கள். வருந்தி அழைத்துச் சாவினை அவள்பால் ஏவினீர்கள் என்றுதான் பொருள்படும். வாலிபனொருவனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தால் அந்த வனிதாமணி அகமகிழ்ந்து வாழ்ந்திருப்பாள். மாமன்னன் மட்டுமென்ன! பாவம்! அவரும், பொருத்தமற்ற திருமணம் செய்து கொண்டோமே என்று மனம் சுட்டது—பெருந்தீங்கு இழைத்துவிட்டோம் என்பதால் பதறினார்... பிறகு... ஆரணங்குக்கு ஏற்ற வாலிபக் கோலம் கொள்வதற்காக, என்னிடம் நச்சரித்துப் பெற்ற மருந்துகளை உண்டார், நித்த நித்தம். மருந்தே அவர் உயிர் குடித்தது. பாவை தழலில் இறங்கித் தன் உயிரை மாய்த்துக் கொண்டது கண்டு, தீராத்துயருற்று என்ன பயன்? பெண் குலத்தின், உரிமைபற்றித் துளியும் உணர மறுக்கும் நீவிரன்றோ, பாவை பயணம் இந்த முடிவுக்கு வந்துற்றதற்குக் காரணம்? நீங்கள் துவக்கி வைத்த பயணம்—பாவை, பாபம், நடந்தாள், நடந்தாள், தழல் தழுவிக் கொண்டது. ஒரு வகையில், பாவையின் பயணம் இந்த முடிவுக்கு வந்ததே நல்லது. கருத்தற்ற பெற்றோர்கள் தமது பெண்களைப் பொருத்த மற்ற முறையிலே திருமணம் செய்து வைப்பதால் நேரிடும் விபரீதங்கள் வேறு பலவும் உண்டு; இழிவும் பழியும் நெழியும் முடிவுகள் ஏற்பட்டுள்ளன; உமது மகள் உத்தமி, இந்த முடிவுக்கு வந்தாள்; அமலாதித்தியரும் ஒருகணம் சபலத்துக்கு இடமளித்த போதிலும், பிறகு தன் குற்றத்தை உணர்ந்தார்; பரிகாரம் தேடமுடியாத நிலை, எனவேதான் அவர் பரிவு காட்டினார். பருவத்தையே மாற்றிக் கொள்ளப் பெரும்பாடு பட்டார்; அந்த முயற்சியாலேயே மடிந்தார். பாவைபோலப் பொருந்தாத் திருமணத்துக்கு ஆளாக்கப்பட்ட வேறு சில பெண்கள் குறுக்கு வழியில் நடத்திய விபரீதப் பயணத்தைக் கூறுகிறேன். பாவை, பழுதுபடா ரத்தினமாகவே வாழ்ந்தாள்—பிடிசாம்பலாகிப் போனாள். மற்றோர் பாவை என்ன கதிக்கு ஆளானாள் தெரியுமோ, கூறுகிறேன், வாருங்கள்.

* * *

பாவையின் பயணம்

இரண்டாம் கட்டம்

மருத்துவர் கூறுகிறார்:- சிவதாசரே! உமது சிந்தையில் மூண்டு கிடக்கும் சோகத்தைக் போக்கமட்டுமல்ல; இத்தகைய நிலைமைகள் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணமும் அதற்கான நல்லறிவும் ஏற்படுவதற்கு உதவட்டும் என்பதற்கே நான் பதுமையின் கதையைக் கூறுகிறேன்; பாவை நடத்திய பயணம் போன்றதல்ல, பதுமையுடையது. பதுமையும் ஒரு பாவைதான், இளமையும் எழிலும் குலுங்கும் பொன்னவிர் மேனியள்; சிவதாசரே! தாங்கள் சூதாடித் தோற்றதால் வந்துற்ற பெரு நஷ்டத்துக்கு ஈடுதேட மாமன்னர் அமலாதித்தியரை மருகராகக் கொண்டீர்—பாவையின் பயணம் இந்தப் பரிதாபக் கட்டம் சென்றது.

பதுமைக்கும் பொருந்தாத் திருமணம் தான் நடைபெற்றது. மணக்கோலத்தில் அவளைக் கண்டவர்களெல்லாம், கண்ணீர் சொரிந்தனர், அமலாதித்தியர் போலவே. பதுமையைப் பத்தினியாகக்கொண்ட பராக்கிரமவர்மர், வயோதிகர், ஆனால், பெருங்குணம் ஆட்கொள்ளவில்லை. பதுமை, தன் மனைவி என்பதால் அடிமையாகிக்கிடக்க வேண்டுமென்று கர்ஜனை செய்தார்; அமலாதித்தியர் தான் செய்த தவறுக்குக் கழுவாய் தேடும் பான்மையில், பாவையிடம் அன்பு சொரிந்தார்; பராக்கிரமவர்மரோ ஆத்திரத்தைக் கொட்டினார்; தன் கதியைக் கண்டு மனம் நொந்த பாவை, தவறு இழைத்துவிட்டதை எண்ணி வெட்கமும் வேதனையுமடைந்து, கழுவாய் தேடக் கணவன் முயற்சிப்பது கண்டு, அவர்பால் மதிப்பு கொண்டு, ஏற்றத் தாழ்வுமிகுந்திருப்பினுங்கூட அவருக்குத் தீங்கோ துரோகமோ இழைக்கக் கூடாது என்று நன்னெறி புகுந்தாள். அந்தப் பயணம் அவளை வெந்தழலுக்கு அழைத்துச் சென்றது.

பதுமையின் பயணம் பயங்கரமானது.

பராக்கிரம வர்மர் இறந்தார்—கொல்லப்பட்டார் என்றும் வதந்தி உலவிற்று.

பதுமை, விதவைக் கோலத்தில் அரண்மனையில்.

பராக்கிரமவர்மரின் வாரிசு, அவருடைய அண்ணன் மகன் பகைமுடித்தான், பட்டத்தரசனானான்,

பதுமைக்கு வந்தது ஆபத்து. பாருங்கள், அந்த ஆபத்தான பயணத்தை.

முதல் காட்சி

இடம்:— இரும்பூர்.

இருந்போர்:— மன்னன்
பகைமுடித்தான்
நண்பர்கள்
நடன மாதர்கள்.

நிலைமை:— [பானமருந்தி வெறிகொண்ட நிலையில், பகைமுடித்தான் தன் நண்பர்களுடன் கூத்தாடிக் கொண்டிருந்தான்; நடன மாதர்களையும் பானம் பருகும்படி தொல்லை கொடுத்து அவர்கள் துவண்டு விழுவதுகண்டு சிரித்துக் கேலி செய்தனர்.]

பகைமுடித்தான்:- வட்டிலை முத்தமிட்டு, இங்கு கொட்டடி வடிவழகி!......வாடி......உன்னை வாரி அணைத்திட உள்ளம் தூண்டுது......ஆனால் உன்னை அணைத்திட எந்தன் இருகரம் போதாதே...... நண்பா! நாகப்பா! வா, இருவரும் சேர்ந்து அணைத்திடுவோம்......

வடிவழகி:- மகாராஜா......எனக்கு மயக்கம் அதிகமாகி விட்டது......கால்கள் குழறுகிறது......கண்கள் உளறுகிறது......

[தற்செயலாக அந்தப் பக்கம் வர நேரிட்ட பதுமை இந்தக் காட்சியைக் கண்டுப்பதறி ஓடி ஒளிந்து கொள்கிருள் ஓர் அறையில்]

அங்கு, காமக் களியாட்டக் காட்சி ஓவியங்கள் நிறைய காணப்படுகின்றன.

அருவருப்புடன் பார்க்கிருள் முதலில் பிறகு, உற்றுப் பார்க்கிருள். சிறிதளவு உவகையும் கொள்கிருள். வெட்கப்படுகிருள். மீண்டும் பார்க்கிருள்; ஓரளவு ரசிக்கவும் செய்கிருள். பக்கத்தறையிலிருந்து, பகைமுடித்தானும் நண்பர்களும், நடத்தும் காமக் களியாட்டக் கூச்சல் அவள் காதைக் குடைகிறது.

யாரும் அறியாமல், மெள்ள அந்த இடத்தைவிட்டு நழுவிச்சென்று, தன் படுக்கை அறை சென்று சோர்ந்து படுக்கிருள். எதையோ எண்ணிக்கொண்டு விம்மி அழுகிருள்.

பணிசெய்யும் மூதாட்டி இதைக்கண்டு விட்டு, குறும்புப் புன்னகையுடன் பதுமை அருகில் சென்று, பரிவுடன் அணைத்துக்கொண்டு

மூதா:- ஏனம்மா இப்படி விம்முகிறீர்......

பது:- அழுது கிடக்கப் பிறந்தவள் தானே நான்...... பழி பாவத்துக்கு அஞ்சாத என் பெற்றோர்கள் என்னை கிழமன்னனுக்குப் பலியிட்டநாளிலிருந்து, நான் அழுதுகொண்டுதானே கிடக்கிறேன்...... வேறென்ன செய்ய முடியும்......

மூதா:- தங்கமல்லவா! என்ன செய்யலாமடி கண்ணே, அழாதே......பார்க்கும்போதே வயிறு பகீர் என்கிறது. இந்த வயதுப் பெண்கள், சாதாரணப் போர் வீரனுடைய மனைவியானாலும், அன்ருடம் பொழுது ஓட்டப் பாடுபட்டுத் தீர வேண்டியவனுடைய மனைவியானாலும், உள்ளதை உண்டு விட்டு, காதலைப்பொழியும் கண்களால் தன்னைப் பார்த்து, கொஞ்சுமொழி பேசி மகிழும் கணவனுடைய அணைப்பிலே சுகம் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிருர்கள். உன் விதி இப்படி இருக்கிறது......விதவையின் கதி வேறெப்படி இருக்கும்......உம், விதவையான பிறகா, கண்ணே! உமக்கு வேதனை பிறந்தது...... கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட அன்றே அல்லவா அவதி உன்னை அணைத்துக்கொண்டது. இதே அரண்மனையிலும், வேறு மாடமாளிகைகளிலும், சாமான்யர்களுடைய குடில்களிலும், எவ்வளவோ குதூகலம் காண்கிறேன்.......

பது:- குதூகலமாக இருப்பது மட்டும் தான் கண்டாய் போலும்...... அரசர்...... செச்சே! இப்படி ஆடி அழியக்கூடாது......

மூதா:- என்னம்மா, புது சேதி?

பது:- என் கண்ணால் கண்டேன். நடன மாதர்கள் ஆடை அவிழ்ந்து கிடக்கும் நிலைமை......சொல்லக்கூடக் கூச்சமாக இருக்கிறது, அரசன் அவர்களுடன் நடத்தும் காம வெறியாட்டத்தை......

மூதா:- நீ ஏனம்மா அதைப் பார்த்துத் தொலைத்தாய்......

பது: தற்செயலாகப் பார்க்க நேரிட்டது. அரசனுடைய பிரத்யேக அறையில், வீரத்தை ஊட்டக் கூடிய போர்க்களக் காட்சிகள், மாற்ருன் வீசிய வேல் மார்பில் தைத்திட அதை வெளியே எடுத்து எதிரே வருகிற வேழத்தின் மீது வீசுவது, ஒரு கரம் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ள வீரன் மறுகரத்தில் வாளேந்திக்கொண்டு எதிரியின் மீது புயலெனப் பாய்வது, இப்படி அல்லவா ஓவியங்கள் இருக்க வேண்டும்...உனக்குத் தெரியுமா? அரசனுடைய அறையில், முத்தமிட்டுக்கொண்டு காதலர், கூந்தலைப் பிடித்திழுக்கும் குறும்பன், குளத்தில் நீந்தி விளையாடும் ஜோடிகள், ஆடை நெகிழ்ந்த நிலையில் அணங்கு ஆரத்தழுவிக்கொண்டுள்ள ஆடவன், ஐயயோ! ஒரே காமக் களஞ்சியம் அந்த ஓவியங்கள்......

மூதா:—அரசரின் அந்தரங்க அறையிலா?

பது:—ஆமாம்...

மூதா:—அங்கு ஏனம்மா சென்றீர்? ஐயோ, புலிக் குகைக்குள் புள்ளி மான்குட்டி போவது போலாயிற்றே, போகாதீர் ...அரசன், காமக்களியாட்டத்தில் ஈடுபட்டவன் என்பது உண்மை... ஆனல்...

பது:—என்ன அது, ஆனல்... ...நாட்டை ஆளும் பொறுப்பில் உள்ளவர் இப்படியா நடந்து கொள்வது... எவ்வளவு கேவலம்...

மூதா:—அதைக் கூடவா, அரசனல் புரிந்து கொள்ள முடியாது. ஆனல், ஒரு வகையிலே அரசனிடம் எனக்குப் பச்சாதாபம்தான் பிறக்கிறது, கோபத்தைவிட...

பது:—ஏனும்...

மூதா:—உண்மைக் காதல் கைகூடாததால், மனம் உடைந்து போன நிலையில், இப்படி வெறி ஏற்றிக் கொண்டாவது, மனதிலே எழும்பிய கொந்தளிப்பைக் குறைத்துக் கொள்ளலாம் என்பதுதான், அரசர் எண்ணம்...

பது:—என்ன இது விடுகதை! உண்மைக் காதலாம், உள்ளம் உடைகிறதாம்... அதற்காக உல்லாசிகளுடன் கூடிக் காமக்களியாட்டத்தில் ஈடுபடுகிருராம்... வேடிக்கையான சமாதானம்! உண்மைக் காதல் என்ருல், திருமணம் செய்து கொள்வதுதானே...

மூதா:—முடியாதே! உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் எழமுடியும் என்று அறிந்து கொள்ள முடியாத ஊர் மக்கள் ஒப்பமாட்டார்களே!

பது:—கீழ்க்குலமகளைக் காதலிக்கிருரா?

மூதா:—இல்லை அம்மா, குலம், அந்தஸ்த்து இதிலே குறைவு இல்லை... மஞ்சள் குங்குமம் இழந்த மாதரசிமீது மன்னன் காதல் கொண்டு தத்தளிக்கிருன்.

பது:—மஞ்சள் குங்குமம் இழந்தவளா... என் போல ஒரு விதவையா?

மூதா:—தங்களைப் போல விதவையா என்று கேட்கிறீர்கள் தேவி! தங்களையேதான்.

பது:—சீ! தூர்த்தையே! என்ன வார்த்தை பேசத் துணிந்தாய். இப்படிப்பட்ட இழிந்த குணமுள்ளவனா மன்னன். தாயல்லவா நான், முறைப்படி... பிறன் மனைவிமீது பேய்க்குணம் கொண்டவனல்லவா, காமுறுவான்... சீ! இனி என் முன் நில்லாதே, ஓடிப்போ, என்னிடம் நீ இரக்கம் காட்டிப் பேசிவந்ததெல்லாம் இதற்காகத்தானா. காட்டுக் குணம் படைத்தவளே! பெற்றோரின் பெரும்பிழையால், பொருந்தாத் திருமணக் கொடுமைக்கு ஆளாகி, இன்று விதவையானேன், விம்மிக்கிடக்கிறேன், விதியை எண்ணித் தவித்துக்கிடக்கிறேன்... என்னைப் பாதகப் படுகுழியில் தள்ளவா அந்தக் காமாந்தகாரன் எண்ணிக்கொண்டிருக்கிறான். இதோ பாரடி இழிகுணம் கொண்டவளே, வாழ்வில் இன்பம் கண்டவளல்ல நான்... ஒரு காமாந்தகாரனுக்கு இரையாவேன் என்று மட்டும் எண்ணி விடாதே. அரும்பு மலராமலே கருகிப்போவதுண்டு—மந்தி அதை மலராக்காது. கட்டிய கணவன் கிழவன்; கண்ட சுகம் ஒன்றுமில்லை; அவன் இறந்து போனான், நான் விதவையானேன்; ஆனால் பெண் குலத்தின் பெருமையை அழிக்கும் மாபாவியாக மாட்டேன்...

மூதா:- மன்னிக்கவேண்டும்...தங்கள் காலடி வீழ்கிறேனம்மா, மன்னிக்க வேண்டும்...நான் ஏதோ உளறிவிட்டேன்...இத்தனை இளமையும் எழிலும் பாழாகிறதே, என்று எண்ணி ஏதேதோ கூறி விட்டேன்...

பது:- பசப்பவேண்டாம்... இவ்வளவு கீழ்த்தரமான எண்ணம் கொண்ட உனக்கு இங்கு நான் இடமளிக்கமாட்டேன் சென்றுவிடு, உடனே.

[மூதாட்டி சென்றபிறகு]

பதுமை:- (கண்ணீர் பொழிந்தவண்ணம்) ஐயோ! என் நிலை இவ்வளவு ஆபத்தானதாகவா இருக்கிறது. காமாந்தகாரன் நெஞ்சிலே என்னைப் பற்றிய எண்ணம் புகுந்து விட்டதாமே! புற்றுப் பாம்பு என்றைய தினம் வெளியேவந்து, படமெடுத்தாடுமோ தெரியவில்லையே.....பயமாகவுமிருக்கிறதே...விதவைக்கு அழகும் இளமையும் இருப்பது பேராபத்தாயிற்றே. அவதிக்கு மேல் அவதியாகவன்றோ வந்து சேருகிறது. என்ன நிலையோ...எதிர்காலம் எப்படியோ...ஒரே இருளாக இருக்கிறதே...

இரண்டாம் காட்சி

இடம்:- பகைமுடித்தான் தனி அறை.

இருப்போர்:- பகைமுடித்தான்
மூதாட்டி...

பகை:- (கோபமாக) ஆஹா, அவ்வளவு துடுக்குத்தனமாகவா பேசினாள்...என் நேசத்தை உதறித் தள்ளிவிட்டு அவள் இங்கு வாழமுடியுமா...?

மூதா:- கண்ணீர் பொழிகிறாள், காவலா, கடுங்கோபத்துடன் பேசுகிறாள்.

பகை:- ஏ! கிழவி! ஒரு பெண்ணின் மனதை மாற்றும் திறமை இல்லையே உனக்கு, பிரதாபமெல்லாம் அளந்தாயே...

மூதா:- உத்தமிபோலப் பேசிடும் பத்தினி பலரின் மனதை நான் பாகாய் உருகச் செய்து தங்கள் விருந்தாக்கவில்லையா?

பகை:- இவள் மட்டும் என்ன? கிழவனுக்கு வாழ்க்கைப் பட்டுக் கண்ணீர் வடித்துக்கிடந்தவள்...பசியோடு இருக்கும் புலிக்கு மான் இறைச்சி அல்லவா, என் அழைப்பு அவளுக்கு. பக்குவமாகப் பேசியிருக்கமாட்டாய்...

மூதா:- எனக்கு, மன்னவா, இதிலே பல ஆண்டுப் பழக்கமுண்டல்லவா?

பகை:—என்மனம் சதா அவளையே எண்ணி எண்ணி உருகிக்கிடக்கிறது... ஊண் உறக்கமில்லை... ஊராளும் காரியத்தில் கூட விருப்பமில்லை... உன்னுடன் காதலின்பத்தில் ஈடுபட்டு, வெண்முகில்களில் அமர்ந்து, வானவீதியிலே உலவி, நட்சத்திரங்களைப் பறித்து மாலையாக்கி உனக்குச் சூட்டி மகிழவேண்டும்என்றெல்லாம்சொல்கிறாள்—இப்படி இன்பமூட்டும் பேச்செல்லாம் பேசியிருக்க வேண்டும்... நீ, கிழவி... பழைய முறையில் ஏதோ பசப்பியிருக்கிறாய்... அவளும் பத்தினி வேடமிட்டு உன்னைப் பயப்படுத்திவிட்டாள். சரி, சரி, போ. நானே கவனித்துக் கொள்கிறேன்...... நாளை இரவு... ...நடுநிசிக்குமேல்... இவளென்ன பிரமாதம்......

[வேலையாளொருவன் பணிப் பெண்ணுடன் பதைக்கப் பதைக்க ஓடோடி வருகிறான்]

வேலை:—மன்னவா!... பதுமா ராணியார்... கட்டாரி... இரத்தத் தடாகம்......

பகை:—உளறாதே, மடையா, நிதானமாகச் சொல்......

வேலை:—கட்டாரியால் குத்தப்பட்டு, பதுமை பிணமாகிக் கிடக்கிறார்கள்.

மூ:—பாவம்......

பகை:—அக்ரமம்...... கட்டாரியால் குத்தப்பட்டா? கொலையா?

வேலை:—தற்கொலைதான் மன்னவா, ஏதோ கடிதம் கூடக் கிடந்தது... இரத்தம் தோய்ந்து... இதோ

பகை:—கொடடா, முட்டாள்.

[பகை முடித்தான் அந்தக் கடிதத்தை மனதுக்குள் படித்துக் கொள்கிறான்; குரூரமான புன்னகையுடன்]

புவியோரே,

போகிறேன்; பொருந்தாத் திருமணத்திற்குப் பலியாகி, இளம்வயதிலே விதவையான இந்த அபாக்கியவதியைக் கற்பழிக்கும் கெடுமதி கொண்டவன் அரசனாகியுள்ள அக்ரமபுரியிலிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். கன்னிப் பருவத்திலே கண்ட இன்பக் கனவுகள் ஆயிரம் இருக்கும். கட்டழகனை மணாளனாகப் பெற்று, அழகிய ஓடமேறி, மகிழலாம், பூம்பொழிலில் ஆடிக் களித்திடலாம், காதற்கனி பெற்றுப்

பெருமைப் படலாம் என்றெல்லாம் எண்ணினேன். தொண்டு கிழவருக்கு என்னைப் பலியிட்டனர். கொடுமை பல செய்துவிட்டு, அவரும் இறந்துபட்டார். விதவைநான், இங்குள்ள காமாந்தகாரனுக்கு விருந்தாக வேண்டுமாம். பெண் குலத்துக்கு எது அணிகலனோ, மறக்குடி மகளிருக்கு எது உயிரினும் மேலானதோ அந்தக் கற்பைச் சூறையாடக் காதகன் காவலன் உருவில் இருப்பது அறிந்தேன் — பதறிப் போனேன். அந்த ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள இந்த அபலைக்கு இந்தக் கட்டாரிதான் உதவிற்று. போகிறேன், புவியோரே! பெண்களின் வாழ்வுப் பாதையை கண்மூடித்தனமாக அமைத்துவிடும் பெரியோர்களே! என் பாதை என்னை எங்கு கொண்டு செல்கிறது என்பதைப் பார்த்தாவது திருந்த முற்படுங்கள் —பதுமை.

பழிதீர்த்துக்கொண்ட சந்திரபாலா

பகை:-ராணிமாதாவின் சவ அடக்கத்துக்கான காரியம் நடைபெறட்டும்...

மருத்துவர்கூறுகிறர்:-பொருந்தாத்திருமணத்திற்கு ஆளாக்கப்பட்ட பதுமையின் பயங்கர முடிவு இது. சிவதாசரே! கேவலமான பயணம்] நடத்தியபாவையரும் உண்டு. கற்பிழக்க மறுத்தாள், மங்கையர் திலகம் பதுமை......எல்லோருமே அவ்விதம் இருக்கமுடிகிறதா? சந்திரபாலா, பெண் பேயானுள்! அவளுக்கு அமைக்கப்பட்ட பாதையில், அவளும், பாவை, பதுமாபோலவே, முதலில் பயந்து பயந்துதான் நடந்துசென்றுள். கொடுமையைக் கண்டு அவள் நெஞ்சிலே கொடுமையே முளைத்தது. சந்திரபாலா, சாகசக்காரியானுள்—சண்டாளி என்றனர் ஊரார், வெளிப்படையாக அல்ல; ஏனெனில் அவளும் ஒரு அரசி. அவள் நடத்திய பயணம், தெரியுமா ...இதோ அது.

★

பாவையின் பயணம்

மூன்றும் கட்டம்

மருத்துவர் கூறுகிறர்:- சந்திரபாலா, சிந்தூர நாட்டு மன்னர் மந்திரவர்மருடைய புதல்வி.

எவரையும் வசீகரிக்கக்கூடிய எழில் நிரம்பியவள்.

எல்லா அரசகுமாரிகளையும்போலவே அவளுக்கும் ஆடலும் பாடலும் கற்றுத் தரப்பட்டன.

புண்ணிய காதைகள், பத்தினிகளுக்கு வந்த சோதனைகள், எல்லாம் படித்திருந்தாள்.

கணவனே கண்கண்ட தெய்வமென்று அவளுக்கும் பெரியவர்கள் உபதேசம் அளித்தனர்.

நற்குணம் படைத்தவளாகத்தான் இருந்தாள் சந்திரபாலா.

அந்தப் பெண்மணியைப் பேயாக்கும் காரியத்தை மன்னர் மந்திரவர்மர் மிகச் சிரமப்பட்டுச் செய்துமுடித்தார்.

சந்திரபாலாவின் 'ஜாதகம்' மகாசிலாக்கியமானது, என்று ஒரு பேரரசனை நம்ப வைக்க மட்டும், ஜோதிடனுக்கு ஆயிரம் வராகன் செலவிட்டார்.

திருமணம் — பொருத்தமில்லை — எனவே, சந்திரபாலாவின் மனம் எரிமலையாகிவிட்டது. அவள் பாவைபோல உடன்கட்டை ஏறவில்லை, பதுமைபோலக் காமுகனுக்கு அஞ்சி, கட்டாரிக்கு இரையாகவில்லை, தன்னைக் கொஞ்சிடும் கருவியாகக் கொள்ளத் துணிந்தவனை, படாதபாடுபடுத்திவிட்டாள்.

இவனுக்கு இதுதான், என்று ஏளனச் சிரிப்புடன் சொன்னாள். அதற்காக அவள் மேற்கொண்ட பயணம், இழிவு தருவதுதான், ஆனால் பழிதீர்த்துக் கொண்டேன் என்றே அவள் கூறினாள். பெற்றோரின் கட்டுக்காவலை மீறிட முடியவில்லை; திருமணம் நடந்தேறியது.

பெற்றோரின் பேராசையைச் சாக்காக்கிக் கொண்டு, தன்னை மணந்துகொண்ட பேரரசனின் வாழ்வில் நஞ்சு கலக்கத் தீர்மானித்தாள்.

முதல் காட்சி

இடம்:— மாறனூர் அரண்மனைப் பூங்கா.

இருப்போர்:— மாறனூர் மன்னன் மணிவர்மன் பணியாள்.

நிலைமை:— [மணிவர்மன், ராணி சந்திரபாலாவின் வருகைக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார்.

பணியாள், பலமுறை போய்வந்தாகிவிட்டது ராணியாரிடம்—மன்னனுக்குக் கோபம் பிறந்தது.]

மணி:- மடைப்பயலே! இன்று மகாராணி மலைவளம் காணவேண்டுமென்று சொன்னார்களே... நான் அதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்தாகி விட்டது என்பதைச் சொன்னாயா?

பணி:- விவரமாகச் சொன்னேன் வேந்தே.

மணி:- என்ன சொன்னார்கள்?

பணி:- தெரியும் – என்றார்கள்.

மணி-என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

பணி:- நான் பார்க்கவில்லையே மகராஜா.

மணி:- பார்க்காமல்...?

பணி:- நான் மகாராணியின் கூடத்திற்குள் நுழையப் போகும்போதே, சேடி தடுத்துவிட்டாள்... சேதி என்ன? என்று கேட்டாள், சொன்னேன், பதில் தெரிவித்தாள்...

மணி:- அலங்காரத்தில் மிகுந்த கவலை சந்திராவுக்கு; அதற்கு நேரம்பிடிக்கும்... வேறென்ன... அதோ சேடி! கோபம் வேண்டாம், இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன் என்று சமாதானம் கூற இவளை அனுப்பியிருப்பாள் சந்திரா... ஏ! இவள் பெயர் என்ன?

பணி:- முத்துமாலா?...

மணி:- ஏ! இந்தப் பக்கம், இங்கே இருக்கிறேன்...

முத்:- வணக்கம் மகாராஜா!

[போகிறான்]

மணி:- என்ன போய்க்கொண்டே இருக்கிறாய்?

முத்:- அவர்... அங்கு... இருக்கிறார் ...அரசியார்...

மணி:- அரசியார், என்னிடம் என்ன சொல்லச் சொன்னார்கள்...

முத்:- தங்களிடமா? ஒன்றுமில்லையே. அவரிடம்...

மணி:- என்ன உளறுகிறாய்? யாரிடம் அனுப்பினார்கள்?

முத்:- ராணியாருக்கு வாட்போர் கற்றுக் கொடுக்கிறாரே, வல்லபன்; அவரை, அழைத்து வரச் சொன்னார்...

மணி:- வல்லபன்... வல்லபன்... யார் அவன்...?

முத்:- இந்த முறை வீர விழாவிலே வெற்றித்தோடா பெற்றாரே அவர்...

மணி:- ஓஹோ! அவனா? சரி, சரி; சீக்கிரமாக ராணியை வரச்சொல்லு...

முத்:- அவர்கள், கோட்டை வெளியில் வாட்போர் பயிற்சி பெறப்போகிறார்களே மகாராஜா! தாங்கள் எங்கே அழைக்கிறீர்கள்?

மணி:- என்ன இது, ஏட்டிக்குப் போட்டியாக... சரி, சரி, நீ, போ...டே! குதிரைகளைப்பார்த்துக்கொள் ... இதோ வருகிறேன்...

[வேகமாக அரண்மனைக்குள் செல்கிறார்

இரண்டாம் காட்சி

இடம்:— சந்திரபாலா தனி அறை

இருப்போர்:— சந்திரபாலா தோழிகள்

நிலைமை:— [உள்ளே, தோழிகளுடன் ராணி சந்திரபாலா வேடிக்கையாகப் பேசிக்கொண்டு சிரிக்கிறாள்.

வாட்போர் செய்வதற்குத் தயாராக உடை அணிந்து கொண்டு ராணி இருக்கிறாள். சாளரத்தின் வழியாக மன்னன் வருவதைச் சந்திரபாலா பார்த்துவிட்டு]

சந்:- கிழத்துக்கு என்னென்ன விசித்திரமான ஆசை தெரியுமோ...?

தோழி:- எந்தக் கிழமம்மா?

சந்:- என்னைத் தொட்டுத் தாலிகட்டிய துரைமகன் இருக்காரே, அவரேதான்...

தோழி:- மகாராஜாவையா சொல்கிறீர்கள்?

சந்:- மகாராணியின் நாயகனைச் சொல்கிறேனடி. வயோதிகத்தை மறைத்திட என்னென்ன தேய்ப்பு, பூச்சு ...என்ன செய்து என்ன? என்னுடன் வேகமாக நடந்து வந்தாலே, கிழத்துக்கு மேல்மூச்சு வாங்குகிறது.

[வெளியே இருந்து இதைக் கேட்டு மன்னன் முகம் கடுகடுக்கிறது.]

தோழி:- போங்க, மகாராணி! எப்போதும் கேலிப் பேச்சுதான்

சந்:- சுந்தராங்கதன் என்று மனதிலே நினைப்பு. ஏண்டி கொஞ்சமாவது விவஸ்தை இருந்தால், வெளியில் உலவ வரும்படி அழைக்கலாமா? எனக்குத் தாத்தாபோல இருக்கிறார்... அந்தக் கிழட்டுக்குருபியுடன் வெளியே பவனிவர எப்படி என்மனம் சம்மதிக்கும்? இதை வெளிப்படையாக வா நான் சொல்லமுடியும். அந்தச் சனியன் கொஞ்சிப்பேசும்போது எவ்வளவு கர்ண கடூரமாக இருக்கிறது தெரியுமோ?

[வெளியே இருந்த மன்னன் கோபம் மிகுதியாகக் கொண்டு]

மணி:- சந்திரபாலா! நேரமாகிறது...

சந்:- நேரமானல், தாங்கள் போய் வரலாம் மகாராஜா! நான் மலைவளம் காண வரவில்லை... வாட்போர் பயிற்சிக்குப் போகிறேன்...

மணி:- மலைவளம் காணப் போகலாம் என்று நீயே சொல்லிவிட்டு...

சந்:- சொன்னேன், ஆனல் வல்லபன், வாட்போர் பழகலாம்என்கிருனே...வல்லபன்தெரியுமல்லவா தங்கட்கு. தங்கள் ஊழியக்காரன்.

மணி:- தெரியும்—தெரியும்.

சந்:- அப்படியானல், அவரை இங்கு வரச்சொல்லுங்கள்... நான் தயாராக இருப்பதாகச் சொல்லலாம்.

மணி:- வரவர, உன் சுபாவம் சந்திரா!...

சந்:- விசித்திரமாக இருக்கும், அவ்வளவுதானே, அதை மாற்ற முயற்சிப்பீர், பிறகு என் சுபாவம் விபரீதமாக மாறிவிடும்...

மணி:- உன் இஷ்டப்படியெல்லாம் ஆடிவருகிறேன், அதனலேயே உனக்குத் தலைகால் தெரியாமல் கர்வம் பிடித்தாட்டுகிறது. இனி இந்த வல்லபன் இங்கு வரக்கூடாது... இது என் உத்தரவு.

சந்:- (கேலியாக) அப்படியா, மெத்தச் சந்தோஷம்... நானே அவருடைய விடுதிக்குச் சென்று பயிற்சி பெறுகிறேன் ...சம்மதம்தானே. அவர் விடுதி, ஒரு அழகான அருவிக் கரை ஓரத்திலே இருக்கிறது. அவருடைய பாட்டனர் சுவையான கதைகள் சொல்கிருர் — உங்கள் வயதுதான் இருக்கும்.

மணி:- இதை யார் கேட்டது?

சந்:- நல்லவர் அந்தப் பெரியவர். உன் பெற்றோர்களுக்குக் கண் குருடா அம்மா என்று கேட்டார், என்னை...ஏன் தாத்தா அப்படிக் கேட்கிறீர் என்றேன், அந்தப்பொல்லாதகிழவர்சொல்கிருர், இவ்வளவு எழிலுள்ள மங்கையைப் படுகிழத்துக்குத் திருமணம் செய்துதர எப்படிச் சம்மதித்தார்கள், குருடர்களா இவர்கள், மன்னர் தொண்டு கிழவர் என்பது ஏன் தெரியவில்லை என்று கேட்கிருர்.

மணி:- துடுக்குத்தனமாகப் பேசும் அந்தக்கிழவனுடைய நாவினைத் துண்டித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன்.

சந்:- போதாது பூபதி, போதாது! அந்த ஒரு கிழவர்தானு அவ்விதம் பேசுகிருர்—நாட்டில் உள்ள எல்லாப் பெரியவர்களும் அது போலத்தான் அனுதாபத்துடன் பேசுகிருர்கள். இதற்கே இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்களே வல்லபன் என்ன சொல்கிருன் தெரியுமோ?

மணி:- அவனிடம் என்ன பேச்சு உனக்கு?

சந்:- வாட்போர் பழகுகிறேனே! பேசாமலிருக்க முடியுமா? வல்லபன், பேசுவதே சுவை தருகிறது... மகாராணி, என்று அவன் மதுரகீதம் பொழிவது போல என்னை அழைக்கும்போது...

மணி:- உத்தம குணமங்கையர் பேசும் பேச்சா இது...

சந்:- சற்குணவான் செய்து கொள்ளும் திருமணமா இது என்று யார் கேட்டார்கள்!

மணி:- இனிநான் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப் போகிறேன்......

சந்:- வேறென்ன செய்வீர்? உமக்குத் திகில். வல்லபன் போன்ற வாலிபனுடன் நான் பழகினல், சல்லாபத்தில்போய் முடியும் என்று அச்சம்...

மணி:- சந்திரா! என்னை ஏன் இப்படிக் கொடுமைப் படுத்துகிருய்.

சந்:- முதல் இரவு, இதுபோல நான் ஆயிரம் முறை அழுதிருக்கிறேன்...

மணி:- பொருத்தமிருக்கிறதோ இல்லையோ, கணவன் என்று என்னை ஏற்றுக்கொண்டான பிறகு, தர்ம சாஸ்திரப்படி நடந்துகொள்ள வேண்டும்...மகா பாபம் தேடிக்கொள்ளாதே...

சந்:- பாபமோ, புண்ணியமோ, அது அல்ல முக்கியம் ...தேவைக்கு ஏற்றதைத் தேடிக்கொள்வது என்பதுதான் முறையாக இருக்கிறது. பாபபுண்யத்துக்கு அஞ்சுபவரானல், தர்ம சாஸ்திரத்தை மதித்து நடந்துகொள்பவரானல், என்னை மனைவியாகக்கொள்ளத் துணிவீரா? நியாயம் பேசுகிறீரா, நியாயம்!

மணி:- நில் நில், சந்திரா! எங்கே போகிருய்.

சந்:- ஆற்ருேர, விடுதிக்கு — வாட்போருக்கு....நாட்டின் மீது பகைவர்கள் பாய்ந்தால், சமாளிக்க வேண்டாமா? உம்மால் முடியுமா இந்த வயதில்! குதிரை மிரண்டாலே, குப்புறக் கீழே விழுவீர்... அதனல்தான் வல்லபனிடம் 'சிட்சை' பெறுகிறேன்...

[மன்னன் தலையில் அடித்துக்கொள்கிருன்.

சந்திரபாலா, ஆனுடையில் வெளியில் செல்கிருள்.]

அரண்மனையில் வேருேர் பகுதி

ஒரு வீரன்:- வல்லபனுக்குச் சரியான யோகம். மகாராணியைக் கைக்குள்ளேபோட்டுக்கொண்டானே

மற்ருெருவன்:- வயோதிகனுக்கு வாழ்க்கைப்பட்டவள், அப்படித்தான்...

ஒரு வீரன்:- உத்தமிகள் அவ்விதம் நடக்கமாட்டார்கள்...

வேருேர் பகுதி

வல்லபன்:- மகாராஜா என்னைச் சந்தேகிக்கிருர்.

சந்:- நான் சந்தேகத்தைப் போக்கிவிட்டேன்.

வல்ல:- என்ன சொன்னீர்கள்?

சந்:- வயோதிகருக்கு இதுபற்றிய கவலை கூடாது என்று கூறிவிட்டேன்.

வல்:- ஆபத்தான காரியம் அரசியாரே!

சந்:- சரி ஐயா, வீராதி வீரரே!

வேருேர் பகுதி

தோழி:- மன்னரை, மகாராணி வாட்டி வதைக்கிருள்.

மற்ருேர் தோழி:- தலைவிதியே என்று மன்னர் சகித்துக் கொள்கிருர்.

தோழி:- வல்லபனை வேலையைவிட்டு நீக்கினால் என்ன? ஏன் செய்யப் பயப்படுகிறார்?

மற்றோர் தோழி:- வல்லபன் ஒருவன் தானா இங்கு ஆணழகன்...

பூங்காப் பாதையில்

வல்ல:- சந்திரா! என் அன்பே! சிரச்சேதம் எனக்கு மன்னன் அளிக்கும் தண்டனையாக இருப்பினும் சேல்விழியாளே! உன்னுடைய கடைசி முத்தத்தைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் நான் மடிந்துபடத் தயாராக இருக்கிறேன்.

சந்:- பைத்யம்போலப் பேசாதே கண்ணாளா! யார் நீர்? மகாராணியின் காதலர்! தெரிகிறதா? யார் என்ன செய்ய முடியும்?

வல்:- மன்னன்?

சந்:- மண்ணாங்கட்டி! கொதிப்பான், கொக்கரிப்பான், குமுறுவான். பிறகு ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு அழுவான். எதற்கும் துணிந்து நான் இருக்கிறேன் என்பது தெரிந்துவிட்ட பிறகு, மன்னன் என்ன செய்யமுடியும்?

வல்:- என்ன இருந்தாலும் உனக்கு நாயகரல்லவா?

சந்:- நாயகரானவர்...திருத்திக்கொள் வல்லபா! என் பெற்றோரின் பேராசையைப் பயன்படுத்தி என்னைப் போகக் கருவியாகக் கொண்டவர். என் காதலை நான் அவருக்கு அளிக்கவேண்டும் என்று என்ன சட்டம் இருக்கிறது?

வல்:- ஊர் மக்கள் தூற்றாமலா இருப்பார்கள்?

சந்:- ஆஹா ஹா! ஊர் மக்கள்! எவ்வளவு நியாய அநியாயமறிந்து நடந்துகொள்பவர்கள் இந்த மக்கள், தெரியாதா எனக்கு! என் கண்ணீருக்கு என்ன காரணம் என்று கேட்டார்கள் இந்த மக்கள். பொருந்தாத் திருமணம் இது, தொண்டு கிழவன் துடியிடையை மனைவியாகக்கொள்வது அநீதி என்று பேசிய யோக்கியன் யார், வல்லபா? அவன் மன்னன், இவள் பெண்! அவன் இவளை மனைவியாகக் கொள்ளலாம் என்றுதானே எண்ணிக்கிடந்தனர்? ஏன் என்று கேட்டனரா? ஆகுமா இந்த அக்ரமம் என்று கூறித் தடுத்தனரா? பெண்பாவம் கூடாது என்று இதோபதேசம் செய்தனரா? எனக்கு நிறைய உபதேசம் செய்கிறார்கள். அவர் உன் பதி. விருத்தாபியராக இருக்கலாம், குரூபியாக இருக்கலாம், என்றாலும் அவருடைய பாத சேவையே உனக்குச் சகல சௌபாக்கியமும் தரவல்லது. நீங்கள் சதி-பதியாவது தேவன் அருளால். ஆகவே உத்தமியாய், பத்தினியாய் வாழவேண்டும் — அதுவே தர்மம், என்றெல்லாம் பேசுகிறார்கள். காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்று எடுத்துச் சொன்னார்களா மன்னனிடம்?

வல்:- இந்த வாதத்தைக்கேட்டுக்கொள்ளமாட்டார்கள் தேனமுதே!

சந்:- நானும் யாரிடமும் வாதாடுவதாக இல்லை, இன்னுயிரே! உன்னிடம்கூட நான் வாதாடவில்லையே, களிப்பால் கூத்தாடும் இந்தக் கண்களும், துடிக்கும் என் அதரமும்தானே வாதாடுகின்றன,

நிருபர்:—பாகவதரவாள்! கர்நாடக சங்கீத விஷயமா. ராஜாஜியோட அபிப்பிராயத்தை ஆதரிக்கிறீரா?

பாகவதர்:—பேஷா ஆதரிக்கிறேன்......அவாளுக்குத் தெரியாத விஷயம் என்ன இருக்கு? ஊசி விஷயத்திலே இருந்து உபநிஷத் விஷயம் வரையிலே, ராகவிஷயத்திலே இருந்து ராஜாங்க விஷயம் வரையிலே அவருக்குத் தெரியாதது, மத்தவாளுக்கு என்ன தெரியப் போறது?

நிருபர்:—சங்கீத விஷயமா, செட்டிநாட்டு ராஜா, அழகப்ப செட்டியார் ஆகியவர்களோட அபிப்பிராயத்தைப் பத்தி. உம்மோட அபிப்பிராயம், என்ன?

பாகவதர்:—அவாளெல்லாம் கோடீஸ்வரா, ஏதேதோ சொல்றா? நமக்குச் சம்பந்தமில்லாத விவகாரம் சங்கீதம்னு சும்மா இருந்துட்டா நல்லது. வேறே நான் என்ன சொல்ல இருக்கு...

வல்:- நான் தோற்றேன், தோகைமயிலாளே! தோற்றே போனேன்...

சந்:- அஞ்சாதீர் அரசே! மன்னன் என்னைத் திருமணம் செய்துகொண்டது பெரும் அநீதி—அதை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் எனக்கு இல்லை, ஆனால் என்னைத் தேவியாகப் பெற்று இன்ப வாழ்வு தேட அல்லவா எண்ணினார், அதுமட்டும் அவருக்குக் கிட்டாது. பழிதீர்த்துக் கொள்வேன். தூக்குக் கயிறு தேடமாட்டேன் —குமுறிக் குமுறிச் சாகவுமாட்டேன்—என் வாழ்வுக்கான இன்பத்தை என் விருப்பப்படிப் பெறுவேன். கொற்றவன் என்ற முறையிலாயினும் சரி, கொண்டவன் என்ற முறையிலாயினும் சரி, குறுக்கிடுவாரானால், குணாளா! ஊரைவிட்டே கிளம்பிவிட வேண்டியதுதான்—மன்னன் மதிப்பு மடியட்டும்—தூர்த்தை என்பார்கள் கண்டதும்—கள்ளி என்று எள்ளிநகையாடுவார்கள் முதலில்—பிறகோ என் இளமையையும் அவருடைய முதுமையையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள், அவள் செய்தது அக்ரமம், அதுசரி ஆனால் ஏன் அந்த அநியாயக்காரப்பாவி, தன் மகள் போன்ற வயதினளை மனைவியாகக் கொண்டான்—அக்ரமமல்லவா அது—வினை விதைத்தவன் தினையைத்தேடினால் கிடைக்குமா, என்று தீர்ப்பளிப்பார்கள். நான் எதற்கும் தயார்... மன்னனுக்கே தெரியும்

மூன்றும் காட்சி

இடம்:— மன்னனின் மணிமண்டபம்

இருப்போர்:— மணிவர்மன்
மருத்துவர்.

மணி:- மருத்துவரே, கொலை, கொள்ளை, சதி, கற்பழித்தல் ஆகிய கொடுங் குற்றங்களைச் செய்வோருக்குத் தூக்குத் தண்டனை விதித்து வருகிறோமே, அதிலே ஒரு நல்ல மாற்றம் செய்ய விரும்புகிறேன்......அதற்காகவே யோசனை கேட்க உம்மை அழைத்தேன்......அவர்களை இம்சித்துச் கொல்வதைவிட, விஷம் கலந்த உணவளித்துச் சாகவைப்பது நல்லது என்று எண்ணுகிறேன், தங்கள் கருத்து என்ன?

மரு:- சாவதிலே, நல்லது, கெட்டது என்ன மகாராஜா! விஷம்கொடுத்துச் சாகடிப்பது கருணை, வெட்டிச் சாகடிப்பது கொடுமை, என்று கூறுவதிலே பொருள் என்ன இருக்கிறது.

மணி:- நான் தங்கள் அபிப்பிராயத்திலிருந்து மாறுபடுகிறேன். சிலகாலம், விஷமிட்டுச் சாகடிக்கும் முறையைக்கையாண்டு பார்க்க உத்தேசிக்கிறேன். உடனே வேலை செய்யக் கூடியதான கடுவிஷம் தயாரித்துத் தரவேண்டும்.........

மரு:- கைவசமே இருக்கிறது, மன்னவா.

மணி:- மெத்த மகிழ்ச்சி, பழத்திலே அதை புகுத்தி விட முடியுமா?

மரு:- மலரில் தெளித்தாலே போதும், முகர்ந்ததும் மரணம் நிச்சயம்...

மணி:- அப்படியா? மருத்துவரே! சிமிளியில் அடைத்துக்கொண்டு வாரும்—நமக்குள் இது இரகசியம்—இப்போதைக்கு...

மரு:- உத்தரவு மகாராஜா.

நான்காம் காட்சி

இடம்:— மன்னன் தனி அறை

இருப்போர்:— மன்னன்

மணி:- தொலையட்டும் தூர்த்தை! அரண்மனை எங்கும் கேவலமாகப் பேசுகிறார்கள். பாதகி, அந்த குதிரை வீரனுடன் வெளிப்படையாகவே சரசமாடுகிறாள். இந்தச் சனியனுடைய அழகு கண்டு மயங்கினது என் மடைத்தனம். மானம் பறிக்கிறாள் மாபாவி! ஒழியட்டும், என் மீது ஏற்றப் பட்டிருக்கும் களங்கம் துடைக்கப்படவேண்டும்...

[சந்திரபாலா வருகிறாள் சிந்து பாடிக் கொண்டு]

மணி:- வாருங்கள், மகாராணியரே! வல்லபச் சக்ரவர்த்தியின் தர்பாரிலிருந்து நேரே இங்கு வருகிறீர் போலும். வஞ்சகி, குலத்தையும் குடும்பத்தையும் கெடுக்கும் விபச்சாரி.

சந்:- (கரங்களைக் கொட்டியபடி) சபாஷ்! சபாஷ்! இவ்வளவு ரோஷமானவர் என் கணவர் என்பதறியாமல் இதுநாள் வரையில் ஏமாந்து போனேனே! தங்களுக்கு நான் இன்றுமுதல் அடிமை. இந்த வீரனை மறந்துவிட்டு, ஊழியம் செய்து வயிறு கழுவும் வல்லபனிடம் மயங்கிக் கிடந்தேனே, என்ன மதியீனம்... அது கிடக்கட்டும்... மலரில் தெளித்துத்தரப் போகிறீரா, மதுரமான பழத்திலா? எதில் கலந்து, என்னைக் கொல்லத் திட்டமிட்டீர். மருத்துவரை வழியில் சந்தித்தேன்—என்னிடம் ஒரு அற்புதமான புன்னகையையும், ஒரு அவசர ஆலிங்கனத்தையும் பெற்றுக்கொண்டு, தாங்கள் அந்த மஹாபுருஷரிடம் நடத்திய மந்திராலோசனையைச் சொன்னார். மகிழ்ந்தேன். மன்னரல்லவா! மதி மலையத்தனை இருக்கத்தானே செய்யும். ஒரு சிறு தவறு செய்துவிட்டீர்..........வல்லபன் மட்டும்தான் என்று எண்ணினீர் — தவறு — பெருந்தவறு, வல்லபன் என் காதலன். ஆனால் இந்த அரண்மனையில் என் வலையில் வீழ்ந்தவர்கள், யாரார் என்பது உமக்கென்ன தெரியும், மருத்துவரிடம் பேசினீர் இரகசியமாக—இதோ பாரும், நீர் கேட்ட சிமிளி. பதைக்க வேண்டாம். படைத்தலைவரைக் கூப்பிட்டு என்னைப் பிடித்துச் சிறையில் அடைக்கச் சொல்லும், பார்ப்போம்...ஒரு பாசம் ததும்பும் பார்வைபோதும், படைத் தலைவன் என் பணியாளாகிவிடுவான். என்னை விஷமிட்டுக் கொல்லத்தான் திட்டமிட்டீரே தவிர, உம்மைக் கொல்ல, உம்மைச் சூழ இருக்கும் என்னென்ன பொருளில் என்னென்ன வகையான கடுவிஷம் கலக்கப்பட்டிருக்கிறது என்பது என்ன தெரியும் உமக்கு. அம்சதூளிகா மஞ்சத்தில், ஆயாசம் போக்கிக்கொள்ள, நீர் சயனிக்கும்போதே, உமது வியர்வையுடன் தலையணையில் தெளிக்கப்பட்டிருக்கும் விஷம் கலந்து, உதய சூரியனைக் காணுமலேயே, நீர் மாண்டு போக நேரிடலாம். உம் மீது தெளிக்கப்படும். பன்னீர், பூசிக்கொள்ளும் பரிமளகந்தம், தர்பாரில் எடுத்துச் செல்கிறீரே உடைவாள்... இவைகளே உம்மைச் சாகடிக்கும் கருவியாகி விடலாம், முன்னேற்பாடின்றி, நான் இருக்கிறேன் என்று எண்ணிவிடாதீர். நான் பட்டத்தரசி அல்ல, பழிதீர்த்துக்கொள்ளக் கிளம்பியுள்ளவள், பாவத்துக்கு அஞ்சாதவள். உற்றுப் பார்த்து என்ன பயன்...எதிலே இருந்து எந்த நேரத்தில் விஷம் உம்மைத் தீண்டும், என்று உம்மாலே கண்டறிய முடியாது. குதிரையின் கடிவாளத்திலுமிருக்கலாம், முத்திரை மோதிரத்தில் இருக்கலாம்; ஆமாம், பசும் புற்றரையில் நடந்து செல்லும்போது, பனித்துளிபோலிருந்து, உமது உயிரைக் குடிக்கலாம், பட்டு பீதாம்பரத்தில் இருந்து உம்மைக் கொட்டலாம்.

பணா:- வீண் புரளி... மிரட்டல்...

சந்:- நான் ஒளிவு மறைவு இருக்கவேண்டுமென்று விரும்பவில்லை, ஆகவேதான் முன் கூட்டியே சொல்லிவிட்டேன் சாமர்த்தியமிருந்தால், சவாதி விருத்து தப்பித்துக் கொள்ளும் பார்ப்போம்.

பணி:- பாதகி, காதகி, பழிகாரி...

சந்:- இப்போது ஏன் இந்த வார்த்தைகளை வீணுக்குகிறீர். மரணம் உம்மைப் பிடித்து இழுக்கும் போது, இந்த வார்த்தைகள் தேவை...

[வேகமாகச் சென்று தனி அறையில் புகுந்து கொண்டு, சிரிக்கிறாள்]

தோழி:- என்னம்மா இது பயங்கரமாக இருக்கிறதே...

சந்:- உனக்கென்னடி பயம்? நீயா, கிழப் பருவத்தில்

குமரியைக் கலியாணம் செய்துகொண்டு பெண் குலத்துக்கு இழிவு தேடினுய்...

தோழி:- என்ன இருந்தாலும், அம்மா, மருத்துவர், படைத் தலைவர், மற்றும் பலர் என் கள்ளக் காதலர் என்று தாங்கள் சொன்னது கேட்டு, மிக்க வேதனை...

சந்:- உனக்கே வேதனையாக இருந்ததென்கிருயல்லவா? மன்னர் மனம் எவ்வளவு வேதனை அடைந்திருக்கும்?

தோழி:- சொல்லவும் வேண்டுமா?

சந்:- பைத்யமே! வேதனைப்படட்டும் என்பதற்காகத்தான் அதுபோல் சொன்னேன், உண்மை என்று நீயும் எண்ணிக்கொள்ளாதே. அந்த வயோதிகனுக்குச் சந்தேகம் இருப்பது சகஜம், அதனுல் நான் சொன்னதை நம்பிவிட்டான். தன்னைச் சூழ இருக்கும் எந்த ஆடவனையும், என் சோர புருஷன் என்றெண்ணி, வேதனைப்படட்டும்! என்னை மனைவியாக்குவது அக்ரமம், என் வாழ்வைப் பாழாக்குவதாகும் என்று ஒரு துளியும் எண்ணுததற்கு இதுதான் தகுந்த தண்டனை. பைத்யமே! எனக்கு வல்லபன்தான் காதலன்! மற்ற அவ்வளவும் வீண் புரளி! யாரையும் நம்ப முடியாமல், புழுங்கட்டும். பைத்யக்காரி! அதுபோலவேதான், அவரைச் சூழ இருப்பதிலெல்லாம் மரணம் தயாராக இருக்கிறது தீண்ட, என்று நான் சொன்னது. இதோ இந்தச் சிமிளியில்தான் விஷம் இருக்கிறது! அந்தக் கிழவனைப் போய்ப் பார் இப்போது, வட்டில் கட்டில், கதவு, பலகணி, பழம் பால், மலர், எதிலும் விஷம் இருக்கும் என்று அஞ்சி அஞ்சிச் சாகப் போகிருன். பதறட்டும், பதைக்கட்டும். பொருந்தாத் திருமண மூலம் ஒரு பெண்ணின் ஆசைகளை நிர்மூலமாக்கும் ஆடவன்மீது எத்தகைய பழி தீர்த்துக் கொண்டாள் ஒரு பெண் என்பதைக் கண்ட பிறகேனும், கன்னியரின் வாழ்வைக் கருக்கும் காதலர்கள், பாடம் பெறட்டும்.

தோழி:- தங்கள் முறையே எனக்குப் புரியவில்லை அம்மா! பயமாகவே இருக்கிறது.

சந்:- உன் பயம் கிடக்கட்டுமடி, மன்னன் மருள்வதைப் போய்ப் பார்......

ஐந்தாம் காட்சி

இடம்:— மன்னன் தனி அறை

இருப்போர்:— மன்னன்
பணியாட்கள்.

நிலைமை:— மன்னன் மருட்சி அடைந்து கிடக்கிருன். மானமழித்துக்கொள்ளத் துணிந்து விட்டவள், உயிரைக் குடிக்கவா தயங்குவாள், எந்த வகையிலும் தன்னைச் சாகடித்து விடுவாள் என்ற திகில் குடைகிறது.
எதையும் உண்ண மனம் இடம் தரவில்லை. மரத்தில் பழுத்துக் குலுங்கும் பழங்களாகப் பறித்து வரும்படி பணியாட்களை அனுப்புகிருன். ஒரு கூடை பழத்துடன் ஒரு பணியாள் வருகிருன்.

மன்:- இப்போது பறித்த பழங்கள்...... என்னடா, அப்படித்தானே......

பரமேஸ்வரா! இன்னமும் சோதிக்கக்கூடாது. என் பிராத்தனையை ஏற்றுக்கொண்டு எனக்குப் போதுமான 'ஐஸ்வரியம்' அருள வேண்டும்; எனக்கோ மாணிக்க வாசகர் கதையே அடிக்கடி கவனத்துக்கு வருகிறது. மனம்தானே, மகேஸ்வரா! ஒருவேளை இருப்பதுபோல் மற்றொருவேளை இராது. உடனே கிருபை செய்யும். என்னை நம்பும், நிச்சயம் நான் உமக்குக் கோயில் கட்டுவேன்.

பணி:- ஆமாம், மகாராஜா!

மன்:- ஒரு பழத்தைச் சாப்பிடு......

பணி:- நானு...?

மன்:- சொன்னதைச் செய்யடா...... சாப்பிடு... கடித்துத் தின்னு... நிறுத்து, நிறுத்து...... ஏ! ஏதாவது கசப்பு, குமட்டல், மயக்கம், இருக்கிறதா?

பணி:- அதெல்லாம் இல்லை, மகாராஜா! ஆனுல் பயமாக இருக்கிறது.

மன்:- (திடுக்கிட்டு) பயமாக இருக்கிறதா? ஏன்? ஏன்? எதற்காகப் பயம்? தோலை உரித்துவிடுவேன் எதற்காகப் பயப்படுகிருய்?

பணி:- இன்று ஏதோ விசித்திரமாக நடந்து கொள்கிறீர்களே...... என்பதால்தான் பயம்.

மன்:- அப்படியா? பழத்தைப் பற்றிப் பயம் இல்லையே...?

பணி:- பழத்தைக் கண்டு பயப்பட நான் என்ன பைத்யக்காரனு, மகாராஜா!

மன்:- சரி. நாலைந்து பழத்தைக் கொஞ்சம் கொஞ்சம் கடித்துத் தின்றுவிட்டு, மிச்சத்தை வெள்ளித் தட்டிலே, வை......

பணி:- உத்தரவு மகாராஜா......

மன்:- போதும்... டேய்... பழத்தில் இரண்டு பக்கமும் கடித்துத் தின்னவேண்டும்... சரி, வெள்ளித் தட்டு எங்கிருந்து கொண்டுவந்தாய்......

பணி: இங்கேயே இருந்தது......

[வேறோர் பணியாள் வருகிருன்]

பணி:- மகாராஜா! தங்கள் பேட்டிக்காக, ஆஸ்தானக் கவிஞர்......

மன்:- வரச் சொல்லு ... இங்கேயே......

[ஆஸ்தானக் கவிஞர் வருகிருர், நமஸ் கரித்துவிட்டு, ஒரு மலர்மாலையை மன்னர் கழுத்தில் போட முயற்சிக்கும் போது மன்னர், திகில் கொண்டு கூவுகிருர்...]

மன்:- சதி! சதி! கொலே! கொலே! ... மாலேயில் விஷம்! விஷம்! என்னேக்கொல்ல ஆஸ்தான கவிஞன் வந்திருக்கிருன்.

[போர்வீரர் ஓடி வருகிருர்கள். ஆஸ்தானக் கவிஞர் நடு நடுங்கிப் போகிருர். மன்னர், மஞ்சத்தில் ஒரு கோடியில் போய்ப் படுத்துக் கொள்கிருர். என்ன செய்வதென்று தெரியாமல், அனேவரும் திகைக்கிருர்கள்.]

மன்:- தெரியும் எனக்கு; எல்லாம் தெரியும். அந்த மாயக்காரி உங்களே எல்லாம் மயக்கி விட்டிருக்கிருள். எல்லோம் சேர்ந்து என்னேக் கொல்வதற்கு வந்திருக்கிருர்கள்... ...ஐயயோ! கொலே! கொலே!!

ஆரும் காட்சி

இடம்:— சந்திரபாலா சயனக்கிரஹம்

இருப்போர்:— சந்திரபாலா
சேடி.

[சேடி ஓடோடி வந்து]

சே:- அம்மா! மகாராஜாவுக்கு திடீரென்று மூளேக் கோளாறு, ஒரே கூச்சல், ஆர்ப்பரிப்பு...எதையும் தொட மறுக்கிருர். யாருடனும் நெருங்கப் பயப்படுகிருர்...

சந்:- இதற்குள்ளாகவா? சரி! என் வேலே முடிந்துவிட்டது—பயமே, மன்னனேச் சித்திரவதை செய்து சாகடித்துவிடும். இனி எனக்கும் வேலே இல்லே...பழிதீர்த்துக்கொண்டாகிவிட்டது...

[சிமிளியில் உள்ளதை வாயில் கொட்டிக்கொண்டு படுக்கிருள். மிரள் மிரளப் பார்க்கிருள். தோழியை அருகிலழைத்து]

சந்:- வல்லபனிடம் சொல்லிவிடு! நான் விடைபெற்றுக்கொள்கிறேன்.

[மூச்சுத் திணறுகிறது, மஞ்சத்திலிருந்து கீழே புரண்டு விழுகிருள். உயிர் பிரிகிறது. ஐயோ! அரசி! என்று தோழி அலறுகிருள். மன்னன் அறையிலிருந்து அதே போல கூக்குரல் கேட்கிறது, மன்னன் எதிரிலுள்ள சுவரிலே மோதிக்கொண்டு, மண்டை பிளக்கப்பட்டு இறந்துபடுகிருன்.]

மருந்துவர் கூறுகிருர்:- பொருந்தாத் திருமணம் இப்படிப்பட்ட பொல்லாங்கான பயணத்துக்கெல்லாம்காரணமாக அமைந்தது.

இனிப் பெண்களுக்கு, இத்தகைய கொடுமைகள் ஏற்படாமலிருக்க வேண்டுமானல், ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு வேறு, என்று உள்ள அநீதி தொலேய வேண்டும். அதுவரை, பாவையின் பயணம், பரிதாபம், பழி, பயங்கரம் கொண்டதாகத்தான் இருக்கும்.

சிவநாசர்:- புரிகிறது, மருத்துவரே! புரிகிறது நல்லறிவு பிறப்பிக்கவே பாவை இந்தப்பயணத்தை மேற்கொண்டாள்......இனியேனும், திருந்துவோம், திருத்துவோம்.

பொங்கலுங்க......

ஆமாம், அதுக்கு என்ன இப்ப?

இனம்......

யாருக்கு? உங்களுக்கா? தரவேண்டியதுதான்...... நிலம் எங்களுக்குத்தான். உழுபவனுக்குத்தான்னு கூட்ட்ம் போட்டவனுங்க இல்லே, நீங்க. இனமா கேட்கறிங்க...... கொடுக்க வேண்டியதுதான்......

நம்ம காங்கிரஸ் அரசாங்கம், ஆசை காட்டுதுங்க, உங்களுக்கெல்லாம் நிலம் தாரோம்னு, அதனலே நாங்கக் கூட்டம் போட்டோமுங்க...... வேறே ஒண்ணும் இல்லிங்க......

போட்டிங்களேல்லோ...... போடுங்க...... உங்களோட கொட்டத்தை அடக்கவா எனக்குத் தெரியாது...... இப்பத்தானே நான் அதுக்கு ஒரு ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கேன்......

என்ன ஏற்பாடுங்க......?

காங்கிரசிலே சேர்ந்தாச்சி...... தெரியுதா...... இனி உங்களோட ஜம்பம், நம்மண்டை நடக்காது, தெரியுதா...... ஆமாம்...... இனமா வேணும் இனம, ச்சீ! போங்க, போங்க......

பாவையின் பயணம்

நாலாவது கட்டம்

இடம்:— வழக்கு மன்றம்

இருப்போர்:— வனஜா பி. ஏ.
தேவன், எம். பி. பி. எஸ்.
வந்தனம், எம். ஏ. பி. எல்.

வனஜா:- அறிவுசால் பெரியீர்! பெண்களின் வாழ்க்கைப் பயணத்தில் இப்படிப்பட்ட கட்டங்கள், முற்காலத்திலேயே இருந்து வந்தன; தக்க பரிகாரம் தேடாததால், ஏற்பட்ட அவதிகள் கொஞ்சமல்ல.

இக்காலத்திலோ, பொருந்தாத் திருமணம் காதலற்ற கூட்டுறவு இவைகளாலும், ஆடவரின் கொடுமைக்கு ஆளாவதாலும், விபசாரமும் விபரீதக் கொலைகளும் மலிந்து விட்டன, வழக்கு மன்றத் தலைவராகிய தங்களுக்கு நான் அதுபற்றி விவரிக்கத் தேவையில்லை. இப்போது ஒரு புதுக் கட்டம், காண்கிறோம். ஆடவருக்கும் ஆரணங்குக்கும், வாழ்வில் பொருத்தம் அமையவில்லை, ஒருவரை ஒருவர் வஞ்சிக்கிறார்கள், ஆதிக்க வெறிகொண்டு கொடுமைப்படுத்துகிறார்கள், துரோகம் இழைக்கிறார்கள் என்றால், பாவை போலப் பரிதாப மரணமடையத் தேவையில்லை, பதுமைபோலக் கட்டாரிக்கு இரையாகத் தேவையில்லை சந்திரபாலாபோல சண்டாளியாகத் தேவையில்லை.

சட்ட பூர்வமான பரிகாரம் தேடிக்கொள்ளும் கட்டம் வந்திருக்கிறது.

விவாக விடுதலைதான், விபரீதப் போக்கிலே நடந்துகொள்ளும் சதி-பதி உறவு இனியும் இருத்தல் கூடாது என்பதை எடுத்துக்காட்டும், எச்சரிக்கை. தேவன், திருத்தப்பட வேண்டியது மட்டுமல்ல முக்கியம்.

எந்த ஆடவனும், தேவனாகக் கூடாது— 'விவாக விடுதலை'க்குத் தாங்கள் உத்தரவிடுவதன் மூலம், ஆடவர் உலகுக்கு ஒரு அரிய பாடம்— எச்சரிக்கை தந்தவராவீர்.

வந்தனம்:- தங்கையே! பெண் குலத்தின் மனப் போக்கில் ஒவ்வொரு கால கட்டத்தில் ஏற்பட்ட மாறுதலையும், அதனால் விளைந்த நிலைமைகளையும், சுவையும் பயனும் கலந்த முறையில் எடுத்துரைத்ததற்கு என் நன்றி. இதையே ஓர் நாடகத் தொடராக்கி நாட்டுக்கு அளிக்க உன் அனுமதியைக் கேட்டுக்கொள்கிறேன். உனக்குத் துரோகமிழைத்த தேவனின் மனம் மாசு படிந்திருப்பது நன்கு தெரிகிறது. நீ, கோரிய முறையில், விவாக விடுதலைக்கு உத்தரவிடுகிறேன்.

புலிநிகர் ஆளனைத் தேடு—பெற்றோர்
புகுந்திடை வந்தால் ஒப்பாதே சாடு

மலிந்த சரக்கல்ல பெண்கள்—நாட்டின்
வாழ்விற்கும் வளத்திற்கும் அவர்களே கண்கள்!



காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

கிருஷ்ணா பிக்சர்ஸ்
மதுரை
வீரன்
டைரக்ஷன்
யோகானந்த்

REGD. NO. M 4642.